ஈரிரண் டென்ப அசையின் பெயரே.''

என்றாராகலின்.

அவற்றுள், **நேரசை நான்கு வகைப்படும்;** தனி நெடிலும், தனிக் குறிலும், நெட்டொற்றும், குற்றொற்றுமென.

என்னை?

'தனிநெடில் தனிக்குறில் ஒற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நேரசை யென்ப.'

என்பவாகலின். அதற்குதாரணம்:—

கா ரி சேந் தன்

என வரும்.

நிரையசை நான்கு வகைப்படும்; குறில் இணையும், குறில் நெடிலும், குறிலிணையொற்றும், குறில்நெடில் ஒற்றுமென.

என்னை?

''குறிலிணை குறினெடி லொற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நிரையசை யென்ப''

என்பவாகலின். அதற்குதாரணம்:—

பல, பலா, பலம், கிழான்

என வரும்.

நேர்பசை நிரைபசை ஆமாறு சொல்லுதும். நேர் முதலாகிய குற்றியலுகரம் நேர்பு அசையாம்; நிரை முதலாகிய குற்றிய லுகரம் நிரைபு அசையாம்.

என்னை?

''நேர்முத லாகிய குற்றிய லுகரம்
நேர்பென மொழிப நிரைமுதல் நிரைபே''

என்பவாகலின்.

நேர்பசைக் குதாரணம்:—
கோடு, தோன்று, குன்று
என வரும்

நிரைபசைக் குதாரணம்:—
மரபு, மயங்கு, மலாடு, மலாட்டு
என வரும்.

''முற்றிய லுகரம் வரினுமவை பெயரே''

முற்றியலுகரமாவது மெல்லெழுத்தும் இடையெழுத்தும் சார்ந்து வரும் உகரம்.

முற்றியலுகர நேர்பசைக்குதாரணம்:-
காணு, வேணு, மின்னு மண்ணு
என வரும்.

முற்றியலுகர நிரைபசைக்குதாரணம்:-
உருமு, அரவு, விரவு, செலவு
என வரும்.

(யா. வி. கழ. 443, 444, 445.)

மேற்கூறிய நான்கு அசைகளுக்கும் இலக்கணம் உணர்த்தும் காரிகை யொன்றினைக் கீழே காண்க.

''குறிலும் நெடிலும் குறிலிணை தானும் குறினெடிலும்
நெறிநின் றுயிர்ப்பினும் நேர்ந்தொற் றடுப்பினும் நேர்நிரையென்
றறிமுந்தை நேர்நிரை வைந்தீ ருகர மடுத்து வந்தால்
நெறிநுண் கருங்குழல் நேர்பும் நிரைபுமொற் றோடுமற்றே.''

(யா. வி. கழ. 445.)

பதிப்பாசிரியர் விளக்கம்

நூற்பா நுதலியது

இளம்பூரணர் இந்நூற்பா நுதலியதை ''இதுவும் அது''

என்றனர் (அசையாமாறு உணர்த்துதல்).

ஆனால் **பேராசிரியர்** ''இது சொல்லாத அசைக் கூறும் சொல்லுகின்றது'' என்பர்.

நச்சினார்க்கினியர் ''இது கூறாத அசைக் கூறும் கூறுகின்றது'' என்பர்,

இவ்வாறு இவ்விருவரும் கூறுதலின் கருத்து, பிறர் சொல்லாத, பிறர் கூறாத நேர்பு நிரைபு அசைகள் என்பது போலும்.

1. ஒருசாராசிரியர் நான்கசையை இரண்டசையாக்கிய முறை

'நேரசை யென்றா' (யா-க-5) என்னும் நூற்பா உரையில் ''நேரே நிரையே நேர்பே நிரைபென, ஈரிரண் டென்ப அசை யின் பெயரே'' என விரித்து உரைத்தாராயினும் தொகுத்து நோக்குங்கால் அசை, நேரசையும் நிரையசையும் என அவ் விரண்டாய் அடங்கும். எவ்வாறெனின்? **நேர்நேராய்** நேர்பு அடங்கும்; **நிரைநேராய்** நிரைபு அடங்கும் என்பர் (யா. வி. கழ. 47).

2. இயைந்தவை வரினே என்றதற்கு

நூற்பாவில் 'இயைந்தவை வரினே' என்ற தொடருக்கு ''ஒரு சொல் விழுக்காடுபட இயைந்துவரின் என்று பொருள் கூறி, இயைந்தென்றான், இருவகை உகரமும் இருபிளவு படாது ஒன்றாகி வரல் வேண்டும்; அங்ஙனம் அசையாங்கால் என்றதற்கு'' என்று சிறப்புரையும் எழுதினார் **பேராசிரியர்.**

3. அலகிடும் முறை சரியா

வடமொழியாளர் லகு, குரு என்ற இரண்டினை வகுத்து, அவற்றால் கணம் பதங்களை அமைத்துக் கொண்டு விருத்தங் களைப் படைப்பர். அவர் குறில் தனித்து வரின் லகு வென்றும், அக்குறில் ஒற்றடுப்பினும், நெடில் தனித்து வரினும், ஒற்றடுத்து வரினும் இம்மூன்றும் குரு என்றும் கூறி, லகு ஓரலகு பெறும்;

குரு ஈரலகு பெறும் என்பர். அவர் கூறும் லகு குரு நமக்கு நேரசை ஒன்றிலேயே அடங்கி விடுவதால், ''அலகிடுங்கால் நேரசை ஓரலகு; நிரையசை ஈரலகு; நேர்பசை மூன்றலகு; நிரை பசை நான்கலகு பெறும்'' என்றல், (இளம் செய்யு. 5. உரை) பொருந்தாதென்க. இது 'வடமொழிச் சார்பால் வந்த விளக்கம் போலும்.

5. இயலசை முதலிரண் டேனவை[1] யுரியசை

என்-னின், மேற் சொல்லப்பட்ட அசைக்குப் பிறிதோர் குறியிடுதல் நுதலிற்று.

(இ-ள்) முற்பட்ட நேரசையும் நிரையசையும் இயலசை எனக் குறிபெறும், நேர்பசையும் நிரைபசையும் உரியசை எனக் குறி பெறும் என்றவாறு. (நு)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பாடவிளக்கம்

யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் 95ஆம் நூற்பாவுரையில் ''நேரசையும் நிரைபசையும் இயலசை எனப்படும்; நேர்பசையும் நிரைபசையும் உரியசை எனப்படும்'' என்னை, ''**முதலிரண் டியலசை ஏனைய உரியசை**'' என்பவாகலின் என்று எழுதியிருத்தலால் இங்குக் காட்டிய நூற்பா, தொல்காப்பிய நூற்பாவின் வேறு பாடம் போலும். (யா.வி.கழ.பக். 445)

2. பேராசிரியர் தரும் இயலசை உரியசை விளக்கம்

அவர்தம் உரையுள் ''இது மேற்கூறிய அசை நான்கினையும் இரு கூறு செய்து அவற்றுக்கு எய்தாதது எய்துவிக்கின்றது. இனி, ஆட்சியுங் குணனுங் காரணமாக வேறு வேறு பெயர் கொடுக்கின்றது இச்சூத்திரமெனவும் அமையும்'' என நுதலிய பொருளை முன்னே கூறிவிட்டுப் பின்னர் ''முதற்கண் நின்ற

பா.வே. 1. 'டேனைய' பேரா; நச்.
'டேனையுரியசை' சு.வே.

நேரும் நிரையும் இயற்றிக் கொள்ளப்படாது, இயற்கை வகையான் நின்றாங்கு நின்று தளைப்பனவாம். ஒழிந்தன இரண்டும் (நேர்பு, நிரைபு) இயற்றிக் கொள்ளப்பட்டு இயலசை யாதற்கு உரியவாம் என்றவாறு. எனவே, எய்தாதது எய்துவித்தது; தானே இயலசை உரியசை என்று ஆளுமாகலானும் இயற்கையால் இயறலின் இயலசை எனவும், அவை செய்யுந்தொழில் செய்தற்கு உரியவாகலான் உரியசை எனவும் ஆட்சியுங் குணனுங் காரணமாகப் பெயர் எய்துவித்ததூஉம் ஆயிற்று" என்பர்.

6. தனிக்குறின் முதலசை மொழிசிதைந்[1] தாகாது

குறிப்பு:- **தொன்னூல் விளக்கம் யாப்பதிகாரம்** 3ஆம் நூற்பாவுரையில் "தனிக்குறில் **முதலசை மொழிசிதைந்** தாகாது" என இளம்பூரணர் பாடமே காணப்படுகிறது.

என்-னின் இதுவும் அசைக்குரிய தோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தொடர் மொழிக்கண் மொழி சிதைந்து தனிக்குறில் நேரசை யாகாதென்றவாறு.

மொழிசிதைத்தலாவது:- ஒற்றுமைப் பட்டிருக்கின்றதனைப் பிரித்தல். அஃதாவது புளிமா என்றவழி, நிரை நேராக அலகிடாது முதனின்றதனை நேரசையாக்கி இடைநின்றதூஉம் இறுதி நின்றதூஉம் நிரையசையாதல். அவ்வழிப் புளியென்னுஞ் சொல்லைப் பிரிக்க வேண்டுதலின் நிரையசையாகவே கோடல் வேண்டுமென்றவாறு.

இனி மொழி சிதையாக்கால் நேரசையாம். அது **விட்டிசைத்து** நிற்றல்.

"அஉ வறியா வறிவி விடைமகனே
நொஅலைய வின்னாட்டை நீ. (யா-வி கழ 153) எனவும்,
"அஆ இழந்தானென் றெண்ணப்படும்" (நாலடி—9) எனவும் வருவன

முதலெழுத்து நேரசையாம். (சு)

பா.வே. 1. 'மொழிசிதைத்' பேரா;நச்.

பதிப்பாசிரியர் விளக்கம்

உரை மாறுபாடு

இளம்பூரணர் தனிக்குறில் முதலசை என்றதற்குத் தனிக் குறில் நேரசை (முதலசை - நேரசை) என்று பொருள் கூறியுள் ளார். இதனைப் **பேராசிரியர்** "முதலசை என்பது நேரசை என்பாரும் உளர்; அது விதந்தோதல் வேண்டா, தனிக்குறிலான் அசையாமெனப்பட்டது நேரசையே யென்பது பெறுதுமாக லான்" எனக் கூறி மறுப்பர். ஆனால் பல்காயனார் "முற்றத் தனிக்குறில் முதலசையாகா' என்பர் (யா. வி. கழ. 50).

ஒப்புமைப் பகுதி

1. "விட்டிசைத் தல்லான் முதற்கட் டனிக்குறில் நேரசையென் றொட்டப் படாது" (யா. காரி. 37)

2. "குறிப்பே ஏவல் தற்சுட் டல்வழித்
தனிக்குறின் மொழிமுதல் தனியசை யிலவே" (யா.க. 7)

3. "தற்சுட் டேவல் குறிப்பிவை அல்வழி
முற்றத் தனிக்குறில் முதலசை யாகா" - (பல்காயனார் யா. வி. கழ. 50)

இவ்வொப்புமைப் பகுதியுள் யாப்பருங்கல நூற்பாவின் இரண்டாவது அடி, தொல்காப்பிய நூற்பாவை ஒத்துள்ளது.

7. ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்.

என்-னின் இதுவுமது.

(இ-ள்) குற்றிய லிகரம் ஒற்றெழுத் தியல்பிற்று என்றவாறு.

அடியின திடைக்கண் ஒற்றுமைப்பட்ட சொல்லின்கண் நேரசை என்று ..... எனவே அலகு பெறா தென்றவாறாம்.

உதாரணம்:—

"பேதை யென்ப தியாதென வினவி
னோதிய விவற்றை யுணராது மயங்கி
யியற்படு பொருளாற் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கண்டது தெளிதல்." (மணிமே-30:50-54)

இதன்கண் குற்றிய லிகரம் அலகு பெறாதவாறு காண்க. (எ)

பதிப்பாசிரியர் விளக்கம்

நூற்பா விளக்கம்

இளம்பூரணர் இதற்கு முன் நூற்பா அசைக்குரியதோர் மரபு உணர்த்திற்று என்பர். இந்நூற்பாவும் அப்பொருள் உணர்த்தும் என்ற கருத்தால், 'இதுவும் அது' என்று நுதலியதுரைத்து, குற்றியலிகரம் ஒற்றியல்பிற்றாய் அலகு பெறாது என்றனர்.

ஆனால் **நச்சினார்க்கினியர்**, குற்றியலிகரம் அலகு பெற்றும் பெறாதும் வரும் என்று இந்நூற்பாவிற்கு உரை எழுதியுள்ளார்.

பேராசிரியர் மேற்கூறிய இருவர் கருத்திற்கும் மாறுபட்டு "இஃது எய்தாதது எய்துவித்து ஐயம் அறுத்தது" என்று நுதலியதுரைத்துப் பின்னர், "குற்றுக ரத்திற்குப் புள்ளிபெறுதலும் கூறினான் (தொல். எழுத். 105); அதுபோலக் குற்றிகரமும் புள்ளி பெற்று நிற்றல் உடைத்தெனவும், ஈண்டுக் குற்றுகரம் நேர்பும் நிரைபும் ஆகியவாறு போலத் தானும் ஓர் அசையாகுங்கொல் என்று ஐயுறுவது வேண்டா, ஒற்று நின்றாங்கு நின்று இயலசை உரியசைகளைச் சார்ந்து வருதலும் ஒற்றுப் போல எழுத் தெண்ணப் படாமையுமுடைத்து என்றவாறுமாயிற்று."

"எனவே, ஒற்றெழுத்தியற்றாயினும் குற்றுகரம் இகரக் குறுக்கம் போலாது செய்யுட்கு உபகாரப்பட்டதோர் அசை வேறுபாடு தோன்ற நிற்கும் என்றவாறாயிற்று" என்று நல்ல விளக்கம் தந்துள்ளார்.

8. முற்றிய லுகரமு மொழிசிதைத்துக் கொளாஅ
நிற்ற லின்றே யீற்றடி மருங்கினும்.

பாடம்:- இளம்பூரணர் உரையில் "மொழிசிதைந்து" என வருதலால், "மொழிசிதைந்து கொளாஅ" எனப் பாடங் கொள்ளல் வேண்டும் போலும்.

"தனிக்குறின் முதலசை மொழிசிதைந் தாகாது"
(செய்-6)

என்னும் நூற்பாப் பாடத்தையும் நோக்குக.

என்-னின் முற்றியலுகரத்திற்குரிய வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முற்றியலுகரமும் மொழி சிதைந்து நேர்பசை நிரைபசை என்றுரைக்கப் படாது; அஃது ஈற்றடி மருங்கில் தனியசையாகி நிற்றலும் இன்று என்றவாறு.

எனவே, அடியினதிடைக்கண் ஒற்றுமைப்பட்ட சொல்லின் கண் நேர்பசை நிரைபசையெனக் காட்டப்படாது. அது "ஈற்றடி மருங்கிற் றனியசை யாகி நில்லா தென்பதூஉம்' (நூற்பா-8), ஒற்றுமைப்படாத சொல்லின்கண் தனியசை யாமென்பதூஉம், ஈற்றடிக்கண் எவ்வழியானுந் தனியசை யாகாதென்பதூஉம் உணர்த்தியவாறாம்.

"அங்கண் மதிய மரவுவாய்ப் பட்டென"

என்றவழி அரவுஎன்பது மொழி சிதையாமையின் நிரைபு அசை ஆயிற்று.

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்" (ஈாலடி–20)

என்றவழிப் பெரு முன்னர்க் குறித்துச் சீராக்க வேண்டுமாயின் ஈண்டு மொழிசிதைதலின் நிரைபு அசை ஆகாதாயிற்று.

"இனமலர்க் கோதா யிலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு" (யா.வி.கழ. 230)
"மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவாட் கருளு" (யா.வி.கழ. 230)

(என்பதனால் கொள்க;) இவை புல்லு, அருளு வென வருமாலெனின்: "நிற்ற லின்றே யீற்றடி மருங்கினும்", என்பதனால் ஈற்றடி யிறுதியினும் இடையடி யிறுதியினும் முற்றியலுகரம் நில்லா தெனவும் பொருளாம்; இதனானே அவ்வாறு வருதலுங் கொள்க.

முற்றிய லுகரமு மென்ற வும்மை இறந்தது தழீஇய எச்ச உம்மை. (அ)

பதிப்பாசிரியர் விளக்கம்

உரை மேற்கோள் விளக்கம்

இலக்கியமாகிய 'அங்கண் மதியம்' என்ற பாடலில் இங்கே இளம்பூரணர் கொண்ட பாடம் ''அரவுவாய்ப் பட்டென'' என்பதாம். அரவு வாய் என்பது நிரைபு நேர் எனக் கருதப் பட்டு, இயற்சீருள் அடங்கும். இப்பாட்டின் இப்பகுதி யாப்பருங்கல விருத்தியிலும் காரிகை உரையிலும் 'அரவின் வாய்' என்று பாடம் ஓதப்பட்டு 'நிரை நேர் நேர்' எனும் வெண்பா உரிச்சீராகக் கொண்டு அகவற் பாட்டில் வெண்சீர் விரவி வந்த தாகக் கொள்ளப்படுகிறது. தொல்பொருள்-3 நச்சினார்க்கினியர் உரையிலும், தொல் பொருள்-24 இளம்பூரணர் உரையிலும் இப்பாடல் 'அரவின்வாய்ப் பட்டென' என்ற பாடத்துடனேயே காணப்படுகிறது. இரண்டு பாடமும் இலக்கணத் தொடர் புடையன.

உம்மை விளக்கம்

தனிக் குறின் முதலசை மொழி சிதைந்தாகாதது போல (செய். நூற் 6) முற்றிய லுகரமும் மொழி சிதைந்தாகாது என்று கொள்க. முற்றியலுகரமும் என்ற உம்மை இறந்தது தழுவிற்று.

9. குற்றிய லுகரமு முற்றிய லுகரமு
மொற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே[1].

என்-னின் எய்தியது விலக்கல் நுதலிற்று.

(இ-ள்) இருவகை யுகரமும் ஒற்றொடு தோன்றித் தனி யசையாகி நிற்கவும் பெறும் என்றவாறு.

உம்மை இறந்தது தழீஇயிற்று.

பா. வே. ''குற்றிய லுகரம் முற்றிய லுகரம்
ஒற்றொடு தோன்றற் குரிய வாகும்'' என்று பாடம் உள்ளது.
(யா-வி-கழ. 445)

உதாரணம்:-

''படிகிளி[1] பாயும் பசுங்குர லேனல்
கடிதின்[2] மறப்பித்தா யாயி னினிநீ
நெடிதுள்ள லோம்புதல் வேண்டும்'' (கலித்-50)

இதன்கட் குற்றிய லுகரம் ஒற்றொடு வருதலான் நேரசை யாயிற்று.

''கண்ணும் படுமோ வென்றிசின் யானே'' (நற்-16)

இதன்கண் முற்றிய லுகரம் ஒற்றொடு வருதலான் நேரசை யாயிற்று. (கூ)

வேறு உரை

இந்நூற்பாவிற்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும் வேறு உரை கூறுகின்றனர்.

பேராசிரியர் ''இயலசைகளை 'ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி' என்றான், உரியசைக்கு அது கூறாதான் ஈண்டுக் கூறுகின்றமையின். இஃது எய்தாதது எய்துவித்தது' என்பர்.

நச்சினார்க்கினியரும் அவ்வாறே கூறி, ''முற்கூறிய குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும் வருமொழி வல்லெழுத்து வரும் வழி வல்லொற்றொடுந் தோன்றி நிற்கவும் பெறும்'' என்று உரை கூறினர்.

யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் ''நேர் முதலாகிய இரு வகை உகரமும் ஒற்று அடுப்பினும் நேர்பசை யாகும்; நிரை முதலாகிய இருவகை உகரமும் ஒற்று அடுப்பினும் நிரைபசை யாகும். என்னை?

''குற்றிய லுகரம் முற்றிய லுகரம்
ஒற்றொடு தோன்றற் குரிய வாகும்''

உரை.சு.வே: 1. படுகிளியாவும்
2. கடிதின்

என்ப வாகலின்; அவற்றிற்குதாரணம்:- சேற்றுக் கால், ஆட்டுக் கால் எனவும், களிற்றுத் தாள், வெளிற்றுப்பனை எனவும் இவை குற்றிய லுகரம் ஒற்றொடு வந்த நேர்பசை, நிரைபசைகள்.

மின்னுப் பூண், மண்ணுச் சாந்து எனவும், உருமுத் தீ வெருவுப் பாம்பு, விரவுப் பூண், விழவுக் களம் எனவும் இவை முற்றிய லுகரம் ஒற்றொடு வந்த நேர்பசை நிரைபசைகள்'' என்பர்.

பேராசிரியர்

ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே என்றதனுள் உம்மை எதிர்மறையாகலான் ஒற்றின்றி வருதலே பெரும் பான்மை என்று உரைப்பர்.

மேலும் அவர் ''இங்ஙனம் வருமொழி யொற்று மிகின் அவை கொண்டு நேர்பும் நிரைபுமாம் எனவே உண்ணும் எனவும், நடக்கும் எனவும் நிலைமொழி ஒற்று நின்ற வழித் தேமாவும், புளிமாவும் ஆவதல்லது நேர்பு அசையும் நிரைபு அசையும் ஆகா தென்பதாம். விக்குள், கடவுள் என்பனவும் அவை'' என்பர்.

நேர்பும் நிரைபும் ஒற்றடுத்தல்

''அறிமுந்தை நேர்நிரை வைந்தீ ருகர மடுத்துநின்றால்
நெறிநுண் கருங்குழல் நேர்பு நிரைபுமொற் றோடுமற்றே''.

என்பதனாலும் அறிக. (யா.வி.கழ. பக். 445)

10. அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வகுத்தன ருணர்த்தல்[1] வல்லோ ராறே.

என்-னின் வகையுளி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அசையையுஞ் சீரையும் ஓசையொடு சேர்த்திப் பாகுபாடு ணர்த்தல் வல்லோர்கள் நெறி என்றவாறு.

அஃதாவது பொருளொடு சொல்லை அறுத்தவழித் தளை

நூ.பா.வே. 1 'உணர்த்தலும்' பேரா: நச்.

யுஞ் சீருஞ் சிதையின், அவ்வழி ஓசையை நோக்கி அதன்வழிச் சேர்த்துக என்றவாறு.

அதுவருமாறு:-

''மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்'' (குறள்-3)

என்ற வழி 'வாழ்வார்' எனப் பொருணோக்கிச் சீராமாயின் ஓசை கெடும். அதன்கண் 'வாழ்' என்பதனை முதனின்ற சீரோ டொட்டக் கெடாதாம். பிறவு மன்ன.

இத்துணையுங் கூறப்பட்டது அசைவகை. (கூ)

இந்நூற்பா சிங்க நோக்கு.

பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் இந்நூற்பாவைப் **புறனடை** என்று கருதுகின்றனர். **இளம்பூரணரும் இலக்கண விளக்கநூலாசிரியரும் வகையுளியை** உணர்த்தும் நூற்பா என்பர்.

பேராசிரியர் ''இது மேற்கூறப்பட்டனவற்றுக்கும், இனி வருஞ்சீர்க்குமெல்லாம் புறனடை'' என்று நுதலிய துரைத்து, ''அசைகளையும் சீர்களையும் ஓசையோடு சேர்த்தி வேறுபடுத் துணர்த்துதலும், அச்செய்யுளிலக்கணத் துறை போயினாரது நெறி'' என்று உரை வகுத்து, மேல் மாத்திரை (செய்) என்ப தோர் உறுப்புரைத்தான் அதனால் அசை சீர்களது ஓசையை அளந்து கூறுபடுத்து இன்னோசையும் இன்னாவோசையும் உணர்த்துக. எழுத்தியல் வகைக்கும் இஃதொக்கும் ... **இவற்றைப் பிறநூலார் ''வகையுளி என்ப''** என்றனர்.

இலக்கண விளக்கம்,

''அசையும் சீரும் அடியும் எல்லாம்
இசைய வருபொருள் இயைபுநோக் காது
ஓசையே குறிக்கொண் டொருங்கவும் விரியவும்
அலகிடல் வகையுளி யாகும் என்ப'' (752)

என்று கூறும்.

தொல்காப்பியர் அசைகட்கும் சீர்கட்குமே இந்நூற்பாவில் விதி கூறினார். ஆனால் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் ''வழுக்கா மரபின் வகையுளி சேர்த்தலும் (யா.வி.கழ. 396) என்பது, அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் வண்ணமும் செய்யுட்கட் கழியாமை வகையுளி சேர்த்தலும் என்றவாறு.

வகையுளி என்பது முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புக்கள் நிற்புழி அறிந்து குற்றப்படாமை வண்ணம் அறுத்தல்'' என்று கூறி ...

'அருள்நோக்கும் நீரார் அசைசீர் அடிக்கண்
பொருள்நோக்கா தோசையே நோக்கி - மருள்நீக்கிக்
கூம்பவுங் கூம்பா தலரவும் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு'

இதனை விரித்து உரைத்துக் கொள்க என்பர்.

பிறரும்

''எழுத்தல் கிளவியின் அசையோடு சீர்நிறைத்
தொழுக்கலும் அடியொடு தளைசிதை யாமை
வழுக்கில் வகையுளி சேர்ந்தலும் உரித்தே'' (அவிநயனார்)
(யா.வி.கழ.பக்.438)

என்றார் எனக் கொள்க என்றனர்.

வகையுளியைப் பற்றி யா.வி மேற்கோள்,

''தகைபெறு பொதியிலெந் தலைவ னாணையின்
தொகைவகை விரிபடச் சொற்ற நூல்களுள்
வகையுளி சேர்த்துதல் வகுப்பர் ஆதலால்
நகைபெற நாலசை நடப்ப தில்லையே'' (யா.வி.கழ.பக்.437)

என்று குறிப்பிடுகிறது.

4-சீர்

11. ஈரசை கொண்டு[1] மூவசை புணர்த்துஞ்[2]
சீரியைந் திற்றது சீரெனப் படுமே.

பா.வே. 1'ஈரசை கொண்டும்' பேரா; நச்.
2'புணர்த்தும்' பேரா.

என்-னின் நிறுத்த முறையானே சீராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இரண்டசை கொண்டு புணர்த்தும் மூன்றசை கொண்டு புணர்த்தும் ஓசை பொருந்தியிற்றது சீரெனப்படும் என்றவாறு.

'தாமரை புரையுங் காமர் சேவடி' (குறுந். கடவுள்.)

என்றவழி **நான்கு சொல்லாகி** ஓசைஇற்று நின்றவாறு கண்டு கொள்க.

''எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' (குறள். 110)

என்றவழி மூன்றசையினாற் சீராகிய வாறும், அவ்வளவினான் ஓசைஇற்று நின்றவாறும் கண்டு கொள்க. (கக)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒப்புமைப் பகுதி

''இயலசையும் உரியசையுமாகிய அவ்வசை இரண்டு கூடியுஞ் சீராம்; மூன்று கூடியுஞ் சீராம். என்னை?

''ஈரசை கொண்டது சீரெனப் படுமே
மூவசை யிறத்த வில்லென மொழிப''

என்பவாகலின்'' (யா. வி. கழ. பக். 445, 446)

''அசையே யிரண்டும் மூன்றுந் தத்தமில்
இசைய வருவன சீரெனப் படுமே'' பல்காயம் (யா.வி.கழ.பக். 67)

உரைக்குறிப்பு

திருத்தம்

உரையுள் நான்கு சொல்லாகி என்பது, கீழே வரும் உரைப் பகுதியைக் கருதினால் நான்கு சொல்லாகி ஈரசையினாற் சீராகிய வாறும், அவ்வளவினால் ஓசைஇற்று நின்றவாறுங் கண்டு கொள்க என்றிருத்தல் வேண்டும்.

சீர் என்றது

இசைநரம்பிற்கும் 'சீர்' என்றொரு பெயருண்டு.

''மாயவன் சீருளார் பிஞ்ஞையும் தாரமும்''

என்ற சிலப்பதிகார அடியை நோக்குக (சிலப் 17, பக்கம் 444).

''சதியுஞ் சீரும் தாளவொற் றின் பெயர்'' என்பது திவாகரம்.

இளம்பூரணர், 'சீர் இயைந்து' என்பதற்கு 'ஓசை பொருந்தி' என்று உரை கூறுவர். பின் வரும் 'இன்சீர் வகையின்' (செய்-52) என்றதற்கு 'இனிய ஓசை வேறுபாட்டினையுடைய' என்று பொருள் உரைப்பர்.

பேராசிரியர்

'சீரியைந் திற்றது' என்ற பகுதிக்கு, 'சீரியைந்திறுவன' என்று உரை கூறி, மற்றுச் சீரென்ற தென்னையெனின், **பாணி** போன்று இலயம்பட நிற்றலான் அது **சீரெனத்** தொழிற் பெயராம். என்னை?

சொற்சீர்த்திறுதல் (செய். 119)

என்புழித் தொழிற்படுத்தோதினமையின் என்பர்.

விபுலானந்த அடிகளார் ''ஈரசை கொண்டு'' என்னுஞ் சூத்திரத்தினுள் 'சீரியைந் திற்றது' என்புழிப் பாணியுந் தூக்கும் சீரும் என்னும் **தாளக் கூறுபாடுகளுள்** ஒன்றாகிய சீர் கூறப்பட்டது என்பர். (யாழ் நூல். பக். 376)

மேலும் அவர், ''சீர் இயைந்திற்றது சீர்'' என்றபடி தாளத்தின் இறுதி இசைத்தமிழிலும் சீர் எனப்படும்; தாளத்தின் இடை நிகழுங் காலம் தூக்கு எனப்படும்; தாளத்தின் முதலெழுங் காலம் பாணி எனப்படும். செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் என்னும் ஓசை விகற்பங்கள் தாளத்தினை அடிப்படையாகக் கொண்டன என்பர் (யாழ் நூல். பக். 12).

''பாணியும் தூக்கும் சீரும் என்றிவை
மாணிழை அரிவை காப்ப
ஆணமில் பொருள்எமக் கமர்ந்தனை ஆடி''

என்பது கலித்தொகைக் கடவுள் வாழ்த்துப்பாட்டின் சுரிதகம்.

"ஒரு தாளத்திற்குப் பாணி, தூக்கு, சீர் என்னும் மூன்றும் உளவேனும் ஒவ்வொன்று ஒவ்வோர் ஆடற்கு மிகுதி வகையால் சிறந்தமைபற்றி ஒரோ வொன்றையே கூறினார். தாழிசைகளில் சீர், தூக்கு, பாணி என நின்றன வேனும் அவை நிகழும் அடைவு பற்றிச் சுரிதகத்துள் பாணியும் தூக்கும் சீரும் என அடைவு கூறினார்" என்பது இப்பாடலில் நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் ஆகும்.

12. இயலசை மயக்க மியற்சீ ரேனை
யுரியசை மயக்க மாசிரிய வுரிச்சீர்.

என்-னின் ஈரசைச்சீர் பாகுபடுமாறு[1] உணர்த்துதல் நுதலிற்று. (இ-ள்) மேற்சொல்லப்பட்ட அசைகளில் இயலசை மயங்கிவந்தன இயற்சீர் எனப்படும். உரியசை மயங்கி வந்தன ஆசிரிய வுரிச்சீர் எனப்படும் என்றவாறு.

மயங்குதலாவது ஒருங்கு வருதல். நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் நான்கினையுந் தம்மி னுறழப் **பதினாறு ஈரசைச்** சீராம்.[2] அவற்றுள் இயலசை யாகிய நேரும் நிரையும் தம்மின் உறழ் நான்கு சீராம். அவை இயற்சீர் எனப்படும்.

உதாரணம்:- தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என வரும்.

இனி உரியசை யாகிய நேர்பும், நிரைபும் என்றவற்றைத் தம்மின் உறழ நான்கு சீராம். அவை ஆசிரிய வுரிச்சீர் எனப் படும்.

உதாரணம்:- ஆற்றுநோக்கு, ஆற்றுவரவு, வரகுசோறு, வரகுதவிடு என வரும்.

(கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

இரண்டு நூற்பாக்களின் முதலடி

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் "ஆகச்சீர் இரண்டு வகைப்

உரை.சு.வே. 1 பாகுபாடாமாறு
2 பதினாறு அசைச்சீராம்

படும்; இயற்சீரும் உரிச்சீரும் என'' என்று எழுதிவிட்டு (யா.வீ.கழ.பக்.446) இயற்சீரையும் ஆசிரிய உரிச்சீரையும் விளக்க இரண்டு நூற்பாக்களை எழுதிக் காட்டுகிறார். அந்த நூற்பாக் களின் முதலடிகளைச் சேர்க்க. சேர்த்தால்

''இயலசை மயக்கம் இயற்சீர் ஆகும்
உரியசை மயக்கம் ஆசிரிய வுரிச்சீர்''.

என்ற நூற்பா கிடைக்கின்றது. அது ஏறக்குறைய மேலே உள்ள தொல்காப்பிய நூற்பாவை ஒத்திருக்கிறது.

13. முன்னிரை யிறினு[1] மன்ன வாகும்.

என்-னின் இதுவும் ஆசிரிய உரிச்சீர் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நேர்பு அசை நிரைபு அசைப்பின், நிரையிறுதியும் வுரிச்சீராம் என்றவாறு.

உதாரணம்:- யாற்றுமடை, குளத்துமடை என வரும். (கஙு)

பதிப்பாசிரியர் விளக்கம்.

ஆசிரிய உரிச்சீர்

தொல்காப்பியர் ஈரசைச் சீர் பதினாறுள் இயற்சீர் பத்து ஆசிரியஉரிச்சீர் ஆறு என்பர். ஆனால் யாப்பருங்கல விருத்தி யுரை யாசிரியர் இயற்சீர் பத்து வகைப் படும் என்று கூறித் தனிநிலை அளபெடைப் பின் நிரை வந்ததும் இறுதிநிலை அளபெடைப் பின் நிரை வந்ததும் என்னும் இரண்டையுங் கூட்டி ஆசிரிய உரிச்சீர் எட்டு வகைப்படும் என்பர். (யா.வி.கழ.பக். 446-447)

14. நேரவ ணிற்பி னியற்சீர்ப் பால.

என்-னின் இது இயற்சீர்க்கு உரியதோர் வேறுபாடு

நூ. பா. வே. 1 'யுறினு' பேரா.
'வரினு' நச்.

உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உரியசைப் பின்னர் நேரசை வரின் அது இயற் சீரெனவரும் என்றவாறு.

உதாரணம்:- ஆற்றுக்கால், குளத்துக்கால் எனவரும். (கச)

15. இயலசை யீற்றுமு னுரியசை வரினே
நிரையசை யியல வாகு மென்ப.

என்-னின் .....

(இ-ள்) இயலசைப் பின்னர் உரியசை வரின், நிரையசை வந்தாற்போலக் கொள்க என்றவாறு.

எனவே இவையும் இயற்சீர் என்றவாறாம்.

உதாரணம்:— மாங்காடு, களங்காடு, பாய்குரங்கு, கடிகுரங்கு என வரும்.

இத்துணையுங் கூறப்பட்டன ஈரசைச்சீர் பதினாறினும் இயற்சீர் பத்தும் ஆசிரியவுரிச்சீர் ஆறுமாம் என்றவாறு. (கடு)

பதிப்பாசிரியர் விளக்கம்

இந்நூற்பாவிற்கு நுதலியதில்லை.

பேராசிரியர் ''இது மேல்நின்ற இயற்சீரதிகாரத்தான், ஈரசைச் சீருள் இயலசை உரியசை மயக்கத்துள் ஒழிந்து நின்ற நான்கு இயற்சீரும் உணர்த்துதல் நுதலிற்று'' என்று **நுதலிய துரைப்பர்.**

16. அளபெடை யசைநிலை யாகலு முரித்தே.

என்-னின் சீர்க்கண் உயிரளபெடைக் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

உயிரளபெடை அசையாக நிற்கவும் பெறும் என்றவாறு.

உம்மை எதிர்மறை யாகலான் ஆகாமை. பெரும்பான்மை.

உதாரணம்:-

''கடாஅ வுருவொடு ..... வல்லதே யொற்று'' (குறள். 585)

இது அளபெடை அலகு பெற்றது.

''இடைநுடங்க வீர்ங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து-கடைகடையின்
உப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு'' (யா.வி.கழ.பக்.14)

இதன்கண் அளபெடை அசைநிலையாகி அலகு பெறாதாயிற்று.

(கசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. அளபெடையின் இருவகை நிலை

இளம்பூரணர் உயிரளபெடை அசைநிலையாகி அலகு பெறாதாயிற்று; எதிர்மறை உம்மையான் அசைநிலையாகாமல் அலகு பெற்றது என்பர்.

பேராசிரியர் ''மேல் எழுத்ததிகாரத்து ஓதப்பட்ட அளபெடையை ஆண்டு மொழியெனக் கூறினான்; அவ்வாற்றானே அவை பெரும்பான்மையும் ஈண்டும் ஈரசைச் சீராகலின் ஈண்டுச் சீர் கூறியவாற்றான் எய்திநின்ற அவற்றுக்கு எழுத்து நிலைமைப் படுத்து அசைநிலையும் வேண்டினமையின் இஃது எய்தியதன் மேற் சிறப்பு விதி'' என்று நுதலியதுரைத்து **''அளபெடை மேற் கூறிய இயற்சீர் நிலைமையே யன்றி ஓரசையாய் நிற்றலும் உரித்து''** என்று உரைப்பர்

2. அசைக்குறுப்பாவனவற்றுள் அளபெடையும் ஒன்று

''குறிலும் நெடிலும் அளபெடையும் ஒற்றும்
அறிஞர் அசைக்குறுப்பா மென்பர்''
(யா. வி. கழ. பக். 34).

17. ஒற்றள பெடுப்பினு மற்றென மொழிப.

என்-னின் ஒற்றளபெடைக் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒற்று அளபெடுத்து வரினும் அசைநிலை யாகலு முரித்து என்றவாறு.

மாட்டேற்று வகையான் ஆகாமை பெரும்பான்மை.

உதாரணம்:— கண்ண் டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும் (மலைபடுகடாம். 352)

என வரும். **(கஎ)**

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒற்றளபெடையின் இருவகைநிலை

பேராசிரியர் *இந்நூற்பாவுரையில் ''வல்லெழுத்தாறும் ரகார ழகாரமும் ஒழித்து ஒழிந்த (ஆய்தத்துடன் கூடிய)* **பதினோ ரொற்றும் குறிற் கீழும் குறிலிணைக் கீழும் அளபெய்தி நிற்கும்** *வழிச் சீர் நிலையாதலே யன்றி,* **அசை நிலை** *யாதலும் உரித்துச்* **சிறு பான்மை** *என்றவாறு; அவை,*

''கண்ண் டண்ண்ணெனக் கண்டும் கேட்டும்'' (மலைபடு.352)

என்ற வழி 'கண்ண்' என்பது சீர்நிலை யாகித் தேமா வாயிற்று. (அம் மலைபடுகடாம் அடியுள் வந்த) தண்ண்ணென என்ற வழித் தட்பத்துச் சிறப்பு உரைத்தற்கு ணகர வொற்றினை அளபேற்றிச் செய்யுள் செய்தான்; ஆண்டு அது 'மாசெல் சுரம்' என்னும் வஞ்சியுரிச்சீராவதனைப் 'பாதிரி' என்னுஞ் சீரே யாமென வழுவமைத்தவாறு'' என்றும்,

''மற்று வழக்கினுள் வரும் இயற்கை யளபெடையன்றே அசை நிலையாவன, ஒற்றளபெடை வழக்கினுள் வருமோ வெனின், அவையும் சிறுபான்மை வழக்கினுள் வருமென்பது. அவை சுள்ள் ளென்றது, புள்ள்ளென்றது, கள்ள்ளென்றது, துண்ண்ணென்றது, திண்ண்ணென்றது என வரும். பிறவு மன்ன. இவை செய்யுளகத்தல்லது பரவை வழக்கினுள் வாரா வென்பாரும் உளர். அவர் அறியார்; செய்யுட்குப் புலவர் செய்து கொண்ட அளபெடை பின்னர் அசைநிலையாதற்கு என்னை காரணமென மறுக்க'' என்றும் கூறுவர்.

18. இயற்சீ ரிறுதிமுன் னேரவ ணிற்பின்
உரிச்சீர் வெண்பா வாகு மென்ப.

என்-னின் வெண்பா வுரிச்சீர் ஆமா றுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஈரசைச்சீர் பதினாறோடு

நான்கசையுங் கூட்டி யுறழ அறுபத்து நான்கு மூவசைச் சீராம்; அவற்றுள் இயற்சீர் நான்கின்பின் நேரசை வந்த மூவசைச்சீர் நான்கும் வெண்பாவுரிச் சீராம் என்றவாறு.

உதாரணம்:- மாவாழ்கான், மாவருகான், புலிவாழ்கான், புலிவருகான் என்பன.

(கஅ)

பதிப்பாசிரியர் விளக்கம்

'''உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப' எனத் **தொல்காப்பியனார்** வெண்பா உரிச்சீர் என்றதனை மொழிமாற்றி உரிச்சீர் வெண்பா என்றார்; அது போலக் கொள்க'' என்பர் (யா.வி கழ. பக். 63).

நச்சினார்க்கினியர் இந்நூற்பாவுரையுள் 'இயற்சீர்' என்பதற்கு 'இயலசையானாகிய இயற்சீர்' என்று பொருள் கூறி, **''வெண்பாவுரிச்சீர் என்னும் இ:து ஆட்சியுங் குணமுங் காரணமாகப் பெற்ற பெயர்; வெண்பாவிற்கும் அதன் பகுதியாகிய கலிப்பாவிற்கும் உரிமையின்.** இனிப் பொதுவாக இயற்சீர் என்றால் இயலசை மயக்கமாகிய இயற்சீர் நான்கினையும் பொதுவாக உரிச்சீர் என்றால் உரியசை மயக்கமாகிய உரிச்சீர் நான்கினையுமே கோடல் வேண்டினார் இத் தொல்காப்பியனார் என்பது, இச் சூத்திரத்தானும், ''வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர் இன்பா நேரடிக்கு'' (செய்.23) என்பதனாலும் பெறுதும். இதனால் ஆட்சியும் பெற்றாம்'' என்பர்.

19. வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவசை யென்ப[1].

என்-னின் வஞ்சியுரிச்சீர் ஆமா றுணர்த்துதல் நுதலிற்று. (இ-ள்) வஞ்சியுரிச்சீரெனப் பாகுபட்டன மேற்சொல்லப்பட்ட மூவசைச்சீர் அவ்வறுபத்து நான்கு சீரினும் வெண்சீரல்லாத அறுபதும் என்றவாறு.

பா-வே. 1. 'யான' பேரா; நச்.

உதாரணம்:

(1)-14	(2)-14
மா வாழ் நெறி	புலி வாழ் நெறி
மா வாழ் காடு	புலி வாழ் காடு
மா வாழ் பொருப்பு	புலி வாழ் பொருப்பு
மா வரு நெறி	புலி வரு நெறி
மா வரு காடு	புலி வரு காடு
மா வரு பொருப்பு	புலி வரு பொருப்பு
மா போகு கான்	புலி போகு கான்
மா போகு நெறி	புலி போகு நெறி
மா போகு காடு	புலி போகு காடு
மா போகு பொருப்பு	புலி போகு பொருப்பு
மா வழங்கு கான்	புலி வழங்கு கான்
மா வழங்கு நெறி	புலி வழங்கு நெறி
மா வழங்கு காடு	புலி வழங்கு காடு
மா வழங்கு பொருப்பு	புலி வழங்கு பொருப்பு

(3) - 16	(4) - 16
பாம்பு வாழ் கான்	களிறு வாழ் கான்
பாம்பு வாழ் நெறி	களிறு வாழ் நெறி
பாம்பு வாழ் காடு	களிறு வாழ் காடு
பாம்பு வாழ் பொருப்பு	களிறு வாழ் பொருப்பு
பாம்பு வரு கான்	களிறு வரு கான்
பாம்பு வரு நெறி	களிறு வரு நெறி
பாம்பு வரு காடு	களிறு வரு காடு
பாம்பு வரு பொருப்பு	களிறு வரு பொருப்பு
பாம்பு போகு கான்	களிறு போகு கான்
பாம்பு போகு நெறி	களிறு போகு நெறி
பாம்பு போகு காடு	களிறு போகு காடு
பாம்பு போகு பொருப்பு	களிறு போகு பொருப்பு
பாம்பு வழங்கு கான்	களிறு வழங்கு கான்
பாம்பு வழங்கு நெறி	களிறு வழங்கு நெறி
பாம்பு வழங்கு காடு	களிறு வழங்கு காடு
பாம்பு வழங்கு பொருப்பு	களிறு வழங்கு பொருப்பு

ஆக அறுபதாம். (கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

வஞ்சி உரிச்சீர்

நச்சினார்க்கினியர் "அவை வருமாறு:- நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்கினையும் நிறுத்தி, ஒரு கால் நேர் முன்னாகவும், ஒருகால் நிரை முன்னாகவும், ஒரு கால் நேர்பு முன்னா

கவும், ஒரு கால் நிரைபு முன்னாகவும் எடுத்து, நேரீறாக முடிக்கப் பதினாறும், அவ்வாறெடுத்து நிரை ஈறாக முடிக்கப், பதினாறும், அவ்வாறெடுத்து நேர்பீறாக முடிக்கப் பதினாறும், அவ்வாறெடுத்து நிரை பீறாக முடிக்கப் பதினாறும் நான்கு முறைக்கும் நடுவு நேரும், நிரையும், நேர்பும், நிரைபுமாக நிற்குமாறும் உணர்க'' என்பர்.

20. தன்பா வல்வழித் தானடை[1] யின்றே

என்-னின் வஞ்சி யுரிச்சீர்க் குரிய மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சி யுரிச்சீர் வஞ்சிப் பாவினுள் அல்லது நடை பெறாது என்றவாறு. **(உ.o)**

பதிப்பாசிரியர் விளக்கம்

வஞ்சி உரிச்சீர் பாவிற்கு உரிமை

நச்சினார்க்கினியர் ''இஃது அவற்றைப் பாவிற்கு உரிமை கூறுகின்றது'' என நுதலியதுரைத்து, ''இவ்வறுபது வஞ்சிச் சிரும் தன் பாவல்லா ஆசிரியம், வெண்பா, கலியுள் வாரா என்றவாறு'' என்று உரை கூறி, எனவே ''சிறுபான்மையான் ஆவன மேற்கூறும்'' என்று சிறப்புரை எழுதிப் பின் ''இதன் பயன் ஆசிரிய உரிச்சீர் தூங்கலோசையை ஆக்குமாறு போல, இஃது அவ்வோசையை ஆக்காதென்பதாம்'' என்பர்.

21. வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய

என்-னின் வஞ்சிப்பாவிற் குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சிப் பாவினுள் ஒழிந்த சீர்கள் வரப்பெறும் என்ற வாறு.

(உ.கு)

பதிப்பாசிரியர் விளக்கம்

உரையாசிரியர்களின் கருத்து மாறுபாடு

ஒழிந்த சீர்களைப் பற்றிப் பேராசிரியரும், நச்சினார்க்

பா.வே. 1 'தானடை வின்றே' நச்.

கினியரும் கருத்து வேறுபடுகின்றனர். **பேராசிரியர் "வஞ்சியுரிச் சீர் பிறபாக்களை ஆக்காதவாறு** போலாது, ஒழிந்த **ஆசிரிய உரிச்சீரும், வெண்பாவுரிச்சீரும் இவ்வஞ்சிப்பாவினை** ஆக்கும்; உரிச்சீர் மேலதிகாரமாகலான் எஞ்சிய எனக் கூறினமையின் இவ்விரண்டனையுமே கொண்டாம்" என்பர். எனவே, ஆசிரிய உரிச்சீர் ஆறும், வெண்பாவுரிச்சீர் நான்கும் வந்து வஞ்சிப் பாவினை யாக்கும் என்பது அவர் கருத்தாதல் புலனாம்.

நச்சினார்க்கினியர் "கட்டளை யல்லாத வஞ்சிப்பாவின்கண் ஈரசைச்சீர் பதினாறும் மூவசைச் சீர் அறுபத்து நான்கும் உரிய" **என்பர்.**

இளம்பூரணர் இந்நூற்பாவுரையில் **விளக்கவுரை கூறாவிடினும்** செய்யுளியல் 113ஆம் நூற்பா வுரையுள் "'வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய' என்றோதியவதனால், ஆசிரிய வடியோடும் வெண்பா வடியோடும் கலியடியோடும் மயங்கி வருவன கொள்க" என்று கூறுகின்றார்.

இளம்பூரணர் கருத்தினை **யாப்பருங்கலம் 31ஆம்** நூற்பாவி லும் அதன் உரையிலும் காணலாம்.

"வஞ்சியுள் அகவல் மயங்கினும் வரையார்" *(யா.க.31)* என்னும் நூற்பாவுரையுள் "வஞ்சிப்பாவினுள் ஆசிரிய அடி விரவவும் பெறும்" என்று உரை கூறி, "அகவல் மயங்கினும் வரையார் என்ற உம்மையால் கலியடியும் ஒருசார் வெள்ளடியும் மயங்கி வரவும் பெறும்" என்பர்.

22. வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீர்
இன்பா நேரடிக் கொருங்குநிலை யிலவே

என்-னின் வெண்பாவிற் குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வெண்பா வுரிச்சீரும் ஆசிரிய வுரிச்சீரும் வெண்பா வினது நேரடிக்கண் ஒருங்கு நிற்றலில்லை என்றவாறு. (உ உ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. இன்பா என்பதில் கருத்து மாறுபாடு

இளம்பூரணர் 'இன்பா' என்பதற்கு 'வெண்பா' என்று பொருள் கூறுகின்றார்.

பேராசிரியர் 'இன்பா நேரடி' என்பது ஆசிரிய அடி என்பர். 'நேரடிக்கென்பது கட்டளையடிக்கென்றவாறு' என்று எழுதுவதை நோக்கினால் இந்நூற்பா விதி, கட்டளை ஆசிரியப்பாவிற்கு என்று அவர் கருதுவது புலனாம்.

நச்சினார்க்கினியரும் இதே கருத்தினராவார்.

ஆசிரியத்திற்கு, ''இன்பா'' என்றொரு பெயர் இருத்தலைத் ''தன்பால் உறுப்புத் தழுவிய மெல்லிய இன்பா அகவல்'' என்னும் அவிநயத்தால் உணர்க. (யா.வி.கழ.பக்.267)

2. பேராசிரியர் உரைக்கருத்தை வலியுறுத்தும் நூற்பா

யாப்பருங்கல விருத்தியுள் வந்துள்ள,

''அகவலுள் தன்சீர் வெண்சீர் ஒருங்கு
புகலிற்; கலியுட் பொருந்து மென்ப''

என்னும் **பல்காயனார்** நூற்பா, 'வெண்பா வுரிச்சீர், கலித்தளை மருங்கில்' (செய். 22, 23) என்னும் தொல்காப்பிய நூற்பாக்களின் பொருளையும், இன்பா என்றதற்கு ஆசிரியப்பா என்று எழுதும் பேராசிரியர் கருத்தினையும் கொண்டிருத்தல் ஒப்பு நோக்கி உணரத்தக்கது.

3. சிறந்த ஆசிரிய உரிச்சீர்

பேராசிரியர், ''இயலசை மயங்கினவே இயற்சீர் எனப்படுவன எனவும், உரியசை மயங்கினவே ஆசிரியவுரிச்சீர் எனப்படுவன எனவும் முன்னர்ச் சொல்லிப் போந்தானாகலின் ஈண்டு உரியசை மயக்கத்தினையே ஆசிரிய வுரிச்சீர் என்றான்'' என்று இந்நூற்பாவில் எழுதுவது கொண்டு சிறந்த ஆசிரியவுரிச்சீர்

இவை என்று உணர்ந்து கொள்க. மேலும் அவர் இவ்வாறு கூறியதால் நீடுகொடி, குளிறு புலி என்னும் இரண்டு ஆசிரிய உரிச்சீரும் ஆசிரியத்து வந்து அடியுறழும் என்பது ஈண்டுக் கொள்ளப்படும்'' என்பர்.

23. கலித்தளை மருங்கிற் கடியவும் பெறாஅ[1].

என்-னின் கலிப்பாவிற் குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கலித்தளை வரும்வழி மேற் சொல்லப்பட்ட இருவகைச்சீரும் ஒருங்கு நிற்கவும் பெறும் என்றவாறு. (உ.கூ)

24. கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே.

என்-னின் இதுவுமது.

(இ-ள்) கலிப்பாவிற்குரிய கலித்தளைக்கண் நேரீற் றியற் சீர் நிற்றற் குரித்தன்று ஆராய்வார்க்கு என்றவாறு. (உச)

25. வஞ்சி மருங்கினு மிறுதிநில் லாது.[2]

என்-னின் வஞ்சிக்குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சிப் **பாவினும்[1]** அடியி னீற்றின்கண் நில்லாது[2] நேரீற்றியற்சீர் என்றவாறு.

எனவே, அடிமுதற்கண் நிறகப்பெறும் என்றவாறாம். (உஞ)

பா. வே. 1 'படா' பேரா
'படாஅ' பேரா; நச்; சி.வை.தா;கன.

பா.வே. 1 ''நில்லா'' பேரா; நச்.

உரை.சு.வே:- 1. வஞ்சிப்பாவினுள் — ரா. ரா.
2. அடியீற்றினில்லாது — ரா.ரா.

பதிப்பாசிரியர் விளக்கம்

வஞ்சிப்பாவினுள் இயற்சீர்

பேராசிரியர் ''மேற்கூறிய தேமா புளிமா என்னும் இயற்சீர் இரண்டும் இறுதலோடு நில்லா வஞ்சிப்பாவினுள்; எனவே தூங்க லோசைப்பட முதற்கண் வாரா என்றவாறாம்'' என்பர். (இரு சீரினுள் வருஞ்சீரோடு தொடருங்கால் இறுதற்றொழில் பெறுவது முற்பட நின்ற சீராகலின்.)

எனவே, **நேரீற் றியற்சீர் வஞ்சிப்பாவின் அடியுள் முதலிலே இறுதலோடு நில்லா** என்பது பேராசிரியர் கருத்தாம். முதலிலே நின்ற சீராக இருந்தாற்றான் இறும் என்பது அவர் கருத்து; எனவே, கருவிளம் கூவிளம் என்னும் இயற்சீர் முதற்கண் இறுத லோடு நிற்கும் என்று அவர் கருதுகிறார்.

பேராசிரியர் இந்நூற்பாவுரையில் வேறு இரண்டு உரையாசி ரியர்களைக் குறிப்பிடுகின்றார். ஒருவர் நேரீற்றியற்சீர் வஞ்சிப் பாவின் ஈற்றுக்கண் வருதல் சிறுபான்மை என்று உரைப்பாராம். மற்றொருவர் யாண்டும் இறுதிக்கண் நேரிற்றியற்சீர் வாரா என்று உரைப்பாராம். (இவர் இளம்பூரணராவார்) இவ்விரு வருரையையும் மறுத்துவிட்டு நேரீற்றியற்சீர் இறுதிக்கண் நிற்றல் பெரும்பான்மை என்பர்.

''மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும்''

என்னும் புறநானூற்றுப் பாடலில் வஞ்சியடிக்கண் நேரீற்றியற் சீர் பலவந்தன என்பர்.

ஆனால், பேராசிரியர் உரையை ஆராய்ந்து அச்சிட்ட **திரு. சி. கணேசையர் அவர்கள்** அடிக்குறிப்பில் ''இறுதி நில்லா என்பதற்கு இறுதலோடு நில்லா என்று பொருள் கோடற்குக் காரணம் கடைச்சங்க நூல்களை நோக்கியதாகலின், அது பொருந்தாது. இந்நூல் செய்த காலத்து இறுதியில் நில்லா

திருத்தல் வேண்டுமென்று கோடலே பொருத்தமாகும்'' என்று எழுதியுள்ளார்.

மேல் நூற்பாக்களுடன் ஒப்பு நோக்கத்தக்க நூற்பாக்கள்

''நேரீற் றியற்சீர் கலிவயின் இலவே
வஞ்சி மருங்கினும் இறுதியின் இலவே''

என்றார் நத்தத்தனார் (யா. வி. கழ. பக். 70).

''இயற்சீர் நேரிறல் தன்றளை உடைய
கலிக்கியல் பிலவே காணுங் காலை
வஞ்சி யுள்ளும் வந்த தாகா
ஆயினும் ஒரோவிடத் தாகும் என்ப,''

என்பது பல்காயம் (யா. வி. கழ. பக். 435).

''..... வஞ்சி கலியின்நேர் இற்ற
இயற்சீர் ஆகா என்மனார் புலவர்''

என்றார் அவிநயனார் (யா. வி. கழ. பக். 70).

நேரீற்று இயற்சீர்

நோற்றியற்சீர் ஒத்தாழிசைக் கலிப்பாவினுள் வாரா. இயற்சீரானே வஞ்சியுங் கலியும் பயின்று வாரா. ஆனால், கலிவெண்பாவினுள்ளும் வஞ்சியடி முதற்கண்ணும் கொச்சகக் கலியுள்ளும் வஞ்சியடி நடுவும், முச்சீரடி வஞ்சியுள்ளும் இருசீரடி வஞ்சியுள்ளும் நேரீற்றியற்சீர் சிறுபான்மை வரும் என்பர் (யா. வி. நூற்பா 15 உரை).

26. இசைநிலை நிறைய நிற்குவ தாயின்[1]
அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே[2].

என்-னின் ஓரசைச்சீர் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இசை நிற்கின்ற நிலை **நிரம்ப**[3] நிற்குமாயின் அசையும் சீராந்தன்மை போல வரையார் ஆசிரியர் என்றவாறு.

பா.வே. 1 **' நீற்குவ வாயின்** பேரா; நச்.
'நிற்குப' சு. வே.
2 'பெறலே' பேரா; நச்.
சு.வே. 3 நிரம்பா

உதாரணம்:- நாள், மலர், காசு, பிறப்பு எனவரும் (உசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஓரசைச்சீர்

இளம்பூரணர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் நான்கு அசையும் சீராக வரும் என்பர்.

ஆனால், **யாப்பருங்கலம்** ஓரசைச்சீர் பொதுச்சீர் என்றும் ஆகும்; அது நாள் மலர் என இரண்டே யாகும் என்ற கருத்தால்,

"ஓரசைச் சீருமஃது ஓரிரு வகைத்தே" (14)

என்று கூறும். அதன் உரையாசிரியர் "உதாரணம் நாள் மலர் என்பன. இவை ஓரசைச் சீர்க்கு உதாரணம் உரைத்தது, **வெண்பாவின் இறுதி ஓசை ஊட்டுதற் பொருட்டு" என்பர்.**

ஆனால், இங்கே காட்டப்பட்ட மேற்கோள் நூற்பாக்கள்

"நேர்நிரை வரினே சீர்நிலை எய்தலும்
பாவொடு பிறவும் ஆகும் ஒரோவழி" (அவிநயம்)

"நேரும் நிரையும் சீராய் வருதலும்
சீரும் தளையும் சிதைவுழிக் கொளலும்
யாவரும் உணர்வர் **யாவகைப் பாவினும்"** (மயேச்சுரம்)

என நேர், நிரை என்னும் இரண்டே ஓரசைச்சீர் என்று குறிப்பிட்டாலும், இவை எல்லாப் பாவிற்கும் பிறவற்றிற்கும் வரும் என்று கூறுகின்றன. விருத்தி ஆசிரியரும் பின்னே ஒழிபியலில் அசைச்சீர், பல பாக்கட்கு வரும் என்பர்.

மேற்கோள்

"இசைநிலை" என்னும் இந்நூற்பா பக். 68, 439 மேற் கோள் (யா. வி. கழ.).

27. இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளலே
தளைவகை சிதையாத் தன்மை யான.

என்-னின் அவ் வோரசைச்சீரில் தளை ஆமாறு உணர்த்து தல் நுதலிற்று.

(இ-ள்) ஓரசைச் சீரைத் தளைவகை சிதையாத் தன்மை வேண்டு மிடத்து **இயற்சீரின் ஈறு** போலக்[1] கொள்க என்றவாறு.

(உ-ஏ)

பதிப்பாசிரியர் விளக்கம்

அசைச்சீர்க்குத் தளை கொள்ளுமாறு

இந்நூற்பா நான்கு அசைச்சீர்க்கும் தளை கொள்ளுமாற் றைக் கூற வந்ததாகக் கருதி **இளம்பூரணர்** உரை கூறுகின்றார். நேர்பு, நிரைபு என்னும் உரியசைச் சீர் இரண்டிற்கு மட்டுந் தளை கொள்ளுமாற்றைக் கூற வந்ததாகக் கருதிப் **பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்** உரை கூறுகின்றனர்.

இளம்பூரணர் கருதியவாறு **நான்கு அசைச் சீருக்கும் தளை கொள்ளுமாற்றை யாப்பருங்கல விருத்தி ஆசிரியர்,**

''இனி அசை சீராய் நின்ற விடத்துத் தளை வழங்கும் பொழுது நேரசைச் சீருக்கு மற்றும் ஓரலகு கொடுத்து நேர் நேர் ஆகவும், நிரையசைச் சீருக்கு மற்றும் ஓரலகு கொடுத்து நிரை நேர் ஆகவும் நேர்பு அசைச்சீருள் ஓரலகு களைந்து தேமாவாகவும் நிரைபு அசைச்சீருள் ஓரலகு களைந்து புளிமா ஆகவும் வைப்பர் எனக் கொள்க. என்னை?

''உரியசைச் சீர்ப்பின் உகரம் நேராய்த்
திரியும் தளைவகை சேர்த லானே''

என்றார் நல்லாறனார்.

''சீரா கிடனும் உரியசை உடைய
நேரீற் றியற்சீர் அவ்வயி னான''

என்றார் நற்றத்தனார்.

''இயற்சீர்ப் ..... தன்மை யான''

உரை-சு.வே: 1 'இயற்சீர் போலக்'

என்றார் **தொல்காப்பியனார்.**

''நேர்நேராம் நேரசையும் நேர்பும்; நிரைநேராம்
நிரையும் நிரைபும் எனல்''

இவற்றை விரித்து உரைத்துக் கொள்க'' என்பர்.

யாப்பருங்கலம் 21 ஆம் நூற்பாவுரையுள் விதப்பினால் **''ஓரசைப் பொதுச் சீரை இயற்சீரே போலக்** கொண்டு வருஞ்சீர் முதலசை யோடு ஒன்றியது ஆசிரியத் தளையாகவும், ஒன்றாதது வெண் டளையாகவும் கொண்டு வழங்கப்படும்'' என்று விருத்தி ஆசிரியர் கூறி,

''ஓரசைப் பொதுச்சீர்த் தளைவகை தெரியின்
ஈரசைச் சீர்த்தளைக் கெய்தும் பெயரே''

''ஓரசைப் பொதுச்சீர் ஒன்றா தாயின்
வெண்டளை; ஒன்றிய தாசிரியத் தளையே''

எனவும் சொன்னாரும் உளரெனக் கொள்க என்பர்.

இவையெல்லாம்

பேராசிரியர், நச்சினார்க்கினியர் கருத்திற்கு மாறுபட்டவையாம்.

28. வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே.

என்-னின் இதுவுந் தளைவழக்குந் திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வெண்சீர் ஈற்றசை தளை வழங்குமிடத்து, இயற்சீர் அசை நிரையீறு போலும் என்றவாறு.

'இயற்சீர்' என்பது அதிகாரத்தான் வந்தது. **(உ-அ)**

பதிப்பாசிரியர் விளக்கம்

உரையாசிரியர்களின் உரை வேறுபாடு

பேராசிரியர் இந்நூற்பாவிற்கு **''இது வெண்சீராற் கலித்தளை** யாமாறு உணர்த்துதல் நுதலிற்று'' என்று நுதலிய துரைத்து, 'கலித்தளை மருங்கிற் கடியவும் படாஅ' (செய். 23) என்புழி, அவ்வாசிரிய வுரிச்சீராற் கலித்தளையாம் என்றார் அவ்வதி

காரம் இடையறாது நின்றமையின். இதுவும் கலித்தளைக்கே இலக்கணமாயிற்று என்றாற்கு, ''வஞ் சிமருங்கினும்'' (செய். 25) எனவும், ''இசைநிலை நிறைய'' (செய்.26) எனவும், ''இயற்சீர்ப் பாற்படுத்து'' (செய். 27) எனவும் இம்மூன்று சூத்திரமும் இடையிட்டனவாலெனின், அற்றன்று. கலிப்பாவிற்கு விலக்கப் பட்ட நேரீற்றியற்சீர் அதிகாரம் பற்றி இடைபுகுந்தவல்லது கலித்தளை அதிகாரம் விலக்கினவல்ல என்பது'' என்று தடையும் விடையும் கூறுவர். மேலும் ''வெண்சீர் பல தொடர்ந்து ஒரு கலியடியுள் நின்ற வழி, அவ்வெண்சீருள் ஈற்று நின்ற சீரின் முதல் வந்த நேரசை மற்ற நிரைமுதல் வெண்சீர் வந்து முன்னைய இரண்டும் கலித்தளையாயவாறு போலக் கலித் தளையாம் என்றவாறு'' என்று நூற்பாவிற்குப் பொருள் எழுதிவிட்டு.

''அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையான்''

என்பது வெண்சீர்கள் பகைத்து வந்து, ஈற்றுச் சீரின் முதற்கண் நின்ற நேரசை நிரையசை போலக் கலியோசை கொண் டமையின் அது கலித்தளை எனப்பட்டது என்று விளக்கமும் எழுதுவர். **நச்சினார்க்கினியரும்** இதே கருத்தினராவர்.

ஆனால் யாப்பருங்கல விருத்தி ஆசிரியர்,

''தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா'' என்றும், போதுபூ, போரேறு, பூமருது இவைகளைப் பாதிரியாகவும், விறகுதீ, கடியாறு, மழகளிறு இவைகளைக் கணவிரியாகவும், **வெண்சீரின் ஈற்றசை நிரையசையாகவும்** இயற்றித் **தொல்காப்பிய னாரும் நற்றத்தனாரும்** முதலாகிய ஆசிரியர் சொன்ன மதமெல் லாம் வல்லார்வாய்க் கேட்டுக் கொள்க என்று எழுதுவதைக் கருதினால் **இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையையே** அவர் கருது கின்றாரென்பது புலனாம்.

இளம்பூரணர் செய்யுளியல் 52ஆம் நூற்பாவுரையுள்,

''இனி வெண்சீர் வெண்டளையும், வெண்சீர் நிற்ப வருஞ் சீரும் வெண்சீராதல் இயற்சீராதல் வந்து வெண்டளையாக

வேண்டுதலின் நிலைமொழியாகிய வெண்சீரை ''வெண்சீரீற் றசை நிரையசையியற்றே'' (செய். 28) என ஒதுதலின், அதனை நிரையீற்றியற்சீர் ஆக்கினால் வருஞ்சீர் **நேர்முதலியற்சீராயின் அதுவும் இயற்சீர் வெண்டளையாம்**'' என்று எழுதுவதை நோக்கினால் **இந்நூற்பா வெண்சீருக்கு முன் இயற்சீர் வருவதற்கே** விதி என்பது புலனாம்.

29. இன்சீ ரியைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய வடிக்கே.

என்-னின் ஆசிரியப்பாவிற்கு உரிய சீர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இனிய ஓசை பொருந்தி வருகுவ தாயின், ஆசிரிய அடிக்கு வெண்பாவுரிச்சீர் வரையார் **ஆசிரியர்**[1] என்றவாறு. (உக)

பதிப்பாசிரியர் விளக்கம்

யா.க. விருத்தி. கழ. பக். 70 இல்

''ஓசையின் ஒன்றி வரினும்வெண் சீரும்
ஆசிரிய அடியுட் குறுகும் என்ப''

என்ற வடிவத்தில் ஒரு நூற்பா உள்ளது. இந்நூற்பாக் கருத்தும் தொல்காப்பிய நூற்பாக் கருத்தும் ஒத்துள்ளன. ஆனால் இந்நூற்பாவில் உள்ள 'இன்' 'உம்' என்பன நன்கு பொருள் தருமாறில்லை. அதனால்

''ஓசை ஒன்றி வரின்வெண் சீரும்
ஆசிரிய அடியுட் குறுகும் என்ப''

என்றிருப்பது நன்று.

ஆசிரிய அடியில் வருதலால், இன்சீர் இயைந்தால் வெண்சீர் வரும் என்பது தொல்காப்பியர் கருத்து. **காரிகை உரையாசிரியர்**

உரை. சு, வே. 1 'சிலர்'

30ஆம் காரிகை உரையில் வெண்சீர் விரவிய இயற்றளை, வெள்ளடி ஆசிரியப் பாவில் அருகி வரும் என்பர்.

30. அங்நிலை ஈருங்கின் வஞ்சி யுரிச்சீர்
ஒன்றுத லுடைய வொரோவொரு வழியே.

நச்சினார்க்கினியர் உரையுள் 'ஓரோ வோர்' என்று எழுதுவதால் அதுவும் பாடமாகலாம்.

பேராசிரியர் 'ஒருவழி என்னாது' 'ஒரொரு வழி' என்றது என்னையெனின் என்று உரைத்தலால் அவர் பாடம் புலப்படும்.

என்-னின் இதுவும் அது.

(இ-ள்) இன்சீர் இயைய வருகுவதாயின் (செய்.29) வஞ்சியுரிச்சீரும் ஒரோவழி[1] ஆசிரிய அடிக்கண் வரும் என்ற வாறு.

ஈரசை கொண்டு (செய்.11) என்பது முதலாக இத் துணையுஞ் சொல்லப்பட்டது:—

ஓரசைச் சீர் நான்கு, ஈரசைச்சீர் பதினாறு, மூவசைச்சீர் அறுபத்து நான்கு ஆகச் சீர் எண்பத்து நான்கில் ஓர் அசைச்சீர் நான்கெனவும், அது தளை வழங்கும் வழி இயற்சீரொக்கு மெனவும், ஈரசைச்சீர் பதினாறுள்[2] சிறப்புடைய இயற்சீர் நான்கும், சிறப்பில் இயற்சீர் ஆறும் எனப் பத்தாம் எனவும், ஆசிரியவுரிச்சீர் ஆறு எனவும், மூவசைச்சீர் அறுபத்து நான்கில் வெண்பாவுரிச்சீர் நான்கெனவும் ஏனைய வஞ்சியுரிச்சீர் எனவும் தொகை கூறியவாறு.[3] (கூ0)

பதிப்பாசிரியர் விளக்கம்

பிறபாக்களில் வரும் வஞ்சி உரிச்சீர்

நூ. பா. வே: 1. 'வோ ரோர்' பேரா.
'வோ ரொரு' நச்.

உரை: சு.வே: 1. ஒரோ ஒருவழி
2. பதினாறும்
3. கூறியவாறு

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர்

"வஞ்சியுரிச்சீர் அறுபதும் வெண்பாவிற் புகபபெறா; **ஆசிரியத்துள்ளும்** கலியுள்ளும் மாசெல்சுரம், புலிசெல்சுரம், மாசெல்காடு, புலிசெல்காடு, மாசெல் கடறு, புலிசெல் கடறு, பாம்பு செல்வாய், பாம்பு படுவாய், களிறு செல்வாய், களிறு படுவாய் என்னும் **பத்து வஞ்சியுரிச்சீரும் புகப் பெறும் எனக் கொள்க. ஒழிந்த ஐம்பது வஞ்சியுரிச்சீரும் அகவலுட் புகப்பெறா** எனக் கொள்க" என்பர்.

"நிரைநடு வியலா வஞ்சி யுரிச்சீர்
கலியினோ டகவலிற் கடிவரை யிலவே" (யா. க. நூற். 16)

"இணைநடு வியலா வஞ்சி யுரிச்சீர்
இணையுள ஆசிரி யத்தன வாகா" (காக்கைபாடினியார்)

"நடுவு நேரியல் வஞ்சி யுரிச்சீர்
உரிமை யுடைய ஆசிரியத் துள்ளே" (சிறுகாக்கைபாடினியார்)

"நேர்நடு வியலும் வஞ்சி யுரிச்சீர்
ஆசிரி யத்தியல் உண்மையும் உடைய" (அவிநயனார்)

"நிரைநடு வியலா வஞ்சி யுரிச்சீர்
வருதல் வேண்டும் ஆசிரிய மருங்கின்" (மயேச்சுரர்)

(யா. வி. கழ. பக். 84)

(5) அடி

31. நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே.

என்-னின் நிறுத்த முறையானே அடியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நான்குசீர் ஒருங்கு தொடுத்து வருவதனை அடி என்று சொல்லப்படும் என்றவாறு.

இதன் வேறுபாடு முன்னர்க் கூறப்படும். (கூ க)

பதிப்பாசிரியர் விளக்கம்

நாற்சீர் கொண்ட அடியின் சிறப்பு

யா. க. 24 ஆம் நூற்பாவுரையுள் 'நிரனிறை வகையால் நிறுத்தனர் கொளலே' என்பது இல்லாவிடினும் நிரல்நிறைப் பொருள்கோளாம் 'ஐ ஒள...வாகும்' (தொல். எழு. 42) என்றாற் போல. பெயர்த்தும் அதனை எடுத்தோதல் வேண்டிய தென்னை எனின்; நாற்சீரடி சிறப்புடைத்து; அதனை நேரடி என்றும், அளவடி என்றும் வழங்குப என்பது அறிவித்தற்கு வேண்டப்பட்டதெனக் கொள்க.

> ''நாற்சீர் கொண்டது நேரடி அதுவே
> தூக்கொடும் தொடையொடும் சிவணும் என்ப''

என்றார் நற்றத்தனாரும் எனக் கொள்க என்றனர்.

2. நாற்சீரடிக்கு 'முற்றடி' என்றொரு பெயரிருத்தலைச் செய்யுளியல் 119ஆம் நூற்பாவால் உணர்க.

3. செய்யுளியல் 175ஆம் நூற்பா உரையில் 'அடிநிமிர் கிளவி' என்ற பகுதிக்கு, 'நாற் சீரடியின் மிக்குவரும் பாட்டு' என்று உரை எழுதப்புகுந்தவர், முன்னே, ''நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே என்றமையான் அடி என்பது நாற்சீரான் வருவதென்று கொள்க'' என்று **இளம்பூரணர்** எழுதுகின்றார்.

4. **சேனாவரையர்,** அளவடி யல்லாதன விகார அடியாகலிற் பட்டாங் கமைந்தில வாகலிற் பட்டாங்கமைந்த ஈரடி எனவே அளவடியாதல் பெறப்படும் என்பர். (தொல்.சொல்.406)

5. **பேராசிரியர்** ''அடியென்று சிறப்பித்துக் சொல்லப் படுவன நாற்சீரடி என்றவாறு. எனவே, இருசீரானும் முச் சீரானும் ஐஞ்சீரானும் அறுசீர் முதலியவற்றானும் வருமாயினும் அவை சிறப்பில என்றவாறாம்'' என்பர்.

6. **இளம்பூரணர்** இறுதியில் ''இதன் வேறுபாடு முன்னர்க்

கூறப்படும்'' என்றது போல் **பேராசிரியரும்** உரை இறுதியில் ''இவற்றது விகற்பமெல்லாம் முன்னர்ச் சொல்லுதும்'' என்பர்.

32. அடியுள் ளனவே தளையொடு தொடையே.

என்-னின் தளைக்கும் தொடைக்கும் இடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தளையும் தொடையும் அடியின்கண் என்றவாறு. (கூஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. செய்யுளியல் 88ஆம் நூற்பா 'அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை' என்பதாகும். அந்நூற்பாவுரையுள் இளம் **பூரணர்** அஃதேல் '''அடியுள் ளனவே தளையொடு தொடையே' என வோதி, ஈண்டு மற்றையடியினும் வருமென்றல் பொருந்தா தெனின், ஆண்டு மற்றையடியில் வாரா தென்றாரல்லர். அடிவரையறையில்லாத உரை முதலான வற்றில் தளையொடு தொடை இல்லை என்பார் அடியுள்ளனவே தளையொடு தொடை என்றார்'' என்று எழுதியதைக் காண்க.

2. அடி என்றதன் காரணம்

1. யா. விருத்தி ஆசிரியர்

23 ஆம் நூற்பாவுரையுள் ''பலவும் சிலவுமாகிய தளையொடு பொருந்திய சீர்களால் அடுத்து நடத்தலின் அடி என்பது காரணக் குறி. என்னை?

''தடுத்தனர் தட்ட தளைபல தழுவியும்
அடுத்த சீரின் அடியெனப் படுமே''

என்றார் ஆகலின்'' என்பர்.

3 நாற் சீரடியில் தொடை

சீரிரண் டிடைவிடத் தொடுப்ப தொரூஉத் தொடை–44

என்னும் யாப்பருங்கல நூற்பாவுரையுள் **''சீரிரண்ட டிடைவிடின் ஓருஉவென மொழிப''** என்றார் **பல்காயனார்** ஆகலானும், அவ்வாறு ஓதாமல் பெயர்த்தும் தொடை என்று சொல்ல வேண்டிய தென்னையெனின் **தொடை விகற்ப மெல்லாம் ஈற்சீர் அடியுள்ளே வழங்கப்படும் என்பது எல்லா ஆசிரியர்க்கும்** துணிவென்பது அறிவித்தற்கு ஒரு தோற்றம் உணர்த்திய தென்க என்பர் (கழ. பக். 174).

4. ''பாட்டான நல்ல தொடையாய் போற்றி''

திருநாவுக்கரசர்.

33. அடியிறந்து வருத லில்லென மொழிப.

என்-னின் மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தளையுந் தொடையும் நான்கு சீரடியில் வருதலன்றி அடியினீங்கி வருதல் இல்லை என்றவாறு.

அடிவரையறை யில்லாதன வற்றிற் கொள்ளப்படாது என்றவாறாம். (கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1 தளையும் தொடையும் வரும்இடமும் வாரா இடமும்

தளையொடு தொடை அடியுள்ளனவே யன்றி அடி வரை யறை யில்லாத உரை முதலாயினவற்றில் அவை வாரா என்பது கருத்து.

32 ஆம் நூற்பாப் பதிப்பாசிரியர் விளக்கத்தினை நோக்குக.

34. அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே.

என்-னின் இதுவும் அடிக்குரிய தோர் சிறப்புணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடியின் சிறப்பினானே பாட்டென்று சொல்லப் படும் என்றவாறு. எனவே, பாட்டென்னுஞ் செய்யுட்கு அடி இன்றியமையா தென்றுகொள்க. பாட்டாவன வெண்பா

ஆசிரியம் கலி வஞ்சி என்பன.

இனி, அவ்வடியினை எழுத்தளவினாற் குறியிடுகின்றார். (ஈச)

பதிப்பாசிரியர் விளக்கம்

பாட்டிற்கு இன்றியமையாதது நாற்சீரடி

பேராசிரியர் "இது நாற்சீரடியையே விசேடித்துக் கூறி, அதனது இடத்தானே பாட்டென்பதோர் முதற்பொருள் தோன்று மென்பது உணர்த்தியவாறு. 'எனப்படும்' என்றதனான் இவ்வடிகளான் வந்த செய்யுளே சிறப்புடைய என்பதூஉம் சொல்லியவாறு. மாத்திரை முதலிய உறுப்புக்களான், இத்துணை மாத்திரை கொண்டது செய்யுளென்றானும், இத்துணை அசையுஞ்சீரும் தொடையுங் கொண்டது செய்யுளென்றானும் அளவியல் கூறி, அவ்வுறுப்புக்களான் வரையறுக்கப்படா. அடியளவே கூறச் செய்யுட் புலப்பாடா மென்பது. 'எனப்படும்' என்றதனான் ஒழிந்த அடிகளானும் அவ்வாறு வருமாயினும் அவை சிறப்பில என்பது".

"அடியின் சிறப்பென்பது அடி இரண்டும் பலவும் அடுத்து வந்த தொடையே பாட்டு என்றவாறு. தலை இடை கடைச் சங்கத்தாரும் பிற சான்றோரும் நாற்சீரடியான் வரும் ஆசிரியமும் வெண்பாவும் கலியுமே பெரும்பான்மையும் செய்தார். வஞ்சிப்பாச் சிறுவரவீற்றெனக் கொள்க" என்பர்.

நச்சினார்க்கினியர்

தாம் உரை கொள்ளும் பழக்கம் பற்றி "அடியின் பாட்டே சிறப்பெனப் படுமே" என மொழி மாற்றி உரை கூறுவர்.

35. நாலெழுத் தாதி[1] யாக வாறெழுத்
தேறிய நிலத்தே[2] குறளடி பென்ப.

நூ. பா. வே: 1. நாலெழுத் தாதி ஆறெழுத் தெல்லை
2. நிலத்த யா-க.
2. 'நிலைத்தே' தொன்னூல்

என்-னின் குறளடி வரையறை உணர்த்துதல் நுதலிற்று,

(இ-ள்) நாலெழுத்து முதலாக ஆறெழுத் தீறாக ஏறிய மூன்று நிலத்தை உடைத்து குறளடி என்று சொல்லுவர் என்றவாறு. எனவே குறளடிக்கு நிலம் நாலெழுத்தும் **ஐந்தெழுத்தும் ஆறெழுத்துமாம்**

இதற்குரிய எழுத்து முன்னர்க் காட்டுதும்.[1] (கூடு)

பதிப்பாசிரியர் விளக்கம்

பாட்டிற்கு நாலெழுத்திலிருந்தே ஓசை வரும்.

> "நாலெழுத்து முதலாக ஆறெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியும் குறளடி" (யா.வி.கழ. பக். 111).

வீரசோழியம், "ஒன்றாதி யென்ப ரொருசா ரவரொரு நான்கு முன்னாம் என்றா லினிது சந்தத்தின்" (131) என்னும் காரிகையையும் விருத்த அடிகள் ஒரெழுத்து முதலாக வரும் என்பர் ஒரு சாரார்;

> 'நான்கெழுத்து முதலாக வந்தாலல்லது ஓசையுண்டாகா'

என்னும் அதன் உரையையும் நோக்கினால் **நாலெழுத்தி லிருந்தே பாட்டிற்குரிய ஓசையுண்டாகும்** என்பது அறியப்படும்.

36. ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
யீரெழுத் தேற்ற மல்வழி யான.[1]

என்-னின் சிந்தடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஏழெழுத் தென்று சொல்லுவர் சிந்தடிக்கு அளவு; ஒன்பதெழுத்து ஏற்றம் அல்லாத விடத்து என்றவாறு.

எனவே ஏழும், எட்டும், ஒன்பதுமாகிய எழுத்தினாற் சிந்தடி யாம் என்றவாறாம். (கூசு)

உரை.சு.வே: 1 காட்டுப
நூ.சு.வே: 1. 'இல்வழி யான' யா.வி. கழகம் பக். 112
''அவ்வழி யான'' ,, பழைய

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒப்பு

ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் சிந்தடி. (யா.வி.கழ.பக் 111).

37. பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே.[1]

என்-னின் அளவடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

*அளவடி எனினும் நேரடி எனினும் ஒக்கும்.

(இ-ள்) பத்தெழுத்து முதலாகப் பதினான் கெழுத்தளவும் அளவடியாம் என்றவாறு.

எனவே பத்தும் பதினொன்றும் பன்னிரண்டும் பதின் மூன்றும் பதினாலுமென ஐந்து நிலம் பெறும். (கூ-ரை)

பதிப்பாசிரியர் விளக்கம்

நச்சினார்க்கினியத்தில் நூற்பாவும் உரையும் பொருந்தவில்லை.

நச்சினார்க்கினியர் அளவடிக் கெல்லை பத்தெழுத் தொன்றுமே என்று கூறுவர்; அதனோ டொத்த பதினொன்றும் பன்னிரண்டும் பதின்மூன்றும் பதினான்கு மாகிய நான்கெழுத் தானாகிய நான்கு நிலனும் **ஏற்றமாய் வாராத வழி** என்றவாறு என்று உரை கூறுவதைக் கருதினால் **''ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே''** என்ற பாடமே அவர் கொண்டதாகத் தெரிகிறது. ஆனால், அவர் பதிப்பில் உள்ள பாடம் **''ஒத்த நாலெழுத் தொற் றலங் கடையே''** என்பதாகும்.

38. மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலு மியல்பென மொழிப.[2]

என்-னின் நெடிலடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நூ.பா.வே: 1 'நாலெழுத் தேற்றலங் கடையே' இள;பேரா.
'நாலெழுத்தொற்றலங்கடையே' யா.வி;நச்; தொன்.
சே.வே: 2. 'மிகுத லிவடமபறு மமன்றே'

(இ-ள்) பதினைந் தெழுத்து முதலாகப் பதினே ழெழுத் தளவும் நெடிலடியாம் என்றவாறு.

எனவே, பதினைந்தும் பதினாறும் பதினேழும் என மூன்று நிலம் பெறும் என்றவாறாம். (கூ அ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. **சொல்லிற்கேற்ற உரை**

நச்சினார்க்கினியர் "நெடிலடிக் கெல்லை பதினைந்தெழுத் தொன்றுமே என்று கூறுவர்; அதற்குப் பதினாறும் பதினேழு மாகிய இரண்டெழுத்து மிக்கு வரும் நிலம் இரண்டும் இயல் பென்று கூறுவர்" என்று எழுதுவது நூற்பாவின் சொல்லிற்கு ஏற்ற உரையாகும்.

2. இளம்பூரணர் கூறுவது கருத்துரையாகும்.

39. மூவா றெழுத்தே[1] கழிநெடிற் களவே
ஈரெழுத்து மிகுதலு மியல்பென[2] மொழிப

என்-னின் கழிநெடிலடி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பதினெட்டெழுத்து முதலாக இருபதெழுத்தளவுங் கழிநெடிலடியாம் என்றவாறு.

எனவே, பதினெட்டும் பத்தொன்பதும் இருபதும் என மூன்று நிலம் பெறும். (கூ கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. **நாற்சீரடியை ஐந்தாக வகுத்தமைக்குக் காரணம்**

பேராசிரியர் "குறளடி நிலங்களை வகுத் தொழியாது ஒழிந் தனவும் வகுத்துரைத்தான், அவை முதல் இடை கடையென மூன்று கூற்றான் ஒன்றொன்றனிற் சிறப்பு இழிபுடையன வென்று கொள்ளினும் கொள்ளலாம் என்பது. .....

நூ. பா. வே: 1. 'றெழுத்து' யா. வி.
2. 'மிவட்பெறு மென்ப' பேரா; நச்; யா. வி.

குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி யென நாற் சீரடிதானே ஐவகைப்படும் என்று அவற்றது பெயரும் முறையும் தொகையும் கூறினான்.

தொகை பதினேழ் நிலத்து ஐவகை யடி என்பது.

இப்பெயரெல்லாம் காரணப் பெயர். மக்களுள் தீரக் குறியானைக் குறளன் என்றும், அவனில் நெடியானைச் சிந்தன் என்றும், ஒப்பமைந்தானை அளவிற்பட்டானென்றும், அவனின் நெடியானை நெடியானென்றும், அவனின் நெடியானைக் கழிய நெடியான் என்றும் சொல்லுப. அவை போற் கொள்க இப் பெயர் என்பது'' என்பர்.

2. நச்சினார்க்கினியர் கூறும் சீர்வகை அடி

''இவை சீர்வகை அடிக்கும் ஒக்கும். என்னை, சுருங்கிய எழுத்தானும் (4, 5, 6,) இருசீரானும் வருவன குறளடி எனவும், ஏறிய எழுத்தானும் (7, 8, 9) மூச்சீரானும் வருவன சிந்தடி எனவும், இடைநிகரன எழுத்தானும் (10, 11, 12, 13, 14) நாற்சீரானும் வருவன அளவடி எனவும், மிக்க எழுத்தானும் (15, 16, 17) ஐஞ்சீரானும் வருவன நெடிலடி எனவும், அவற்றின் மிக்க எழுத்தானும் (18, 19, 20) அறுசீர் முதலிய சீரானும் வருவன கழிநெடிலடி எனவும் இங்ஙனம் **இருவகை யடிக்கும்** ஒரு பெயரே கொள்க. அவை.

'ஒங்குதலை வியன்பரப்பின்' (மதுரைக்காஞ்சி)
'வலமா திரத்தான் வலிகொட்ப' (மதுரைக்காஞ்சி)
'சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே' (புறநா. 235)
'சிறுசோற் றானு நவிபல கலத்தன் மன்னே' (புறநா. 235)
'நெறியறி செறிகுறி புரிதிரி பிரியா வறிவனை முந்துறீஇ'
(குறிஞ்சிக்கலி. 3)

'கவிரிதழ் கதுவிய துவரித ழரிவையர்
கலிமயிற் கணத்தொடு விளையாட'

'மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரு நாண
முழுதுலகு மூடி முளைவயிர நாறி'

என இவற்றை முறையே குறளடி, சிந்தடி, அளவடி, நெடி

லடி, கழிநெடிலடி எனப் பெயர் கூறுப. எண்சீரின் மிக்கன சிறப்பில" என்பர் நச்சினார்க்கினியர்.

(தொல். செய். 40 உரை)

40. சீர்நிலை தானே யைந்தெழுத் திறவாது
நேர்நிரை[1] வஞ்சிக் கடை மாகும்.

என்-னின் சீர்க்கு எழுத்து வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சீர்நிலை ஐந்தெழுத்தின் மிகாது நேர் இறுதியாங் காலத்து; நிரையீறாகிய வஞ்சியுரிச்சீர்க்கு ஆறெழுத்தும் ஆகும் என்றவாறு.

எனவே, இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடி இல்லை என்ற வாறாம்; வஞ்சியுரிச்சீர் முச்சீரடியின்கண் வருதலின். (சூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. இளம்பூரணர் கூறும் உரை

என்-னின் ஐயம் அறுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேல் அதிகாரப்பட்ட[1] தூக்கியலும்[2] வகை சொல் லப்பட்ட நாலுமே என்றவாறு.

உரை.சு.வே: 1. அதிகரிக்கப்பட்ட
2. தூக்கு அவ்வகை சொல்லப்பட்ட நால்வகையும் என்றவாறு

எனவே, இன்னும் உளவோ எனக் கருதற்க வென, ஐயம் தீர்த்தவாறு. ஈங்கு ஓதப்பட்ட தூக்குச் செவிப்புலனாதலின் அதனானே ஓர்ந்துணர்ந்து பாகுபாடறிக. (அஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

தூக்கு நான்கே

1. பின் இணைப்பு

''அகவல் முதலான ஓசையாகிய தூக்கு நடக்கும் வகை இன்னும் உளவோ எனக் கருதற்க. அவை மேற்கூறிய நான்கே'' என்பது நூற்பாவின் பொருள். ஈங்கு ஓதப்பட்ட தூக்கென்னும் ஓசை, செவிக்குப் புலனாதலின், செவி கருவியாக ஓர்ந்துணர்ந்து பாகுபாடறிக என்றனர் **இளம்பூரணர்.**

2. பாட்டரவமும் பண் அரவமும்

இயற்றமிழ் நூலார் கூறும் ஆசிரியப்பா முதலியவற்றின் அகவல் முதலிய பாட்டோசை வேறு; இசை நூலார் கூறும் பண், திறம் முதலிய இசை ஓசை வேறு என்ற கருத்தால், **திணைமாலை நூற்றைம்பதின்** (145) பாடல் ஒன்று **''பாட்டரவம் பண்ணரவம்''** என்று பாகுபடுத்திக் கூறும்.

3. ஆங்கு என்றதன் பொருள்

இளம்பூரணர் இந் நூற்பாவில் வந்துள்ள 'ஆங்கு' என்பதற்கு 'நாலுமே (அந் நாலுமே) என்று பொருள் கூறியுள்ளார். ஆனால், **பேராசிரியர்** 'ஆங்கு' என்றது அப்பெற்றித்து என்ற வாறாகக் கொள்ளற்க என்றொரு உரையைக் கூறி மறுக் கின்றார். இவ்வாறு உரை கூறுபவர் யார் என்பது தெரிய வில்லை. 'ஆங்கு' என்பது இடச்சுட்டாதல் வேண்டும்

(9) தொடை வகை

84. மோனை யெதுகை முரணே யியைபென
நானெறி மரபின தொடைவகை யென்ப.

என்-னின் தொடைப்[1] பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மோனை எனவும், எதுகை எனவும், முரண் எனவும், இயைபு எனவும் நான்கு நெறிப்பட்ட மரபினையுடைய தொடையினது பாகுபாடு என்றவாறு.

உதாரணம் தத்தம் சிறப்புச் சூத்திரங்களுட் காட்டுதும். (அசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. தொடை என்பது என்ன

''அடியிரண்டு, தொடுத்தல் முதலாயின தொடை'' என்றும்
(யா. வி. கழ. பக். 17)

''தொடையே அடியிரண்டு இயையத் தோன்றும்'' என்றும்
(யா. க. 33)

''அடுத்த அடியிரண் டியாவகைப் பாவினும்
தொடுத்து வழங்கலின் தொடையெனப் படுமே''
(யா. வி. கழ. பக். 136)

என்றும் கூறப்படுவதை நோக்கினால் இரண்டடி இயைந்து வருதலைத் தொடை என்று கூறுகின்றனர் என்பது புலனாகும்.

இக் கருத்தை யொட்டிப் பிற்காலத்தே **இலக்கண விளக்க நூலார்** ''அடி இரண்டு தொடுத்துமன் சேறலின் தொடையே'' (711) என்பர். அந் நூற்பா உரையுள் 'மன்' என்ற மிகையானே ஓரடிக் கண்ணவாகிய தொடை விகற்பமும் கொள்க என்பர். **வீரமாமுனிவரும்** ''தொடையென்பதீரடி தொடுப்ப தாம்'' (தொன். 212) என்பர்.

நச்சினார்க்கினியர் ''முன்னர் 'அடியுள்ளனவே தளையொடு தொடையே' என்பதனான், ஓரடிக்கண்ணே தளையுந் தொடை யும் வருமென்பது பெறுதலானும், ஈண்டு அடிதொறும் எனப் பன்மை கூறுதலானும், ஈரடிக் கூட்டத்துந் தளையுந் தொடை யும் வருமென்பது பெறுதலானும், ஓரடிக்கண்ணும் ஈரடிக் கண்ணும் தளையும் தொடையும் கோடல் வேண்டுமென்று ணர்க'' என்பர் (செய். 92).

உரை.சு.வே: 1. தொடைகள் பாகுபடுமாறு.

நச்சினார்க்கினியர் ''தொடைநிலைவகை'' என்றது எழுத்துச் சொற் பொருள்களை எதிர்எதிர் நிறீஇத் தொடுக்கின்ற தொடைப்பகுதிகளை (செய். 1) என்றனர்.

யாப்பருங்கலவிருத்தி மேற்கோள் பாடலொன்று,

''எழுத்து மொழிபொருளென் றெண்ணிய மூன்றின்
வழுக்கின் முறைமை வகையால் - இழுக்கி
அடியோ டடியியைந்தும் அந்தரித்தும் வந்தால்
தொடையென்பர் தொன்னூ லவர்'' (யா. வி. கழ. பக்.209)

என்று தொடையைக் கூறுகின்றது.

தொடைக்கே எழுத்தும் சொல்லும் பொருளும் காரணம் என்பதை மேற்காட்டிய நச்சினார்க்கினியர் உரையும், மேற் கண்ட வெண்பாவும் கூறுகின்றன. அவ்வெண்பா எழுத்து முதலானவை அடியோடு அடியியைந்தும், அவ்வாறு இயை யாமல் அடியொன்றினுள் அடங்கியும் (அந்தரித்தும்) தொடை யாகும் என்று கூறுகின்றது. அவை முறையே தொடையென்றும் தொடை விகற்ப மென்றும் கூறப்படும் என்க.

காக்கை பாடினியாரும் (யா. வி. கழ. பக். 136)

''தொடையெனப் படுவ தடைவகை தெரியின்
எழுத்தொடு சொற்பொருள் என்றிவை மூன்றில்
நிரல்பட வந்த நெறிமைய தாகி
அடியோ டடியிடை யாப்புற நிற்கும்
முடிவின தென்ப முழுதுணர்ந் தோரே''

என்று அக்கருத்தைக் கூறுகிறார். இவர் அந்தரித்தலைக் கூற வில்லை.

நச்சினார்க்கினியர் (செய். 88) நூற்பாவுரையுள் 'இவைதாம் அறுநூற்றிருபத்தைந்தடிக் கண்ணும் வந்தவடியே வரவும், பிறவடி வரவும் தொடுப்பனவும்; ஓரடிக்கண்ணே தொடுப் பனவும்; கட்டளையடியோடு தொடுப்பனவும்; சீர்வகையடி தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் வரத்தொடுப்பனவும் எனப் பலவாயின' என்பர். இது பேராசிரியர் கருத்துமாகும்.

2. தொடை வேறுபடுதல்

இளம்பூரணர் 'தொடைநிலைவகையே' *(99)* என்ற நூற்பா வுரையில் 'தொடைநிலைவகை எழுத்தான் வேறுபடுதலும் சொல்லான் வேறுபடுதலும் பொருளான் வேறுபடுதலுமாம்' என்பர்.

இக்கருத்தினையே நச்சினார்க்கினியர் எடுத்துக்கொண்டு *(செய். 1)* சிறிது வேறுபடவுரைப்பர்.

85. அளபெடை தலைப்பெய வைந்து[1] மாகும்.

என்-னின் இதுவும் அது.

(இ-ள்) அளபெடைத் தொடையோடே கூட ஐந்தென்று சொல்லவும் பெறும் என்றவாறு. **(அடு)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. அளபெடைத்தொடை சிறந்ததன்று

பேராசிரியர் மேல் நூற்பா வுரையில் '"நானெறி மரபு' என்பது நெறிப்பட்ட தொடையிலக்கணம் மோனை எதுகை முரண் இயையு எனக் கூறப்படுவதாம். எனவே "அளபெடைத் தலைப்பெய வைந்து மாகும்" என்றவழி இது போலச் சிறந்த தன்று அளபெடைத்தொடை என்பதாம். என்னை? அதுவும் வழுவமைத்துக் கொண்ட எழுத்தாகலான் என்பது" என்பர்.

2. உம்மையாற் கொள்ளப்பட்ட தொடை

நச்சினார்க்கினியர்

"அந் நான்குடனே உயிரளபெடையைக் கூட்டத் தொடை ஐந்துமாம்; உம்மை எச்சவும்மை யாகலின் ஒற்றளபெடை கூட்ட ஆறுமாம் என்றவாறு. உயிரின் பின்னது ஒற்றாகலின் ஒற்றளபெடையை உம்மையாற் கொண்டார்.

கலிக்கு ஒற்றளபெடை துள்ள லோசையை நிகழ்த்தாதவாறு மேற்காண்க" என்பர். இது பேராசிரியர் உரைக்கருத்துமாம்.

நூ.சு.வே: 1. தலைப்பெய் தைந்து

3. அளபெடை தொடைக்கேயன்றி வண்ணத்திற்கும் வரும்

இச்செய்யுளியல் ஈற்றில்,

"அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்" (211)

என்ற நூற்பாவைக் காண்க.

86. பொழிப்பு[1] மொரூஉஞ் செந்தொடை மரபும்
அமைந்த[2] வை தெரியி னவையுமா ருளவே.

என்-னின் இதுவும் அது.

(இ-ள்) பொழிப்பெனவும், ஒரூஉ வெனவும், செந்தொடை யாம் எனவும் அமைந்தன[3] ஆராயின் அவையும் தொடைப் பாகு[4] பாடாம் என்றவாறு.

பதிப்பாசிரியர் விளக்கம்

அமையுமாறு

பேராசிரியர், "செந்தொடை மரபென்பது செந்தொடை யிலக்கணம் என்றவாறு.

"அமைத்தனர் தெரியின்" என்றதனான் அமையுமாற்றான் அமைத்துக் கொள்ளப்படும்; யாங்ஙனமெனின், பொழிப்பும், ஒரூஉவும், ஓரடியுள்ளே வருமெனவும், செந்தொடை ஓரடியுள் வரினும் இரண்டடியானன்றி வாராதெனவும் கொள்க. இக் கருத்து நோக்கி இவை ஈண்டுப் போதந்து கூறினான் என்பது.

'அவையுமா ருளவே' என்ற உம்மையான் இவைபோல ஓரடிக்கண்ணே வரும் முற்றெதுகையும் கிளைமுற்றெதுகையும் இரண்டந்தாதியும் இருவகை விட்டிசைத் தொடையும் கொள் ளப்படும்" என்பர்.

நூ.பா.வே: 1. மொரூஉ வுஞ்— பேரா.
2. 'அமைத்தனர்', பேரா; நச்.
'அமைத்தன' வ. உ. சி. குறிப்பு
உரை.சு.வே: 3. அமைத்து ஆராயின் 4. தொடைக்குப் பாகுபாடு

87. நிரனிறுத் தமைத்தலு மிரட்டை யாப்பும்
மொழிந்தவற் றியல்மான் முற்று மென்ப.

என்-னின் இதுவும் அது.

(இ-ள்) நிரலே[1] நிறுத்தி யமைத்துக் கோடலும், இரட்டைத் தொடையும் மேற்சொன்னவற்றான் முடியவும் பெறும் என்ற வாறு.

நிரனிறைத் தொடையாவது பொருளைச் சேரநிறுத்திப் பயனையுஞ் சேரநிறுத்தல்.

இரட்டைத் தொடையாவது ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வருதல்.

இத்துணையுங் கூறப்பட்டது அடிதொறும் வருவன ஐந்து தொடை எனவும், அடிக்கண் வருவன ஐந்து தொடை எனவும், அவ்வைந்தும் மூன்றாகி அடங்குமெனவும் கூறியவாறாம். (அ)

பதிப்பாசிரியர் விளக்கம்

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செய்யுளியல் நச்சினார்க்கினியர் பதிப்பில் அடிக்குறிப்பாகக் காட்டப்பட்ட இளம்பூரணர் உரை ''நிரனிறுத் தமைத்துக் கோடலும் இரட்டைத் தொடையும் ஏற்பவும் பெறும் என்றவாறு'' என்று எழுதப்பட்டுள்ளது.

மொழிந்தவற்றியலான் முற்றும் என்றதன் கருத்து

தொல்காப்பியர் தொடைகளைப் பதினாறு நூற்பாக்களால் கூறியுள்ளார். அவற்றுள் முதல் நான்கு நூற்பாக்கள் (செய். 84, 85, 86, 87) பத்துத் தொடைகளை எடுத்துக் கூறி விதிக்கும் பொது நூற்பாக்களாகும். ஏனையவை முன் கூறிய வற்றிற்கு இலக்கணம் கூறும் சிறப்பு நூற்பாக்களாகும். இச் செய்தியை **இளம்பூரணர்** 84ஆம் நூற்பாவுரையில், ''உதாரணம் தத்தம் சிறப்புச் சூத்திரத்துட் காட்டுதும்'' என்று கூறுதலை நோக்கி அறிக.

உரை.சு.வே: 1.

இலக்கணம் கூறும் சிறப்பு நூற்பாக்கள் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை என்னும் எட்டிற்கே உள்ளன. நிரல் நிரைக்கும், இரட்டைக்கும் இலக்கணம் கூறும் சிறப்பு நூற்பாக்கள் இல்லை. அவ்வாறாயின், தொல்காப்பியர் அவ்விரண்டிற்கும் இலக்கணம் கூறும் நூற்பாவைக் கூறாதது என்னை என்ற வினா எழுகின்றது.

தொல்காப்பியர் சொல்லதிகாரம் எச்சவியலில்

''நிரல்நிறைதானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றி
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்'' (9)

என்றும்

''இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்'' (27)

''விரைசொல் லடுக்கே மூன்றுவரம் பாகும்'' (28)

என்றும் நிரனிறைக்கும் இரட்டை யாப்பிற்கும் முன்னே இலக்கணம் மொழிந்துவிட்டபடியால், அதனைக் கருதி மொழிந்தவற்றியலான் முற்றும் என்று ஈண்டுக் கூறியுள்ளார். ஆனால் உரையாசிரியர்கள் இந்நூற்பாவிற்கு இவ்வாறு உரை கூறாமல் வேறுபட உரைக்கின்றனர்.

அவருள் **இளம்பூரணர்** இந்நூற்பாவில் மொழிந்தவற்றியலான் முற்றும் என்பதற்கு 'மேற்சொன்னவற்றான் முடியவும் பெறும்' என்று உரைகூறிவிட்டு, இவ்வுரைக்கு விளக்கமாகச் 'சொல்லிய தொடையொடு' (செய்.96) என்ற நூற்பாவுரையில் 'இனி நிரனிறுத்தியற்றலும் இரட்டை யாப்பும் மொழிந்தவற்றியலான் வருமாறு'; ''அடல்வே.....தாம்'' இது பொருளான் வேறுபட்ட துணையல்லது எழுத்தான் வேறுபடாமையின் முன் சொன்ன எதுகைத் தொடையாயிற்று. இனி இரட்டைத் தொடை வருமாறு, ''ஒக்குமே.....பூவினிறம்''; இதுவும் சொல்லிய தொடைப்பாற் பட்டவாறு காண்க என்பர்.

எனவே, இவர் நிரனிறையும், இரட்டையாப்பும் மேற் சொன்ன தொடைகளில் ஏதாவதொன்றில் அடங்கப்பெறும்

என்று கருதுகின்றாராதலான் ''இத்துணையுங் கூறப்பட்டது அடி தொறும் வருவன ஐந்து தொடை யெனவும், அடிக்கண் வருவன ஐந்து தொடையெனவும், அவ்வைந்தும் மூன்றாகி அடங்கு மெனவும் கூறியவாறாம்'' (செய். 87) என்று சிறப்புரை மேலே கூறியுள்ளார்.

பேராசிரியரும் இளம்பூரணர் கருத்தைப் பின்பற்றி, ''இது நிரனிறைத் தொடையும் இரட்டைத் தொடையுமென இரண்டு தொடை கூறி அவை முற்கூறிய தொடைப்பாற்படுமென்று அடக்கம் கூறுகின்றது'' என்று கருத்துக்கூறி, '''அடல்வேலமர் நோக்கி'' என்னும் நிரனிறை வந்த பாட்டு எதுகைத் தொடை யாயும், ''ஒக்குமே'' என்னும் பாட்டு இயைபுத்தொடையாயும் அடங்கும்' என்பர்.

நச்சினார்க்கினியரும் இதே கருத்தினராவர்.

இவ்வாறு மூவரும் ஒரே கருத்தினராய்க் கூறும் உரை முற்றிலும் வேறுபட்டிருத்தல் மேலே கூறப்பட்டது.

இவற்றைக் கருதினால், தொல்காப்பியர் கூறும் மோனை எதுகை முரண் இயைபு அளபெடை பொழிப்பு ஒரூஉ செந் தொடை நிரனிறை இரட்டையாப்பு என்னும் பத்துத் தொடை களை முதலாக வைத்தே பதின் மூவாயிரத்தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது என்னும் தொடைவிரி கொள்ள வேண்டுமென்க.

88. அடிதொறுந் தலையெழுத்[1] தொப்பது மோனை.

என்-னின் மோனை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடி தொறும் தலையெழுத்து ஒப்பது[2] மோனைத் தொடையாம் என்றவாறு.

அஃதேல், 'அடியுள் ளனவே தளையொடு தொடையே (செய். 32) என ஓதி, ஈண்டு[3] மற்றை அடியினும் வரு மென்றல்

நூ. சு. வே: 1. முதலெழுத்
உரை. சு. வே: 2. ஒன்றி வரத் தொடுப்பது
3. ஈண்டு மவற்றை

பொருந்தா தெனின்? ஆண்டு, மற்றையடியில் வாராதென்றா ரல்லர்.

அடி[1] வரையறை யில்லாத உரைமுதலாயினவற்றில் தளையொடு தொடையில்லை என்பார்,

''அடியுள் எனவே தளையொடு தொடையே'' என்றனர்,

உதாரணம்:—

மாவும் புள்ளும் வதிவயிற்[2] படர
மாநீர் விரிந்த பூவங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடையும்
மாயோய் நின்வயிற்[3] புறத்திறுத்தற்றே (யா.வி.கழ.பக்.134)

எனவரும். (அ.அ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. மோனையின் பெயர்

மோனை எனினும் முதற்றொடையெனினும் ஒக்கும். (காரிகை. 16)

2. ஒத்த நூற்பாக்கள்

''ஆதி யெழுத்தே அடிதொறும் வரினடி
மோனைத் தொடையென மொழிமனாற் புலவர்'' — யா. க. 35

''முதலெழுத் தொன்றி முடிவது மோனை'' - சிறுகாக்கைபாடினியார்

''முதலெழுத் தொன்றின் மோனை யாகும்' - நற்றத்தனார்

''முதலெழுத் தொன்றுவது மோனை'' - பல்காயனார்

''எழுவாய் எழுத்தொன்றின் மோனை'' — காரிகை 16

3. மேற்கோள்

இந்நூற்பா யாப்பருங்கலத்தில் 37 ஆம் நூற்பா மேற்கோளாக உரையில் வந்துள்ளது.

1. அடியல்லாத
2. பதிவயிற்
3. மாயோன் இன்னுயிர்ப்

89. அ:தொழித் தொன்றி[1] னெதுகை யாகும்.

என்-னின் எதுகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடிதொறும் முதலெழுத் தொன்றாமல் இரண்டா மெழுத்து ஒன்றின் எதுகை யாகும் என்றவாறு.

அஃதேல் முதலெழுத்து மொன்றி இரண்டா மெழுத்தும் ஒன்றில் யாதாகு மெனில் முந்துற்ற மோனையாற் பெயரிட்டு வழங்கப்[2] படும் என்க.

உதாரணம்:—

''அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே காடென்றார் கனங்குழா யக்காட்டுள்[3]
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே'' (கலித். 11)

என வரும். (அகூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. எதுகையைப் பற்றி யா.க. விருத்தி கூறும் செய்தி

''இரண்டா மெழுத்தொன் றியைவதே யெதுகை'' என்பது நூற்பா. ''இரண்டாவ தியைவ தெதுகை'' என்றாலும் இரண்டா மெழுத்தென்பது பெறலாம் அதிகாரத்தால்; பிறரும் 'முதலெழுத் தொன்றி முடிவது மோனை ஏனைய தொன்றி னெதுகைத் தொடையே' என்றாராகலானும், பெயர்த்தும் எழுத்தென்று சொல்லவேண்டிய தென்னையெனின்,

அடிக்கு எழுத்து எண்ணுமாறே போலாது, தொடைக்கு எல்லா எழுத்தும் கொள்ளப்படும் என்பதறிவித்தற்குச் சொல் லப்பட்டது.

இரண்டா மெழுத் தொன்றிவரினும் முதலெழுத்தெல்லாம் தம்முள் ஒத்த அளவினவாய் வந்து (எ.டு) பட்டு என்பதற்குக் கட்டு என்பதல்லது, காட்டு என்பதெதுகை யாகாது; காட்டு

நூ. சு. வே: 1. தொன்ற லெதுகைத் தொடையே (மர்ரே)
உரை. சு. வே: 2. வழங்கப்பெறும் என்றவாறு.
3. கனங்குழாய் காடென்றா ரக்காட்டுள்

என்பதற்குப் பாட்டு என்பதல்லது பட்டு என்பதெதுகை யாகாது.

அரம் என்பதற்குப் பரம் என்பதல்லது பாரம் என்ப தெதுகையாகாது. பாரம் என்பதற்குக் காரம் என்பதல்லது கரம் என்பதெதுகையாகாது என்பதறிவித்தற்கு 'இயைவதே எதுகை' என்றார்.

''முதலெழுத் தொன்றுவ மோனை, யெதுகை
முதலெழுத் தளவோ டொத்தது முதலா
அதுவொழித் தொன்றி னாகு மென்ப''

எனவும் சொன்னார் **பல்காயனார்** எனக்கொள்க என்பர்.

2. உரையுள் இளம்பூரணர் கூறும் கருத்திற்கு ஒத்த நூற்பாக்கள்

''தொடைபல தொடுப்பினும் தளைபல விரவினும்
முதல்வந் ததனால் மொழிந்திசிற் பெயரே'' (யா.க.53)

என்பதனானும், இந் நூற்பாவுரையுட் காட்டப்படும்

''மயங்கிய தொடைமுதல் வந்ததன் பெயரால்
இயங்கினும் தளைவகை இன்னணம் ஆகும்''

என்றார் **அவிநயனார்,**

''பல்வகைத் தொடையொரு பாவினிற் றொடுப்பின்
சொல்லிய முதற்றொடை சொல்வினர் கொளலே''

என்றார் **சிறுகாக்கைபாடினியார்,**

''தொடையடி யுட்பல வந்தால் எழுவாய்
உடையத னாற்பெயர் ஒட்டப் படுமே''

என்றார் **காக்கைபாடினியார்,** (யா.வி.கழ.பக்.199)

என வருவனவற்றாலும் உணர்ந்து கொள்ளலாம்.

90. ஆயிரு தொடைக்குங் கிளையெழுத்[1] துரிய

என்-னின் எய்தியதன் மேற் சிறப்புவிதி உணர்த்துதல்[2] நுதலிற்று.

நூ.பா.வே: 1. 'இனவெழுத்து'
உரை.சு.வே: 2. வகுத்தலை

(இ-ள்) மோனைத் தொடைக்கும் எதுகைத் தொடைக்கும் எடுத்த எழுத்தே வருதலன்றி வருக்க எழுத்தும் உரிய என்றவாறு.

உதாரணம்:—

''பகலே, பல்பூங் கானற் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇய
பின்னுப்பிணி யவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கம் பெய்து தேம்படித்1 திருத்தி'' (யா.வி.சுழ.பக்.144)

என்பது வருக்க மோனை.

''ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர்ச் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்துக்
கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி''
(கலி. கடவுள் வாழ்த்து)

என்பது வருக்க வெதுகை. பிறவும் அன்ன. (கூ0)

பதிப்பாசிரியர் விளக்கம்

கிளையெழுத்து

1. இளம்பூரணர் கருத்து

இளம்பூரணர் உயிர் மெய்யெழுத்துள் க, கா, கி, கீ முதலிய பன்னிரண்டினையும் அவைபோல் மொழிக்கு முதலாகி வருப வற்றையும் 'வருக்கம்' என்று கருதுகிறார். எனவே தொல் காப்பியர் குறிப்பிடும் கிளையை வருக்கம் என்பர் அவர்.

2. யாப்பருங்கலக் கருத்து

யாப்பருங்கல நூலார் மேற்கூறிய வருக்கத்துடன், நெடிலை யும், வல்லின, மெல்லின, இடையினங்களையும் கூட்டி அவை யெல்லாம் மோனைக்கும் எதுகைக்கும் வரும் என்ற கருத்தால் ''வருக்க நெடிலினம் வரையா ராண்டே'' (37) என்று நூற்பா செய்துள்ளார்.

---

1. தேம்படக் கருதி

3. விருத்தி கருத்து

ஆனால் யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் மேற்கூறிய நூற் பாவில் 'ஆண்டே' என்ற மிகையால், எதுகைத் தொடையிற் சீர்முழுதும் வருவது தலையாகு எதுகை; ஓரெழுத்தே வரத் தொடுப்பது இடையாகு எதுகை; இனத்தானும் மாத்திரை யானும் பிறவாற்றானும் வரத் தொடுப்பது கடையாகு எதுகை என்றும்; முன்னிரண் டடியும் ஓர் எதுகைத் தொடையாய் வந்து, பின் இரண்டடியும் மற்றொரு திறத்தான் வரினும் குற்றமில்லை; அஃது இரண்டடி எதுகை என்பர் ஒருசார் ஆசிரியர் என்றற்கும், ஒருசார் ஆசிரியர் எதுகைத் தொடையுள் ய, ர, ல, ழ என்னும் நான்கு ஒற்றும் வந்து மிகத் தொடுத்தால், அதனை ஆசிடை யெதுகை என்று வேண்டுவர் என்பது அறிவித் தற்கும் வேண்டப்பட்டது என்பர்.

4. காரிகையாசிரியர் கருத்து

"வருக்கம், நெடில், இனம் வந்தால் எதுகையும் மோனையு மென்று ஒருக்கப் பெயரா லுரைக்கப்படும்" என்று முன்னர்க் கூறிவிட்டுப் பின்னர்,

"உயிர் ஆகிடையிட்
டிருக்கும் ஒருசார் இரண்டடி மூன்றாம் எழுத்துமொன்றி
நிரக்கு மெதுகையென் றாலும் சிறப்பில நேரிழையே" (41)

என்பர்.

5. பேராசிரியர் கருத்து

பேராசிரியர் கிளையெழுத்து என்பதற்கு வருக்க வெழுத்து என்று மட்டும் பொருள் சொல்லாமல் 'இதன் கருத்து அங்ஙனங் கிளையாகி வந்த வேறுபாட்டான் எல்லாத் தொடையும் வேறு பலவாம் என்றவாறு. கிளையெழுத் தென்பன:- வருக்கமும், நெடிலும், அனுவும், வல்லினமும், மெல்லினமும், இடையினமும், உயிரும் எனும் இவை. இவையெல்லாம் ஒரே கிளைமையுடை மையிற் கிளையெனப் பட்டன' என்பர்.

6. நச்சினார்க்கினியர் கருத்து

நச்சினார்க்கினியர் "கிளை யெழுத்தாவன:- வருக்க

மோனையும் வருக்க வெதுகையும் வல்லின வெதுகையும் மெல்லின வெதுகையும் இடையின வெதுகையு மென ஐந்தாம்'' என்பர்.

7. கிளை என்பது வேறுபொருளினும் வரும்

''மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்
வல்லொற் றிறுதிக் கிளையொற் றாகும்'' (தொல். எழு. 414)

இந்நூற்பா வுரையில் நச்சினார்க்கினியர் ''கிளை வல்லொற்று வருதலாவது ணகாரத்திற்கு டகாரமும், னகாரத்திற்கு றகாரமும் புணர்ச்சியும் பிறப்பும் நோக்கிக் கிளையாமாதலின் அவை முன்னர் வந்து நிற்றலாம்'' என்பர்,

8. ஒத்த நூற்பா

''முதலெழுத் தொன்றின் மோனை யாகும்
அஃதொழித் தொன்றின் எதுகை யாகும்
அவ்விரு தொடைக்குங் கிளையெழுத் தாரிய'' என்றார் நத்தத்தனார்.
(யா.வி.கழ.பக்.154)

மேல் நூற்பாவின் ஈற்றடியை

''ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் தாரிய''

என்றும் பாடம் ஓதுவர்.

''இவ்விரு தொடைக்குங் கிளையெழுத் தாரிய''

என்றார் பல்காயனார்.

9. மேற்கோள்

இது யா. க. 37ஆம் நூற்பாவில் மேற்கோள்.

91. மொழியினும் பொருளினு முரணுதன் முரணே

என்-னின் முரணாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்) அடிதொறும் வந்த சொல்லினானாதல் பொருளினானாதல் மாறுபடத் தொடுப்பது அடிமுரண்தொடையாம் என்றவாறு.

சொன் முரணாவது சொல்லானன்றிப் பொருளான் மாறுபடாமை; பொருள் முரணாவது மாறுபாடுடைய பொருளைச் சொல்லுவது.

உதாரணம்:

"இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா துறைக்கும்"
(யா.வி.கழ.பக்.157)

என்பது இரும்பும் பொன்னும் மாறுபாடுடைத்தாதலிற் பொருள் முரண் ஆயிற்று.

"சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே"
(யா. வி. கழ. பக். 157)

என்றவழிக் குடியுங் கண்ணும் (முரண்) ஆகாது சிறுமை பெருமை என்னுஞ் சொல்லே மாறு கோடலிற் சொன்முரணாயிற்று. (கூக)

பதிப்பாசிரியர் விளக்கம்

நூற்பாவடிவம்

தொல்காப்பிய நூற்பாவும் யாப்பருங்கல (38) நூற்பாவும் ஒரே வடிவத்தில் உள்ளன. தொல்காப்பிய நூற்பாவைத் தம் நூலுள் எடுத்தமைத்துக் கொண்டார் போலும்.

முரண்தொடை இத்தனை என்பது பற்றிக் கருத்து வேறுபாடு

இளம்பூரணர் செய்யுளியல் 97-ஆம் நூற்பா உரையில் "முரண்டொடை சொன் முரண் பொருள்முரண் என இரண்டாம்" என்பர்.

காரிகை ஆசிரியர்

"மறுதலைத்த மொழியான் வரினும்"

என்பர். அதன் உரையாசிரியர் உம்மையாற் பொருள் முரணுங் கொண்டார்.

யாப்பருங்கல விருத்தியாசிரியர் அம்முரண் மூன்று வகைப்

படும்; அவை சொல்லால் முரணுதலும், பொருளான் முரணுதலும், சொல்லும் பொருளும் தம்முள் முரணுதலும் என என்பர்.

இனி, ஒருசாராசிரியர் அவைதாம் ஐந்து விகற்பத்தன என்ப. அவை யாவையோ வெனின்?

"சொல்லும் சொல்லும் முரணுதலும், பொருளும் பொருளும் முரணுதலும், சொல்லும் பொருளும் சொல்லொடு முரணுதலும், சொல்லும் பொருளும் பொருளொடு முரணுதலும், சொல்லும் பொருளும் சொல்லொடும் பொருளொடும் முரணுதலும் என இவை" என்பர்.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் மேலே யா.க. விருத்தியாசிரியர் கூறிய இருவகையில் ஒன்றாகிய ஐந்து விகற்பத்தால் முரண்டொடை வரும் என்பர்.

பல்காயனாரும், நற்றத்தனாரும், மயேச்சுரனாரும், காக்கைபாடினியாரும் முரண்டொடை இரண்டென்றே கூறுவர். இலக்கணவிளக்கம் உடையாரும் அவ்வாறே கூறுவர் (723).

92. இறுவா யொப்பின:. தியைபென மொழிப.

என்-னின் இயைபுத் தொடை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடி தோறும் ஈற்றெழுத்து ஒன்றிவரின்[1] அஃது இயைபுத்தொடை என்று சொல்லுவர் என்றவாறு.

உதாரணம்:

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
யாடமைத் தோளி கூடலு மணங்கே
அரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலதமு மணங்கே' (யா. வி. கழ. பக். 163)

எனவரும்.

உரை. சு. வே: 1. 'ஒத்துவரின்' ரா.ரா.

அசை, சீரென வரையாது கூறினமையான் ஓரெழுத்து இறுதிக்கண் ஒப்பினும் இயைபாம் என்று கொள்க. (கூஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

பாடவேறுபாடு

''இறுவாய் ஒப்பினஃ தியைபென மொழிப'' என்பது இளம்பூரணர் பாடமாகும்.

''இறுவாய் ஒன்றல் இயைபின் யாப்பே'' என்பது பேராசிரியர் நச்சினார்க்கினியர் பாடமாகும்.

யாப்பருங்கலம் இயைபுத் தொடையை

''இறுவாய் ஒப்பினஃ தியைபெனப் படுமே''

என்று கூறுகின்றது.

இந் நூற்பா உரையில்,

''இறுவாய் ஒன்றல் இயைபின் யாப்பே'' என்றார் தொல்காப்பியர் என்பது பேராசிரியர் நச்சினார்க்கினியர் பாடமாகவும், ''இறுவாய் ஒப்பினஃ தியைபென மொழிப'' என்றார் அவிநயனார் என்பது இளம்பூரணர் பாடமாகவும் உள்ளன.

மர்ரே பதிப்பு, பேராசிரியர் நச்சினார்க்கினியர் பாடத்தை முதலாகத் தந்து, இளம்பூரணர் பாடத்தையும், ''இறுவாய் ஒன்றின் இயைபென மொழிப'' என்னும் மற்றொரு பாடத்தையும் பாடவேறுபாடாகக் கொடுக்கிறது.

இயைபு

1. **இளம்பூரணர்** செய்யுளியல் 97ஆம் நூற்பாவுரையில் இயைபை இறுதிநிலை எழுத்தின்மேல் வைத்துக் காட்டுகிறார். இந்நூற்பா வுரையிலும் ''அடிதொறும் ஈற்றெழுத்து ஒன்றி வரின்'' என்று எழுதுவதால் இவர் இயைபுத் தொடைக்கு ஈற்றெழுத்தினையே கருவியாக அமைத்துக் கொள்கிறார் என்பது தெரிகின்றது.

2. ஆனால், ''இறுவாய் ஒப்பினஃதியைபெனப் படுமே' (40) என்னும் **யாப்பருங்கல** நூற்பாவிற்கு அதன் உரையாசிரியர்

"அடிதொறும் இறுதிக்கண் எழுத்தானும், சொல்லானும் ஒன்றி வரின் அஃது அடியியைபுத் தொடை எனப்படும்" என்று எழுதுவதால் இயைபுத் தொடை எழுத்து சொல் என்னும் இரண்டால் வரும் என்று அவர் கருதுகிறார் என்பது தெரிகின்றது.

3. **பேராசிரியர்** "வாளாதே 'இறுவா யொன்றல்' என்றானாயினும் ஆண்டு ஒன்றுவது பொருளியைபின்றி எழுத்துஞ் சொல்லும் ஒன்றியடையின் இயைபா மென்பது. எனவே, எழுத்தடியியைபும் சொல்லடியியைபு மெனத் தொடை இரண்டாயின" என்பர். **நச்சினார்க்கினியரும்** அதே கருத்தினராவார்.

4. ஆனால், **காரிகை உரையாசிரியர்** "இறுதி இயைபு என்பது அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும், அசையானும், சீரானும் தம்முள் ஒன்றிவரத்_தொடுப்பது இயைபுத் தொடை எனப்படும்" என்பர்.

5. **பல்காயனாரும், நற்றத்தனாரும்** முறையே

"இயைபே இறுசீர் ஒன்றும் என்ப"

"இறுசீர் ஒன்றின் இயைபெனப் படுமே"

என்னும் நூற்பாக்களால் இறுதிச்சீர் ஒன்றுதலையே இயைபென்பர்.

6. **இலக்கணவிளக்க நூலார்**

"இறுவாய் ஒப்பின் இயைபுத் தொடையாம்" **(723)**

என்று நூற்பாச் செய்து "அடிதொறும் ஈற்றெழுத் தொன்றி வரத் தொடுப்பின் அடியியைபுத் தொடையாம்" என எழுத்தினையே கூறுகின்றார்.

7. **வீரமாமுனிவரும்**

"ஈற்றெழுத்தொன்றிவரத் தொடுப்பது இயைபுத்தொடை"

(நூ. 212) என்பர்.

8. தொல்காப்பியர் 'இயைபு' என்றொரு செய்யுள் வகையினைக் கூறுகின்றார். அது எழுத்ததிகாரத்தே சொல்லிற்கு ஈறாக வரும் என்ற ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வருமாறு செய்யும் செய்யுள் என்பர். (செய்யுளியல் 232)

9. இன்னும் வண்ணத்துள் இயைபு வண்ணம் என்ப தொன்றுண்டு. அஃது இடையெழுத்து மிகுந்து வருவது. இது ஓசை பற்றியது. மேலன இரண்டும் இறுதி பற்றியனவாம்.

10. யா. வி. ஆசிரியர் ''இறுவாய் ஒப்பினஃ தியைபெனப் படுமே'' என்று சிறப்பித்ததனால் மோனையாய் வந்து இறுவாய் ஒத்தால் மோனை இயைபு என்றும், எதுகையாய் வந்து இறுவாய் ஒத்தால் எதுகை இயைபு என்றும், முரணாய் வந்து இறுவாய் ஒத்தால் முரண் இயைபு என்றும், அளபெடையாய் வந்து இறுவாய் ஒத்தால் அளபெடை இயைபு என்றும், பலவாய் வந்து இறுவாய் ஒத்தால் மயக்கியைபு என்றும், பிற வாராது இறுவாய் ஒத்தால் செவ்வியைபு என்றும் வழங்கப்படும் எனக் கொள்க என்பர்.

11. இயைபுத் தொடையைப் பலவாறு பிரித்தாலும் இத் தொடையை ஒன்றாகவே கருதினர் என்பதை ''இயைபுத் தொடை கிளையின்மையின் ஒன்றே'' (யா.வி.கழ.பக்.185) என்னும் உரையாலும் ''இயைபொன்றாம்'' (யா. வி. கழ. பக். 185) என்னும் மேற்கோள் பாடலாலும் உணர்ந்து கொள்ளலாம்.

93. அளபெழி னவையே யளபெடைத் தொடையே.

என்-னின் அளபெடைத் தொடை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடிதொறும் அளபெழத் தொடுப்பின் அஃது அளபெடைத் தொடையாம் என்றவாறு.

உதாரணம்:—

''ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது[1]'' (குறள். 1176)

உரை.சு.வே: 1. மிடர்ப்பட்டன

என வரும். (கூகூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

அளபெடைத்தொடை

உரையாசிரியர்களின் கருத்து

1. **பேராசிரியர்** ''அவை என்றது உயிரளபெடையும் ஒற்றளபெடையுமென் றிரண் டென்பது கோடற்கு'' என்பர். மற்றும் அவர் ''ஈரொற்றளபெடை கலிப்பாவினுள் வாராது; என்னை அது துள்ளலோசை தள்ளி நிற்றலின். அங்ஙனமாதல், 'அசை யும் சீரும் இசையொடு சேர்த்தி' என்பதனான் அறிக'' என்பர்.

2. **நச்சினார்க்கினியர்** ''இவ்வொற்றளபெடை கட்டளைக் குக் கொள்ளாம். ஒழிந்தனவற்றிற்கும் வந்துழிக் காண்க. இவற் றிற்கு (உயிரளபெடை, ஒற்றளபெடை) இணை முதலியன கொள் ளாம், சிறப்பின்மையின்''. என்பர்.

3. **ஆனால், யாப்பருங்கல விருத்தி யாசிரியர்**

''அளபெடை ஒன்றுவ தளபெடைத் தொடையே'' (41)

என்னும் நூற்பாவுரையில்,

''தனிநிலை முதனிலை இடைநிலை ஈறென
நால்வகைப் படுமள பாய்வரு மிடனே''

என்று சொல்லப்பட்ட உயிரளபெடையும், ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம் என இவை பதினொன்றும் குறிற்கீழும் குறிலிணைக் கீழும் என்று சொல்லப்பட்ட ஒற்றளபெடையும் தம்முள் ஒன்றி வருவது எனக் கொள்க.

நான்கிடத்தும் ஏழு நெட்டெழுத்தும் அளபெடுப்ப இருபத் தெட்டு உயிரளபெடையாம்; அவ்விருபத் தெட்டினையும் எட்டு விகற்பத்தானும் உறழ இருநூற்று இருபத்து நாலாம்.

பதினொரொற்றும் குறிற்கீழும் குறிலிணைக் கீழும் அள பெடுப்ப இருபத்திரண்டாம்; அவ்விருபத்திரண்டினையும் எட்டு விகற்பத்தானு முறழ நூற்றெழுபத்தாறு ஒற்றளபெடையாம்

அவை இறுதி இடைநிலையாற் கூறுபடுப்ப இரட்டியாம் என்பர்.

4. காரிகை உரையாசிரியர் ''அழியாது' என்று மிகுத்துச் சொல்லியவதனால் நான்கு உயிரளபெடையும், இரண்டொற் றளபெடையும் தம்முள் ஒன்றிவரத் தொடுப்பது சிறப்புடைத் தெனக் கொள்க'' என்பர்.

5. இலக்கண விளக்க நூலார் ''முதனிலை முதலிய உயிரள பெடை மூன்றும், குறிலிணைக் கீழும் குறிற்கீழும் வரும் ஒற்றள பெடை இரண்டும் தம்முள் ஒன்றிவரத் தொடுப்பது சிறப்புடைத் தெனக்கொள்க'' என்று காரிகை யுரையாசிரியர் கருத்தினையே எழுதுகிறார். (நூற்பா 723)

6. வீரமாமுனிவர் ''உயிரள பெடையும் ஒற்றளபெடையும் ஒன்றிவரத்தொடுப்பது அளபெடைத்தொடை'' என்பர். (நூ. 312. உரை)

94. ஒருசீ ரிடையிட் டெதுகை யாயிற்
பொழிப்பென மொழிதல்[1] புலவ ராறே.

என்-னின் பொழிப்புத் தொடை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒரு சீர் இடையிட்டு எதுகை யாயிற் பொழிப்புத் தொடையாம் என்றவாறு.

எதுகை என ஓதினா ராயினும், 'வந்தது கொண்டு வாராதது முடித்தல்' என்பதனால் மோனை, இயைபு, முரண், அளபெடை என்பனவும் பொழிப்புத் தொடையாம் என்று[2] கொள்ளப் படும்.

உதாரணம்:-

''அரிக்குரற் கிண்கிணி அரற்றுஞ் சீறடி'' (யா.வி.கழ.பக்.140)

இது பொழிப்பு மோனை.

நூ.பா.வே: 1. 'மொழிப' மர்ரே பா.வே.
உரை.சு.வே: 2. என்றவாறு;

''பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி'' (யா.வி.கழ.பக்.144)

என்பது பொழிப்பெதுகை.

''சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கி'' (யா.வி.கழ.பக்.157)[1]

என்பது பொழிப்பு முரண்.

''சுடலே,கானலங் கழியே கைதையந் துறையே'' (தெரியாதது)

என்பது பொழிப்பியைபு.

''பூஉங் குவளைப் போஒ தருந்தி'' (யா.வி.கழ.பக்.169)

என்பது பொழிப்பளபெடை. (கூசா)

95. இருசீ ரிடையிடி னொரூஉவென மொழிப.

என்-னின் ஒரூஉத் தொடை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இரண்டுசீர் இடையிட்டு மோனை முதலாயின வரத் தொடுப்பது ஒரூஉத் தொடையாம் என்றவாறு.

உதாரணம்:-

''அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரசுற்றி'' (யா.வி.கழ.பக்.140)

என்பது ஒரூஉ மோனை.

''மின்னிவ ரொளிவடந் தாங்கி மன்னிய'' (யா.வி.கழ.பக்.144)

என்பது ஒரூஉ வெதுகை.

''குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து'' (யா.வி.கழ.பக்.157)

என்பது ஒரூஉ முரண்.

''நிழலே யினியத னயலது சுடலே'' (யா.வி.கழ.பக்.164)

என்பது ஒரூஉ இயைபு.

''காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்'' (யா.வி.கழ.பக்.169)

என்பது ஒரூஉ அளபெடை. (கூநி)

---

1. பெருவடந்

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒரூஉத்தொடை

1. பேராசிரியர் மேல் நூற்பா அதிகாரத்தால் இந்நூற்பாவை எதுகைத் தொடைக்கே கொள்வர். அவர் ''நாற்சீருள்ளும் இடையிருசீரொழிந்ததொழித்த முதற்சீரும் நான்காஞ்சீரும் இரண்டாமெழுத்தொன்றிவரத் தொடுப்பின் அதனை ஒரூஉ வென்ப'' என்று பொருள் கூறிவிட்டு, ''அதிகாரத்தான் ஒரூஉ வெதுகை எனப்பட்டது. அதுவும் பொழிப்புப் போல வந்த எழுத்தே வருதலும் கிளை யெழுத்து வந்து கிளையொரூஉ எனப்பட்டு இரண்டாதலு முடைத்து'' என்பர்.

2. நச்சினார்க்கினியர் ஒரூஉ, அளபெடை நீங்கலாக மோனை, எதுகை, முரண், இயைபு என்னும் நான்கினைப் பெற்றுவரும் என்பர்.

அவர், ''ஒரூஉவை விதந்தோதினார்; வெண்பாவிற்குச் சிறந்து வருதலானும் ஆசிரியத்திற்கு ஏனையவற்றிற் சிறந்து தோன்றுதலானும்'' என்பர்.

3. யாப்பருங்கல விருத்தி யாசிரியரும் காரிகையாசிரியரும் இலக்கண விளக்க நூலாசிரியர் முதலியவரும் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை என்னும் ஐந்தினையும் பெற்று ஒரூஉ வரும் என்பர்.

96. சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
சொல்லியற் புலவரது செந்தொடை[1] யென்ப.

என்-னின் செந்தொடை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட தொடையும், தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடையாம் என்றவாறு.

உதாரணம்:—

''பூத்த வேங்கை வியன்சினை யேறி

நூ. சு. வே: 1. 'சொல்லிய புலவர் செந்தொடை'

மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே'' (யா. வி. கழ. பக். 189)

என வரும்.

இனி நிரனிறுத் தியற்றலும் இரட்டை யாப்பும் மொழிந் தவற் றியலான் (செய். 87) வருமாறு :—

உதாரணம்:—

''அடல்வே லமர்நோக்கி நின்முகங் கண்டே
உடலு மிரிந்தோடு மூழலரும் பார்க்கும்
கடலுங் கனையிருளு மாம்பலும் பாம்பும்
தடமதி யாமென்று தாம்'' (யா. வி. கழ. பக். 192)

இது, பொருளான் வேறுபட்ட துணையல்லது எழுத்தான் வேறுபடாமையின் எதுகைத் தொடையாயிற்று.

இனி இரட்டைத் தொடை வருமாறு :—

''ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி யொக்குமே யொக்கும்
குளக்கொட்டிப் பூவி னிறம்'' (யா. வி. கழ. பக். 190, 204)

இதுவும் சொல்லிய தொடைப்பாற் பட்டவாறு காண்க[1].

இணை மோனை, கூழை மோனை, மேற்கதுவாய் மோனை, கீழ்க்கதுவாய் மோனை, முற்றுமோனை முதலாயினவும் அந்தாதித் தொடையும் கூறாத தென்னை யெனின்?

''தெரிந்தனர் விரிப்பில் வரம்பில வாகும்'' (செய். 98)

என வருகின்ற சூத்திரத்துக் கூறுகின்றாராதலின், அச் சூத்திரத் தின்காறும் பாட்டிற் கின்றியமையாத் தொடை யுணர்த்தினா ரென்று கொள்க. (கூசு)

உரை. சு. வே: 1. கண்டு கொள்க

பதிப்பாசிரியர் விளக்கம்

உரையொப்புமை

யாப்பருங்கலம்,

''செந்தொடை ஒவ்வாத் திறத்தன ஆகும்'' (நூற். 50)

என்று கூறுகின்றது. இதன் உரை, ''என்பது என்னுதலிற்றோ வெனின், நிறுத்த முறையானே செந்தொடை ஆமாறு உணர்த் துதல் நுதலிற்று. செந்தொடை என்பது, மேற்சொல்லப்பட்ட தொடையும், தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுப்பது என்றவாறு'' என்று உள்ளது.

''சொல்லிய தொடையொடு'' (செய். 96) என்ற நூற்பா விற்குள்ள **இளம்பூரணர் உரையும்,** மேற்காட்டிய **யா. க. உரையும்** பெரும்பாலும் ஒத்துள்ளன. இளம்பூரணர் உரை யுடன் பேராசிரியர் நச்சினார்க்கினியர் உரை ஒவ்வவில்லை.

செந்தொடை

இவற்றிலிருந்து, தொடையும் தொடை விகற்பமும் போலாது, வேறுபடத் தொடுத்தலே செந்தொடையாம் என்றல் இளம்பூரணர், விருத்தியாசிரியர் கருத்தென்பதை நாம் தெளி வாகத் தெரிந்து கொள்ளுகின்றோம். இதே கருத்தினை,

''ஒன்றிய தொடையொடும் விகற்பந் தம்மொடும்
ஒன்றாது கிடப்பது செந்தொடை யாகும்''

என்று **சிறுகாக்கை பாடினியாரும்** கூறுகின்றனர்.

பேராசிரியர் ''மேற்கூறப்பட்ட தொடை எல்லாவற்றோடும் ஒவ்வாது வரின், அதனை இயற்கைச் சொல்லாற் செய்யுள் செய்யும் புலவரது செந்தொடை என்று சொல்லுப ஆசிரியர்'' என்று உரை கூறி, ''எனவே விகாரப்படச் செய்யுள் செய்யும் செந்தொடை இன்னாதென்றானாம்'' என்பர்.

எனவே, முன்சொன்ன தொடைக்குரிய சொல்லாற் சொல்லாது, தொடை அமையாத இயற்கைச் சொல்லாற் கூறு தலே செந்தொடை என்பது பேராசிரியர் கருத்தாகும்.

எண்ணிடைச் சொற்களைப் பெறாது வருஞ் சொற்றொ டரைச் **செஞ்சொல்** என்றும், **செவ்வெண்** என்றும் கூறும்

மரபினைப் போல, மோனை முதலான தொடைகளையும் தொடை விகற்பங்களையும் பெறாமல் வரும் பாட்டினைச் **செந்தொடை** என்று புலவர் வழங்கி வருகின்றனர்.

காரிகை உரையாசிரியர் 'அந்தமுதலா' என்ற (17) காரிகை உரையில், 'முந்திய' என்று சிறப்பித்த அதனால், அசையும் சீரும் தம்முள் மறுதலைப்படத் தொடுப்பது சிறப்பெனக் கொள்க எனக்கூறி,

> 'அசையினும் சீரினும் இசையினு மெல்லாம்
> இசையா தாவது செந்தொடை தானே'

என்றார் **கையனார்** என்பர். இதன் விளக்கத்தை யா. க. விருத்தியிற் காண்க. (பக். 187, 188)

இளம்பூரணர் செய்யுளியல் 219ஆம் நூற்பாவை

> ''ஒருஉ வண்ணம் ஒருஉத்தொடை தொடுக்கும்''

என்று பாடம் ஓதி, ஒருஉ வண்ணமாவது நீங்கின தொடையாகத் தொடுப்பது. அது செந்தொடையாம் என்பர். இவரைப் பின்பற்றி இலக்கண விளக்கத்தாரும், வீரமாமுனிவரும் விருத்தி உரையாசிரியரும் இவ்வாறே கூறுகின்றனர்.

எனவே, கையனார் தொடைபற்றி ஓதாமல் அசை, சீர் இசைகளின் ஒவ்வாமை பற்றிச் செந்தொடையை ஓதுவதும், இளம்பூரணர் முதலியோர் செந்தொடையை வண்ணத்துள் சேர்த்தோதுவதும் சிறப்பிலவாம்.

பேராசிரியர், ''மோனை முதலான தொடைகள் ஒருவரால் கருதித் தொடுக்கப்பட்ட பூந்தொடைபோல் பொலிந்து செய்யுட்குப் பொலிவு செய்யுமென்றும், செந்தொடை ஒருவரால் தொடுக்கப்படாமல் இயல்பாகத் தொடைபோல் மலரும் கொன்றையும் கடம்பும் போல நின்று செய்யுட்குப் பொலிவு செய்யும் என்றும்'' உவமை கூறுவர் (தொல். செய். நூ. 94. உரை)

ஒரு பெண்மகள் பல வண்ணத் தொடைகளை அணிய வேண்டிய உறுப்புக்களில் அணிந்து பொலிகின்றாள். சில பொழுதில் எவ்விதமான தொடைகளையும் அணியாமல் செவ்வே

விளங்குகின்றாள். இந்த இருநிலைகளைப் போலப் பாக்களும் தொடைபெற்றும், தொடை பெறாமலும் வரும். தொடை பெறா நிலையே செந்தொடை என்க.

97. மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே[1]
ஐயீ றாயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூறு[2]
ஒன்று மென்ப[3] வுணர்ந்திசி னோரே.

என்-னின் மேற் சொல்லப்பட்ட தொடையெல்லாம் விரிவ கையான் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வடிவு பெற்ற மரபினையுடைய தொடையினது பாகுபாடு பதின்மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற் றொன்பது என்றவாறு.

அவை ஆமாறு:- மொழிமுதலாகிய எழுத்து உயிர் பன்னி ரண்டு; இதன் கிளையெழுத்து ஒரோவொன்றிற்கும் பதி னொன்றுளவாகலின் அவற்றை உறழ நூற்று முப்பத்தி ரண்டாம்.

க, த, ந, ப, ம என்பவற்றை உயிர் பன்னிரண்டோ டுறழ அறுபதாம். அவ்வறுபதையும் முதற்றொடை யாக்கி[4]க் கிளை யெழுத்தோ டுறழ அறுநூற்றறுபதாம்.

சகரத்தின் முதலாகெழுத்து ஒன்பது; அவற்றைக் கிளை யெழுத்தோ டுறழ எழுபத்திரண்டாம்.

வகரத்தின் முதலாகெழுத்து எட்டு; அவற்றைக் கிளை யெழுத்தோ டுறழ ஐம்பத்தாறாம்.

யகரத்தின் முதலாகெழுத்து ஒன்று; கிளையெழுத்தில்லை.

ஞகரத்தின் முதலாகெழுத்து மூன்று; அவற்றைக் கிளை யெழுத்தோ டுறழ ஆறாம்.

நூ. பா. வே: 1 'தானே' சு. வே.
2 'யெழுநூற்று' பேரா.
3 'ஒன்பஃ தென்ப' பேரா.
உரை. சு. வே: 4 'யாகிய'

இவ்வகையினான் முதலெழுத்துத் தொண்ணூற்று மூன்றும் கிளையெழுத்துத் தொளாயிரத் திருபத்தாறுமாக மோனைத் தொடை ஆயிரத்தொருபத் தொன்பதாம்.

எதுகை யாமாறு:- உயிரெழுத்து மொழியிடையில் வாராது. உயிர் மெய்யெழுத்து இருநூற்றொருபத்தாறில் ஙவ்வருக்கம் ஒழிந்த எழுத்து இருநூற்றுநாலினையும் கிளையெழுத்தினோடு உறழ இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டாம். இத னோடு ஒற்றுப் பத்தொன்பதும் குற்றுகரம் ஆறும் கூட்ட எதுகைத் தொடை இரண்டாயிரத்து நானூற்று எழுபத்து மூன்று பாகுபாடாம்.

(குறிப்பு: எதுகையைப் பற்றிய இளம்பூரணர் பதிப்பு பிழையாக உள்ளது. அவ்வுரை கீழ்வருமாறு அமைய வேண்டும்:-

எதுகையாமாறு:- உயிரெழுத்து மொழியிடையில் வாராது. உயிர் மெய்யெழுத்து இருநூற்றொரு பத்தாறில் ஙவ்வருக்கம் ஒழிந்த எழுத்து இருநூற்று நாலினையும் கிளையெழுத்தி னோடு உறழ ($12 \times 11 = 132$; $132 \times 17 = 2244$) இரண்டாயிரத்து இருநூற்று நாற்பத்து நாலாம். இதனோடு முதலெழுத்து இருநூற்று நான்கும், ஒற்றுப் பத்தொன்பதும், குற்றுகரம் ஆறும் கூட்ட, இரண்டாயிரத்து நானூற்றுஎழுபத்து மூன்று பாகுபாடாம்.)

முரண்டொடை, சொன் முரண் பொருள் முரண் என இரண்டாம்.

இயைபுத் தொடை யாமாறு:- உயிரெழுத்து மொழி யீற்றின்கண் உயிர் மெய்யாகி வருதலின் அவையாகா.

உயிர் மெய் இருநூற்றொருபத்தாறில் இறுதிக்கண் வாராத ஙகர வுயிர் மெய் பன்னிரண்டும், [1]அகரம் பதினேழும், இகரம் பதினாலும், உகரம் இரண்டும், னகரம் ஒன்றும், ஒகரம்

உரை. சு. வே: 1. 'எகாரம் பதினேழு, ஓகாரம் பதினாறு, உகாரம் இரண்டு, ஊகாரம் இரண்டு, ஏகாரம் ஒன்று, ஓகாரம் ஒன்று, இவை யொழித்து'

ஒன்றும் ஒழிந்து நின்ற எழுத்து நூற்றறுபத்தைந்தும் ஞண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் புள்ளி யிறுதி பதினொன்றும் குற்றுகர வீறு ஆறும் ஆக இயைபுத்தொடை நூற்றெண் பத்திரண்டு பாகுபாடாம்.

அளபெடைத்தொடையாமாறு:- மொழிமுதலாகும் உயிரள பெடை ஏழு. கதநபம என்றும் உயிர்மெய்யளபெடை முப்பத் தைந்து. சகர அளபெடை ஐந்து. வகர அளபெடை ஐந்து. ஞகர, யகர அளபெடை இரண்டு. இவை ஐம்பத்து நான்கில் உயிரளபெடை தனிநிலையாம். ஏனையவற்றை முதனிலை இடைநிலை இறுதிநிலை என வுறழ நூற்று நாற்பத் தொன்றாம். ஒற்றுக்களுள் வல்லெழுத்தாறும், மகரமும், ழகரமும் ஒழித்து ஏனைய பதினொன்றும் (ஆய்தத்துடன் பத் தொன்பது; எட்டினைக் கழிக்கப் பதினொன்று) அளபெடுக்க ஒற்றளபெடை பதினொன்றாம். இவ்வகையினான் அள பெடைத் தொடை நூற்றைம்பத் தொன்பது வகையாம்.

இவ்வகையினோடு இத்தொடை மூவாயிரத்து எண்ணூற்று முப்பத்தைந்து வகையாம்.

பொழிப்புத் தொடையிற் கிளையெழுத்து வாராது.

மோனைப் பொழிப்புத் தொண்ணூற்று மூன்று; எதுகைப் பொழிப்பு இருநூற்றிருபத்தொன்பது; முரண்பொழிப்பு இரண்டு; இயைபுப் பொழிப்பு நூற்றெண்பத்திரண்டு; அள பெடையுள் ஒற்றளபெடை பொழிப்பாகி வாராமையின் உயிரளபெடைப் பொழிப்பு நூற்று நாற்பத்தெட்டு. இவை யெல்லாங் கூட்டப் பொழிப்புத் தொடை அறுநூற்றைம்பத்து நாலுவகையாம்.

ஒரூஉத் தொடையும் இவ்வகையினால் அறுநூற்றைம்பத்து நாலாம்.

இனிச் செந்தொடை யாமாறு:- மொழி முதலாகும் எழுத்தும் தொண்ணூற்று மூன்று. மற்றை யடியினும் ஒத்து வருங்கால் அவை மோனையுள் அடங்குதலின், அவற்றை ஒழித்து ஏனையெழுத்துத் தொண்ணூற்றிரண்டோடு முறழ எண்ணாயிரத்தைந்நூற்றைம்பத்தாறு வகையாம்.

இவ்வகையினால் தொடை விகற்பம் பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதாம். (கூஎ)

98. தெரிந்தனர் விரிப்பின்[1] வரம்பில வாகும்.

என்-னின் எய்தியதன் மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட தொடையினை ஆராய்ந்து விரிப்பின், வரம்பில வாகி விரியும் என்றவாறு.

அவையாவன:- மோனை, எதுகை, முரண், இயைபு, அள பெடை என்பன வற்றின்கண் இணை, கூழை, முற்று, மேற் கதுவாய், கீழ்க்கதுவாய், கடை[2], கடையிணை, கடைக் கூழை, இடைப்புணரென வேறுபடுத்துறழ்ந்தும்; எழுத்தந்தாதி அசையந்தாதி சீரந்தாதி அடியந்தாதி எனவும்; உயிர்மோனை உயிரெதுகை நெடில் மோனை நெடிலெதுகை வருக்க மோனை வருக்க வெதுகை இன மோனை இனவெதுகை ஆசெதுகை எனவும்; மூன்றாமெழுத் தொன்றெதுகை இடையிட்டெதுகை எனவும்; இவ்வாறு வருவனவற்றை மேற்கூறிய வகையினான் எழுத்து வேறுபாட்டினான் உறழவும்; நிரனிறை யாகிய பொருள்கோள் வகையானும் ஏகபாதம் எழுகூற்றிருக்கை முத லாகிய சித்திரப் பாக்களானும் உறழவும் வரம்பிலவாகி விரியும்.

அவற்றுட் சில வருமாறு:-

இணையாவது முதலிரு சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது.

கூழையாவது முந்துற்ற மூன்று சீரினும் வந்து இறுதிச் சீரின் வாராதது.

''அணிமலர் அசோகின் றளிர்நலங் கவற்றி'' (யா.வி.கழ.பக்.140)

இஃது இணை மோனை.

''பொன்னி னன்ன பொறிசுணங் கேந்தி'' (யா.வி.கழ.பக்.144)

இஃது இணை யெதுகை.

நூ.பா.வே: 1. 'வரம்பில பல்கும்' பேரா; நச்.
உரை.சு.வே: 2 'கடையிடை' கடையிணை, பின்கடைக்கூழை, இடைப்புணரென மதுரை. த. பதி

''சிறடிப் பேரக லல்கு லொல்குபு'' (யா.வி.கழ.பக்.157)

இஃது இணை முரண்.

''மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே'' (யா.வி.கழ.பக்.164)

இஃது இணை யியைபு.

''தாஅட் டாஅ மரைமல ருழக்கி'' (யா.வி.கழ.பக்.169)

இஃது இணையளபெடை.
எனவரும்.

இனிக் கூழை வருமாறு:-

''அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்'' (யா.வி.கழ.பக்.140)

இது கூழை மோனை.

''நன்னிற மென்முலை மின்னிடை வருந்த1'' (யா.வி.கழ.பக்.144)

இது கூழை யெதுகை.

''சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்'' (யா.வி.கழ.பக்.157)

இது கூழை முரண்.

''மாதர் நகிலே வல்லே இயலே'' (யா.வி.கழ.பக்.164)

இது கூழை இயைபு.

''மாஅத் தாஅண் மோஒட் டெருமை'' (யா.வி.கழ.பக்.169)

இது கூழை அளபெடை.
என வரும்.

முற்றாவது நான்கு சீரும் ஒத்து வருவது.

''அயில்வேல் அனுக்கி அம்பலைத்(து) அமர்த்த (யா.வி.கழ.பக்.140)

இது முற்று மோனை. பிறவும் அன்ன.

இனி, மேற்கதுவா யாவது, நான்கு சீரினும் இரண்டாஞ் சீரொழிய ஏனைய வருவது.

''அரும்பிய கொங்கை அவ்வளீ அமைத்தோள்'' (யா.வி.கழ.பக். 140)

---

1. 'வருத்தி' மதுரை த. பதி.

பிறவும் அன்ன.

கீழ்க்கதுவாயாவது மூன்றாஞ்சீரொழிய ஏனைய வருவது.

''அவிர்மதி யனைய திருநுத லரிவை'' பிறவுமன்ன. (யா.வி.கழ.பக்.140)

அந்தாதித் தொடைக் குதாரணம்:–

''உலகுடன் விளங்கு மொளிதிக ழுவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழல் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவனீ
அறிவுசே ருள்ளமொ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தரஃ தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை உலகே'' (யா.வி.கழ.பக்.194)

என வரும்.

இவ்வகையினான் ஒரு பாட்டிறுதி மற்றைப் பாட்டின் ஆதிச் சீராகி வருதல்[1] கொள்க.

இத்துணையுங் கூறப்பட்டன சிறப்புடையவென ஒரு நிகராகக் கூறுப. இனி,

''மீன்றேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு'' (யா.வி.கழ.பக்.58)

இது கடையிணை முரண்.

பின் முரணாவது நாலாஞ் சீரும் இரண்டாஞ்சீரும் ஒன்றத் தொடுப்பது; அது,

''கொய்ம்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து'' (யா.வி.கழ.பக்.59)

என வரும்.

கடைக்கூழை முரணாவது முதற்சீ ரொழித்து மூன்று சீரும் ஒத்து வருவது.

உதாரணம் வந்த வழிக் காண்க.

இடைப்புணர் முரணாவது இடை இரு சீரும் ஒன்றத் தொடுப்பது. அது,

உரை.சு.வே: 1. 'வந்தால்' மதுரை.த.பதி.

''போதுவிடு[1] குறிஞ்சி நெடுந்தண் மால்வரைக்
கோதையிற் றாழ்ந்த ஓங்குவெள் ளருவிக்
காந்தளஞ் செங்குலைப் பசுங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறூர் இழிதரு நலங்கவர்ந்
தின்னா வாயின வினியோர் மாட்டே'' (யா.வி.கழ.பக்.159)

என வரும்.

மோனை, எதுகை, இயைபு, அளபெடையினும் இவ் வாற்றான் வருவன வந்தவழிக்[2] காண்க.

இனி, உயிர் மோனையாவது முதலெழுத்தாகி வந்த உயிரெழுத்து மற்றையடியினும் வருவது. அது,

''கயலே ருண்கண் கலுழ நாளும்
சுடர்புரை[3] திருநுதல் பசலை பாய'' (யா.வி.கழ.பக்.146)

என வரும்.

எதுகைக்கும் இதுதானே யாம்.

நெடின்மோனையாவது, நெட்டெழுத்தொத்து வருவது.

''தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'' (குறள்.399)

என வரும்.

நெடிலெதுகையாவது,

''ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்[4]
கூ கூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்''
(யா.வி.கழ.பக்.149)

உரை.சு.வே: 1. போதுவிடு. என்ற பாட்டிற்குப் பதிலாகத் தேம்படு குறுஞ்சுனை என்ற பாட்டுள்ளது. மதுரை.த.பதி.

2. அவ்வழி
3. சுடர்புனை
4. ராழா வொருசாரார்

என வரும்.

இன எதுகை மூன்று வகை.

''தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்'' (குறள்.114)

இது வல்லின வெதுகை.

''அன்பீனு மார்வ முடைமை யதுளீனும்
நண்பென்னு நாடாச் சிறப்பு'' (குறள்.74)

இது மெல்லின வெதுகை.

''எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு'' (குறள்.299)

இஃது இடையின வெதுகை.

மோனையும் இவ்வாறு வருவன பாகுபடுத்திக்கொள்க.

ஆசெதுகை யாவது, இடையின வொற்று இடைவரத் தொடுப்பது.

''காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே'' (சீவகசிந்.31)

என வரும். இதன்கண் யகரம் ஆசாகி வந்தது.

இனி இரண்டடி எதுகையாவது முதலிரண்டடியும் ஓரடி யாய்ப் பின்னிரண்டும் ஓரெதுகை யாகி வருவது.

''உலக மூன்று மொருங்குட னேத்துமாண்
டிலக மாய திறலறி வன்னடி
வழுவி னெஞ்சொடு வாலிதி னாற்றவும்
தொழுவ றொல்வினை நீங்குக வென்றியான்'' (யா.வி.கழ.பக்.149)

என வரும்.

இடையிட் டெதுகை யாவது, ஓரடி இடையிட்டுத் தொடுப் பது. அது,

''தோடா ரெல்வளை நெகிழ நாளும்
நெய்த லுண்கண் பைத லுழப்ப
வாடா வல்வரி புதைஇப் பசலையும்
வைக றோறும் பைபயப் பெருகின
நீடா ரவரென நீமனங் கொண்டார்
கேளார் கொல்லோ காதலர் தோழீஇ
வாடாப் பவ்வ மறமுகந் தெழிலி
பருவஞ் செய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே'' (யா.வி.கழ.பக்.153,402)

என வரும்.

இவ் வகையினான் மோனை வருவனவுங் கொள்க.

பிற தொடையும் இவ்வகையினான் வருவனவுங் கொள்க.

மூன்றாம் எழுத்து ஒன்று எதுகையாவது இரண்டாம் எழுத்து ஒன்றாது, மூன்றாம் எழுத்து ஒன்றுவது.

இதுவும் அவ்வாறே உதாரணம் வந்தவழிக் காண்க

இவையெல்லாம் மேல் எடுத்தோதப்பட்ட தொடைக்கட் படும்.

நாற்சீரடி யொழிந்த அடிக்கண்ணும் இப் பாகுபாடெல் லாம் விரிப்பின்[1] வரம்பில வாகும். (கூஅ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. இளம்பூரணரைத் தொல்காப்பியர் என்பர் யா. க. விருத்தி ஆசிரியர். ''இயைபுத் தொடைக்கு இவ்வாறு எட்டு விகற்பமும் பற்றிச் சொன்னார் **கையனார், தொல்காப்பியனார்** முதலாகிய ஒருசாராசிரியர். ஈண்டு அவர் மதவிகற்பம்பற்றிச் சொல்லப் பட்டது சார்பு நூலாதலின்'' என்பர். (யா. வி. கழ. பக். 138) இங்கே இளம்பூரணரைத் தொல்காப்பியர் என்று அவர் கருதினர் போலும். ஏன் எனில் அவர் தாம் அவ்வாறு கூறுகின் றார்; தொல்காப்பியர் அவ்வாறு கூறவில்லை என்க.

உரை. சு. வே. 1. விரிவன

2. உரை வேறுபாடு

அ. இளம்பூரணர் இந்நூற்பாவிற்குத் ''தெரிந்தனர் விரிப்பின் வரம்பில வாகும்'' எனப் பாடம் ஓதி, ''மேற் சொல்லப்பட்ட தொடையினை ஆராய்ந்து விரிப்பின் வரம்பில வாகி விரியும்'' என்று உரை கூறினார்.

ஆ. பேராசிரியர் 'வரம்பில பல்கும்' எனப் பாடம் ஓதி, ''அறுநூற்றிருபத்தைந்து அடியோடு மாறிப் பெற்ற தொடை பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டெனப்பட்டன. மேல், இனி, அவ்வடி ஒன்றன் கண்ணேயன்றி ஒன்றிநிற்ப நின்ற அடி அறு நூற்றிருபத்து நான்கனையும் தந்துதந்து தடுமாற வந்து தோன்றும் தொடை விகற்பமும் இரு சீரடி முதலாக எண்சீரடி ஈறாகக் கிடந்த அடிவேறுபாட்டின்கணெல்லாம் இத் தொடை களைக் கூட்டவும் பிற விகற்பத்தொடைகளைக் கூட்டவும் வருந் தொடைப்பகுதி வரையறையின்றிப் பலவாம்'' என்று கூறி, ''இனி ஐந்துதொடை, விகற்பத்தொடை பலவற்றோடும் கூட்டவும் பிறவாற்றான் விரிப்பவும் வரம்பிலவாம் என்றாரும் உளர். அவை அவ்வாறு விரிப்பினும் வரம்பில அல்லனவென மறுக்க. வரம்பில வென்பது வரையறை கூறப்படாவென மேலுரைத்ததே உரை'' என்பர். இம்மறுப்பு இளம்பூரணரைக் கருதியது.

இ. நச்சினார்க்கினியர் 'வரம்பில பல்கும்' எனப் பாடங் கொண்டு, ''அறுநூற்றிருபத்தைந்துள் ஒன்றை நிறுத்தி அத னோடு அறுநூற்றுநான்கனையும் கூட்டியும், அதனோடு சீர் வகை அடிகளையும் விகற்பத் தொடைகளையும் கூட்டியும் தொடுக்குந் தொடைப்பகுதிகளை விரிப்பின் எண்ணிறந்தன வாம். எனவே, இங்ஙனம் கூறாமல் வரையறைப்படுத்தி இலக்கணம் கூறினார் என்றார்'' என்பர்.

99. தொடைநிலை[1] வகையே யாங்கென மொழிப.

நூ.பா.வே: 1. ''தொடைவகை நிலையே'' பேரா; நச்.
'தொடைவகை தானே' மர்ரே.

என்-னின் இதுவும் தொடைக்குரிய தோர் மரபு உணர்த்து தல் நுதலிற்று.

(இ-ள்) தொடைநிலை வகை மேற் சொல்லப்பட்ட பாகு பாட்டின என்றவாறு. எனவே வகுத்துணர்த்துவார்க் கெல்லாம்[1] இடனுடைத்து என்றவாறாம்.

அஃதாவது எழுத்தான் வேறுபடுதலும், சொல்லான் வேறு படுதலும், பொருளான் வேறுபடுதலும் ஆம்.

இத்துணையுந் தொடை கூறப்பட்டது. (கூகூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. இளம்பூரணர் கருத்தினைக் கொண்ட நூற்பா

தொடை எழுத்து, சொல், பொருளான் வேறுபட்டு வரும் என்பதை,

> ''தொடையெனப் படுவ தடைவகை தெரியின்
> எழுத்தொடு சொற்பொரு ளென்றிவை மூன்றின்
> நிரல்பட வந்த நெறிமைத் தாகி''
>
> (யா.வி.கழ.பக்.136

என்னும் காக்கை பாடினியார் நூற்பாவால் உணர்க.

2. முடிக்கும் நூற்பா

தொல்காப்பியர் எடுத்துக் கொண்ட செய்தி முடியுமிடத்தே முடிக்கும் நூற்பாவைக் கூறுவது வழக்கம். தூக்கினை முடிக்கு மிடத்தே 'தூக்கியல் வகையே ஆங்கென மொழிப' (செய். 83) என்றும், 'தொடை நிலை வகையே ஆங்கென மொழிப' என்றும் பாக்களின் அளவியலைக் கூறி முடிக்குமிடத்து 'அளவியல் வகையே அனைவகைப் படுமே' (செய். 156) என்றும், செய்யுள் அளவியலைக் கூறிமுடிக்குமிடத்து 'கிளரியல் வகையிற் கிளந்தன தெரியின் அளவியல் வகையே அனைவகைப் படுமே' (செய். 176) என்றும், கைகோள்களை எடுத்துக் கூறி முடிக்கும்பொழுது

உரை.சு.வே: 1. வேறு வகுத்துணர்த்துவார்க் கெல்லாம்.

'மெய்பெறு மவையே கைகோள் வகையே' (மெய்.180) என்றும் வண்ணத்தைக் கூறி முடிக்கும்பொழுது, 'வண்ணந் தாமே இவையென மொழிப' (செய்.226) என்றும் கூறுவனவற்றைக் காண்க. இத்தகைய நூற்பாக்கள் எல்லா உறுப்பிற்கும் இருந்திருக்கலாம். அவை சிதைந்தன போலும். இம் மாற்றம் உரை காரர்களுக்கு முற்பட்டு நிகழ்ந்ததாதல் வேண்டும். இவை எண்ணிக்கையில் மிகவும் குறைவு ஆதலின் இடைச் செருகல் ஆகலாம் எனவும் சிலர் கருதுவர்.

3. வேறு உரை

இந்நூற்பாவிற்குப் **பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்** இளம் பூரணரைப் போல் உரை கருதாமல் ''கட்டளை யடியின் றொடைப்பகுதி வரையறைப்படும்; சீர்வகை யடியின் றொடைப் பகுதி வரையறைப்படாவேனும், அவை செய்யுட்கண் நிற்கும் நிலைமை, முற்கூறிய கட்டளை போல் நின்று தொடை கொள்ளப் பெறும்'' என்று உரை கொள்வர்.

(10) நோக்கு

100. மாத்திரை முதலா வடிநிலை காறும்[1]
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே.

என்-னின் இது நோக்கு என்னும் உறுப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மாத்திரை முதலாக அடிநிலை யளவும் நோக்குதலாகிய கருவி நோக்கு என்றவாறு.

காரணம் எனினும் கருவி எனினும் ஒக்கும்.

'நோக்குதற் காரணம்' என்பதனை, 'உண்டற்றொழில்' என்றாற் போலக் கொள்க.

அஃதாவது, யாதானும் ஒன்றைத் தொடுக்குங்காலத்துக் கருதிய பொருளை முடிக்குங் காறும்[2] பிறிது நோக்காது அது தன்னையே நோக்கிநிற்கும் நிலை.

நூ.பா.வே: 1 ''அடிநிறை காறும்'' பேரா; நச்.
உரை.சு.வே: 2 பொருண் முடியுங் காறும்

'அடிநிலைகாறும்' என்றதனால் ஓரடிக்கண்ணும் பல அடிக் கண்ணும் நோக்குதல் கொள்க.

அஃது ஒரு நோக்காக ஓடுதலும் பல நோக்காக ஓடுதலும்[1] இடையிட்டு நோக்குதலுமென மூன்று வகைப்படும்.

''அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்-வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற்பின் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று'' (நாலடி. 1)

இஃது ஒரு நோக்காக ஓடிற்று.

''அறிமி னறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்'' (நாலடி.172)

இது பல நோக்காகி வந்தது.

''உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற விமைக்கும் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்'' (திருமுரு 1-6)

என்ற வழி 'ஒளி' என்பது அதனயற் கிடந்த தாளை[2] நோக்காது கணவனை நோக்குதலின் இடையிட்டு நோக்கிற்று.

பிறவும் அன்ன. (கஂஂ)

பதிப்பாசிரியர் விளக்கம்

நோக்கு

1. **இளம்பூரணர்** நூற்பாவில் வந்துள்ள 'நோக்குதற் காரணம்' என்ற சொல்லிற்கு 'நோக்குதலாகிய கருவி' என்று பொருள் கூறி, 'யாதானும் ஒரு பொருளைப் பாட்டில் தொடுக்

உரை.சு.வே: 1. பல நோக்காகி வருதலும்
2. கிடந்ததனை

குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிது நோக்காது அப்பொருளையே மாத்திரை முதலா அடிநிலை காறும் கூறிய உறுப்பெல்லாம் நோக்கி நிற்குமாறு செய்தலே நோக்கு' என்று விளக்கம் தந்துள்ளார்.

2. பேராசிரியர் 'நாற்சொல் வழக்கினைப் பாவிற்படுப்பது மரபென்றான். எனவே ஆண்டு நோக்கி உணரப்படுவது ஒன்றின்றிச் செய்யுளுள்ளும் வழக்கியல்பினவாகி வெள்ளையுமாய்க் காட்டுவனவாயின. அவ்வாறன்றி நோக்கென்பதோர் உறுப்புப் பெறினே செய்யுளாவது' என்றும்,

'கேட்டார் மறித்து நோக்கிப் பயன் கொள்ளும் கருவியை நோக்குதற் காரணம் என்றான்' என்றும்,

எழுதுவதை நோக்கினால் உலகவழக்கினைப் போல் இராமல் வெள்ளைமையும் இன்றிக் கேட்டார் திரும்பவும் நோக்கியுணர விரும்புமாறு மாத்திரை முதலான உறுப்புக்களை வைத்துப் பாட்டியற்றலே நோக்கு என்னும் உறுப்பாம் என்பது அவர் கருத்தாம். **நச்சினார்க்கினியரும்** இவ்வாறே கருதுகின்றார்.

3. தொல்காப்பியர் குறிப்பிட்ட நோக்கு என்பது, விழியால் நோக்குதலைக் கருதாமல், மனத்தால் நோக்கும் நோக்கல நோக்கத்தையே கருதியது. தொல்காப்பியர் மரபியலில் கூறும் குற்றங்களில் ஒன்று, 'என்ன வகையினும் மனங்கோள் இன்மை' என்பதாகும். கற்ற அறிஞன் ஒருவன் ஒரு பாட்டை நோக்கினால் அப் பாட்டின் மாத்திரை எழுத்து அசை சீர் அடி என்பன வெல்லாம் நன்கு அமையவில்லை என்று கருதாமல் அவையெல்லாம் நல்லன வென்று மனங்கொள்ளுமாறு அமைந்திருப்பதே அப் பாடற்கு நோக்கென்னும் உறுப்பாகலாம்.

4. பாடவேறுபாடு

இந்நூற்பாவிற்கு **'அடிநிலை காறும்'** என்பது இளம்பூரணர் கொண்ட பாடமாகும். அது 'அடிநிலை யளவும்' என்று உரை கூறுதலால் துணியப்படும். **'அடிநிறை காறும்'** என்பது பேராசிரியர் கொண்ட பாடமாகும். அது 'அடிநிரம்புந் துணையும்'

என்று அவர் உரை கூறுவதால் துணியப்படும். ஆனால் பேரா சிரியர் உரையைப் பதிப்பித்தவர் எல்லோரும் 'அடிநிலை காறும்' என்பதையே முதற்பாடமாகத் தந்துள்ளனர்.

5. நோக்கின் பெயர்

மாறனலங்கார உரையாசிரியர் இந் நோக்கினை 'யாப்புக் கால்' என்பர். (நூற்பா. 233 உரை)

(11) பா வகை

101. ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப[1] பாவகை விரியே.

என்-னின் நிறுத்த முறையானே 'பா' ஆமாறு உணர்த்து வான் எடுத்துக் கொண்டார்; அவை இனைத்தென வரையறுத் துணர்த்துதல் நுதலிற்று.

ஆசிரிய மெனவும் வஞ்சியெனவும் வெண்பா வெனவும் கலியெனவும் நான்கியல்பினை யுடைத்து என்று சொல்வர் பாவினது வகையை விரிக்குங் காலத்து என்றவாறு.

அஃதேல் ஒருசாராசிரியர் வெண்பா ஆசிரியம் கலி வஞ்சி என ஓதினார் யாதெனின்? அவரும் ஒரு பயன் நோக்கி ஓதினார்; இவரும் ஒரு பயன் நோக்கி ஓதினார் என்க.

என்னை? வெண்பாவாவது பிறதளையோடு மயங்காமை யானும், மிக்குங் குறைந்தும் வாராத[2] அளவடியான் (சமபாதம்) வருதலானும், அந்தணர் நீர்மைத்தென முற் கூறினார். அதன் பின் அந்நிகர்த்தாகிப் பிறதளையும் வந்து இனிய ஓசையை யுடைத்தாய்ப் பரந்து வருதலின் அரசத் தன்மையது என்பத னான் ஆசிரியப் பாக் கூறினார்.

நூ. பா. வே: 1. 'பாவிரி வகையே' பேரா. நச்.
'ப' விரிகையே, சு. வே.

உரை.சு. வே:
2. வாராமை அளவடியான்
வாராத அடியான்

அதன்பின் அந்நிகர்த்தாகிச் சிறுபான்மை வேற்றுத்தளை விரவலின் வணிகர் நீர்மைத்தெனக் கலிப்பாக் கூறினார். அதன்பின் வஞ்சிப்பா அளவடியான் வருதலின்றிக் குறளடியும் சிந்தடியுமாய் வந்து பல தளையும் விரவுதலின் வேளாண் மாந் தரியல்பிற்றென வஞ்சிப்பாக் கூறினார்.

இவ்வாசிரியரும் பதினேழ் நிலத்தினும் வருதலானும் இனிய ஓசைத்தாகலானும் அடிப்பரப்பினானும் ஆசிரியப்பா முற் கூறினார். அதன்பின் ஆசிரிய நடைத்தாகி இறுதி ஆசிரியத் தான் இறுதலின் வஞ்சிப்பாக் கூறினார். இந்நிகர்த்தன்றி வேறுபட்ட ஓசைத்தாகலான் வெண்பா அதன்பின் கூறினார். அதன்பின் வெண்சீர் பயின்று வருதலானும் வெண்பாவுறுப் பான் வருதலானும் கலிப்பாக் கூறினாரென வறிக. **(கஅக)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. ஆசிரியப்பா முதற்பா

கீழ்க்கணக்கு நூல்களை விடத் தொன்மை வாய்ந்தன எட்டுத்தொகை நூல்களாம். இத் தொகையில் ஆசிரியப் பாக்களே மிகுதியாக உள்ளன. தொல்காப்பியர் ஆசிரியப் பாவிற்குத்தான் முதலிடம் கொடுக்கிறார். தூக்கு என்னும் உறுப்பினைக் கூறும்பொழுது அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா (செய். 77, 78, 79, 80) என்ற முறையினும், பா என்னும் உறுப்பினைக் கூறும் பொழுது ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்ற முறையினும் (செய். 101), அளவியல் என்னும் உறுப்பினைக் கூறும் பொழுது ஆசிரியத்தினை முதல் வைத்தும் கூறுகிறார் (செய். 150).

இந்நூற்பா உரையில் **இளம்பூரணர்** "இவ்வாசிரியரும் பதினேழ் நிலத்தினும் வருதலானும், இனிய ஓசைத்தாகலானும், அடிப்பரப்பினானும் ஆசிரியப்பா முற்கூறினார்" என்பர் (செய். 101 உரை).

ஆசிரியப்பா இனிய ஓசையை உடையதென்பதை **அவிநயனார்,**

''தன்பால் உறுப்புத் தழுவிய மெல்லிய
இன்பா அகவல் இசையதை இன்னுயிர்க்கு
அன்பா அறைந்த ஆசிரியம் என்ப''
(யா. வி. கழ. பக். 297)

என்று சிறப்பித்துக் கூறுவர்.

2. பா என்னும் உறுப்பு

இளம்பூரணர் தூக்கென்னும் உறுப்பு, ஓசையைக் கூறவந்தது என்றும் பா என்னும் உறுப்பு பொருள்களைப் பாவிவரும் பாக்களைக் கூறவந்தது என்றும் கருதுகிறார். **பேராசிரியர்** பா என்பது பரந்துபட்ட ஓசை; அதனைத்தான் இப் பகுதி கூறுகின்றது என்பர். பாக்களைக் கூறும் நாற்பத்தெட்டு நூற்பாவுள் ஒரு நூற்பாவும் பரந்துபட்ட ஓசை பா என்று கூறவில்லை. அதற்கு மாறாகச் செய்யுளியல் 102ஆம் நூற்பாவிலிருந்து 110ஆம் நூற்பாவரை உள்ள நூற்பாக்கள், பாக்கள் பாவிவரும் பொருளையே உணர்த்துகின்றன என்பதை ''இத்துணையும் பாக்கட்குரிய பொருள் உணர்த்தியது'' என்று **இளம்பூரணர்** எழுதுவதால் புலனாம்.

3. பா என்றதன் காரணம்

யாப்பருங்கல விருத்தி யாசிரியர் ''செய்யுள்தாமே மெய்பெற விரிப்பின், பாவே பாவினம் எனவிரண் டாகும்'' (54) என்னும் நூற்பாவுரையில், ''அறம்பொருள் இன்பம்வீடு என இவற்றைப் பாவி நடத்தலின் 'பா' என்பதூஉங் காரணக் குறி'' என்பர். அவர் கூறியதற்குப் பொருந்தத் தொல்காப்பியரும் பாவகை விரி ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலியென நாலியற்றாய் வரும் என்று (செய். 101) கூறி அடுத்த நூற்பாவால், அந்நாலியற்றால் பாவாய் வரும் அந்நிலையில் அப்பாக்கள் அறம் முதலாகிய மும்முதற் பொருட்கும் உரியவாய் அவற்றைப் பாவிவரும் என்னுங் கருத்தால்.

''அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய வென்ப''

என்பாராயினர். மேற்கூறிய யா. விருத்தி மேற்கோள் பாடலும்

''அறமுதனான் கென்றும் அகமுதனான் கென்றும்
திறனமைந்த செம்மைப் பொருண்மேல் - குறைவின்றிச்
செய்யப் படுதலாற் செய்யுள் செயிர்தீரப்
பையத்தாம் பாவுதலாற் பா''

என்று கூறுதலைக் காண்க.

4. பேராசிரியர் கருத்து

அவர் 'நோக்கே பாவே' (செய். 1) என நிறுத்த முறையானே நோக்குணர்த்திப் பாவுணர்த்திய எழுந்தான், அதனை 1. இத்துணைப் பெயர் வேறுபாட்டதெனவும் 2. பொருட்குரிமையவும் 3. அடிக்குரிமையவுமாமாறும் 4. செய்யுட்கு வரையறை வகையான் உரியவாறும் 5. ஒரோசெய்யுட்கண் ஒரோவுறுப்புப்பற்றி வருங்கால் அவ்வுறுப்புக்கள் இத்துணைவாகுமெனவும் எல்லாங் கூறுவான் தொடங்கினமையின். அவற்றுள் இந் நூற்பா பெயர் வேறுபாடும் அஃது இனைத்தென விரியும் உணர்த்துகின்றது என்று நுதலியதுரைப்பர்.

சிறப்புரையில் இவை நான்கேயன்றி பாவாமாறு (பரந்து பட்டவோசை) கூறானோவெனின், ''இவையின்றித் தூக்குப் பிறவாமையின் இப் பாவிலக்கணமும் தூக்கோத்தினுட் கூறினானாகலான் ஆண்டோதியவாறே அமையுமென்பது. இக் கருத்தே பற்றிப் 'பாவென மொழியினும் தூக்கினது பெயரே' என்றார், இந்நூலின் வழிநூல் செய்த ஆசிரியருமென்பது'' என்பர்.

102. அந்நிலை[1] மருங்கி னறமுத லாகிய
மும்முதற் பொருட்கு முரிய வென்ப.

என்-னின் மேற் கூறப்பட்ட பாக்கள் பொருட்கு உரியவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அப் பாக்கள் நான்கும் பொதுப்பட நின்றவழி அறம் பொருள் இன்ப மென்னும் மூன்று முதற் பொருட்கும் உரிய என்றவாறு.

நூ. சூ. வே. 1. அந்நில

முதற்பொருள் என்றது பாகுபாடல்லாத[1] பொதுமை குறித்த பொருள். சில பொருள்களை எடுத்து விலக்குகின்றாராதலின் இவ்வாறு கூறப்பட்டது.

அப்பொருட்கண் உரியவாகியவாறு சான்றோர் செய்யுளகத்துக் கண்டு கொள்க. (கஙஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. நூற்பா உரை

''பா என்னும் ஒன்று, மேற்கூறியவாறு ஆசிரியப்பா முதலான நான்கு இயல்பாய் விரிந்த அப்பொழுது, அவை அறம் முதலாகிய மூன்று முதற் பொருள்களைப் பாவி அவற்றிற் கிடமாய் நடக்கும்'' என்பது நூற்பாப் பொருள்.

2. பொது விதியால் வஞ்சிப்பா இன்பம் பற்றி வரும்

'அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய' என்னும் நூற்பாவால் தொல்காப்பியர் வஞ்சிப்பா இன்பம் பற்றி வரும் என்று கருதுகின்றார்.

ஆனால், அகத்திணை அகவலுள் வஞ்சி வாராது. சிறுபான்மை வரப்பெறும் என்பதை, யா. வி. கழ. பக். 128, 129ல் காண்க.

3. மேற்கோள்

அகத்தியனாருந் தொல்காப்பியனாரும் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறுதலன்றி வீட்டின் தன்மை இலக்கணத்தாற் கூறாரென்றுணர்க. அது ''அந்நிலை மருங்கின்'' (செய். 102) என்பதனான் உணர்க'' என்பர் நச்சினார்க்கினியர் (தொல். பாயிரவுரை).

103. பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
ஆசிரி யப்பா வெண்பா வென்றாங்
காயிரு பாவினு ளடங்கு மென்ப.

உரை. சு. வே: 1. பாகுபாடு நில்லாது

என்-னின் மேற் சொல்லப்பட்ட பாக்களைத் தொகை வகையான் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட நான்கு பாவும், ஆசிரியப்பா வெண்பா வென இரண்டாய் அடங்கும் என்றவாறு.

அவை அடங்குமாறு, மேலே வருகின்ற சூத்திரத்தான் உரைப்ப. (கo௩)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒத்த கருத்து

"ஏற்றபா இரண்டேவெண் பாஅகவல்; வெண்பா இடத்தில் வரும் கலி;அகவல் இடத்தில்வரும் வஞ்சி" (சிதம்பரப் பாட்டியல். 13)

104. ஆசிரிய நடைத்தே வஞ்சி யேனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப.

என்-னின் மேல் அடங்குமெனக் கூறப்பட்ட பாக்கள் அடங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஆசிரியம் போன்ற நடையை உடைத்து வஞ்சி; வெண்பாப் போன்ற நடையை உடைத்து கலி என்றுரைப்ப என்றவாறு.

நடையென்றது அப் பாக்கள் இயலும் திறம். (கo௪)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. ஆசிரிய நடை வெண்பா நடை

தொல்காப்பியர் செய்யுளியலில் 103, 104 என்னும் நூற்பாக்களால் கூறிய செய்தியைச் சிறிது வேறுபடப் பிங்கல நிகண்டும் கூறுகிறது.

"அகவலும் தொகையும் ஆசிரி யப்பா"

"அதனின் விகற்பம் வஞ்சி யாகும்" (323, 322)

''முதற்பா வெண்பா''

''விகற்பங் கலிப்பா'' 321, 322

பேராசிரியர், நச்சினார்க்கினியர் இருவரும் 103, 104 ஆம் நூற்பாக்களை உரையியைபு நோக்கி உடன் எழுதிக்கொள்வர்.

பேராசிரியர், ''மேற் பாக்கண் விரிந்த பகுதியை உண்மைத் தன்மை நோக்கித் தொகுப்பின் ஆசிரியமும் வெண்பாவுமேயாம். அவற்றுள், ஆசிரியத்து விகற்பமாகித் தூங்கலோசை விரிந்து அடங்கும்; வெண்பாவின் விகற்பமாகிக் கலிப்பா விரிந்தடங்கும். அங்ஙனம் அடங்கி இரண்டாகும் பாவின்றொகை'' என்றுகூறி

''வீடுபேறு மிகவிழைந்து, நீடு நினைந்து நெடிதிருந்து''

நேர்புநேர்பு நிரைநிரைபு, நேர்புநிரைபு நிரைநிரைபு என அகவற்சீரான் (ஆசிரியவுரிச்சீரான்) வஞ்சித் தூக்குப் பிறந்தது.

'மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய்' என வெண்பாவுரிச்சீரான் கலிப்பா பிறந்தது என்பர். மேலும் அவர் ''பண்புற'' என்றதனான் ஆசிரியப் பாவும் வெண்பாவும் இயல்பெனவும், ஒழிந்தன விகாரமெனவும் கொள்க என்பர்.

2. நடை என்றது

இளம்பூரணர் 'நடை' என்றது பாக்கள் இயலும் திறம் என்றார். பேராசிரியர் நடை என்பதற்கு விகற்பம் எனப் பொருள் கொண்டு அகவலோசையின் விகற்பமாகித் தூங்கலோசையும் வெண்பாவோசையின் விகற்பமாகிக் கலியோசையும் அடங்கி நான்கு பாக்களும் இரண்டாய் அடங்கும் என்பர்.

105. வாழ்த்தியல் வகையே நாற்பாக்கு[1] முரித்தே.

என்-னின் வாழ்த்தியற்குரிய பாவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வாழ்த்தியலின் வகை நான்கு பாவிற்கும் உரித்து என்றவாறு.

நூ.சு.வே: 1. 'நாற் பாற்கு முரித்தே' சி.வை.தா. பதிப்புப் பாடம்
இதனைப்பிழைப்பாடமென்பர். ரா. ரா.

வகையென்றது, தேவரை வாழ்த்தலும், முனிவரை வாழ்த்தலும், ஏனையோரை வாழ்த்தலும். செய்யுள் வந்தவழிக் கண்டு கொள்க. (௧௦௫)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. நூற்பாவிற்குப் பேராசிரியர் கருத்து

அங்ஙனம் வாழ்த்துங்கால் தனக்குப் பயன்படுதலும் படர்க்கைப் பொருட்குப் பயன்படுதலுமென இருவகையான் வாழ்த்தும் என்பதூஉம், இனி முன்னிலையாக வாழ்த்துதலும் படர்க்கையாக வாழ்த்துதலும் என இருவகைப்படும் என்பதூஉம் எல்லாங் கொள்க.

அங்ஙனம் வாழ்த்தப்படும் பொருளாவன:— கடவுளும், முனிவரும், பசுவும், பார்ப்பாரும், அரசரும், மழையும், நாடும் என்பன.

அவற்றுள் கடவுளை வாழ்த்தும் செய்யுள் கடவுள் வாழ்த்து எனப்படும். ஒழிந்த பொருள்களை வாழ்த்திய செய்யுள் அறுவகை வாழ்த்து எனப்படும் என்பது என்பர்.

2. நச்சினார்க்கினியர் கருத்து:

'இயல்' என்றதனால் இயற்கையாய வாழ்த்து இவை எனவும், மேல் வரும் புறநிலை வாழ்த்து முதலியன இயற்கையன்றிய வாழ்த்தின்பாற் சார்த்தப்படுவன எனவும் கொள்க.

வஞ்சிக்குதாரணம் வந்துவழிக் காண்க.

''அங்கண் வானத் தமரரரசர்''

என்பது பின்னுள்ளோர் கூறிய வாழ்த்தியல் என்பர்.

3. வாழ்த்து

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தே ''வாழிய என்னும் சேய என்கிளவி'' என்ற நூற்பாவால், வாழிய என வாழ்த்துரைக்கும் சொல்லிற்கு ''வாழுங்காலம் சேய்மைத்தாகுக'' என்று பொருள் கூறுகிறார்.

சொல்லதிகாரத்தே வாழ்ச்சிப் பொருள் ஆறாம் வேற்றுமைக்கு உரியதென்று கூறுகிறார்.

பொருளதிகாரம் புறத்திணையியலில் கல்வாழ்த்து, காடு வாழ்த்தென்னும் துன்பியல் வாழ்த்துக்களையும், கடவுள் வாழ்த்தும், அதனுடன் கருதப்பட்டுவரும் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற வாழ்த்தும், இயன்மொழி வாழ்த்தும், வாயுறை வாழ்த்தும், புறநிலை வாழ்த்தும் என்னும் இன்பியல் வாழ்த்துக் களையும் கூறுகிறார். வாழ்த்தல் ஒரு மெய்ப்பாடு. (மெய்ப்.11)

களவில் தலைவிக்கு ஏதம் வராமல் செவிலி தெய்வம் வாழ்த்தலும் உண்டு. இன்னும் களவழி வாழ்த்து, மங்கல வாழ்த்து முதலியனவும் உள்ளன.

"பழிச்சல் புகழ்தல் வாழ்த்தெனப் படுமே" என்பது **திவாகரம்**. பிற்காலத்தார் வாழ்த்து மெய்வாழ்த்து, இருபுற வாழ்த்து என இருவகைப்படும் என்பர். **தண்டியலங்காரம்** வாழ்த்தினை ஓரணி என்று கூறும். "இன்னார்க் கின்ன தியைக வென்றுதாம், முன்னியது கிளத்தல் வாழ்த்தென மொழிப" என்பது அதன் இலக்கணம்.

வடநூலார் வாழ்த்தினை ஆசி என்பர்.

106. வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி[1] னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ.

என்-னின் இது புறநிலை வாழ்த்திற்குரிய பா ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வழிபடு தெய்வம் நின்னைப் புறங்காப்பக் குற்றந் தீர்ந்த செல்வத்தொடு வழிவழியாகச் சிறந்து பொலிமின் என்னும்புறநிலை வாழ்த்து கலிப்பா வகையினும் வஞ்சிப்பா[2] வகையினும் வரப்பெறாது என்றவாறு.

நூ.பா.வே: 1 'பொலிக' காரிகை.

உரை.சு.வே: 2. வஞ்சிப்பாவினும்

எனவே, வெண்பாவினும் ஆசிரியப்பாவினும் இவை இரண்டும் புணர்ந்த மருட்பாவினும் வரப்பெறும் என்ற வாறாம். (கூ)

107. வாயுறை வாழ்த்தே யவையடக் கியலே
செவியறி[1] வுறூஉ வென வவையு மன்ன.

என்-னின் ஒருசார் பொருட்குரிய மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வாயுறை வாழ்த்தும் அவையடக்கியலும் செவியறிவு றுத்தற் பொருளும் கலியினும் வஞ்சியினும் வரப்பெறா என்றவாறு.

எனவே முன்னைய வொப்ப ஏனை இரண்டினும் வரப் பெறும் என்றவாறாம். (கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. உரையாசிரியர் கருத்து

நச்சினார்க்கினியர் மேல் நூற்பாவில் "இது நான்கு பாவிற் கும் உரித்தேயன்றி வரையறைப்படும் வாழ்த்து வேறுபாடு உணர்த்துகின்றது" என்று கருத்துக்கூறி இந்நூற்பா உரையில் இதுவும் "பாக்களைப் பொருண்மேல் வரையறுக்கின்றது" என்று கருத்துரைப்பர்.

2. **பேராசிரியர்** இதுவும் பாக்களை மூன்றாக வரையறுக் கின்றது என்பர்.

3. **யாப்பருங்கல விருத்தியாசிரியர்** 93ஆம் நூற்பாவுரையில் "புறநிலை வாழ்த்தும், வாயுறை வாழ்த்தும், அவையடக்கிய லும், செவியறிவுறூஉம் என்னும் பொருண்மேல் கலியும் வஞ்சி யுமாய் வரப்பெறா" என்று கூறி "வழிபடு தெய்வம்" "வாயுறை வாழ்த்து" என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் 106, 107 ஆம் நூற்பாக்களை மேற்கோள்காட்டியதன்றி,

---

நூ.பா.வே: 'வுறூஉ வென்றவையு மன்ன' நச்.
'வுறூஉ வென இவையும் அன்ன' யா.வி.

''புறநிலை வாயுறை செவியறி அவையடக்கு, என விவை வஞ்சி கலியவற் றியலா'' என்றும் கூறி,

நல்லாறனார் நூற்பாவையும் மேற்கோள் காட்டுவர்.

4. **நூற்பாப்பொருள்** ''வாயுறை வாழ்த்தும், அவையடக் கியலும், செவியறிவுறுத்தற் பொருளும் மேற்கூறிய புறநிலை வாழ்த்தே போல், கலிப்பாவினும் வஞ்சிப்பாவினும் வரப் பெறா; ஆசிரியம் வெண்பாவினும், அவை கலந்த மருட்பா வினும் வரப்பெறும்'' என்றுரைக்க.

108. வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
[1]வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின்[2] வாயுறுத் தற்றே.

என்-னின் வாயுறை வாழ்த்து ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வாயுறை வாழ்த்தை விளங்க ஆராயின், ''வேம்பி னையும் கடுவினையும் போல'' வெஞ்சொல் அடக்காது பிற் பயக்கு மெனக் கருதிப் பாதுகாவற் கிளவியானே மெய் அறிவித்தல் என்றவாறு. **(கo அ)**

உதாரணம்:—

''இருங்கடற் றானையொடு பெருநிலங் கவைஇ
உடையில நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடுபிறர் கொள்ளச் சென்றுமாய்ந் தனரே
அதனால்,
நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடலொடு நின்ற வுயிரு மில்லை

நூ. பா. வே: 1. 'வேம்புங் கடும்பும் போல்வன' மர்ரே
2. 'வாயுறுத்தன்றே' யா. வி; காரிகை.

மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோ னீயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே'' (புறநா. 363)

என்னும் பாட்டு.

பதிப்பாசிரியர் விளக்கம்

1. வாயுறுத்தற்றே

''வாயுறுத்தற்றே'' (செய்-108) என்பதற்கு **இளம்பூரணர்** 'மெய் அறிவித்தல்' என்பர். வாய்மையை உறச்செய்தல் என்று கருதுகின்றார் எனலாம்.

2. வாயுறை வாழ்த்து

பேராசிரியர் வாய்-வாய்மொழி; உறை-மருந்து; வாயுறை என்பது சொன்மருந்தெனப் பண்புத்தொகையாம்; இனி, வாய்க்கட்டோன்றிய மருந்தென வேற்றுமைத் தொகையுமாம். மருந்து போறலின் மருந்தாயிற்று என்று முன் நூற்பாவிலே விளக்கங் கூறி, இந்நூற்பாவிலே 'வாயுறை' என்பது மருந்தா கலான் வேம்பும் கடுவும் போல என்றாரென்பது என்பர்.

3. வேம்பு: வேப்ப மரம். நிலவேம்பு, கறிவேம்பு, சர்க்கரை வேம்பு, மலைவேம்பு முதலியன. இவையெல்லாம் மருந்துக்குரிய பொருளாகும். கடு-கடுக்காய், கடுகுரோகணி முதலிய மருந்துப் பொருள்கள்.

கடுகம்-சுக்குத்திப்பிலி மிளகு; இவையெல்லாம் மருந்துக் குரிய பொருள்களே. இம் மருந்துப்பொருள்களை முறைப்படி போற்றி உண்ணின் உண்டபிற்காலத்தே நோய் நீங்கும்; அது போன்று சொற்களும் வழி நனி பயக்குமென்ப.

'கடு' என்பது பலபொருள் ஒருசொல்லாயினும் ஈண்டுக் கடுக் காயையே உணர்த்தும். இதன் சுவை துவர்ப்பு.

தொல்.சொல்.234ஆம் நூற்பாவுரையில் **நச்சினார்க்கினியர்** 'கடு தின்னாமுன் துவர்த்தது' என்றொரு உதாரணம் காட்டு கின்றார். திருவள்ளுவமாலை 35ஆம் செய்யுள் 'திருக்குறளினை வாயுறை வாழ்த்து' என்று கூறும்.

''இன்பமுந் துன்பமு மென்னு மிவையிரண்டும்
மன்பதைக் கெல்லா மனமகிழ - வன்பொழியா
துள்ளி யுணர வுரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து'' என்பது அப்பாடல்.

109. அவையடக் கியலே யிறபத் தெரியின்
வல்லா[1] கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந்[2] தன்றே.

என்-னின் அவையடக் கியல் ஆகுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அவையடக்கியலைக் குற்றமற ஆராயின், அறியா தன சொல்லினும், பாகுபடுத்துக் கோடல் வேண்டும் என எல்லா மாந்தர்க்கும் தாழ்ந்து[3] கூறல் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க. (கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

உரையாசிரியர் கருத்து

1. அவையடக்கியல்

இளம்பூரணர் ''எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந்தன்றே'' என்ற பகுதிக்கு 'எல்லா மாந்தர்க்கும் தாழ்ந்து கூறல்' என்று உரை கூறுவதால் 'அவையடக்கியல்' என்பதற்கு அவைக்கு அடங்கி இயல்வது என்றே அவர் பொருள் கருதுவதாய்த் தெரி கின்றது.

நூ.பா.வே: 1. வல்லாங்கு 2. வழிமொழிந்தனரே (மா்ரே)
உரை.சு.வே: 3. எல்லாமறிந்தோர்க்குத்

ஆனால், **பேராசிரியர்** அவை அடக்கியல் - அவையை வாழ்த்துதல்; அது இரண்டாம் வேற்றுமைத் தொகை. 'அடக்கியல்' என்பது வினைத்தொகை; தான் அடங்குவதாயின் 'அடங்கியல்' எனல் வேண்டும். இது அவையத்தார் அடங்குமாற்றால் இனியவாகச் சொல்லி அவரைப் புகழ்தல் (வாழ்த்துதல்) என்பர்.

நச்சினார்க்கினியர் 'அவையடக்கியல்' என்பது அவை அடக்கிய இயல் என விரியும். அஃது அவர் அடங்குமாற்றான் தன்னை இழித்துக் கூறி அவரைப் புகழ்தல். அவைக்கண் தான் அடங்குவதாயின் அவையடங்கியல் எனப் பாடமாதல் வேண்டும் என்பர்.

2. அவை

தொல்காப்பியர் புறத்திணைப் பொருளில், வாகைத் திணையினைக் கூறும்பொழுது எட்டுவகை நுதலிய அவையகத்தானும் (புற.17) என்றொரு துறை கூறியுள்ளார்.

இளம்பூரணர் 'எட்டுவகை நுதலிய அவையகமும் - எட்டுப் பாகுபாட்டைக் குறித்த அவையகமும்' என்று உரை கூறி, எட்டுவகை குறித்த அவையகம் என்றமையான், ஏனைய அவையின் இவ்வவை மிகுதி உடைத் தென்றவாறு.

அவையாவன: குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை என்பன என்பர். மேற்கூறியவற்றை நோக்கினால் எட்டுவகைப் பாகுபாட்டினையுடைய அவையே பல அவைகளில் மிக்க அவை என்று பெயர் பெறும் என்று தோன்றுகின்றது. இவ்வவையேயன்றி ஏனைய அவைகளும் தமிழகத்தில் இருந்திருக்கின்றன.

சொல்லதிகாரத்தே 'அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்' (எச்.46) என்னும் நூற்பாவிடத்தே அவையினைக் குறிப்பிட்டுள்ளார். கிளவியாக்கத்தே 'குழுவே ..... உயர்திணை மருங்கின் நிலையினவாயினும், அஃறிணை மருங்கிற் கிளந்தாங்கியலும்' (56) என்பர். இங்கே குழு என்றது அவையினை.

3. அவையென்பது வடசொற்றிரிபன்று

'சபா' என்னும் வடசொல் சபை, சவை யெனத் திரிந்து வரும். அவை என்பது அச்சொல்லின் திரிபன்று. அது அவை என்னும் பலவின் பாற் சொற்போல **'அத்தகைமையுடைய மக்கட் குழு'** என்ற பொருளில் வரும் தமிழ்ச்சொல் என்க.

திவாகர நிகண்டு புலவர் பெயரைக் கூறும்பொழுது,

> ''கவிஞர் கலைஞர் கற்றவர் மேதையர்
> சவையே சங்கம் முதுவர் மூத்தோர்
> அவையே அறிவர் புதரே புலவர்''

என்றும், திரண்டோர் பெயரைக் கூறும் பொழுது,

> ''சவையும் அவையும்''

என்றும், சவை என்னும் சொல்லையும், அவை என்னும் சொல் லையும் வெவ்வேறாகவே கூறுதலைக் கருதி உணர்க.

4. அவையின் வகை

யாப்பருங்கலத்தில் 'மாலைமாற்றே' என்னும் நூற்பாவில் 'அவையினதமைதி' என்று அவை குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் உரையாசிரியர் அதனை விளக்கும் பொழுது நல்லவையும் தீயவையும் நிறையவையும் குறையவையுமென அவ்வவை நான்குவகைப்படும் என்பர். **வச்சணந்திமாலையும்** அவ்வாறு கூறும்.

மேலும் தமிழ்நாட்டு முடிமன்னர் தமக்குரிய சிறப்புடன் வீற்றினிதிருக்குமிடத்தை அரசவை, வேத்தவை என்றும், அவர் முறைவழங்க அமைத்த குழுவை அறங்கூறவை என்றும், ஊர் களில் முறை வழங்க அமைத்த குழுவை அவை என்றும் வழங் கினர்.

5. அவையடக்கியலைக் கூறும் இலக்கண நூலாசிரியர்

தொல்காப்பியர் குறிப்பிடும் அவையடக்கியல் என்ற பாகு பாட்டினைப் பிற யாப்பிலக்கண நூலாசிரியரிற் சிலரே குறிப்பிடு கின்றனர். அவருள் **நல்லாறனார்** என்னும் புலவர்,

''புறநிலை வாயுறை செவியறிவு அவையடக்கு
எனவிவை வஞ்சிக் கலியவற் றியலா''

என்பர். (யா. வி. கழ. பக். 215)

6. அவையடக்கியல் வருமிடம்

பேராசிரியர் (செய். 113) ''வல்லாதனவற்றை 'வல்லா' என்றான். அதற்குச் செய்யுள் 'திரைத்த ..... செய்வார் பலர்' என்பது. இது பூதத்தார் அவையடக்கு. 'அரிறபத் தெரியின்' என்றதனானே யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடைய கொச்சக வொருபோகினும் அவையடக்கியல் சிறு பான்மை தொடர்நிலைக்கண் வரும் எனக் கொள்க'' என்பர்.

பேராசிரியர், அவையடக்கியல் சிறுபான்மை தொடர் நிலைக்கண் வரும் என்றார். அது பிற்கால இலக்கியங்களில் வரும் அவையடக்கப் பாடல்களைக் கருதிக் கூறியதாம். பிற் காலத்தே இலக்கண நூல்களிலும் அவையடக்கத்தைக் காண் கின்றோம். யாப்பருங்கலக் காரிகையில் ''தேனார் கமழ் தொங்கல்'' என்றும் ''சுருக்கமில் கேள்வி'' என்றும் வரும் இரண்டும் அவையடக்கப் பாடல்களாம். **நேமிநாதத்துள்** வரும் ''உண்ண முடியாத'' என்ற வெண்பாவும் அவையடக்கப் பாடலே.

110. செவியுறை தானே
பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல்[1] கடனெனச் செவியுறுத்[2] தற்றே

என்-னின் செவியறிவுறூஉ வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) செவியுறை யாவது, பெரியோர் நடுவு வெகுட லின்றித்[3] தாழ்ந்தொழுகுதல் கடன் எனச் செவியறிவுறுத்தல் என்றவாறு.

''அறிமி னறநெறி.....பெரியோர் வாய்ச்சொல்''

(நாலடி. 172)

நூ.பா.வே: 1. 'நவிலுதல்' மர்ரே
2. செவியுறுத் தன்றே சு.வே
உரை.சு.வே 3: பெரியோரான் நகுதலின்றித்

என வரும்.

இத்துணையும் பாக்கட்குரிய பொருள் உணர்த்தியது. (ககo)

பதிப்பாசிரியர் விளக்கம்

செவியறிவுறூஉ, செவியுறை

காரிகை உரையாசிரியர் (காரிகை.35) இது வியப்பின்றி உயர்ந்தோர்கள் அவிந்தொழுகுதல் கடன் என அரசற்கு உரைத்தமையால் செவியவிவுறூஉ மருட்பா என்பர். யா. விருத்தியும் இவ்வாறே கூறுகிறது.

புறப்பொருள் வெண்பாமாலையும்

> "மறந்திரி வில்லா மன்பெருஞ் சூழ்ச்சி
> அறந்தெரி கோலாற் அறிய வுரைத்தன்று" (221)

என்று செவியறிவுறூஉவைக் கூறுகின்றது. காரிகை உரையாசிரியரும் யாப்பருங்கல உரையாசிரியரும் 'அரசற்கு உரைத்தமையால்' என்று கூறுவதாலும், வெண்பா மாலையும் 'அறந்தெரி கோலாற்கு அறியவுரைத்தல்' என்று கூறுவதாலும், உலகப் பெருந்தலைவனாகிய அரசனுக்கு அவன் செவியில் மட்டும் கேட்கும்படி அடங்கியொழுகும் அரசியல் நெறிகளைக் கூறுதலே செவியறிஉறூவாம். பெரியோர் அரசருக்கு அறவுரை கூறுங்கால் இடித்துக் கூறுவராகையால் அவர் கூறுவனவற்றை வெகுளலின்றிக் கேட்க வேண்டுமென்க.

111 ஒத்தா ழிசையும் மண்டில யாப்பும்
குட்டமும் நேரடிக் கொட்டின வென்ப.

என்-னின் சில[1] செய்யுட்களில் அடி வரையறுத்தலை நுதலிற்று.

(இ-ள்) ஒத்தாழிசைக் கலிக்கு உறுப்பாகிய ஒத்தாழிசையும், ஆசிரியப்பாவின்கண் நிலைமண்டிலம் அடிமறிமண்டிலம் என்பனவும், ஒத்தாழிசைக்கும் கொச்சகத்திற்கும் பொதுவாகிய குட்டமும் நாற்சீரடிக்குப் பொருந்தின என்றவாறு.

உரை.சு.வே: 1. இது செய்யுட்கு அடிவரையறுத்தலை நுதலிற்று. ரா. ரா.

மேல் ஆசிரியப்பாவின் [1]ஈற்றயலினும், இடையிலும், முச்சீரும் (இருசீரும்) ஐஞ்சீரும் அறுசீரும் வரும் என்றதனானே எல்லா அடியும் ஒத்து வருவனவும் உளவென மண்டிலங் கூற வேண்டிற்று.

கலிப்பாவிற்குச்[2] சுரிதகம் ஈற்றடி முச்சீரானும், ஈற்றயலடி முச்சீரானும் வரும் என்றமையால், தாழிசையும் தரவும் நாற்சீரானல்லது பிறவாற்றான் வாராவெனக் கூறல் வேண்டிற்று.

குட்டம் எனினும் தரவு எனினும் ஒக்கும்.

இனிக் கலிக்கு உறுப்பாகிய சின்னங்கள் இருசீராஞும் முச்சீரானும் வருதலானும் தனிச்சொல் ஒருசீரான் வருதலானும் வேறு ஒத வேண்டிற்று.

உதாரணம் முன்னர்க் காட்டுதும். (ககக)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பேராசிரியர் உரையும் மறுப்பும்

பேராசிரியர் இந்நூற்பாவிற்கு இதுவும் மேனின்ற அதிகாரத்தால் பா விலக்கணமே கூறுகின்றது என்று நுதலிய துரைத்து, கலிப்பாவுள் ஒத்தாழிசைக் கலிப்பாவின் கண்ணும், மண்டில யாப்பு ஆசிரியப்பாவின் கண்ணும் குறளடி சிந்தடியாகிய குட்டம் வருங்கால் அளவடி எந்தப் பாவால் (ஓசையால்) வருமோ அப்பாவிலேயே அக் குட்டமும் வரும். இதனது பயன் குறளடி வஞ்சிப்பாப் போலப் பா வேறுபடாது என்பர்.

பேராசிரியர் உரைக்கு 'ஒத்தாழிசையில் மண்டில யாப்பில் வரும் குட்டமும்' என்று பாடமிருந்தால் பொருந்தும்; ஒத்தாழிசையும் மண்டில யாப்பும் குட்டமும் என மூன்றின் மேலும் எண்ணும்மை இருத்தலால் இம்மூன்றும் நேரடிக்கு ஒட்டின என்று கூறலே அமைவுடைத்தாகும்.

2. நூற்பாக் கருத்து

இந் நூற்பா "வெண்பா அகவல் கலிப்பா அளவடி"

உரை.சு.வே: 1. 'ஈற்றயலும்' ரா. ரா. 2. 'கலிப்பாவில்' ரா. ரா.

(காரிகை.21.) என்று கூறுவதைப் போன்றிருந்தாலும், வெண்பா முதலியவை நேரடியால் வரும் என்னும் செய்தியைக் கூற வரவில்லை என்பது தெரிகின்றது. எதனாலெனின்? முன்னே "நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே" (செய். 31) என்று கூறி, அந்நாற் சீரடிகளை எழுத்தளவு பற்றிக் குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி என ஐந்து பிரிவாகப் பிரித்துக் கொண்டும், பின்னர் மேற்கூறிய ஐவகையடியும் ஆசிரியப் பாவிற்கு வரும் (செய். 50) என்றும், அவற்றுள் அளவடியும் சிந்தடியும் வெண்பாவிற்கு வரும் (செய். 55) என்றும், அளவடி மிகுதி உளப்படத் தோன்றி இருநெடிலடியும் கலிப்பாவிற்கு வரும் (56) என்றும் ஆசிரியர் கூறியுள்ளதால், ஆசிரியப்பாவும் வெண்பாவும் கலிப்பாவும் அளவடியாகிய நேரடியாய் வரும் என்பதை முன்பே கூறினாராயிற்று. அதனால் ஒத்தாழிசை என்னும் உறுப்பும், மண்டிலம் என்னும் உறுப்பும், குட்டம் என்னும் உறுப்பும் நேரடியால் வரும் என்று கொள்ளுதலே அமைவுடைத்தாம். உறுப்பினைப் பெற்றுவரும் பாக்கள் கலிப்பாவும் பரிபாடலும் ஆகையால், இவை அவற்றின் உறுப்பாகலாம். அவற்றுள் ஒத்தாழிசை ஒழிந்த உறுப்புக்கள் நமக்கு இப்பொழுது நன்கு விளங்கவில்லை. குட்டம், எருத்தென்னும் தரவு வகையாகலாம். யா. க. வி. 'ஆசிரியத்துக்கும் கலிக்கும் ஐஞ்சீரடி புகுதலும், மண்டிலம் ஆகலும் உரிய' (கழ. பக். 437) என்று எழுதுவதை நோக்கினால், மண்டிலம் ஆசிரியப்பாவிற்கும் கலிப்பாவிற்கும் உரிய தென்று தெரிகின்றது.

3. உரையுள் இடைச்செருகல்

"மேல், ஆசிரியப்பாவின் ஈற்றயலினும் இடையினும் முச்சீரும் **இருசீரும்** ஐஞ்சீரும் அறுசீரும் வரும் என்றதனானே, எல்லா வடியும் ஒத்து வருவனவு முளவென மண்டிலங் கூறல் வேண்டிற்று" என்ற பகுதியில், செய்யுளியல் 60 ஆம் நூற்பா ஆசிரியப்பாவில் ஐஞ்சீரடி வருவதற்கும், 61 ஆம் நூற்பா அறுசீரடி வருவதற்கும், 65, 66 ஆம் நூற்பாக்கள் முச்சீரடி வருவதற்கும் உரிய நூற்பாக்களாகும். இருசீர் வருவதனை விதிக்கும் நூற்பா இல்லாமையினாலே, **'இரு சீரும்' என்பது இடைச் செருகல்.**

112. குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்.

என்–னின் மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தரவு (குட்டம்) ஈற்றயலடி, முச்சீரான் வரவும் பெறும் என்றவாறு.

'எருத்தடி யுடைத்து' என்றதனானே, ஈற்றயலடி (எருத்தடி) முச்சீர் எனப் பொருள்படுமோ எனின், ஆசிரியப்பாவின் ஈற்ற யலடி முச்சீரான் வருதல் பெருவழக்காதலானும், இனி வருகின்ற சூத்திரம் [1]செந்தூக்கியலென ஓதுகையானும் இவ் வாறு பொருள்படும் என்று கொள்க.

உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

இன்னும் 'குட்டம்' என்பதனைத் தரவு கொச்சகமாகிய கொச்சக வொருபோகிற்குப் பெயராக வழங்கினும்[2] அமையும். அவ்வழி 'ஒத்தாழிசை' (செய். 111) என்பதனை ஒத்தாழிசை[3] யெனத் தரவெனத் தரவையும் கூட்டிப் பொருளுரைக்கப்படும்.

(ககஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. இளம்பூரணர் கூறும் வேறு உரை: மேல் நூற்பாவுரையில் (செய். 111) குட்டம் என்பதற்குத் தரவு என்று பொருள் கொண்டு, நான்குவகைக் கலிப்பாவில் ஒத்தாழிசைக் கலிப்பா விற்கும் கொச்சகக் கலிப்பாவிற்கும் பொதுவாய குட்டம் (தரவு) என்றார்.

அங்ஙனங் கொள்ளாமல், தேவர்ப் பராயதன் பிரிவாகிய ஒருபோகு, அதன் பிரிவாகிய கொச்சக ஒருபோகிற்குப் பெய ராக வழங்கினும் அமையும் என்றார். அங்ஙனம் கொள்ளின் ஒத்தாழிசைக் கலி பெற்றுவரும் தரவு, நேரடியாய் வரும்

உரை.சு.வே: 1. தூக்கியலென
2. வழங்கினும் ஆம்
3. ஒத்தாழிசைக் கலியென்க வெனத் (நல்ல பாடம்)

என்பது பெறப்படாதாகையால், அதற்காக ஒத்தாழிசையெனத் தரவெனத் தரவையும் கூட்டிப் பொருளுரைக்கப்படும் என்பர்.

113. மண்டிலங் குட்ட மென்றிவை யிரண்டும்
செந்தூக் கியல என்மனார் புலவர்.

என்-னின் மேற் சொல்லப்பட்ட வற்றுள் மண்டிலம் குட்டம் என்பனவற்றிற்கு உரியதோர் ஓசை வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மண்டிலமாகக் கூறப்படும் பாவும் குட்டமெனக் கூறப்படும் பாவும் அகவலோசை இயல என்றவாறு.

உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

இனி நான்கு[1] பாவினும் வெண்பாவும் கலிப்பாவும் முன் எடுத்து ஓதுகின்றா ராதலானும், ஆசிரியப்பாவும் வஞ்சிப்பாவும் இத்துணையும் ஓதிய இலக்கணத்தான் முடித்தலானும், அவை யிற்றுக்கு உதாரணம் ஈண்டே காட்டுதும்.

ஆசிரியப் பாவாவது பெரும்பான்மை இயற்சீரானும் ஆசிரிய வுரிச்சீரானும் ஆசிரியத் தளையானும் அகவலோசை யானும் நாற்சீரடியானும் சிறுபான்மை ஒழிந்த சீரானும் தளையானும் அடியானும் வருவது.

அவ்வாறாதல் மேற் கூறப்பட்ட சூத்திரங்களான் உணாக

இப் பாவிற்கு ஈற்றெழுத்து வரையறுத் துணர்த்தாமையின் எல்லா ஈறும் ஆம்.

எற்றுக்கு? ''அகவ விசையன வகவன் மற்றவை
ஏஓ ஈஆய் என்ஐயென் றிறுமே'' (யா. க. 69)

என்று வரைந்தோதினார் உளராலெனின்,

''கோண்மா கொட்குமென் றஞ்சுவ லொன்னார்க்
கிருவிசும்பு கொடுக்கு நெடுவேல் வழுதி
கூட லன்ன குறுந்தொடி யரிவை
யாடமை மென்றோ ணசைஇ நாடொறும்

உரை.சு.வே: 1. நான்கு பாவின்

வடியமை யெஃகம் வலவயி னேந்திக்
கைபோற் காந்தட் கடிமலர் அவிழும்
மைதோய் வெற்பன் வைகிருள் வருமிடம்'' (யா.வி.கழ.பக்.276)

எனப் பிறவாற்றானும் வருதலின் ஈறு வரையறுக்கப்படா தென்று கொள்க.

இனி இவ்வாசிரியப் பாவினை அடிநிலையாற் பெயரிட்டு வழங்கப்படும். அஃதாமாறு:—

ஈற்றயலடி முச்சீரான் வருவதனை நேரிசையாசிரியம் என்ப.

உதாரணம்:—

''முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முல்லையும் வாரா முதுக்குறைந் தனளே'' (யா.வி.கழ.பக்.130.275)

என வரும்.

இடையிடை முச்சீர் வரின் இணைக்குறளாசிரியம் என்ப.

உதாரணம்:—

''நீரின் றண்மையுந் நீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து நீரத் தீரும்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
நீரத் நீரத் தீர்பொல் லாவே'' (யா.வி.கழ.பக்.271)

என வரும்.

எல்லாவடியும் ஒத்து வருவதனை நிலை மண்டில வாசிரியம் என்ப. இதற்கு இலக்கணம் முன்னர்க் காட்டுதும்.

உதாரணம் :—

''வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே'' (குறு.18)

என வரும்.

இனி, எல்லாவடியும் ஒத்து வரும் பாட்டினையே அடிமறி மண்டில ஆசிரியம் என்று வழங்குப. இதற்கிலக்கணம் சொல் லதிகாரத்துள் 'நிரனிறை சுண்ணம்' (எச்.8) என்னுஞ் சூத்திரத் தாற் கொள்க.

''சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூர மகளி ராரணங் கினரே
வார லெனினே யானஞ் சுவலே
சார னாட நீவர லாறே.'' (யா.வி.கழ.பக்.274, 389)

என வரும்.

இதனுள், யாதானும் ஓரடியை முதலு முடிவுமாக உச்சரித் தாலும் ஓசையும் பொருளும் வழுவாது வருதலின் அடிமறியா யிற்று.

இனி, முச்சீரடி முதலாக அறுசீரடி ஈறாக மயங்கிய ஆசிரி யத்தினை அடிமயங்காசிரிய மெனவும், வெண்பாவடி மயங்கிய ஆசிரியத்தினை வெள்ளடி மயங்காசிரிய மெனவும், வஞ்சியடி மயங்கிய ஆசிரியத்தினை வஞ்சிஅடி மயங்காசிரியம் எனவும் வழங்கப்படும்.
இதற்கு இலக்கணம்:

''இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே'' (செய்.66)

''வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியு முளவென மொழிப'' (செய்.60)

''அறுசீ ரடியே யாசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉ நேரடி முன்னே'' (செய். 61)

''இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கி
னிலைக்குரி மரபி னிற்கவும் பெறுமே'' (செய்.59)

எனவும்,

''ஆசிரிய நடைத்தே வஞ்சி'' (செய்.104)

என ஒற்றுமைப் படுத்தலானும் கொள்க.

உதாரணம்:—

''சிறியகட் பெறினே.....தவப்பலவே'' (புறநா.235)

என வரும்.

இப் பதினேழடி யாசிரியத்துள் ஏழாமடியும் பன்னிரண்டாமடியும் முச்சீரான் வந்தன. மூன்றாமடி முதலாக ஆறாமடி ஈறாக நான்கடியும் பதினாலாமடியும் ஐஞ்சீரான் வந்தன. இரண்டா மடியும் பதினொன்றா மடியும் அறுசீரான் வந்தன. ஏனைய நாற்சீரான் வந்தன. இவ்வாறு வருதலின் அடிமயங்காசிரிய மாயிற்று.

(''சிறியகட் பெறினே'' என்னும் புறநானூற்றுப் பாடல் யாப்பருங்கல விருத்தியில் இருபத்தொரு அடிகளை உடைய தாகவும் இலக்கண விளக்க மகால் பதிப்பில் இருபத்து மூன்று அடிகளை உடையதாகவும் புறநானூற்றுப் பதிப்பில் இருபது அடிகளை உடையதாகவும் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இளம் பூரணர் இப்பாட்டு பதினேழடிகளை உடைய தென்றும் இன்ன இன்ன அடி இத்தனை சீர்களை உடைய அடியென்றும் குறிப்பிடுகின்றார். அவர் கருத்தின்படி இப்பாட்டு, கீழ்க்கண்ட வடிவில் அமைந்திருக்கலாம்.)

''சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
எஞ்பொடு தடிபடு வழியெலா மெமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெலாந் தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையால்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே
அருங்கலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப் புரப்போர்
புன்கண் பார்வை சோர அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர்
நாவில் சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே ஆசாம்
எந்தை யாண்டுளன் கொல்லோ இனிப்பா டுநரும்
இல்லைப் பாடுநர்க்கொன் றீகுநரு மில்லை

பனித்துறைப் பகன்றை சூடாது வைகியாங்கு
ஈயாது வீயு முயிர்தவப் பலவே''

ஈயாது வைகும் என்று பாடமிருப்பினும் நன்று.)

''எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல் லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்பவர் தேர்சென்ற வாறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமலர்க் கலிழுமிவ் வழுங்க லூரே'' (குறுந்12)

இதனுள், முதலடி இயற்சீர் வெள்ளடி யாதலின் வெள்ளடி விரவிய ஆசிரியம் எனப்படும்.

''இருங்கட லூடுத்தவிப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபீணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
அதனால்,
நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டுபி றக்குநோக்கா
திழிபிறப்பினோ வீயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே (புறநா.363)

இதனுள் ''உப்பிலாஅ வவிப்புழுக்கல்'' என்பது முதலாக மூன்றடியும் வஞ்சியடி.[1]

இனி, வஞ்சிப்பாவாவது வஞ்சியுரிச்சீரானும் ஏனைச் சீரானும் இருசீரடியானும் முச்சீரடியானும் தூங்கலோசை யானும் வந்து தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் இறுவது.

உரை சு.வே: 1. வஞ்சியடி

இதற்கு இலக்கணம்

''வஞ்சிச் சிரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவசை யென்ப'' (செய்.19)

''தன்பா வல்வழித் தானடை வின்றே'' (செய்.20)

''வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய'' (செய்.21)

''வஞ்சி யடியே யிருசீர்த் தாகும் (செய்.43)

''முச்சீ ரானும் வருமிட னுடைத்தே'' (செய்.45)

''வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே'' (செய்.68)

''தூங்க லோசை வஞ்சி யாகும்'' (செய்.80)

என்பனவற்றாற் கொள்க.

இப் பா இருசீரடி வஞ்சிப்பா, முச்சீரடி வஞ்சிப்பா என இருவகைப்படும்.

''பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசமும்
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்,
மகிழின் மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே'' (யா.வி.கழ.பக்.62,74,91,354)

இது குறளடியான் வந்து, தனிச்சொற் பெற்று ஈற்றயலடி - முச்சீராய் வந்தது. ஆசிரியச் சுரிதகத்தாலிற்ற இருசீரடி வஞ்சிப்பா. தனிச்சொற்பெறுதல் எடுத்தோதிற்றிலராயினும் 'உரையிற் கோடல்' என்பதனாற் கொள்க.

''கொடிவாலன குரு[1] நிறத்தன குறுந்தாளன
வடிவாலெயிற் றழறு ளையன வள்ளுகிரன

உரை.சு.வே: 1. கருநிறத்தன

பணையெருத்தி னீணையரிமா னணையேறித்
துணையில்லாத் துறவு[1]நெறிக் கிறைவனாகி
எயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினை[2]பத்தியலாற் செப்பியோன்
புணையெனத்,
திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறு நாற்கதி வீடுநனி யெளிதே'' (யா.வி.கழ.பக்.355,501)

இது முச்சீரடி வஞ்சிப்பா.

இனி, ''வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய'' (செய்.21)

என்றோதியவதனால் ஆசிரிய வடியோடும் வெண்பா வடி யோடும் கலியடியோடும் மயங்கி வருவன கொள்க.

உதாரணம்:-

பட்டினப்பாலையுள்

''நேரிழை மகளி ருணங்குணாக் கவரும்'' [22]

என்பது ஆசிரியவடி.

''கோழி யெறிந்த கொடுங்காற் கணங்குழை [23]

என்பது வெண்பாவடி.

''வயலாமைப் புழுக்குண்டு வறளடும்பின் மலர்மலைந்து'' [145]

என்பது கலியடி.

இனி வெண்பாவாமாறும், கலிப்பாவாமாறும் முன்னர்க் காட்டுதும். (கசஙூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

இந்நூற்பாவில் இளம்பூரணர் உரைக்குப் பேராசிரியர் தரும் மறுப்பு

1 மறுப்பு

உப்பிலாஅ அவிப்புழுக்கல் முதலாக மூன்றடியும் வஞ்சியடி என்பதை மறுத்துள்ளார்.

உப்பிலாஅ-கூவிளங்காய். ஆசிரியத்துள் இருசீரடி வந்ததற்கு

உரை.சு.வே: 1. துறவுநெற
2. பத்தியினால்

''உப்பிலாஅ அவிப்புழுக்கல், கைக்கொண்டு பிறக்குநோக்காது'' எனவுங் காட்டுப. இவை வஞ்சியடி எனப்படு மென்பது. வெண்சீரான் வஞ்சியடி வருமோ வெனின்? வாரா; வஞ்சிச்சீர் விரவினல்லது. ''உப்பிலாஅ அவிப்புழுக்கல்'' என்பதோ வெனின், அது மற்றை இருசீரடியொடு கூட்டிக் காட்டலான், வஞ்சியடி போன்ற தென்க. (பேரா. செய். 69) என்பர்.

2. வஞ்சிப்பாவிற்குத் தனிச்சொல்

ஈண்டுத் (வஞ்சிப்பாவின்கண்) தனிச்சொல் வேண்டு மென்று பிற்காலத்து நூல் செய்தாரும் உளர். அது சான்றோர் செய்யுள் எல்லாவற்றோடும் பொருந்தாமையானும், பிற் காலத்துச் செய்த நூல்பற்றி முற்காலத்துச் செய்யுட் கெல்லாம் இலக்கணம் சேர்த்துதல் பயமின்றாதலானும் அஃதமையா தென்பது (செய். 71) என்பர் பேராசிரியர். இம் மறுப்புரை வஞ்சிப்பாவிற்குத் தனிச்சொல் வேண்டிய இளம்பூரணர் முதலியோரைக் குறித்த மறுப்பாகும்.

114. **நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே**
கைக்கிளை பரிபாட் டங்கதச்[1] செய்யுளோ
டொத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின.

என்-னின் வெண்பாவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நெடுவெண்பாட்டு முதலாக அங்கதச் செய்யு ளீறாகச் சொல்லப் பட்டவையும், அளவொத்தவையும் எல்லாம் வெண்பா யாப்பினை யுடைய என்றவாறு.

வெண்பா யாப்பாவது வெண்சீரானும், இயற்சீரானும், வெண்டளையானும், செப்பலோசை யானும், அளவடியானும், முச்சீரீற்றடியானும் வருவது.

இவற்றிற்கு இலக்கணம் மேலோதப்பட்டன[2].

ஈண்டு, ஓதப்பட்டன வெல்லாம் அவ்வாறு[3] வரும் என்ற வாறு.

நூ.பா.வே: 1. 'அங்கதஞ் செய்யுள்' பேரா. மறுக்கும் பாடம்.
உரை.சு.வே: 2. மேலோதப்பட்டது 3. இவ்வாறு

இவையெல்லாம் ஓசையான் ஒக்குமாயினும் அளவானும், தொடையானும், பொருளானும், இனத்தானும் வேறுபடுத்திக் குறியிடுகின்றார் என்று கொள்க.

நெடுவெண் பாட்டாவது அளவின்[1] நெடிய பாட்டு.

குறுவெண் பாட்டாவது அளவிற்[2] குறிய பாட்டு.

கைக்கிளை என்பதூஉம் அங்கதம் என்பதூஉம் பொருளா னாகிய பெயர்.

பரிபாட்டாவது, பரிந்த[3] பாட்டாம். அஃதாவது ஒரு வெண்பாவாக வருதலின்றிப் பல[4] உறுப்புக்களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது.

ஒத்தவை என்பது (மேற்கூறிய) அளவானும், பொரு ளானும், இனத்தானும் வேறுபடுத்தப்படாத சமனிலை வெண்பாக்களாம். அவையாவன நான்கடியாய் வருவன.

இவ்வாசிரியர் நான்கினை அளவென்றும், ஏறினவற்றை நெடிலென்றும், குறைந்தவற்றைக் குறள், சிந்தென்றும் வழங் குவராகலின், இவற்றுள் பொருளானும் இனத்தானும் வேறு படுத்தப்படாதன[5] நெடுவெண்பாட்டும், குறுவெண்பாட்டும், சமனிலை வெண்பாட்டும் என மூவகையானும் வரும்.

குறுவெண்பாட்டாவன[6] இரண்டடியானும் மூன்றடி யானும் வரும்.

உதாரணம் :—

'அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை" (குறள். 37)

இஃது இரண்டடியும் ஒரு தொடையான் வருதலின் குறள் வெண்பா என்ப.

உரை.சு.வே: 1. அளவடியின்
2. அளவடியிற்
3. பரிந்தபாட்டு பரிபாட்டென வரும்
4. பலவெண்பாவாகிப் பலவுறுப்புக்களோடு
5. வேறுபடுக்கப்படாத
6. குறுவெண் பாட்டாவது

''உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து'' (குறள். 667)

இது விகற்பத் தொடையான் வருதலின் விகற்பக் குறள் வெண்பா என்ப.

மூன்றடியான் வருவதனைச் சிந்தியல் வெண்பா என வழங்கப்படும்.

உதாரணம்:-

''நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டி ரடி'' (யா.வி.கழ.பக். 238)

இஃது ஒத்து ஒரு தொடையான் வருதலின் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவாம்.

''நற்கொற்ற வாயி னறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே-பொற்றேரான்
பாலைநல் வாயின் மகள்'' (யா.வி.கழ.பக்.237,498)

எனவும்,

''சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை'' (யா.வி.கழ.பக்.238,388)

எனவும் இவை வேறுபட்ட தொடையான் வருதலின் நேரிசைச் சிந்தியல் வெண்பாவாம்.

இனி, நான்கடியான் வருவன சமனிலை வெண்பா எனப் படும்.

அவற்றுள், இரண்டாமடியின் இறுதிக்கண் ஒரூஉத் தொடை பெற்று வருவனவற்றை நேரிசை வெண்பா எனவும், ஒரூஉத் தொடை பெறாது வருவனவற்றை இன்னிசை வெண்பா எனவும் வழங்கப்படும்.

ஒரூஉத் தொடை வருக்க எதுகையாகியும் வரும்.

இவையெல்லாம் உரையிற்கோடல் என்பதனாற் கொள்க.

உதாரணம்:—

''அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்-வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று'' (நாலடி.1)

இது நேரிசை வெண்பா.

''கல்வரை யேறிக் கடுவன் கனிவாழை
எல்லுறு போழ்தி னினிய[1] பழங்கொண்டே
ஒல்லொலை[2]யோடு மலைநாடன் றன்கேண்மை
சொல்லச் சொரியும் வளை'' (கைந்நிலை.7)

இஃது இன்னிசை வெண்பா.

''வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக்-களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்'' (நாலடி.103)

இது நான்கடியாயும் மூன்றாமடிக்கண் தனிச்சொல் பெற்று வருதலின் நேரிசைப்பாற் படும். பிறவும் அன்ன.

ஐந்தடி முதற் பன்னிரண்டடிகாறும் வருவன பஃறொடை வெண்பா எனப்படும்.

இதனுள்ளும் ஒருஉத் தொடை பெற்று வருவனவற்றை நேரிசைப்பஃறொடை எனவும், ஒருஉத்தொடை இன்றி வருவன வற்றை இன்னிசைப் பஃறொடை எனவும் வழங்கப்படும்.

உதாரணம்:—

''சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன்வேல்
கூற்றுழற் மொய்ம்பிற் பகழி பொருகயல்
தோற்றும் தொழில்வடிவு தம்முட் டடுமாற்றம்
வேற்றுமை யின்றியே யொத்தன மாவடர்
ஆற்றுக்கா லாட்டியர் கண்'' (யா.வி.சுழ.பக்.249)

உரை.சு.வே: 1. னினிய பழங்கைக்கொண் 2. யெல்லையே

இஃது இன்னிசைப் பஃறொடை.

''பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றா ரிருவ ரவருள்ளும்
பொன்னோடை நன்றென்றா னல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளு மந்நிலையள்-யானை
எருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்'' (யா.வி.கழ.பக்.249)

இஃது ஆறடியான் வந்து ஒரூஉத்தொடை பெறுதலின் நேரிசைப் பஃறொடை வெண்பா.

''கிற்றாறு பாய்ந்துகளுஞ்[1] சேயரிக் கண்ணினாய்
வற்றா வளவயலும் வாய்மாண்ட வேரியும்
பற்றார்ப்[2] பிணிக்கு மதிலும் படுகிடங்கு
மொப்ப வுடைத்தா யொலியோவா நீர்ப்புட்க
டத்தி யிரைதேருந்[3] தையலாய் நின்னூர்ப்பே
ரொத்துணரும் வண்ண முரைத்தி யெனக்கூறக்
கட்டலர் தாமரையு ளேழுங் கலிமான்றேர்க்
கந்திருவ ரைவருங் காயா மரமொன்றும்[4]
பெற்றவழி தேர்ந்துண்ணும் பேயி னிருதலையும்
வித்தாகா நெல்லி னிறுதியும் பெற்றக்கா
லொத்தியைந்த தெம்மூர்ப்பேர் போலென்றாள் வானவன்கை
விற்பொலிந்த வெம்புருவத் தாள்'' (யா.வி.கழ.பக்.250)

இவற்றுள் ''ஒருபொரு ணுதலி வெள்ளடி யியலாற், றிரி பின்றி நடப்பது[5] கலிவெண்பாட்டே'' (செய். 147) என ஓதின மையால் புணர்தல் முதலாகிய பொருள்களுள் யாதானும் ஒரு பொருளைக் குறித்துத் திரிபின்றி[6] முடியும் பஃறொடை வெண்பாவினைக் கலிவெண்பா எனவும், குறள் வெண்பா முதலாகிய எல்லா வெண்பாக்களும் கொச்சகக் கலிக்கு உறுப்பாய் வரிற் கொச்சகம் எனவும், பரிபாடற்கு[7] உறுப்பாய்

உரை.சு.வே: 1. பாய்ந்தொழுகும் 2. முற்றாப்
3. யிரைமேயுந் 4. மரம் பொன்றும்
5. முடிவது 6. திறனின்றி
7. யாப்பாய்வரிற் பரிபாட்டெனவுங் கொள்க.

வரிற் பரிபாடல் எனவும் கொள்ளப்படும்.

'கைக்கிளை' என்பது கைக்கிளைப் பொருண்மை.

மேற்சொல்லப்பட்ட வெண்பாக்கள் இப்பொருண்மேல் வரின் கைக்கிளை வெண்பா எனப்படும்.

உதாரணம்:-

''பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபோர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற்-கன்னோ
மனனொடுவா யெல்லாம் மல்குநீர்க் கோழிப்
புனனாடன் பேரே வரும்''

கைக்கிளை, வெண்பா யாப்பினால் வரும் எனவே ஆசிரியப் பாவினால் வரப் பெறா தென்பதும், வந்ததேயாயினும் பாடாண்பாட்டுக் கைக்கிளை யாகு மெனவும் கொள்ளப்படும்.

பரிபாட்டும் அங்கதமும் தத்தம் சிறப்புச் சூத்திரத்துட் சொல்லுதும்.[1] **(கஙஈ)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பேராசிரியர் உரை

'அங்கதச் செய்யுள்' என்பது பண்புத்தொகை. இதனை உம்மைத்தொகை என்பார் செய்யுள் என்பதும் வேறென்ப. அதற்கு விடை முன்னர்ச் சொல்லுதும் (செய்யுள்தாமே என்ற நூற்பா உரையில்) என்பர். **இளம்பூரணர்** முதலான மூன்று உரையாசிரியரும் 'அங்கதச் செய்யுள்' எனப் பாடம் ஓதிப் பண்புத்தொகையாகக் கொண்டு, 'அங்கதமாகிய செய்யுள்' என்றே உரை கூறுகின்றனர். இம்மூவரும் அல்லாத உரை யாசிரியர் ஒருவர் மட்டும் 'அங்கதஞ் செய்யுள்' எனப் பாடம் ஓதி உம்மைத் தொகையாகக் கொண்டு, **'அங்கதமும் செய்யுளும்'** என உரை கூறுகின்றனர் என்னும் செய்தி பேராசிரியர் உரை யால் நமக்குத் தெரிகின்றது.

இதுபற்றிப் பேராசிரியர் முன்னர்க் கூறுதும் என்ற விடை யையும், அதற்கு யான் எழுதியுள்ள மறுப்பினையும் 'செய்யுள்

உரை. சு.வே:1. காட்டுதும்

தாமே' (செய். 123) என்ற நூற்பாக் குறிப்பிற் காண்க. 'கைக்கிளை பரிபாட் டங்கதஞ் செய்யுள்' உம்மைத் தொகை.

2. உம்மைத் தொகை என்பார் உரை

இந்நூற்பாவிற்கு, "நெடுவெண்பாட்டே குறுவெண் பாட்டே என்னும் இவை, கைக்கிளையோடு பரிபாடலோடு அங்க தத்தோடு செய்யுளோடு கூடி, ஒத்தவையெல்லாம் வெண்பா யாப்பினவாய் வரும்" என்பது உம்மைத்தொகை என்பாருடைய உரையாகும்.

3. தொல்காப்பியர் காலத்து வெண்பாக்களும் அவற்றின் மாற்றமும்

இவ்வுரைப்படித் தொல்காப்பியர் காலத்தில் மேற்கூறிய அறுவகை வெண்பாக்களே இருந்தன. இவ்வறுவகை வெண் பாக்களில் கைக்கிளை, பரிபாடல், அங்கதம், செய்யுள் என்னும் நான்கு வெண்பாக்கள் பிற்காலத்தாரால் மறக்கப்பட்டன. **செய்யுள் வெண்பா** விடப்பட்டது. குறுவெண்பாட்டு என்பது குறள் வெண்பா எனப்பெயர் மாற்றம் பெற்றது. நெடுவெண் பாட்டு என்பது தொல்காப்பியர் கருத்தின்படி மூன்றடியி லிருந்து பன்னிரண்டடிவரை வருவதாகும். அவ்விலக்கணம் பிற்காலத்தாரால் மறக்கப்பட்டு, மூன்றடியால் வருவது சிந்தியல் வெண்பா என்றும், நான்கடியால் வருவது அளவடி வெண்பா என்றும், அதற்குமேல் வருவன பஃறொடை வெண்பா என்றும் கருதப்பட்டன.

4. செய்யுள் வெண்பா

விடப்பட்ட செய்யுள் வெண்பா, தொல்காப்பியர் காலத்து அறுவகை வெண்பாவில் ஒன்றென்பதும், அது இரண்டு வகை யாகி வருமென்பதும், அதற்கு அடிவரையில்லை என்பதும் ஆகிய செய்திகளைத் தொல். செய். 114, 123, 124, 125, 153 என்னும் நூற்பாக்கள் உணர்த்தி நிற்கின்றன.

5. உரையாசிரியர்கள் போக்கு

உரையாசிரியர்கள் நூலாசிரியரின் கருத்தை அறிந்து உரை

யெழுதாமல் தம் மனம்போல எழுதிச் செல்லும் வழக்கம் இருந்துளது என்பதை இச்செய்யுள் வெண்பாவைப் பற்றி எழுதப்பட்டுள்ள உரை நமக்குப் புலப்படுத்துகிறது.

மேலும், மற்றொரு செய்தியை இந்நூற்பாவுரையிலிருந்து குறிப்பிடுகின்றேன். 'ஒத்தவை யெல்லாம்' (செய். 114) என்பதற்கு இளம்பூரணர் "ஒத்தவை என்பது அளவானும் பொருளானும் இனத்தானும் வேறுபடுக்கப்படாத சமநிலை வெண்பாக்களாம் (சமபாதம்). அவையாவன நான்கடியான் வருவன. இவ்வாசிரியர் நான்கினை அளவென்றும், ஏறின வற்றை நெடில் என்றும், குறைந்தவற்றைக் குறள் சிந்து என்றும் வழங்குவாராகலின், இவற்றுள் (இவை) பொருளானும் இனத்தானும் வேறுபடுக்கப்படாத நெடுவெண்பாட்டும் குறுவெண்பாட்டும் சமநிலை வெண்பாட்டும் என மூவகையானும் வரும்" என்பர். இவர் சிந்தியல் வெண்பாவைக் குறுவெண்பாட்டில் அடக்குவர்.

ஆனால், தொல்காப்பியர் பின்னே அளவியலைக் கூறுமிடத்து நெடுவெண்பாட்டு முந்நான்கு அடித்தாயும் (செய். 151), குறுவெண்பாட்டு எழுசீராயும் (இரண்டடி) வருமென்று கூறுகின்றாரே யன்றிச் சமநிலை வெண்பா, சிந்தியல் வெண்பாக்களை எடுத்து ஓதி அவற்றிற்கு அளவு கூறவில்லை.

"குறுவெண்பாட்டிற்கு அளவு எழுசீரே" (செய்யு. 151) என்ற விதியிருக்கவும், பேராசிரியர் "குறுவெண்பாட்டென்பன இரண்டடியான் மூன்றடியான் வருவன; குறள்வெண்பா சிந்தியல் வெண்பா எனப்படலும் ஒன்று" என்பர்.

எனவே,

"குறள்சிந் தின்னிசை நேரிசை பஃறொடை
எனவைந் தாகும் வெண்பாத் தானே" (58)

என்று யாப்பருங்கலம் கூறும் ஐவகை வெண்பா வழக்கமும்

"குறள் நேர் நெடிலென மூன்றாய்"

என்று பரிமாணம் கூறும் மூவகை வெண்பா வழக்கமும்

தொல்காப்பியர் காலத்தில் இல்லை. இல்லாதவற்றை எடுத்து நாட்ட உரையாசிரியர் முயல்கின்றனர்.

6. இளம்பூரணரைத் தொல்காப்பியர் என்றல்

யா. க. விருத்தியாசிரியர் குறள் சிந்தின்னிசை நேரிசை பஃறொடை என்பது தொல்லாசிரியர் தொல்காப்பியனார் வைத்த முறைமை என்று கூறுவது இளம்பூரணரையே குறிக்கும்.

7. பஃறொடை வெண்பா

பஃறொடை வெண்பா என்னும் சொல்லாட்சி தொல் காப்பியத்தில் இல்லை. தொல்காப்பியர் நெடுவெண்பாட்டு என்று கூறியவற்றில் ஒரு கூற்றினைப் பஃறொடை வெண்பா என்று பிற்காலத்தார் வழங்குகின்றனர். ஒரு சாரார் அதற்கு அடிவரையறை கூறுகின்றனர். ஒருசாரார் நான்கடியின் மிக்க பலவடியான் வரும் என்று கூறுகின்றனர்.

8. பிள்ளைப்பாட்டு

பிள்ளைப்பாட்டு என்னும் சிற்றிலக்கிய வகை நெடுவெண் பாட்டால் பண்டு பாடப்பட்டு வந்தது என்னும் செய்தியை,

> பிள்ளைப் பாட்டே நெடுவெண் பாட்டெனத்
> தெள்ளிதிற் செப்பும் புலவரும் உளரே'

என்று பன்னிருபாட்டியல் (111) பகரும்.

115. கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரிய வியலான் முடியவும் பெறுமே.

என்-னின் எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கைக்கிளைப் பொருண்மை வெண்பாவினால் வருதலன்றி முதலிரண்டடியும் வெண்பாவாகிக் கடையிரண் டடியும் ஆசிரிய மாகி இருபாவினாலும் வரும் என்றவாறு.

இவ்வாறு வருவதனை மருட்பா என்ப. இக் கருத்தி னானே, மேல்

''மருட்பா வேனை யிருசா ரல்லது
தானிது வென்னுந் தன்மை யின்றே'' (செய்.81)

என்று ஓதினார் என்று கொள்க.

அது.

''உரவொலி முந்நீ ருலாய்நிமிர்ந் தன்ன
சுரவரு காமம் கனல-விரவெதிர
மூள்ளெயி றிலங்கு முகிணகை
வெள்வளை நல்காள் வீடுமென் னுயிரே'' (புற.வெண்.கைக்.9)

என வரும். (ககடு)

116. பரிபா டல்லே தொகைநிலை வகையின்[1]
இதுபா வென்னு மியனெறி யின்றிப்
பொதுவாய் நிற்றற்கு முரித்தென மொழிப.

என்-னின் பரிபாடலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பரிபாட லாவது தொகைநிலை வகையாற் பா இது வென்று சொல்லப்படும் இலக்கண மின்றி எல்லாப் பாவிற்கும் பொதுவாய் நிற்றற்கும் உரித்தென்று சொல்லுவர் என்றவாறு.

உம்மை எச்சவும்மை யாகலான் இலக்கணங் கூறவும் படும். அது வருகின்ற சூத்திரத்துட் காட்டுதும்.

பொதுவாய் நிற்றலாவது ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென்[2] றோதப்பட்ட (செய்-101) உறுப்புடைத்தாதல். (ககக)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பரிபாடல்

இளம்பூரணர் ''பரிபாட்டாவது பரிந்த பாட்டாம். அஃதாவது ஒரு வெண்பாவாக வருதலின்றிப் பல உறுப்புக் களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப்பெறுவது'' என்பர். (பரி-தொடர்ந்து)

நூர.பா.வே: 1. 'விரியின்' பேரா; நச்.
உரை.சு.வே: 2. கலிமருட்பா வென்றோதப்பட்ட யெல்லாப்பாவின் உறுப் புடைத்தாதல்.

பேராசிரியர் ''பரிபாடலாவது பரிந்து வருவது; அஃதாவது (கட்டளையுறுப்பான் வரும்) கலியுறுப்புப் போலாது பல அடியும் ஏற்று வருவது'' என்பர். (செய்.118.பேரா.) மேலும் அவர் ''பரிபாடலும் சிற்றுறுப்பு வகையான் (வெண்பாவுடன்) ஒப்புமையுடைய வென்பது'' என்பர் (செய்.. 118. பேரா.).. (பரி-விரவுதல்)

நச்சினார்க்கினியர் பேராசிரியரிற் சிறிது வேறுபட்டு, ''பரி பாடலென்பது பரிந்து வருவது. அது கலியுறுப்புப் போலாது நான்கு பாவானும் வந்த பல அடியும் வருமாறு நிற்கும் என்று ணர்க'' என்பர். (பரி மிக்கு)

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் ''பரிபாடல்லே'' என்னும் இந்த நூற்பாவைப் பரிபாடற் காவதோர் புறனடை கூறும் நூற்பாவாகக் கருதுகின்றனர்.

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் செந்துறை மார்க்கம் வெண்டுறை மார்க்கம் என்ற இரண்டில் நாற்பெரும் பண்ணும் இருபத்தொரு திறனும் ஆகிய இவையெல்லாம் செந்துறை என்றும், அது ஒலிகுறித்த தென்றும், அச்செந்துறை, செந்து றையும், செந்துறைச் செந்துறையும், வெண்டுறைச் செந்து றையுமென மூன்றாக விரியுமென்றும்,

அவற்றுள் செந்துறைப் பாட்டாவன **பரிபாடலும்** மகி ழிசையும், காம இன்னிசையுமென மூன்றாகுமென்றும்,

அவற்றுள் **பரிபாடல்** தெய்வம், காமம் என்னும் இரண்டு பொருளைப் பற்றிவரும் என்றும் கூறுவர். (கழ.பக். 580)

மாறனலங்கார உரையாசிரியர் ''பரிபாடல்லே'' என்னும் நூற்பாவிதியால் அதற்கு முழுதும் இசையாய்க் கொள்க என்பர். (பரி-இசை)

ஆசிரியர் நல்லந்துவனார் பரிபாடலை ''இன்னியன் மாண்டோர்ச்சி இசை பரிபாடல்'' (பரிபாடல் 11) என்று சிறப் பித்துள்ளார். அதற்குப் **பரிமேலழகர்** ''இனிய இயலின் மாண்ட தோர்ச்சி பொருந்திய பரிபாடல்'' என்று உரைகாண்பர்.

அதனால் பரிபாடல் இன்னியல் வாய்ந்த தென்றும் அறிந்து கொள்ளுகின்றோம்.

''இன்னியல் இசைமாண் தேர்ச்சி இசை பரிபாடல்'' என் றொரு பாடமும் உண்டு. அப் பாடம் பரிபாடலின் இசைமாண் பினை விளக்கும். பரிபாடல் முதற்பாட்டுரையில் ''பரிபாட் டென்பது இசைப்பா ஆதலான்'' என்று **பரிமேலழகர்** எழுது வதும் நோக்கத்தக்கது.

பரிபாடலைப் பின்வந்த யாப்பிலக்கண நூலார் கருதாமலே ஒதுக்கிவிட்டனர்.

2. பரிபாடற் பொருள்

நச்சினார்க்கினியர் தொல். அகத்திணையியலில் 'நாடக வழக் கினும்' என்னும் நூற்பா உரையில் 'கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்' என்னும் பகுதிக்குச் சிறப்புரை எழுதும் பொழுது ''செய்யுளியலிற் கூறிய முறைமையன்றி ஈண்டுக் கலியை முன் னோதியது கலியெல்லாம் ஐந்திணைப் பொருளாய புலனெறி வழக்கிற் காமமும், கைக்கிளை பெருந்திணையாகிய உலகியலே பற்றிய புலனெறி வழக்கிற் காமமும் பற்றி வருமென்றற்கும் பரிபாடல் தெய்வவாழ்த்து உட்படக் காமப்பொருள் குறித்து உலகியலே பற்றி வரும் என்றற்கும் என்றுணர்க'' என்பர்.

பரிபாடல் கலிப்பாவில் அடங்காது

பேராசிரியர் 'ஒத்தாழிசைக்கலி' (செய். 130) என்னும் நூற்பா வுரையில் ''இனிப் பரிபாடலும் கலிப்பாவினுள் அடங்குமென் பாரும் உளர். கலியும் பரிபாடலுமென எட்டுத்தொகையுள் இரண்டு தொகை தம்மின் வேறாகலின் அவ்வாறு கூறுவார் (அச்) செய்யுள் அறியாதார் என்பது'' என்பர்.

நச்சினார்க்கினியர் ''பரிபாடலுங் கலியாகாவோ வெனின், கலியும், பரிபாடலுமென வேறாக இரண்டு தொகை வழங்குத லானும் **உறுப்பின் வேறுபாட்டானும்** வேறென்றுணர்க'' என்பர் (செய். 130 நச்.)

கலிப்பா கட்டளை உறுப்பால் வரும்; பரிபாடலுறுப் பிற்குக் கட்டளை இல்லை.

117. கொச்சக மராகஞ் சுரிதக மெருத்தொடு
செப்பிய நான்குந் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.

என்-னின் இதுவும் அது.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட [1]பரிபாடற் பாட்டுப் பொது வாய் நிற்றலே யன்றிக் கொச்சகமும், அராகமும், சுரிதகமும், எருத்தும்[2] என்று சொல்லப்பட்ட நான்குந் தனக்குறுப்பாகக் காமங்[3] கண்ணிய நிலைமையை உடைத்து என்றவாறு.

(காமங்கண்ணிய நிலைமைத்தாகும்) எனவே, அறத்தினும் பொருளினும் வாராதாம்.

'வாழ்த்தியல் வகையே நாற்பாக்கு முரித்தே' (செய்.105) எனச் சிறப்புவிதி ஓதினமையால், நான்கு பாவினும் பரிபாடல் வெண்பா யாப்பிற்றாதலிற் கடவுள் வாழ்த்தாகியும் வரப் பெறும்.

'கொச்சகம்' என்பது ஐஞ்சீரடுக்கி வருவனவும், ஆசிரியவடி, வெண்பாவடி, வஞ்சியடி, கலியடி, சொற்சீரடி, முடுகியலடி என்று சொல்லப்பட்ட அறுவகை அடியானும் அமைந்த பாக் களை உறுப்பாக உடைத்தாகி வெண்பா வியலாற் புலப்படத் தோன்றுவது.

இதனுள் (இவற்றுள்) "சொற்சீ ரடியும் முடுகிய லடியும் அப்பா நிலைமைக்குரிய வாகும்" (செய்.118) என வேறு ஓதுத லின், ஏனை நான்கும் கொச்சகப் பொருளாகக் கொள்ளப்படும்.

உரை. சு. வே:

1. பரிபாட்டு
2. எருத்தமும்
3. கலிமருட்பாவென்றோதப்பட்ட எல்லாம் பாவின் உறுப்புடைத் தாதல்

''தரவும் போக்கு மிடையிடை மிடைந்தும்,
ஐஞ்சீ ரடுக்கியும் ஆறுமெய் பெற்றும்
வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே'' (செய்.148)

என்றாராகலின், இவ்விலக்கணத்தானே பரிபாடலுட் கொச்சகம் வரும்வழித் தரவும் சுரிதகமும் இடைஇடை வருதலுங்[1] கொள்க.

''வெண்பா வியலான்' என்றதனான் தன்றளையானும் பிற தளையானும் வந்து ஈற்றடி முச்சீரான் வருவன வெல்லாங் கொள்க.

'அராகம்' என்பது, ஈரடியானும் பலவடியானும் குற்றெழுத்து நெருங்கிவரத் தொடுப்பது. பெருமைக் கெல்லை ஆறடி; என்னை?

''அராகந்[2] தாமே நான்கா யொரோவொன்று
வீதலு முடைய மூவிரண்ட டியே''

''ஈரடி யாகு மிழிபிற் கெல்லை''

என **அகத்தியனார்** ஓதுதலின்.

'சுரிதகம்' என்பது ஆசிரிய வியலானாதல் வெண்பா வியலானாதல் பாட்டிற் கருதிய பொருளை முடித்து நிற்பது.

'எருத்து' என்பது இரண்டடி இழிபாகப் பத்தடிப் பெருமையாக வருவதோர் உறுப்பு.

பாட்டிற்கு முகம் தரவாதலானும், கால் சுரிதகமாதலானும், இடைநிலைப் பாட்டாகத் தாழிசையும் கொச்சகமும் அராகமும் கொள்ளக்கிடத்தலின் எருத்தென்பது கழுத்தின் புறத்திற்குப் பெயராக வேண்டுமாதலான் அவ்வுறுப்புத் தரவைச் சார்ந்து கிடத்தல் வேண்டுமென்று கொள்க.

''தரவே யெருத்தம் அராகங் கொச்சகம்
அடக்கியல் வகையோ டைந்துறுப் புடைத்தே''

உரை.சு.வே: 1. மிடைதலும்
2. ஆறடியராகஞ்

என்பது அகத்திய மாதலின் தரவென்பதோர் உறுப்பும் கோடல் வேண்டுமெனின், இவ்வாசிரியர் கொச்சகம் என ஓதிய வதனானே தரவும் அவ்விலக்கணத்திற் படுமென்பதொன்று.

எருத்து என்பது இவ்வாசிரியர் கருத்தினால் தரவென்பது போலும். பரிபாடற்கண் மலையும் யாறும் ஊரும் வருவிக்கப் படும்.

''அதுதான்'
மலையே யாறே யூரென்[1] றிவற்றின்
நிலைபெறு மரபின் நீங்கா தாகும்''

என்றாராகலின்.

இனிச் சுரிதகம் இன்றியும் பரிபாடல் முற்றுப்பெறும்.

''கொச்சக வகையின் எண்ணொடு விராஅய்
அடக்கிய[2] லின்றி அடங்கவும் பெறுமே''

என அகத்தியனார் ஓதுதலின். (கசஎ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. கொச்சகம் என்னும் உறுப்பிற்குப் பேராசிரியர் தரும் விளக்கம்

பேராசிரியர் ''இனி கொச்சக மென்பது ஒப்பினானாகிய பெயர். என்னை? பல கோடுபட அடுக்கியுடுக்கும் உடை யினைக் கொச்சகமென்ப; அது போலச் சிறியவும் பெரியவும் விராய் அடுக்கியும், தம்முள் ஒப்ப அடுக்கியும் செய்யப்படும் பாட்டுக்களைக் கொச்சக மென்றானாகலின் என்பது.

இக்காலத்தார் அதனைப் பெண்டிர்க்குரிய உடையுறுப் பாக்கியும் கொய்சகமென்று (கொசவம்) சிதைத்தும் வழங்குப. (கொசுவுதல் - ஆடையை அடுக்காக அமைத்தல்). இவை வெண்பாவாகல் பெரும்பான்மை. வழிமுறை சுருங்கியும் வரையறை எண்ணுப் பெறும் என் போலாது, பாவினுந் தளையினும் வேறுபட்டுப் பலவாகியும் வரும் கொச்சகம்

உரை.சு.வே: 1. யூரே யவற்றி
2. அடக்கியல் வகையி னடக்கவும்

என்பது'' என்பர் (செய். 152 உரை)

2. பேராசிரியர் கருதும் உரை

பேராசிரியர் இந்த் நூற்பாவிற்கு,

''கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்து என்னும் அன்னவற் றொடு, மேற் நூற்பாவிற் செப்பிய ஆசிரியப்பா முதலான நான்கு பாவும் இடைவந்து விரவும்'' என்று பொருள் கருது கின்றாரென்பது ''இனிச் 'செப்பிய நான்கு' என்றது எண்ணப் பட்ட நான்கனையு மன்று; அன்னவற்றொடு மேற்கூறிய நான்கு பாவும் இடைவந்து விரவு மென்பது; அது நோக்கிப் போலும் பரிபாடல் என்றது'' என (செய். 121. பேரா.) உரைத் தலால் புலனாகின்றது.

3. கொச்சகம் என்பது உறுப்பும் பாவும்

கொச்சகம் என்னும் சொல் பாக்களின் உறுப்பிற்கும் பாக்களுக்கும் பெயராக வரும்.

''கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு'' (செய். 117) என்று பரிபாடலைக் கூறும் நூற்பாவிலும்,

''எருத்தே கொச்சகம் அராகம் சிற்றெண்''
அடக்கியல் வாரமோ டந்நிலைக் குரித்தே'' (செய். 126)

என்று அம்போதரங்கத்தைக் கூறும் நூற்பாவிலும் வந்துள்ள கொச்சகம் என்னும் சொல், பரிபாடல் உறுப்பொன்றினையும் அம்போதரங்க உறுப்பொன்றினையும் குறிக்க வந்துள்ளது.

''ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே'' (செய். 126)

என்ற நூற்பாவிலும்,

''கொச்சக ஒருபோகு அம்போ தரங்கமென்
றொப்ப நாடி உணர்தல் வேண்டும்'' (செய். 142)

என்ற நூற்பாவிலும் வந்துள்ள 'கொச்சகம்' என்ற சொல்

கொச்சகக் கலிப்பாவினையும், கொச்சக ஒருபோகு என்ற பாவினையும் குறிக்க வந்துள்ளது,

மேற்காட்டியவற்றால், கொச்சகம் என்னும் **உறுப்பு வேறு, பா வேறு** என்று வேறுபாடறிக.

கொச்சை

கொச்சை என்றது உலகவழக்கில் சிறுமை இழிவு என்ற பொருளில் வரும்.

''கொச்சகத் தன்மையில் கொச்சகம் என்ப'' என்பது **பன்னிருபாட்டியல்.**

118. சொற்சீ ரடியும்முடுகிய லடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்.

என்-னின் இதுவும் அது.

(இ-ள்) சொற்சீரடியும், முடுகியலடியும் பரிபாடற்கு உரிய வாகும் என்றவாறு.

சொற்சீரடியாவது, வருகின்ற சூத்திரத்துட் காட்டுதும்

முடுகியலாவது, ஐந்தடியானும் ஆறடியானும் ஏழடியானும் குற்றெழுத்துப் பயிலத் தொடுப்பது. **(ககஅ)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. சொற்சீர்க்கு விளக்கம்

ஈண்டுச் **சொற்சீரென்றது** அளவடியிற் குறைந்தும், வஞ்சி யோசையின்றி அகவலோசையாயும் வரும் அடியினை. (பதிற்றுப் பத்து.14.உரை)

2. சொற்சீரால் அமைந்த பலவகைச் செய்யுள்

யாப்பருங்கல விருத்தியாசிரியர் (கழ.பக்.373) சொற் சீரடி யால் பலவகைச் செய்யுள்கள் அமைந்துள்ளன என்பர்.

''திருக்கொண்டு
பெருக்க மெய்திவீற் றிருந்து

குற்றங் கெடுத்து விசும்பு தைவரக்
கொற்றக்குடை யெடுப்பித்து
நிலம்நெளியப் படைபரப்பி
ஆங்காங்குக் களிறியாத்து
நாடுவளம் பெருகக் கிளைகுடி யோம்பி
நற்றாய் போல உற்றது பரிந்து
நுகத்துப் பகலாணி போலவும்
மக்கட்குக் கொப்பூழ் போலவும்
உலகத்துக்கு மந்தரமே போலவும்
நடுவு நின்று செங்கோலோச்சி
யாறில்வழி யாறுதோற்றியும்
குளனில்வழிக் குளந்தொடுவித்தும்
முயல்பாய்வழிக் கயல்பாயப் பண்ணியும்
களிறுபிளிறும்வழிப் பெற்றம் பிளிறக்கண்டும்
களிறூர் பலகால் சென்றுதேன் தோயவும்
தண்புனல் படப்பைத் தாக்கியும்
குழைகொண்டு கோழியெ றிந்தும்
இழைகொண்டு ஆன்றட்டும்
இலக்கங் கொண்டு செங்கால்நாரை எறிந்தும்
உலக்கை கொண்டு வாளையோச்சியும்
தங்குறை நீங்கிப் பிறர்குறை திருத்தி
நாடாள்வதே அரசாட்சி''

என இத்தொடக்கத்தனவும், **பாசாண்டங்களும், ஒருசார்ச் சொற் கட்டும், கரிப்போக்கு வாசகத்து ஒருசார்ச் சொற்கட்டும்** எப்பாற் படுமெனின்? அவை யெல்லாம் 'சொற்சீரடி' எனக் கொள்க. என்பர். அசை கருதிச் சீர் கொள்ளாமல், சொல்லாற் சீர் கொள்வது சொற்சீராகும்; அதனால் கொள்ளும் அடி, சொற் சீரடி என்க. முடுகியலைப் பற்றிய செய்தியைச் செய்யுளியல் 62 ஆம் நூற்பாவின் குறிப்புரையுட் காண்க.

119. கட்டுரை வகையா னெண்ணொடு புணர்ந்தும்
முற்றடி[1] யின்றிக் குறைவுசீர்த்[2] தாகியும்
ஒழியசை யாகியும் வழியசை புணர்த்தும்[3]
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.

நூ.பா.வே: 1. 'முட்டடி' பேரா; மர்ரே பதிப்பு
2. 'குறைசீர்த்' யா. வி.
3. 'புணர்ந்து' பேரா; நச்

என்-னின் சொற்சீராமாறு[1] உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கட்டுரை யாவது, பாட்டின்றித் தொடுக்கப்பட்டு வருவது. எண் என்பது ஈரடியாற் பலவாகியும் ஓரடியாற் பலவாகியும் வருத்ல். பல வருதலின் எண் என்றார். முற்றடி இன்றிக் குறைவு சீர்த்து ஆகியும் என்பது, நாற்சீரடியின்றி மூச்சீரடியானும் இருசீரடியானும் வருதல்[2].

ஒழி அசை ஆகியும்[3] என்றது, ஒழிந்த அசையினை யுடைத் தாகியும் என்றவாறு. எனவே இறுதிச் சீர் ஒன்றும் இரண்டும் அசை குறையப் பெறும் என்றவாறாம்.

வழி அசை புணர்த்தலாவது, ஒரு சீரின்கண்ணே பிறி தொருசீர்[4] வரத் தொடாது ஓரசை வரத் தொடுப்பது.

சொற்சீர்த்து இறுதல் என்பது, சொற்றானே சீராந் தன்மை பெற்று நிற்றல். சொற்சீர்க்கு இயல்பே என்பது, இப் பெற்றியையுடைத்துச் சொற்சீரின தியல்பு என்றவாறு.

இவ்விலக்கணம் பரிபாடற் செய்யுட்கண் வருமாறு:-

'ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலைத்
தீயுமிழ் [தி] றலொடு முடிமிசை யணவர
மாயுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனிச்
சேயுயர் பனைமிசை யெழில்மே (ழி யே) ந்திய
வாய்வாங்கு வளைநாஞ்சி லொருகுழை யொருவனை;

இது தரவு.

எரிமலர் சினைஇய கண்ணை பூவை
விரிமலர் புரையு மேனியை மேனித்
திருஞெமர்த் தமர்ந்த மார்பினை மார்பிற்
றெரிமணி விளங்கும் பூணினை மால்வரை
யெரிதிரிந் தன்ன பொன்புனை யுடுக்கையை
சேவலங் கொடியோய்நின் வலவயி னிறுத்து
மேவ லுழந்தமை கூறு
நா வலந்தண ரருமறைப் பொருளே

இ:து எருத்து

உரை.சு.வே: 1. சொற்சீரடி யாமாறு
2. இருசீரடி யானும் இல்லை
3. ஒழியிசை யாகியும் என்பது ஒழிந்த இசையினை யுடைத் தாகியும்
4. பிறிது மொருசீர் வரத் தொடர்வது ஓரசை வரத்

இணை பிரியணிதுணிபணி யெரிபுரைய
விடரிடு சுடர்படர் பொலம்புனை வினைமலர்
நெரிகிடரெரிபுரை தனமிகுதன முரண்மிகு
கடறரு மணியொடு முதியா கத்தொன்றி
நெறிசெறி வெறியுறுமுரல்விறல் வணங்கணங்குவிற்
றாரணிதுணிமணிவிய லெறுமெழில் புகழலர்மார்பி
னெரிவயிர் நுதியெறி படையெருதது மலையிவர் நவையிற்
றுணிபட லிலமணி வெயிலுற ழெழினக்
கிமையிருள கலமுறு கிறுபுரி யொருபுரி நாண்மலர்
மலரிலகினவளர் பருதியி னொளிமணி மார்பணி
மிகநாறுரு வினவிரை வளிமிகு கடுவிசை
உடுவுறு தலைநிரை யிதழணி வயிறிரிய வமரரைப்
போரெழுந்துடன் றிரைத்துரைஇய தானவர்
சீரழிப் புனல்மொழி பிழந்தூர
முதிர்பதி ரப்பல புலவந்தொடவமர் வென்றகணை

இவை நான்கும் அராகம்.

பொருவ மென்ற மறந்தபக் கடந்து
செருவிடம் படுத்தது செயிர்தீ ரண்ண
லிருவர் தாதை யிலங்குமுன் மாஅன்
றெருள நின்வர வறிதன்
மருளறு தேர்ச்சி முனைவர்க்கு மரிது

இ∴து ஆசிரியம்.

அன்ன மரபி னனையோய் நின்னை
யின்னனென் றுரைத்த லெமக்கெவ னெளிது'

இது பேரெண்.

அருமைநற் கறியினு மாய நிற்பயில்
பெருமையின் வல்லா யாமிவண் மொழிபவை
மெல்லிய வெனாஅது வெறாஅ
தல்லியந் திருமார்ப நீயருளல் வேண்டும்

இ∴தும் ஆசிரியம்.

விறன்மிகு விழுச்சீ ரந்தணர் காக்கும்
அறனு மா [ர்] வலர்க் கருளு நீ;
திறனிலோ[ர்]த் திருத்திய தீதுதீர் கொள்கை
மறனு மாற்றலர்க் கணங்கு நீ;
அங்கண் வானத் தணிநிலாத் திகழ்தரும்

திங்களுந் தெறுகதிர்க் கனலியு நீ;
ஐந்தலை யு(ய)ரிய வணங்குடை யருந்திறன்
மைந்துடை யொருவனு மடங்கலு நீ;
நலமுழு தளைஇய புகரறு காட்சிப்
புலம்பு வின்னா ஞாற்றமு நீ;
வலனுய ரெழிலியு மாக விசும்பும்
நிலனு நீடிய விமயமு நீ.

இவை யாறும் பேரெண்.

அதனால்;

தனிச்சொல்

இன்னோ ரனையை யினையை யாலென
வன்னோர் யாமி (வ)ட் காணா மையிற்
பொன்னணி நேமி வலங்கொண் டேந்திய
மன்னிய முதல்வனை யாகலின்
நின்னோ ரனையைநின் புகழோடும் பொலிந்தே.

இது சுரிதகம்.

அன்றெனின்,
நின்னொக்கும் புகழ் நி(ழ)லவை
பொன்னொக்கு முடையவை
புள்ளின் கொடியவை புரிவளை யினவை
எள்ளுநர்க் கடந்திட்ட விகனேமியவை
மண்ணுற்ற மணிபா யுருவினவை
எண்ணிறந்த புகழவை யெழின்மார் பினவை
இவை சிற்றெண்ணும்; இடையெண்ணும், அளவெண்ணும்.
ஆங்கு

தனிச்சொல்.

காமரு சுற்றமொ டொருங்குநின் னடியுறை
யாமியைந் தொன்றுபு வைகலும் பொலிகென
வேமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழி முதல்வநின் றாணிழற் றொழுதே.

இது சுரிதகம்.

இது கடவுள் வாழ்த்து. ஈண்டோதப்பட்ட உறுப்புக்கள் மிக்குங் குறைந்தும் வருதல் இப்பாவிற் கியல்பென்று கொள்க. பிறவும் பரிபாடலகத்துக் கண்டு கொள்க.

"மாநிலந் தோன்றாமை மலிபெய னிலைஇ
யேமநீ ரெழில்வான மிகுத்தரும் பொழுதினா
னாகநீண் மணிவரை நறுமலர் பலவிரைஇக்
காமறு வையை கடுகின்றே கூடல்;

நீரணி கொண்டன்று வையை யெனவிரும்பித்
தாரணி கொண்ட வுவகை தலைக்கூடி
யூரணி கோல மொருவ ரொருவரிற்
சேரணி கொண்டு நிறமொன்று வெவ்வேறு
நீரணி கொண்ட நிறையணி யங்காடி
யேரணி கொண்டா ரிடல்:

கைபுனை தாரினர் கண்ணிய
ரையெனு மாவிய ராடையர்
நெய்யணி கூந்தலர் பித்தையர்
மெய்யணி யானை மிசைக்கொண் டொய்யெனத்
தங்காச் சிறப்பிற் ரளிரியலார் செல்லப்
பொங்கு புரவிப்புடைப் போவோரும் பொங்குசீர்
வையமுந் தேரு மமைவோரு மெவ்வாயும்
பொய்யாம்போ யென்னாப் புடைபடைகூட்டிப் போவார்
மெய்யாப்பு மெய்யார மூடுவார் வையத்துக்
கூடுவா ரூட லொழிப்பா ருணர்குவா
ராடுவார் பாடுவா ராரப்பார் நகுவார்நக்
கோடுவா ரோடித் தளர்வார்போ யுற்றவரைத்
தேடுவா ரூர்க்குத் திரிவா ரிலராகிக்
கற்றாருங் கல்லா தவருங் கயவரும்
பெற்றாரும் பெற்றார்ப் பிழையாத பெண்டிரும்
பொற்றேரான் றானும் பொலம்புரிசைக் கூடலு
முற்றின்று வையைத் துறை;

துறையாடுங் காதலர் தோள்புணை யாக
மறையாடு வாரை யறியார் மயங்கிப்
பிறையோர் நுதலிய ரெல்லாருந் தம்மு
னிகழு நிகழ்ச்சி யெம்பாலென் றாங்கே
யிகலுவ செல்வ நினைத்தெவட் கண்டிப்பா
லகலல்கும் வையைத் துறை;

காதலான் மார்பிற் கமழ்தார் புனல்வாங்கி
யேதிலாள் கூந்த லிடக்கண்டு மற்றது

தாதாவென் றாட்குத் தானே புனறந்து
வேய்தந்த தென்னை விளைந்தமை மற்றது
நோதலே செய்யே னுணங்கிழையா யச்செவ்வி
போதலுண் டாங்கொ லறிந்து புனல்புணர்த்த
தோஒ பெரிதும் வியப்பு;

கயத்தகப் பூப்பெய்த காமக் கிழமை
நயத்தகு நல்லாளைக் கூடுமா கூடு
முயக்குக்குச் செல்வல் முலையு முயக்கத்து
நீரு மவட்குத் துணைக்கண்ணி னீர்விட்டோய்
நீயு மவட்குத் துணை;

பணிவி லுயர்சிறப்பிற் பஞ்சவன் கூடன்
மணியெழின் மாமேனி முத்த முறுவ
லணிபவளச் செவ்வா யறங்காவற் பெண்டிர்
மணியணி தம்முரிமை மைந்தரோ டாடத்
தணிவின்று வையைப் புனல்;

புனலூடு போவதோர் பூமாலை கொண்டை
யெனலூழ் வகையெய்திற் றென்றேற்றுக் கொண்டை
புனலூடு நாடறியப் பூமாலை யப்பி
நினைவாரை நெஞ்சிடுக்கண் செய்யுங் கனல்புடன்
கூடாமுன் னூடல் கொடியதிறங் கூடினு
லாடாளோ வூர்க்கலர் வந்து;

எனவாங்கு,

ஈப்பா யடுநறாக் கொண்டதிவ் வியாறெனப்
பார்ப்பா ரொழிந்தார் படிவு;

மைந்தர் மகளிர் மணவிரை பூசிற்றென்
றந்தணர் தோயல ராறு;

வையைத் தேமொழி வழுவழுப் புற்றென
வையர்வாய் பூசுறா ராறு;

விரையுரி விரைதுறை கரையழி பிழிபூர வூர்தரும் புனல்
கரையொடு கடலிடை வரையொடு கடவிடை நிரைநிரை நீர்தருநுரை
நுரையுடன் மதகுதொ றிழிதரு புனல்கரை புரளிய செலமறிகடல்
புகுமள வளவிய லிசசிறை தணிவின்று வெள்ளமிகை;

வரைபல புரையுயர் கயிறணி பயிறெழில்
மணியணி யானைமிசை மைந்தரு மடவாரு
நிரைநிரை குழீஇயின ருடன்சென்று

குருமணி யானை யியறேர்ப் பொருநன்
றிருமருத முன்றுறை முற்றங் குறுகித்
தெரிமருதம் பாடும் பிணிதோள்யாழ்ப் பாணர்
பாய் புனலாட
லாடி யாடி யருளியவ
ரூடு யூடி யுணர்த்தப் புகன்று
கூடிக் கூடி மகிழ்பு மகிழ்பு

தேடித் தேடிச் சிதைசிதைபூச்
சூடிச் சூடிக்கை தொழுது தொழுது
மிழுதொடு நின்ற புனல் வையை
விழுதொகை நல்லாரு மைந்தரு மாடி
யிமிழ்வது போன்றதிந் நீர்குணக்குச் சான்றீர்
முழுவது மிச்சிலா வுண்டு;

சாந்துங் கமழ்தாருங் கோதையுஞ் சுண்ணமுங்
கூந்தலும் பித்தையுஞ் சோர்ந்தன
பூவினு மல்லாற் சிறிதானு நீர்நிறந்தா
வாறொன்றா திவ்வையை யாறு;
மழைநீர்க் குளத்து வாய்பூசி யாடுங்

கழுநீர மஞ்சனக் குங்குமக் கலக்கல்
வழிநீர வீழுநீரன்று வையை
வெருவரு கொல்லியானை வீங்குதோண் மாற
னுருகெழு கூட லவரொடும் வையை
வருபுன லாடிய தன்மை பொருவுங்கா
லிருமுந்நீர் வையம் பிடித்தென்னை யானூர்க்
கொருநிலையு மாற்ற லியையா வருமாவி
லந்தர வான்யாற் றாயிரங் கண்ணினா
னிந்திர னாடுந் தகைத்து.''

இது காமப் பொருளாகிவரும் வெண்பா மிக்குவந்த பாட்டு.

(கக்கூ)

120. அங்கதந் தானே யிறபத் தெரியிற்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே.

என்-னின் அங்கதச் செய்யுள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அங்கதமாவது குற்றமற[1] ஆராயிற் செம்பொருளெனவும் கரந்தெனவும் இருவகைப்படும் என்றவாறு.

அவை முன்னர்க் காட்டுதும். (கூ0)

பதிப்பாசிரியர் விளக்கம்

அங்கதம்

'அங்கதம்' என்பது பாவலர் கூறும் தீச்சொல்லிற்குப் பெயராம். இதனை ''அங்கதந் தோள்வளை பாவலர் தீச்சொல் அரவு பொய்யாம்'' (507) என்னும் கயாதர நிகண்டால் அறிக. அகத்தின் கதம் (மனச்சினம்) அங்கதமாயிற்று.

அங்கதத்தைப் பிற்கால இலக்கணநூலார் வசை யென்று கூறி, அது மெய்வசையும் இருபுறவசையுமென இரண்டு வகையாக வரும் என்பர். அவ்வசையை வெண்பா அதிகாரத்துக் கூறாது ஒழிபியலிற் கூறினும் உதாரணம் வெண்பாவினாலேயே காட்டுவர்.

பேராசிரியர் ''அங்கத மென்பது வசை. 'அரிறப' என்றதென்னையெனின், அவை புகழ்போன்று வசையாதலும் பட்டுத் தோன்றும் மயக்கமுடையவாதலின் மயக்கமறத் தெரியின் என்றவாறு. 'நூற்றுவர் தலைவனைக் குறங்கறுத்திடுவான்' (கலி.52) என்பது புகழ்போன்று வசையாயிற்று. என்னை, கொன்றானாயினும் குறங்கினகத்துத் தண்டு கொண்டு எற்றுதல் குற்றமாதலின் என்பதறிக.

கொடைமடங் கூறுதல் வசைபோன்று புகழெனப்படும். அஃது அங்கதமாகாதென்பான் 'அரிறப' என்றான்'' என்பர்.

121. செம்பொரு ளாயின[2] வசையெனப் படுமே.

உரை.சு.வே: 1. குற்ற மற்ற வகையிற்
நூ.பா.வே: 2. 'ளாவன' நச்.
'ளாயின்' மர்ரே

என்-னின் செம்பொருளாகிய அங்கதம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) செம்பொருள் அங்கதம் வசையெனப் பெயர்பெறும் என்றவாறு. (கூக)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. செம்பொருள் அங்கதம்

பேராசிரியர், வாய்காவாது சொல்லப்பட்ட வசையே செம் பொருள் அங்கத மெனப்படும் என்பர். செம்பொருள்- வெளிப் படையாகப் பொருள் விளங்குதல்.

2. செம்பொருளும் ஞாபகமும்

இலக்கியங்களிலன்றி, இலக்கண நூற்பாவிற் கூறப்படும் பொருள், அரிதிலுணரப்படாத செம்பொருளாகவும், அரிதிலு ணப் படும் ஞாபகப் பொருளாகவும் இருக்குமென்பதை,

''உரைத்தநதி சீயமோ டொண்பருந்து தேரை
நிரைத்த தொழிற் சூத்திரத்தி னின்று- விரைக்குழலாய்
செம்பொருள் ஞாபகமாஞ் செய்தி நியதியாம்
கம்பமிலா நூலின் கருத்து''

என்னும் **வச்சணந்திமாலையால்** அறியலாம். இதனால் 'செம் பொருள்' என்னும் சொற்குப் பொருள் உணர்க.

122. மொழிகரந்து மொழியினது[1] பழிகரப் பாகும்.

என்-னின் மறைபொருளாகிய அங்கதம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தான்[2] மொழியும் மொழியை மறைத்து மொழியின், அது பழிகரப்பெனப் பெயர்பெறும் என்றவாறு. (கூஉ)

நூ.பா.வே: 1. 'சொல்லினது' பேரா
உரை.சு.வே: 1. தான் மொழியை மறைந்து மொழியின்

பதிப்பாசிரியர் விளக்கம்

பழிகரப்பங்கதம்

பேராசிரியர் ''வசைப் பொருளினைச் செம்பொருள் படாம லிசைப்பது பழி கரப்பங்கதம்'' என்று பொருள்கூறி, ''மாற்ற ரசனையும் அவனிளங்கோவினையும் வசை கூறுமாறு போலாது தங்கோனையும் அவனிளங்கோவினையும் வசை கூறுங்கால் தாங்கி யுரைப்பர். தாங்கியுரைப்பன போல அவரைப் பழிப் பனவாம்; அது,

''நன்றாய்ந்த செங்கோலாய் நாடிய நின்னிளங்கோக்
குன்றெறிந்த சேந்த னெனமதியா - வன்றிறத்து
நின்றெரிக்குந் தானையோ டெல்லாம் நிகர்த்தார்மேல்
வென்றெறியும் வேலே விடும்''

என வந்த வெண்டொடைச் செய்யுளுட் கண்டு கொள்க. இப் பாட்டில் 'முனையகத்துப் படையோடும் வென்றெறிந்த வேலே விடும்' என வசை கூறுவான், குன்றெறிந்த சேந்தனைப்போல் எறிந்தான் எனப் புகழ்ந்தான்போற் கூறலின் பழிகரப்பங்கத மாயிற்று'' என்பர்.

123. செய்யுட் டாமே யிரண்டென மொழிப.

என்-னின் மேற்சொல்லப்பட்டன தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈண்டு, தம்மாற்[1] சொல்லப்பட்ட செய்யுள் இரண்டு வகை என்று சொல்லுவர் என்றவாறு.

அவை முன்னர்க் காட்டுதும். (கூஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. இங்குக் கூறப்பட்டுள்ள செய்யுள் என்பதைப் பற்றி உரை யாசிரியர்கள் கருத்து

இளம்பூரணர் இந்நூற்பாவிற்கு மேற் சொல்லப்பட்டன தொகுத்துணர்த்துதல் நுதலிற்று என்று கருத்துக் கூறுகிறார்.

உரை.சு.வே: 1. 'நம்மால் வேண்டப்பட்ட செய்யுள்' ரா. ரா.

மேற்கூறிய இரண்டனையும் இவ்வகையானும் வகுக்கப் படும் என்கின்றது என்பார் **பேராசிரியர்.**

நச்சினார்க்கினியர் இது மேற்கூறிய இரண்டையுமே இவ் வகையானும் பகுக்கப்படும் என்கின்றது என்பர்.

மேற்கூறிய மூவருள் **இளம்பூரணர்** மேற்கூறிய செம்பொருள் அங்கதமும் பழிகரப்பங்கதமும் புகழொடும் பொருளொடும் புணர்ந்து வருமாயின், செவியுறைச் செய்யுளென்றும், வசை யொடும் நசையொடும் புணர்ந்து வருமாயின் அங்கதச் செய்யு ளென்றும் தொகுத்துணர்த்தப்படும் என்று கருதுகிறார்.

பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் மேற்கூறிய இரண்டு வகை அங்கதமும் துகளொடும் பொருளொடும் புணர்ந்து வரு மாயின் செவியுறை யங்கதமெனவும், வசையொடும் நசை யொடும் புணர்ந்து வருமாயின் அங்கதச் செய்யுளெனவும் படும் என்று கருதுகின்றனர்.

2. பேராசிரியர் எடுத்துக் கூறும் 'ஒருவனுரை'

ஆனால், இம்மூன்று உரையாசிரியரும் சேர்ந்து தொல்காப் பியர் கூறிய ஒரு செய்தியை மறைத்து விட்டனரே என்று வருந்த வேண்டியுள்ளது. மறைத்தாலும், பேராசிரியர் இந்நூற் பாவுரையுள் 'இனி ஒருவனுரை' என்று எழுதும் செய்தி, அம் மறைப்பை நமக்கு வெளிப்படுத்துகிறது. அவ்வுரையை எடுத் துக்கூறி, அவ்வுரை பொருந்தாது என்பதையும் விளக்குகிறார்.

பேராசிரியர் இனிஒருவனுரை "நெடுவெண் பாட்டே" என் னும் தொகைச் சூத்திரத்து "கைக்கிளை பரிபாட்டங்கதஞ் செய் யுள்" என்று பாடமோதி அந்நூற்பாவில் நெடுவெண்பாட்டும் குறுவெண்பாட்டும் கைக்கிளையும் பரிபாட்டும் அங்கதமும் செய்யுளுமென நிறுத்தான். நிறுத்த முறையானே அங்கதம் உணர்த்திச் செய்யுளை உணர்த்தச் "செய்யுட்டாமே இரண் டெனமொழிப" என விதந்தான் என்பா.

3. பேராசிரியர் மறுப்பு

இனி அவர் அவ்வுரையை மறுக்குமாறு:—

ஒரு மறுப்பு:— எல்லாப் பாட்டும் செய்யுளெனப் படுதலின் ஒன்றனையே செய்யுளெனல் ஆகாது.
இரண்டாவது மறுப்பு:— "அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்" எனப் பின் வருகின்ற சூத்திரத்து ஓதுமாதலின் செய்யுட்டாமே என்னும் நூற்பாவில் கூறிய இவையும் அங்கதச் செய்யுளே என்பர்.

4. பேராசிரியர் உரைக்கு மறுப்பு

இவர் கூறும் இரண்டில், "எல்லாப்பாட்டும் செய்யுளெனப் படுதலின் ஒன்றனையே செய்யுளெனலாகாது" என்பது, முதல் மறுப்பு. யாப்பருங்கலவிருத்தியில் (கழ. பக். 251) வெண்பாவைப்பற்றி எழுதும்போது வெண்பா இரண்டடி முதலாக ஏழடி காறும் வரும். அதற்கு மேல் மிக்கடி வருவது செய்யுள் என்னும் வெண்பாவிற்குரித்து என்று **சங்கயாப்பு** கூறுகின்றது.

"ஏழடி யிறுதி ஈரடி முதலா
ஏறிய வெள்ளைக் கியைந்தன அடியே"

"மிக்கடி வருவது செய்யுட் குரித்தே" (சங்கயாப்பு)

யா. விருத்தியாசிரியர் மற்றொரு நூற்பாவையும் எடுத்துக் காட்டுகிறார்.

"ஆறடி முக்காற் பாட்டெனப் படுமே
ஏறிய அடியும் செய்யுளுள் வரையார்"

(ஆறடி முக்கால்-ஏழடி) இந்நூற்பாவும் சங்க யாப்புடையார் கூறும் செய்தியையே குறிக்கின்றது.

மேலும் **விருத்தியாசிரியர்** "நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே" எனத் தொல்காப்பியர் கூறியவாறு பன்னிரண்டடி வரை பஃறொடை வெண்பாவிற்கு உதாரணப் பாடல்களைக் கூறிவிட்டு "இன்னும் பல அடியால் வந்த பஃறொடை வெண்பா இராமாயணமும், புராண சாகரமும் முதலாக வுடைய **செய்யுள்களிற்** கண்டு கொள்க" என்று எழுதுகின்றார். இவற்றையெல்லாம் நோக்கினால் பழைய காலத்தில் சிலர் கருத்தின் படி

ஏழடிக்கு மேற்பட்ட வெண்பாவையும், தொல்காப்பியர் கருத்துப்படி பன்னிரண்டடிக்கு மேற்பட்ட வெண்பாவையும் செய்யுள் என்றே வழங்கி வந்தனர் என்னும் செய்தி புலனாகும். **அவ்வழக்கத்தினையே தொல்காப்பியர் குறிப்பிடுவதால் ''எல்லாப் பாட்டும் செய்யுள் எனப்படுதலின் ஒன்றனையே செய்யுளெனலாகாது''** என்று கூறி மறுக்கும் மறுப்பு ஏற்புடைத்தாகத் தெரியவில்லை.

5. இரண்டாவது மறுப்பு:- ''அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்'' எனப் பின்வருகின்ற சூத்திரத்து ஓதுமாதலின் இவையும் அங்கதச் செய்யுளே என்பர்.

6. இரண்டாவது மறுப்பிற்கு மறுப்பு

தொல்காப்பியர் செய்யுள்தாமே இரண்டெனக் கூறி அச் செய்யுள் புகழொடும் பொருளொடும் புணர்ந்தால் அப்பகுதி செவியுறைச் செய்யுளென்றும், வசையொடும் நசையொடும் புணர்ந்தால் அப்பகுதி அங்கதச் செய்யுள் ஆகுமென்றும் கூறுகிறார். அதனால் செய்யுள் என்னும் இரண்டு பகுதியும் பேராசிரியர் கூறுகிறபடி அங்கதச் செய்யுள் ஆகவில்லை.

மேலும் தொல்காப்பியர் நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாடல், அங்கதம் என மேல் வருவன வற்றிற்குச் செய்யுள் என்னும் சொல்லைச் சேர்த்துச் சொல்லவில்லை. 'செய்யுள்தாமே இரண்டென மொழிப' என்று கூறிய இரண்டிற்கு மட்டுந்தான் செவியுறைச் செய்யுள், அங்கதச் செய்யுள் எனச் செய்யுள் என்னும் சொல்லைச் சேர்த்துக் கூறுகிறார். மேலும் பாக்களுக்கு அளவு கூறுமிடத்தே, நெடுவெண்பாட்டு முந்நால் அடித்து, குறுவெண்பாட்டின் அளவு எழுசீரே என்று கூறி, அங்கதப் பாட்டளவு அவற்றோடு ஒக்கும் என மாட்டெறிந்து, கலிவெண் பாட்டிற்கும், கைக்கிளைக்கும், செய்யுளுக்கும், செவியறிவிற்கும், வாயுறைக்கும், புறநிலைக்கும் அடிவரையறையில்லை என்பர். இப்பகுதிக்கு உரையெழுதிய உரையாசிரியர் எல்லோரும் கைக்கிளையும், செய்யுளுமெனப் பொருள்கூறவிரும்பாமல், கைக்கிளைச் செய்யுள் என்றே பொருள் கூறிவிட்டனர், முன்னே அங்கதச் செய்யுள் என்றவிடத்துப் பொருள் கொண்டாற் போல.

124. [1]புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயிற்
செவியுறைச் செய்யு[2] ளென்மனார் புலவர்.

என்-னின் செய்யுளைப் பாகுபடுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) புகழொடும் பொருளொடும் புணரவரிற் செவியுறைச் செய்யுள் என்று சொல்லுவர் என்றவாறு. (கஉச)

125. வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யு ளென்மனார் புலவர்.

என்-னின் இதுவும்[3] அது.

(இ-ள்) வசையொடும் நசையொடும் புணர்ந்த செய்யுள் அங்கதச் செய்யுள் எனப் பெயர் பெறும் என்றாவாறு.

எனவே, இருவாற்றானும் செய்யுள் செய்யப்பெறும் என்றவாறு. (கஉஞ)

பதிப்பாசிரியர் விளக்கம்

123ஆம் நூற்பாவில் யான் எழுதியுள்ள குறிப்பின்படி செய்யுள் என்ற பெயரால் வழங்கும் வெண்பா, வசையொடும் எள்ளுதற் பொருளாகிய நசையொடும் வந்தால், அது 'அங்கதச் செய்யுள்' என்று பெயர் பெறும் என்று பொருள் கூறுவது பொருந்தும் என்க. இது நம்மால் விரும்பப்பட்டார் தவறான வழியிலொழுகின் அவரை இடித்துக்கூறித் திருத்துதற்குக் கூறப்படும் வசை மொழியாம்.

இது நசையொடு கூறப்பெறுவதாகையால் மேற்கூறிய அங்கதத்துள் அடங்காமல் பன்னிரண்டடிக்குமேல் பொருள் முடிவுகாறும் வேண்டிய அடியைப் பெற்று வரும் ஒருவகையான அங்கதம் என்க.

நூ.பா.வே: 1. 'துகளொடும்'
2. 'செய்யு ளதுவென மொழிப' பேரா; நச்.
உரை.சு.வே: 3. என்பதும் அது.

126. ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சக முறழொடு[1] கலிநால் வகைத்தே.

என்-னின் இனிக் கலிப்பாப் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒத்தாழிசைக் கலியும், கலிவெண்பாட்டும், கொச்சக மும், உறழ்கலியும் என நான்குவகைப்படும் கலிப்பா என்றவாறு

அவையாமாறு முன்னர்க் காட்டுதும்.

''இருவயி னொத்து மொவ்வா வியலினுந்
தெரியிழை மகளிரொடு மைந்தரிடை வருஉங்
கலப்பே[2] யாயினும் புலப்பே யாயினும்
ஐந்திணை மரபி னறிவுவரத் தோன்றிப்
பொலிவொடு புணர்ந்த பொருட்டிற முடையது
கலியெனப் படூஉங் காட்சித் தாகும்''

என்று **அகத்தியனார்** ஓதுதலின், கலிப்பா அகப்பொருளென வழங்கப்படும். (கஉசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. கலிப்பாவின் பொருள்

கலிப்பா அகத்திணைப் பொருளில் வரும் என்று ஈண்டு நூற்பாவுள் கூறாவிடினும் அகத்திணையியலில் 'நாடக வழக் கினும்' என்னும் நூற்பாவில் அகத்திணை பற்றிய புலனெறி வழக்கம் கலிப்பாவிலும், பரிபாடலிலும் வரும் என்பர்.

வெண்பாப் பாட்டியல் ''தூய அகப்பொருண்மேலன்றி அருங் கலிகள் வாரா'' (செய்.44) என்று கூறும்.

2. கலிப்பாவின்வகை

தொல்காப்பியர் மட்டும் 'கலிநால்வகைத்தே' என்று கூறுகிறார். நற்றத்தனார், காக்கை பாடினியார், சங்கயாப்புடையார், அவீ நயனார், மயேச்சுரனார், யாப்பருங்கல ஆசிரியர், காரிகை ஆசி ரியர் என்னும் இவர்களும் பிற்கால ஆசிரியரும் ஒத்தாழிசைக் கலி, வெண்கலி, கொச்சகக் கலியெனக் கலிப்பா மூன்றுவகை யாகுமென்றே கூறுகின்றனர். அவர்கள் உறழ்கலியைக் கூற வில்லை.

நூ.பா.வே: 1. 'முறழ்வென்ற' சு.வே.
உரை.சு.வே: 2. 'வழங்கும்''

3. உறழ்கலி

பேராசிரியர் உறழ்கலியைப் பற்றிக் கூறும் செய்தி கருதத் தக்கது. அவர் இந்நூற்பா உரையில் "எல்லாவற்றுப்பின்னும் உறழ்கலியை வைத்தான்; அவை போலாது, சுரிதகமின்றி வருதலே பெரும்பான்மை யாகலா னென்பது. அஃதேல், உறழ் கலியும் கொச்சகக் கலியுள் அடங்காதோ? அதுவும் அடக்கிய லின்றியும் யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடைத்தாய் வருமாலெனின் - அற்றன்று; அடக்கியலின்றிவரின் அடிநிமிர் தலும், ஒழுகிசைத்தாகலும் வேண்டும். உறழ்கலியாயின் அடி நிமிராதும் ஒழுகிசையின்றியும் வருமென்பது.

அத்துணையான், உறழ்கலியை வேறென்பதென்னை? கொச் சகக் கலியுடன் கூட்டி ஒன்றாக வோதுக வெனின் - அற்றன்று; மேற்கூறிவருகின்ற செய்யுளெல்லாம் சீரும், அடியும், பாவும், பொருளுமெனச் சில உறுப்புவகையான் வேறுபடுகிறதன்றிப் பிறிதின்மையின், அவற்றின் வேறுபாடும் சிலவாக நோக்கி ஒன்றென்னாமாகலின், அது கடாவன்றென்பது" என்பர்.

4. ஒத்தாழிசை என்ற காரணம்

யாப்பருங்கல விருத்தியாசிரியர் 'ஒத்தாழிசைக்கலி' (79) என்னும் நூற்பாவுரையில் "அளவிற்பட்டு ஆழ முடைத்தாகிய பொருளைச் சொல்லுதலானும், ஓதப்பட்ட கலிப்பாவினாலும் பொதுவிலக்கணத்தோடு ஒத்து ஆழமுடைத்தாய் இசைத்தலா னும்" என்று ஒத்து ஆழ் இசைக்கலி எனப் பிரித்துப் பொருள் கூறியதோடல்லாமல் ஒத்துத் தாழ்ந்த புகழிற்று ஆகலானும் ஒத்த பொருண்மேல் மூன்றாய்த் தாழ்ந்திசைக்கும் ஒத்தாழிசையைத் தனக்குச் சிறப்புறுப்பாக உடைத்தாகலானும் என்று ஒத்து தாழ்ந்த இசைக்கலி என்றும் ஒத்த தாழிசைக்கலி என்றும் பிரித்துப் பொருள் கூறி, இவ்வாறு காரணங் கருதப்படுவதால் ஒத்தாழிசைக்கலி என்பது காரணக்குறி என்பர். அவர் கருத்தின்படி,

1 ஒத்து-அளவிற்பட்டு; ஆழ்-ஆழமுடைத்தாகிய பொருளை; இசை-சொல்லும்; கலிப்பா

2 ஒத்து-ஓதப்பட்ட கலிப்பாக்களுக்குரிய பொதுவிலக்

கணத்தோடு ஒத்து; ஆழ்-ஆழமுடைத்தாய்; இசை-இசைக்கும்; கலிப்பா.

3 ஒத்து-ஒத்துநின்று; தாழ்-தாழ்ந்த; இசை-புகழையுடைய; கலிப்பா.

4 ஒத்த-ஒத்தபொருண்மேல்; தாழ்- (மூன்றாய்த்) தாழ்ந்த இசை-இசைப்பது; கலிப்பா

இவ்வாறு நான்கு பொருள் அமைகின்றன.

5. தாழிசை-ஒத்தாழிசைப் பெயர்

பேராசிரியர் "தாழிசை என்பது தானுடைய துள்ளலோசைத் தாம். இது முறைமையிற் பெற்ற பெயர்; எனவே, தரவு வேறு படினும் வேறுபடாதென்பதூஉம், கொச்சகக் கலிபோல்வன வற்றுள் வரும் இடைநிலைப்பாட்டுக்கள் அவ்வாறு தாழமுடைய வன்றியும் வருமென்பதூஉம் கொள்க. இது பன்மை பற்றிய பெயர், தாழிசையின்றியும் ஒத்தாழிசை சிறுபான்மை வருமா தலின்.

இனி ஒழிந்த உறுப்பு நோக்கத் தாழிசை சிறந்தமையின் தலைமையாற் பெற்ற பெயரெனினும் ஒக்கும்" (130-பேரா. செய்) என்பர். யா.க.வி. ஆசிரியர் மேற்கூறியவாறு பொருள் எழுதினாலும் 82ஆம் நூற்பாவுரையில்,

"ஒத்த ஒருபொருண்முடிவினால், ஒத்த தாழ்ச்சியால் இசைத் தலானும், தரவிற் குறைந்து இசைத்தலானும், ஒத்தாழிசை என்பதூஉம், தாழிசை என்பதூஉம் காரணக் குறி" என்று வேறாகக் கொண்டு காரணம் எழுதுகிறார்.

6. கலிவெண்பாட்டு முதலியன

இனிக் "கலிவெண்பாட்டு - கலிப்பாவாகிய வெண்பாட்டு. இது, பண்புத் தொகையானே முன்மொழிப் பொருட்டாயிற்று. கொச்சக மென்பது உறுப்பினாற் பெற்ற பெயர். உறழ்கலி என்பது பொருள்பற்றி வந்த பெயர்" என்பர் **பேராசிரியர்.**

127. அவற்றுள்
ஒத்தா ழிசைக்கலி யிருவகைத் தாகும்.

என்-னின் [1]ஒத்தாழிசைக்கலிப் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்)ஒத்தாழிசைக் கலி[2] இரண்டுவகைப்படும் என்றவாறு அவை முன்னர்க் காட்டுதும். (கஉஎ)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒத்தாழிசைக் கலிவகை

பிற்காலத்தார் ஒத்தாழிசைக் கலியை மூன்று வகை என்பர்.

''நேரிசை யம்போ தரங்கம்வண் ணகமென்
றோதிய மூன்றே யொத்தா ழிசைக்கலி'' (யா.வி.கழ.பக்.80)

தொல்காப்பியர் இருவகையாகக் கொள்வர்.

128. இடைநிலைப் பாட்டே[3] தரவுபோக் கடையென[4]
நடைநவின்[5] றொழுகு மொன்றென மொழிப.

என்-னின் [6]ஒத்தாழிசைக்கலி பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தாழிசையும், தரவும், சுரிதகமும், அடைநிலைக் கிளவியுமென நான்கு உறுப்பினை யுடைத்து ஒத்தாழிசைக் கலி என்றவாறு.

தரவு[8], தாழிசை, தனிச் சொல், சுரிதகம் எனக் கிடக்கை

உரை.சு.வே: 1. 'ஒத்தாழிசைக் கலிப்பா' ரா.ரா. பதிப்பு
2. ஒத்தாழிசைக் கலிப்பா ,,
நூ.பா.வே: 3. 'பாட்டொடு' பேரா.
4. 'கிடையென' சு.வே
5. 'நடை பயின்' பேரா; நச்.
உரை.சு.வே: 6. 'இடைநிலைப்பாட்டு' ரா. ரா. பதிப்பு.
7. 'இடைநிலை கிளவியுமென'
8. இவை முறையினால் தாவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் எனக் கிடக்கை முறையாலே கூறாது தாழிசையை முற்கூறியவதனால் இப்பாவிற்கு ஒத்தாழிசை சிறந்ததாக முற்கூறினார்.

முறையாற் கூறாது, தாழிசை முற்கூறிய வகையான், இப் பாவிற்கும் [1]ஒத்தாழிசை சிறந்ததாதலின் முற்கூறினார்.

முற் கூறுகின்ற வழியும், 'இடைநிலைப்பாட்டே' எனக் கூறுதலின் முந்துற்றது தரவு என்றவாறாம்.

இடைநிலைப் பாட்டெனினும் தாழிசை யெனினும் ஒக்கும்.

போக்கெனினும், சுரிதக மெனினும், வாரம் எனினும், அடக்கியல் எனினும் ஒக்கும்.

அடை எனினும் தனிச்சொல் எனினும் ஒக்கும்.

தனிச் சொல்லைப் பின் எண்ணியவதனான் தாழிசை தோறும் தனிச்சொல் வரவும் பெறும் என்று கொள்க. **(கூஉ)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பாட ஆய்வு

இளம்பூரணர், பேராசிரியர் இருவரும் கொண்ட பாடம், 'நடைநவின்றொழுகும்' என்பது. ஆனால் **நச்சினார்க்கினியர்** இந்நூற்பாவின் இரண்டாமடியை 'நடைபயின் றொழுகும்' என்று பாடம் ஓதி நான்குறுப்பாகப் பயின்றுவரும் என்று உரைகூறியுள்ளார்.

பேராசிரியர் 'நான்கு உறுப்பாகப் பயின்று வரும்' என்று உரைகூறி, 'பயின்று வரும்' எனவே, இவ்வாறன்றிப் பயிலாது வருவனவும், இதன் பகுதியாயடங்குவனவும் உளவென்பது எனச் சிறப்புரை கூறியுள்ளதை நோக்கினால் ''நடை பயின்றொழுகும்'' என்ற பாடமே அவர் கொண்ட முதற்பாடம் எனத் தெரிகின்றது. பின்னர் நடைநவின் றொழுகும் என்பதையும் எடுத்துக் கூறி விதப்பதால் அப் பாடத்தையும் கொள்கின்றார் போலும்.

2. தரவு

எல்லா உறுப்பின் பொருளையும் தொகுத்துக் கொண்டு தந்து முன் நிற்றலின் தரவு என்பதூஉம் காரணக்குறி என்பர். (யா.வி.கழ.பக். 297)

உரை.சு.வே: 1. இப்பாவிற்கும்

பேராசிரியர் ''தரவு என்ற பொருண்மை என்னையெனின்; முகத்துத் தரப்படுவ தென்ப; அதனை எருத்தெனவும் சொல்லுப; என்னை? உடம்பிற்கு முதல் எருத்தென்பதாகலின்.

இசைநூலாரும் இத்தரவு முதலாயினவற்றை முகம், நிலை, கொச்சகம், முரி என வேண்டுப. கூத்த நூலாரும் கொச்சக முள்வழி அதனை நிலையுள் அடக்கி முகம், நிலை, முரி என மூன்றாக வேண்டுப'' என்பர்.

3. தாழிசை

''தரவிற் குறைந்து இசைத்தலால் தாழிசை என்பதும் காரணக்குறி'' என்பர் **யா. வி. ஆசிரியர்.** ஆனால், **பேராசிரியர்** ''தாழிசையினை இடைநிலைப் பாட்டென்பவோ வெனின், அவ்வாறும் சொல்லுப; அச்செய்யுள் இடைநிற்றலா னென்பது. இனி இடைநிலைப் பாட்டென்பது தாழிசையினை நோக்காது; என்னை? தாழம்பட்ட ஓசையல்லனவும் இடைநிலைப்பாட்டாய் வருமாதலி னென்பது'' என்பர்.

4. தொல்காப்பியர் காலத்துப் பாக்களின் இறுதி உறுப்பு

தொல்காப்பியர் செய்யுளியலில், 'ஈற்றயல்' என்னும் 65 ஆம் நூற்பாவில் இருந்து 67, 68, 69, 70, 71, 72, 73 என்னும் எட்டு நூற்பாக்களால் ஆசிரியப்பா முதலான நான்கு பாக்களின் இறுதி உறுப்பினைக் கூறியுள்ளார். இவ்வுறுப்புக்களை ஆசிரியர் சுரிதகம் என்றோ, போக்கியல் வைப்பென்றோ, அடக்கியல் வாரம் என்றோ குறிக்கவில்லை. ஆசிரியப்பாவின் இறுதியைச் செந்தூக்கு என்றும், வஞ்சிப்பாவின் இறுதியை வஞ்சித்தூக்கு என்றும், வெண்பாவின் இறுதியை வெண்பா ஈற்றடி என்றும், கலிப்பாவின் இறுதியைக் கலிஇறுதி என்றும் அங்கே குறித்துள்ளார்.

அவர், பின்னர்ப் பாக்களின் இறுதி உறுப்புக்களைக் குறிக்குமிடத்தே பரிபாடலுக்குச் சுரிதகத்தைக் கூறியுள்ளார். பின்னர் அச் சுரிதகத்தை எந்தப் பாக்களுக்கும் இறுதி உறுப்பாகக் கூறவே இல்லை.

கலிப்பாக்களைக் கூறும்பொழுது ஒத்தாழிசைக்கலிப்பாவில் முதனிலைக் கலிப்பாவிற்குப் போக்கு அல்லது போக்கியல் வைப்பை இறுதி உறுப்பாகக் கூறினார்.

இதன் பின்னர்த் தெய்வத்தைப் பரவும் பொருண்மையைப் பெற்றுவரும் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, கொச்சக ஒரு போகு, அம்போதரங்கம் என்ற மூன்றிற்கும் அடக்கியல் வாரத்தையே இறுதி உறுப்பாகக் கூறினார். அடக்கியல் வாரத்தைப் பெறுவது, இம்மூன்று கலிப்பாவை ஒழியப் பிற இல்லை என்க.

ஆசிரியர் கலிவெண்பாட்டுப் பெறும் இறுதியைப் போக்கியல் என்றோ, அடக்கியல் வாரம் என்றோ குறிக்காமல் வெண்பாவின் இறுதி உறுப்பைப் பெற்றுவரும் என்ற கருத்தால் 'வெள்ளடி இயலால்' என்று மட்டுமே கூறியுள்ளார்.

இதன்பின் கொச்சகக் கலியைக் கூறும்பொழுது, வண்ணக ஒத்தாழிசையின் இழிபு கொச்சக ஒருபோகும் அம்போதரங்கமும் ஆயினாற் போல, முதனிலை ஒத்தாழிசைக் கலிப்பாவின் இழிபு இக் கொச்சகக் கலிப்பாவாதலால், அப் பா பெறும் போக்கினையே இதற்கும் இறுதியுறுப்பாகக் கூறினார்.

உறழ்கலி, முதனிலைக் கலிப்பாவின் பொருளாகிய காமம் பற்றிவரினும் இது, அது பெறும் போக்குறுப்பைப் பெறாதென்றார்.

எனவே, மேற்கூறிய முறைமைதான் தொல்காப்பியத்தில் காணப்படுகிறது.

இதற்கு மாறுபாடாகச் சொல்வதெல்லாம் பிற்காலத்தார் கூறும் முறைமை என்க.

5. பிற்கால முறைப்படி இறுதி உறுப்பு

இளம்பூரணர்

''போக்கெனினும், சுரிதகம் எனினும், வாரம் எனினும். அடக்கியல் எனினும் ஒக்கும்'' என்பர். (செய். 128)

பேராசிரியர்

பரிபாடலைக் கூறும் நூற்பா (121) உரையில் "சுரிதக மென்பது அடக்கிய லெனப்படும்" என்று கூறி, 'போக்கியல் வகையே' (செய். 136) என்னும் நூற்பாவுரையில் "இங்ஙனங் கூறப்பட்ட உறுப்பினை (போக்கியலை) அடக்கிய லெனவும் வார மெனவுஞ் சொல்லுப" என்பர்.

பேராசிரியர் "உள்உறுப்பின் பொருளெல்லாம் ஒருவகை யான் அடக்குமியல்பிற்றாகலான் அடக்கியல் எனவும் குறித்த பொருளை முடித்துப் போக்குதலின் போக்கு எனவும் அவை யெல்லாம் போதந்து வைத்தலின் வைப்பு எனவும் கூறிய பகுதியைப் பின்னும் பற்றிக் கூறலில் வாரம் எனவும் இவை யெல்லாம் காரணப்பெயராயின" என்பர். (செய். 132. உரை)

யாப்பருங்கல விருத்தியாசிரியர் (கழ. பக். 296) 'சுரிதகம் எனினும், அடக்கியல் எனினும், வாரம் எனினும், வைப்பு எனினும், போக்கியல் எனினும் ஒக்கும்' என்பர்.

6. தனிநிலை, அடைநிலை

ஒரு சொல்லாய்ப் பொருள் நிரம்பித் தனியே நிற்றலின் தனிநிலை என்பதும் காரணக்குறி என்பர். (யா.வி.கழ.பக்.297) "தனிதர நிற்றலில் தனிநிலை" -யா. வி. (யா. வி. கழ. பக். 297) "அடைநிலை என்பது முன்னும் பின்னும் பிறவுறுப்புக்களை அடைந்தன்றி வாராது; அது தனிநின்று சீராதலின் தனிச் சொல் எனவும் படும்" என்பர் **பேராசிரியர்.**

129 தரவே தானும் நாலடி யிழிபாய்
[1]ஆறிரண் டுயர்வும் பிறவும் பெறுமே.

என்-னின் தரவிற்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

நூ. பா. வே: 1. 'ஆறிரண் டுயர்பென் றறையவும் பெறுமே' பேரா.
'ஆறிரண் டுயர் பேறவும் பெறுமே' நச்.
'ஆறிரண் டுயர வேறவும் படுமே' ரா. ரா. பதி.

(இ-ள்) தரவு நாலடி இழிபாகப் பன்னிரண்டடி உயர்பாக[1] இடை வரும் அடி எல்லாவற்றானும் வரப்பெறும் என்று கொள்க.

(கஉக)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. கலியுறுப்புக் கட்டளை உடையது

''கலியுறுப் பெல்லாம் கட்டளை உடைமையின்
நெறியின் முறைவழி நிறுத்தல் வேண்டும்''

என்று மயேச்சுரனார் (யா. வி. கழ. பக். 133) கூறுவதால் கலிப்பாவில் வரும் தரவு முதலாயின வெல்லாம் கட்டளை உடையன என்பதை உணர்ந்து கொள்ளுகிறோம். பரிபாடல் உறுப்பிற்கு வரம்பில்லை; மிக்குவரும்.

''கலியுறுப்பிற்கு அளவை **செயன்முறையுள்ளும், செயிற்றியத்துள்ளும், அகத்தியத்துள்ளும்** முடிந்தவாறு அறிந்துகொள்க அவை ஈண்டுரைப்பிற் பெருகும்; வல்லார் வாய்க்கேட்டுணர்க'' என்று யா. வி. ஆசிரியர் கூறுஞ் செய்தி அறியத்தக்கது.

2. தரவின் அடி

யாப்பருங்கலக் காரிகையில் 'சுருங்கிற்று மூன்றடியேனைத் தரவிரு மூன்றடியே தரங்கக்கும் வண்ணகக்கும் தரவாவது' (42) என்னும் காரிகைக்கு,

''அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவும் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவும் ஒழித்து அல்லாத கலிப்பாவின் தரவிற்கு மூன்றடியே சிறுமை; பெருமை பாடுவோனது பொருட் குறிப்பே'' என்று உரைப்பர்.

''அம்பு வண்ணகம் இருமூன் றடியின;
முந்திய மூன்றடிச் சிறுமையின் மிகாவாய்த்
தந்துமுன் நிற்றலின் தரவா கும்மே'' (யா. வி. கழ. பக். 297)

என்று மேற்கோள் பாடலொன்று கூறும்.

''வண்ணகம் அம்போ தரங்க வொத்தாழிசை
நண்ணிய தரவின் அடியிரு மூன்றும்

உரை. சு. வே: 'உயர்வாக' ரா. ரா.

ஏனைய தரவடி இழிபொரு மூன்றும்
பேணிய பெருமை பெரும்பொருள் முடிபும்''

என்று இலக்கண விளக்கம் (747) கூறும்.

மேற்கூறியவற்றை நோக்கினால் நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் வருந் தரவிற்கு மூன்றடியே சிறுமை; பெருமை பாடுபவன் பொருண்முடிபே என்பது புலப்படும்.

ஆனால், தொல்காப்பியர் நேரிசை ஒத்தாழிசைக் கலியில் வரும் தரவு, நாலடி இழிபாகப் பன்னிரண்டடி உயர்வாக இடையில் உள்ள எல்லா அடியாலும் வரும் என்பர். இது தொல்காப்பியர்க்கும் ஏனைய இலக்கண நூலாசிரியர்க்கும் உள்ள வேறுபாடாகும்.

தொல்காப்பியர் முற்காலத்திலிருந்தவராதலால் இவர் கூறும் இலக்கணத்திற்கு மாறுபட்ட கலிப்பாக்கள், கலித் தொகையிற் காணப்பட்டால் அவையெல்லாம் தொல்காப்பியர்க்குப் பிற்பட்டவையாம்.

3. தரவின் ஈறும் தாழிசை முதலும்

தரவினுடைய இறுதிப் பகுதியும், தாழிசையின் முதற் பகுதியும் பொருந்துமிடத்துத் தரவின் இசை துணிந்தது (அற்றது) போல் நிற்கவேண்டும் என்பர்.

காக்கை பாடினியார்,

''தன்னுடை யந்தமுந் தாழிசை யாதியும்
துன்னு மிடத்துத் துணிந்தது போலிசை
தன்னொடு நிற்றல் தரவிற் கியல்பே'' (யா. வி. கழ. பக். 300)

என்பர்.

அவிநயனார்

''விட்டிசை முதற்பாத் தரவு''

என்பர்.

130. இடைநிலைப் பாட்டே
தரவகப் பட்ட மரபின[1] வென்ப.

நூ. பா. வே: 1. 'மரபின தென்ப' பேரா; நச்.
'மரபிற் றென்ப' யா. வி.

என்-னின் தாழிசைக்கு அடியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தாழிசைகள் தரவிற் சுருங்கி வரும் என்றவாறு.

'தரவகப் பட்ட மரபின' என்றதனால் தரவிற்கு ஓதப்பட்ட நான்கடியின் மிகாதென்பதூஉம் மூன்றடியானும் இரண்டடியானும் வரப்பெறும் என்பதூஉம் கொள்க.

வருகின்ற சூத்திரத்துள் 'ஒத்துமூன் றாகு மொத்தாழிசையே' (செய். 137) எனக் கூறுதலானும், இப் பாவினை ஒத்தாழிசைக்கலி எனக் கூறுதலானும், தாழிசை ஒருபொருண் மேல் மூன்றடுக்கி வரும் என்று கொள்க. (கஉ0)

131. [1]அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகு [2]மாங்கென மொழிப

என்-னின் தனிச்சொல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடைநிலைக் கிளவியாகிய தனிச்சொல், தாழிசைப் பின்னர் நடத்தலைப் பயின்றொழுகும் எனச் சொல்லுவர் என்றவாறு.

ஆங்கு-அசை.

தாழிசைப் பின்னர் நடத்தலைப் பயின்றொழுகும் எனவே, தாழிசைக்கு முன்னர் வருதலும் சிறுபான்மை உளதென்று கொள்க. (கஉக)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பாட ஆய்வு

இளம்பூரணர் (131) இந்நூற்பாவின் இறுதியை "ஆங்கென மொழிப" எனப் பாடம் ஓதி, ஆங்கு அசை என்றார்.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் "ஆங்கென் கிளவி" எனப் பாடம் ஓதி, "தாழிசைப் பின்னர் ஆங்கு தனிச் சொல்லாய் நின்று பயிலும்" என்பர்.

நூ.பா.வே: 1. 'இடைநிலைக்' சு. வே.
2. 'மாங்கென் கிளவி' பேரா; நச்.

கலிப்பாவில் 'ஆங்கு' என்னும் சொல் தனிச்சொல்லாய் வரும் என்பதை,

"ஆங்குஎன் கிளவி அடையாத் தொடைபட
நீங்கி இசைக்கும் நிலையது தனிச்சொல்"

என்னும் **காக்கைபாடினியத்தால்** (யா. வி. கழ. பக். 330) அறிந்து கொள்ளலாம். எனவே, காக்கைபாடினியச் சான்றிருத்தலால் 'ஆங்கென்கிளவி' என்ற பாடமே நன்று.

2. தனிச் சொல்

இளம்பூரணர் 'ஆங்கு' என்பதை அசை என்று தள்ளிவிட்டு அடைநிலைக்கிளவி என்னும் தனிச்சொல் தாழிசைப் பின்னர் பெரும்பாலும் வரும் (நடைநவின்றொழுகும்); சிறுபான்மை தாழிசைக்கு முன்னரும் வரும் (நடைநவின்றொழுகாது) என்பர்.

பேராசிரியர் இந்நூற்பாவிற்கு 'ஆங்கென்னும் சொல் தனிச் சொல் எனப்படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று' என்று நுதலியதுரைத்து, 'தாழிசைப்பின்னர் ஆங்கு தனிச்சொல்லாய்ப் பயிலும்' என்று உரை கூறி, 'ஆங்கென்னும் சொல்லினை எடுத்தோதினான் அது நடைநவின்றொழுகுமாகலின். ஆங்கு என்னும் சொல் பயின்று வரும் எனவே அல்லாதனவும் உள, இத்துணைப் பயிலாதன என்பது கொள்க' என்பர்.

கலித்தொகையில் ஆங்கேயன்றி, ஆங்கென, அவனை, அதனால், ஆயின்ஏஎ, என்றுநின், ஆங்க, ஆங்கினி, என, வருந்தாதி, எனநாம், ஆங்கதை, என்றாங்கே, எனப்பாடி என்பனவும் தனிச்சொல்லாய் வந்துள்ளன.

132. போக்கியல் வகையே வைப்பெனப் படுமே
தரவிய லொத்து மதனகப் படுமே
புரைதீ ரிறுதி நிலை[1]யுரைத் தன்றே.

நூ.பா.வே: '[1] நிலையுரித் தன்றே' - சு. வே.

என்-னின் சுரிதகம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்)சுரிதகம் (போக்கியல்) என்பது வைப்பெனவும் படும். அது தரவோடொத்த அளவிற்றாகியும் அதனிற் குறைந்த அளவிற்றாகியும் குற்றந் தீர்ந்த பாட்டின் இறுதி நிலையை உரைத்தது என்றவாறு.

தரவியல் ஒத்தலாவது சிறுமை[1] நான்கடி, பெருமை பன்னிரண்டடியாகி வருதல். அதனகப்படுதலாவது சிறுமை மூன்றடியானும் இரண்டடியானும் வருதல்.

இச் சூத்திரங்க ளோதின முறையானே பாட்டு வரும் என்று கொள்க.

மேல், துள்ளலோசைத்தாகியும் நிரை முதலாகிய வெண்பா வுரிச்சீர் மிக்கும் சுரிதகம், ஆசிரியத்தானாதல் வெண்பாவா னாதல் வருமெனவும் கூறிய இலக்கணங்களும் அறிந்து கொள்க.

உதாரணம் :—

''பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க
வாடுபு வனப்போடி வணங்கிறை வளையூர
ஆடெழி லழிவஞ்சா தகன்றவர் திறத்தினி
நாடுங்கால் நினைப்பதொன் றுடையேன்மன் னதுவுந்தான்

- இது தரவு

தொன்னலந் தொலைபீங்கியாந் துயருழப்பத் துறந்துள்ளார்
துன்னிநங் காதலர் துறந்தேகு மாரிடைக்
கன்மிசை யுருப்பறக் கனைதுளி சிதறென
இன்னிசை எழிலியை யிரக்கவு மியைவதோ

புனையிழாய் ஈங்குநாம் புலம்புறப் பொருள்வெஃகி
முனையென்னார் காதலர் முன்னிய வாரிடைச்
சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ

உரை.சு.வே: 1. 'சிறுமை நான்கடியாகியும் பெருமை பன்னிரண்டடியாகியும் வருதல்' ஏ.உ.சி.

குறிப்பு:- மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செய்யுளியல் பதிப்பிற் கண்டவாறு மேலே பாடங் கொள்ளப்பட்டது.

ஒளியிழாய் ஈங்குநாந் துயர்கூரப் பொருள்வயின்
அளியொரீஇக் காதல ரகன்றேகு மாரிடை
முளியரின் முழ்கிய வெம்மைதீர்ந் தொழிகென
வளிதரு செல்வனை வாழ்த்தவு மியைவதோ

- இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

செய்பொருட் சிறப்பெண்ணிச் செல்வார் மாட் டினையன
தெய்வத்துத் திறனோக்கித் தெருமரல் தேமொழி
வறனோடின் வையத்து வான்றருங் கற்பினாள்
நிறனோடிப் பசப்பூர்த லுண்டென
அறனோடி விலங்கின்றவ ராள்வினைத் திறத்தே'' (கலி. 16)

- இது சுரிதகம்

இது நான்கடித் தரவும், நான்கடியான் மூன்று தாழிசையும், தனிச்சொல்லும், ஐந்தடிச் சுரிதகமும் வந்த ஒத்தாழிசைக் கலிப்பா. இதனை நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா என்பர்.

''வெல்புகழ் மன்னன் விளங்கிய வொழுக்கத்தான்
நல்லாற்றி னுயிர்காத்து நடுக்கறத் தான்செய்த
தொல்வினைப் பயன்றுய்ப்பத் துறக்கம்வேட் டெழுந்தாற்போல்
பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர
ஆனாது கலுழ்கொண்ட வுலகத்து மற்றவன்
ஏனையா னளிப்பான்போ லிகலிருண் மதிசீப்பக்
குடைநிழ லாண்டாற்கு மாளிய வருவாற்கும்
இடைநின்ற காலம்போல் இறுந்தந்த மருண்மாலை

- இது தரவு

மாலைநீ,
தூவறத் துறந்தாரை நினைத்தலிற் கயம்பூத்த
போதுபோற் குவிந்தவென் னெழினல மெள்ளுவாய்
ஆய்சிறை வண்டார்ப்பச் சினைப்பூப்போற் றளைவிட்ட
காதலர்ப் புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய்

மாலைநீ,
தையெனக் கோவலர் தனிக்குழ லிசைகேட்டுப்
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய்
செவ்வழியாழ் நரம்பன்ன கிளவியார் பாராட்டும்
பொய்தீர்ந்த புணர்ச்சியுட் புதுநலங் கடிகல்லாய்

மாலைநீ,
தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ளார்ப்பப்
புகைமிக்க நெஞ்சத்தேம் புன்மைபா ராட்டுவாய்
தகைமிக்க புணர்ச்சியார் தாழ்கொடி நறுமுல்லை
முகைமுகந் திறந்தன்ன முறுவலும் கடிகல்லாய்

- இவை மூன்றும் தாழிசை

ஆங்கு,

இது தனிச்சொல்

மாலையு மலரு நோனா தெம்வயின்
நெஞ்சமும் மஞ்சுமற் றில்ல வெஞ்சி
உள்ளா தமைந்தோ ருள்ளம்
உள்ளி லுள்ள முள்ளு ளுவந்தே'' (கலி.118)

-இது சுரிதகம்.

இது தாழிசைதோறும் தனிச்சொல் பெற்றுவந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.

''**வயக்குறு மண்டிலம்**'' என்னும் (25) கலிப்பாவில் தரவு பன்னிரண்டடியான் வந்தது. ''இலங்கொளி மருப்பிற் கைம்மா'' என்னும் (23) கலிப்பாவினுள் இரண்டடியால் தாழிசை வந்தன. ''உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனும்'' என்னும் (22) கலிப்பாவில் தாழிசை மூன்றடியால் வந்தன. ''**ஆறறியந்தணர்**'' என்னுங் கடவுட் பாட்டினுள் மூன்றடிச் சுரிதகம் வந்தது.

இனி ஏனையடிகளால் வரும் தரவும் தாழிசையும் சுரிதகமும் கலித்தொகையுட் கண்டு கொள்க. (கூஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பாடம்

இளம்பூரணர் இந்நூற்பா வுரையில் 'தரவோ டொத்த அளவிற் றாகியும், அதனிற் றாழ்ந்த அளவிற் றாகியும்'' என இரண்டிடத்து

எண்ணும்மை வைத்து உரை எழுதுதலால், இந்நூற்பா 'தரவிய லொத்தும் அதனகப் பட்டும்' என்று பாடம் ஓதவேண்டும் போலும்.

2. நூற்பாப்பொருள்

இந்நூற்பாவிற்குப் ''போக்கியல், வைப்பெனப் பட்டுத் தரவியல் ஒத்தும், அதனகப்பட்டும் கலிப்பாவின் முடிவுரையாகிய இறுதிநிலையைக் கூறும்'' என்பது பொருளாம்.

3. இளம்பூரணர் உரை

ஆனால், **இளம்பூரணர்** சுரிதகமும் போக்கியலும் ஒன்றென்று கருதும் பிற்கால வழக்கினைக் கருதிப் போக்கியல் என்னும் சொல்லிற்கு மறு சொல்லாய்ச் சுரிதகம் என்னும் சொல்லை வைத்து உரை எழுதுகிறார். இது பொருந்தா தென்பது முன்னே விளக்கப்பட்டது.

133. ஏனை யொன்றே
தேவர்ப் பராஅ[1] முன்னிலைக் கண்ணே.

என்-னின் சொல்லா தொழிந்த ஒத்தாழிசைக் கலிப்பா உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒத்தாழிசைக் கலிப்பா, முன்னிலையிடத்துத் தேவரைப் பராவும் பொருண்மைத்து என்றவாறு. (கஙஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1 பாட ஆய்வு

இளம்பூரணருரை பேராசிரியருரை நச்சினார்க்கினியருரை களில் இந்நூற்பாவிற்குத் 'தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே' என்ற பாடமே உள்ளது. வ.உ.சி. 'பராஅ' என்றொரு பாடம் காட்டுகிறார். அது மவ்வீறொற்றழிந்த பாடம். அவ்வீறு இருப்பின் 'பராஅம்' என்றிருக்கும்.

நூ.பா.வே: 1. 'பராஅய' பேரா; நச். 'பராவுதன்' சிலப். உரை.

இனி, இளம்பூரணர் பொழிப்புரையைப் பதவுரையாக்கிப் பார்ப்போம்.

''ஏனை ஒன்றே-சொல்லா தொழிந்த ஒத்தாழிசைக் கலிப்பா; முன்னிலைக் கண்ணே- முன்னிலை யிடத்து; தேவர்ப் பராஅம்-தேவரைப் பராவும் பொருண்மைத்து என ஆகும்''

இங்கே பராஅம் என்பது முற்று. 'பராஅய' என்ற பாடம் முன்றாசிரியர் உரையுடனும் பொருந்தவில்லை.

''ஏனை ஒன்றே தேவரைப் பரவிய முன்னிலைக் கண்ணது'' என்று உரைகூறினால், 'பராஅய' என்பதை எச்சமாகக் கொள்ளலாம்.

அடியார்க்கு நல்லார்,

> ''ஏனை யொன்றே
> தேவர்ப் பராவுதன் முன்னிலைக்கண்ணே''

எனப் பாடம் ஓதுவர். (சிலப். கடலாடு 35.)

2. வண்ணக ஒத்தாழிசைப் பொருள்

பேராசிரியர் ஏனை யொன்று முன்னிலையிடத்துத் தேவரைப் பராவும் பொருண்மைத்து எனவே, இது அகப்பொருள் செய்யுள் ஆகாதென்றான். இதனானே, முன்னே கூறிய ஒன்று அகநிலை ஒத்தாழிசை எனப்படும்.

மற்றிது 'வாழ்த்தியல் வகையே நாற்பாக்குமுரித்து' என்ற வழிச் சொல்லப் பட்டதாமெனின், அஃது உறழ்கலிக்கும் வெண்கலிக்கும் கொச்சகக் கலிக்கும் பொதுவாகலின் அவற்றுக்கு முன்னிலைக் கண்ணே தேவர்ப் பராவும் பொருண்மைத் தாகி வரும் தேவபாணியை விலக்கினானென்பது என்று கூறுவர்.

134. அதுவே,
வண்ணக மொருபோ கெனவிரு வகைத்தே.

என் னின் மேற்சொல்லப்பட்ட முன்னிலைப் பரவலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தேவரிடத்து முன்னிலைப் பரவலாகிய அதுதான், வண்ணகமெனவும், ஒரு போகு எனவும் இருவகைப்படும் என்றவாறு. (கஙஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

அதுவே என்றதற்கு உரை

இளம்பூரணர் 'அதுவே' என்றது முன்னிலைப்பரவலைக் குறிக்கும் என்று கருதித் 'தேவரிடத்து முன்னிலைப்பரவலாகிய அது' என்று உரைப்பர்.

பேராசிரியர் ஏனையொன்று எனப்பட்ட ஒத்தாழிசை என்று உரைப்பர்.

135. வண்ணகந் தானே,
தரவே தாழிசை யெண்ணே வாரமென்
றந்நால் வகையிற் றோன்று மென்ப.

என்-னின் வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வண்ணக வொத்தாழிசை யாவது தரவும், தாழிசையும், எண்ணும், சுரிதகமும் என்று சொல்லப்பட்ட நான்கு உறுப்பினை[1] உடைத்து என்றவாறு. (கஙங)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. வண்ணக ஒத்தாழிசை என்ற காரணம்

தரவு முதலிய உறுப்பு, முறையானே வருவது வண்ணக வொத்தாழிசை யென்பர் பேராசிரியர்.

அவர் வண்ணித்துப் புகழ்தலின் வண்ணக மெனப்படும்; என்னை, தரவினானே தெய்வத்தினை முன்னிலையாகத் தந்து நிறீஇப் பின்னர் அத் தெய்வத்தினைத் தாழிசையானே வண்ணித்துப் புகழ்தலின் அப்பெயர் பெற்றதாகலின்.

ஒழிந்த உறுப்பான் வண்ணிப்பினும் சிறந்த உறுப்பு இது என்க.

உரை.சு. வே: 1. உறுப்பினையும்.

எனவே, அகநிலைச் செய்யுட்டாழிசை (இது போல) வண்ணித்து வாரா வென்பதாம் என்பர்.

2. பிறர் கருத்தை மறுத்தல்

இனி வண்ணக மென்பது, அராக மென உரைத்து அவ் வுறுப்புடையன வண்ணக வொத்தாழிசை எனவும் சொல்லு வாரும் உளர். (சொல்லுபவர் காரிகையாசிரியர் முதலியோர்) எல்லா ஆசிரியரும் செய்த வழிநூற்கு இது முன்னூலாதலின் இவரோடு மாறுபடுதல் மரபன்றென மறுக்க என்பர்.

3. பிற்காலத்தார் கூறும் வண்ணக ஒத்தாழிசை

மேலே பேராசிரியர் மறுத்துக் கூறியுள்ளபடி, தரவு, தாழிசை, அம்போதரங்க உறுப்பு, தனிச்சொல், சுரிதகம் என்னும் இவற்றோடும் ஒருங்கு கடுகி நடக்கும் அடியுடைய அராக உறுப்பினையும் தாழிசைப் பின்னர் கூட்டிச் சொல்லப் படுவது யாது, அது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா என்று வழங்கப் படும் என்பர் **யாப்பருங்கல** நூலார். *(யா. வி. கழ. பக். 313)*

இவ்வாறு கூறினாலும், **மயேச்சுரர்** என்பார் ''தலையளவு அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குச் சொல்லப்பட்ட தரவும் தாழிசையும் பெற்ற அடியளவு பெற்றுத் தாழிசைப் பின்னர்த் தனிநிலை பெற்றும் அதன்பின் அராக அடி நான்கு முதலாக எட்டு ஈறாக நாற்சீர் முதலாகப் பதின்மூன்று சீர் ஈறாக, இடை அந்தாதித்து இத்துணைச் சீராலும் அராக அடி பெற்று, அம்போதரங்கத்துக்கு ஓதப்பட்ட அராக அடியின்றிக் குறிலிணை பயின்ற அடிபெற்று அடுக்கிசை, முடுகியல், அராகம் என்னும் மூன்று பெயரும் பெற்றுத் தேவரது விழுப்பமும் வேந்தரது புகழும் வண்ணித்து வருதலின் வண்ணகம் எனப் படும்'' என்பர் *(யா. வி. கழ. பக். 321.)*

4. வண்ணக ஒத்தாழிசை உறுப்பு நான்கே

தொல்காப்பியர் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா 'அந்நால் வகையில் தோன்றும்' என்று குறிப்பிட்டவாறு தரவு, தாழிசை, எண், வாரம் என்னும் நான்கு உறுப்பாலேயே வரல் வேண்டு மென்க.

தாழிசைக்குப் பின் போக்கியலுக்கிடையில் வர வேண்டிய தனிச்சொல் இப் பாவில் தாழிசைக்குப்பின் எண் விதிக்கப் பட்டதால் வரவில்லை என்க. இதனைக் கருதாமல் உரை யாசிரிய ரெல்லோரும் தனிச்சொல் உட்பட ஐந்துறுப்பால் வண்ணகம் வரும் என்று கொள்வர்.

அவ்வாறு கொள்ளின், 'அந்நால் வகையிற் றோன்றும் என்ப' என்றுரைத்த விதியுடனும், பின்னர் இவ்வண்ணகத்தின் இழிபாய்வரும் கொச்சக ஒருபோகு 1. தரவின்றாகித் தாழிசை பெற்றும் 2. தாழிசையின்றித் தரவுடைத்தாகியும் 3. எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும் 4. அடக்கியலின்றி அடிநிமிர்ந் தொழுகியும் என்னும் நான்கு வகையாகவரும் (செய். 143) என்று கூறுவனவற்றுடனும் மாறுகொள்ளும் என்க.

5. முதனிலை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் வண்ணகத் திற்கும் ஒற்றுமையும் வேற்றுமையும்

முதனிலை ஒத்தாழிசைக் கலியும் நான்கு உறுப்புக்களைப் பெற்று வருகின்றது. வண்ணகமும் நான்கு உறுப்புக்களையே பெற்று வருகின்றது. இரண்டும் தரவு தாழிசைகளைப் பெற்று வருகின்றன. இவை ஒற்றுமையாம். முதனிலைக் கலிப்பா தனிச்சொல் போக்கியல்களைப் பெற்றுவருவதும், வண்ணகம் எண்ணினையும் அடக்கியலையும் பெற்று வருவதும் வேற்றுமை யாம்.

6. எண்

வண்ணகத்தின் சிறப்புறுப்பாகிய எண்ணினைத் தொல் காப்பியர் 'முதற்றொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே' (செய். 138) என்னும் நூற்பாவால் உணர்த்துகிறார். இந்நூற் பாவிற்கு **இளம்பூரணர்** ''முதற்றொடுத்த உறுப்புப் பெருகிப் பின் தொடுக்கும் உறுப்புச் சுருங்கிவரும்'' என்று உரை கூறி விட்டு, ''அதனை இரண்டடியான் வருவன இரண்டும், ஓரடி யான் வருவன நான்கும், சிந்தடியான் வருவன எட்டும், குறளடி யான் வருவன பதினாறும் எனப் பிற நூலாசிரியர் உரைப்பர். இவ்வாசிரியர்க்கு வரையறை யிலவாம்'' என்பர்.

இவ்வெண்ணினைப் பிற்காலத்தவர் எவ்வாறு கூறினும், **தொல்காப்பியர்** தேவரைப் பராவும் பொருண்மைத்தாகிய வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, கொச்சக ஒரு போகு, அம்போதரங்கம் என்னும் இவற்றிற்கே அதனை அமைக்கின்றார். அதனால் எண், தேவரைப் பராவவே வரும் என்று தெரிகின்றது.

கடவுள் வழிபாட்டில் 'அருச்சனை' என்றொரு நிகழ்ச்சி உண்டு. அது கடவுள் இயல்புரைக்கும் பெயரைப் பதினாறு, நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு என்னும் எண்முறையில் அமைத்துக் கொண்டு ஒவ்வொன்றையும் கூறி, மலரிட்டு வணங்குவதாகும்.

தொல்காப்பியர் தேவரைப் பரவும் பாட்டில் கூறிய எண்ணிற்கும், அருச்சனையில் கூறப்படும் எண்ணிற்கும் ஒரு தொடர்பு இருக்கின்றது. இன்னுங் கூறினால், தொல்காப்பியர் கூறும் எண், கடவுள் வழிபாட்டில் இப்பொழுது பயின்று வரும் அருச்சனை எண்ணிற்கு அடி என்றே கூறல் வேண்டுமென்க.

7. வாரம்

வாரத்தைப் பற்றி மேலே கூறியுள்ளேன். இது அடக்கியல் வாரம் என்றும் கூறப்படும். இது சுரிதகமும் அன்று; போக்கியல் வைப்பும் அன்று. வாரம், இவ்விரண்டிலும் வேறுபட்டுத் தேவரைப் பராவும் கலிப்பாவிற்கே உரியதாய் வரும். தரவிலும் தாழிசையிலும், எண்ணிலும் கூறப்படும் எல்லாப் பொருள்களையும் விடாமல் தன்னகத்து அடங்குமாறு இயற்றிக்கொண்டு உரைக்கும் பிற்கூறாதலான் இதனை அடக்கியல் வாரம் என்பர்.

ஏனைச் சுரிதகம், போக்கியல் வைப்பு என்னும் இவற்றைப் போலன்றி வாரம் பாடுபவனுக்கு முன்னே கூறியவற்றை யெல்லாம் விடாதமைக்கும் வல்லபம் வேண்டும் என்ற கருத்தால் **தொல்காப்பியர்** மரபியலில்,

> ''முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையும்
> வல்லோன் புணரா வாரம் போன்றே'' (109)

என்று கூறுவர்.

136. தரவே தானும்,
நான்கு மாறு மெட்டு மென்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும்.

என்-னின் தரவிற்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவிற்குத் தரவு[1] அளவு நான்கும் ஆறும் எட்டுமாகிய அளவடியினாலே வரும் என்றவாறு.

ஈண்டு 'நேரடி' என்றது கொச்சகத்தரவு போல வாரா மைக்கு என்று கொள்க.

மேற் சொல்லப்பட்ட[2] ஒன்பதடியினும் மூன்றடியே இதற்கு வருவதென்ற[3] வாறாயிற்று. **(கூசு)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. வண்ணகத்தரவு ஒன்பதடியுள் மூன்றடி

'தரவேதானும்' (செய்.129) என்ற நூற்பாவில் தரவு நாலடிச் சிறுமையாய்ப் பன்னிரண்டடிப் பெருமையாய் இடையி லுள்ள எல்லா அடியாலும் வரும் என்றார். அவை 4,5,6,7,8,9 10,11,12 என்னும் ஒன்பதடியாம். அவற்றுள் மூன்றடி (4,6,8) வண்ணகத்திற்கு வரும்.

பேராசிரியர் *"ஒத்தாழிசையுள் ஏனை யொன்றாகிய தேவ பாணிக்காயின் எட்டும் ஆறும் நான்கும் தரவடியாம். மேற்கூறிய நான்கு முதல் பன்னிரண்டடி ஈறாகத் தரவு வராது" என்பர்.*

இதனுள்ளே தலையளவும் இடையளவும் கடையளவுமென் பன கூறினாரனாம். இங்ஙனம் கூறவே ஒழிந்த உறுப்பிற்கும் தலை யிடை கடை கொள்ளப்படும் என்பர்.

மேலும் அவர் 'நேரடி பற்றிய நிலைமைத்தாகும்' என்பதற் குத் தரவு எட்டு, ஆறு, நான்கு என்னும் சமநிலை பற்றியே

உரை.சு.வே: 1. தரவு நான்கும்
2. சொல்லப்பட்ட அடியினும்
3. வருமென்ற வாறாயிற்று.

வரும்; ஒன்பது, ஏழு, ஐந்து என்னும் வியநிலை பற்றி வரா தென்பர்.

நேரடி பற்றாமலும் தரவு வரும்

பேராசிரியர் நேரடிபற்றிய நிலைமைத்தாகும் என்பதற்கு எழுதிய கருத்தை மேலே பார்த்தோம். வேறு கருத்தைக் கீழே காண்க.

வண்ணக வொத்தாழிசையில் வரும் தரவு, நேரடி (நாற்சீ ரடி) பற்றிய நிலைமைத்தாகவே வரும். ஆனால், இப் பாவின் இழிபாகிய அம்போதரங்கம், எருத்து என்னும் ஒருவகைத் தர வைப் பெற்றுவருமென்க. எருத்தடி என்னும் முச்சீரடியைப் பெற்று வருதலால் இதனை எருத்தென வழங்கினர்.

தரவு நேரடியையும் கலித்தளையையும்பெற்று வரும். எருத்து நேரடிகளையன்றி எருத்தடியையும் பெற்றுவரும் என்க. இவ்வெருத்து, அளவிற் குறைந்த அடியைப் பெற்று வருதலால் குட்டம் என்றும் வழங்கப்படும்; இதனைச் செந்தூக்கியல என்பர்.

இதனால் தரவிலக்கணத்திற் குறைந்தது எருத்து என்றும், தாழிசை இலக்கணத்திற் குறைந்தது கொச்சக மென்றும் வழங் கப்படு மென்க.

இளம்பூரணர் மேலே 'ஈண்டு நேரடி என்றது கொச்சகத்தரவு போல வாராமைக்கு என்று கொள்க" என்பதையும் நோக்குக.

கொச்சகத்தரவு-தரவிலக்கணத்தில் இழிந்த தரவு.

137. ஒத்துமூன் றாகு மொத்தா ழிசையே
தரவிற் சுருங்கித் தோன்று மென்ப.

என்-னின் தாழிசைக்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

இச் சூத்திரம் இறந்தது காத்தது என்று கொள்க.

(இ-ள்) தாழிசையும் தம்முள் அளவும் ஒத்து மூன்றாகி வரும். அவை தரவிற் சுருங்கித் தோன்றும் என்றவாறு. (கஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

பேராசிரியர் இந் நூற்பாவினை இரண்டாகக் கொள்வர்.

தரவகப்பட்ட மரபின (செய். 130) வாதலன்றி ஒத்தாழிசைக்கலி ஒத்து மூன்றாகும் என்றமையின் இந் நூற்பா இறந்தது காத்தலாயிற்று.

138. அடக்கியல் வாரம் தரவோ டொக்கும்.

என்-னின் சுரிதகம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று,

(இ-ள்) அடக்கியலாகிய சுரிதகம்[1] தரவோ டொத்த இலக்கணத்தது என்றவாறு. (கஊ)

139. முதற்றொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே.

என்-னின் எண் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முதற்றொடுத்த உறுப்புப் பெருகிப் பின் றொடுக்கும் உறுப்புச் சுருங்கி[2] எண் வரும் என்றவாறு.

அதனை, இரண்டடியான் வருவன இரண்டும், ஓரடியான் வருவன நான்கும், சிந்தடியான் வருவன எட்டும், குறளடியான் வருவன பதினாறும் எனப் பிற நூலாசிரியர் உரைப்பர். இவ்வாசிரியர்க்கு வரையறை யிலவாம். (கஎ)

140. எண்ணிடை யொழித லேத மின்றே
சின்ன மல்லாக்[3] காலை யான.

என்-னின் மேலதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

உரை.சு.வே: 1. சுரிதகமும்
2. சுருங்கி வரும்
நூ.பா.வே: 3. 'மில்லாக்' ரா.ரா.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட எண் ஒரோவொன்று இடை யொழிந்து வருதல் குற்றமாகாது, தனிச்சொல் இல்லாதவழி என்றவாறு.

எனவே, சொல்லப்பட்ட உறுப்புக்கள் தனிச்சொல் வருவழி இடை யொழியாமல் வருதல் வேண்டும் என்றவாறு.

தனிச்சொல் உளப்பட ஐந்துறுப்புடைத்தாயிற்று.

இனித் தனிச்சொல் இன்றி எண்ணிடையிட்டவழி ஒரு போகெனப் பெயர்பெறும்.

உதாரணம்:—

கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழல்வளை சுழல்செங்கண் அரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்

இதுதரவு

முரசதிர வியன்மதுரை முழுவதூஉந் தலைப்பனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமன்னர்
அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவர் நிலஞ் சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ?

கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணாதா ருடம்பொடு மறம்பிதிர வெதிர்கலங்கிச்
சேணுய ரிருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ?

படுமணி யினநிரை பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்படர வீழ்ந்துதிறம் வேறாக
எருமலி பெருந்தொழுவி லிறுத்ததுநின் னிகலாமோ?

இவை மூன்றும் தாழிசை

இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கையோய் மானு நின்னிறம்

விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொன்னும்
பொருகளி றட்டோய்! புரையு நின்னுடை

இவை பேரெண்

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை
தண்சுட ருறுபகை தணித்த வாழியை
யொலியிய லுவண மோங்கிய கொடியினை
வலிமிகு சகட மாற்றிய வடியினை

இவை அளவெண்

போரவுணர்க் கடந்தோய் நீஇ
புணர்மாருதம் பிளந்தோய் நீஇ
நீரகல மளந்தோய் நீஇ
நிழறிகழைம் படையோய் நீஇ

இவை இடையெண்

ஊழி நீஇ; உலகு நீஇ; உருவு நீஇ; அருவு நீஇ;
ஆழி நீஇ; அருளு நீஇ; அறமு நீஇ; மறமு நீஇ;

இவை சிற்றெண்

என வாங்கு

இது தனிச்சொல்

''அடுதிற லொருவநிற் பரவதும் எங்கோன்
தொடுகழற் கொடும்பூண் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கிடந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைச் செவ்வேல் அச்சுதன்
தொன்றிய லுலகம் முழுவதும்
ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே''

இது ஆறடிச் சுரிதகம்.

இவ்வாறு வருவதனை ஒருசாராசிரியர் அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா எனக் கூறுப. **(கசo)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. சின்னம்

இளம்பூரணர் இந் நூற்பாவைப் புறனடை நூற்பா என்று

கூறுவது பொருந்தும். ஆனால், அவர் கூறும் உரை பொருந்துவ தாக இல்லை.

இந்நூற்பாவில் 'சின்னம்' என்று வந்துள்ள சொற்குத் தனிச்சொல் என்று பொருள் கூறுகின்றார். ஆனால் அவரே மேல் வந்துள்ள 'ஒத்தாழிசையும்' (111) என்ற நூற்பாவுரையில் 'கலிக்குறுப்பாகிய சின்னங்கள் இருசீரானும் முச்சீரானும் வருதலானும்' என்று எழுதுதலால் நால்வகை எண்ணில் இவ் விரண்டும் சிற்றெண் அல்லது சின்னம் என்று வழங்கப் பட்டமை புலனாகும்.

2. நூற்பாப் பொருள்

எண் என்பன ஈரடியால் இரண்டும், அதன்பின் நாற்சீரடி யால் நான்கும், அதன்பின் முச்சீரடியால் எட்டும், அதன்பின் இருசீர் அடியால் பதினாறுமாய் வரும். இவற்றுள் முன் இரண்டும் பேரெண் ஆம். பின் இரண்டும் சிற்றெண் ஆம். அதனால் இந்நூற்பாவிற்கு 'வண்ணக ஒத்தாழிசைக்குப் பேரெண் இடை ஒழிந்து வருதல் குற்றமில்லை, சிற்றெண் ஒழிந்து வராவிடத்து' என்று பொருள் கூறிச் ''சிற்றெண் மட்டும் ஒழியாமல் வரவேண்டும்'' என்பது கருத்தாகக் கொள்க.

3. சின்னங் குன்றியும்

எனவே, பேரெண்ணிலும் சிற்றெண் சிறப்புடைத்து ஆதலால் வண்ணக ஒத்தாழிசைக்குப் பேரெண் ஒழிந்து வந்தாலும், சிற்றெண் மட்டும் ஒழியாது வருதல் வேண்டு மென்றார். ஆனால், பேரெண்ணும் சிற்றெண்ணும் வருதல் சிறந்ததென்க.

இங்குச் சிறந்ததாகக் கூறிய சிற்றெண்ணாகிய சின்னம், கொச்சக ஒரு போகிற்குக் குன்றிவர வேண்டுதலால் 'எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும்' (143) என்பர். அம்போதரங்கத்திற்கும் பேரெண் விதிக்காமல் சிற்றெண் விதிக்கப்பட்டமையையும் நோக்குக.

இருசீரடி முச்சீரடி எண்ணிற்குப் 'பிரிந்திசைக் குறள்' என்றொரு பெயர் உண்டு. (யா. வி. கழ. பக். 341) இவை இரண்டும் சின்னம் என்ற பெயராலும் வழங்கப்படும்.

4. பேராசிரியர் கருத்து

3. நூல் என்னும் வழக்கு

தொல்காப்பியர் காலத்தில் 'பாட்டுரை நூல்' என்னும் நூற்பாவால் பாட்டு முதலியன நூல் என்ற பெயரைப் பெறாமல், இலக்கண நூலே நூல் எனப் பெயர் பெற்றிருந்த தாகத் தெரிகின்றது.

நூல் என்பதற்கு வேறு விளக்கம்

நூல் என்பது நூற்றல் (திரித்தல்) என்ற தொழிலாற் பிறந்த பஞ்சு நூல் என்றும், அது ஒப்பினாகிய பெயராய்ச் செய்யுளுக்கு வந்துள்ளதென்றும் கூறப்பட்ட செய்தி மேலே தரப்பட்டுள்ளது. நூல் என்பதுபற்றி மேலும் எனக்குக் கிடைத்த செய்திகளையும் இங்கே குறிப்பிடுகின்றேன்.

''சூழ்ச்சி உசாவே தேர்ச்சி நூல்என
யாப்புற எண்ணற் கிளவி யாகும்''

என்ற **திவாகர நூற்பா**, நூல் என்பது எண்ணுதற் பொருளில் வரும் என்று கூறுகிறது.

மேற்கூறிய நூற்பா, திவாகரத்துள் செயல் பற்றிய தொகுதியில் கூறப்பட்டிருத்தலால் நூல் என்பது வினைச் சொல்லாக வேண்டும்.

கம்பரும் சொற்களைக் கொண்டு நூல் செய்தலை "நொய்ய சொல் நூற்க லுற்றேன்" என்று கூறுகிறார். சொல்லை நூற்றலாவது சொற்களை எண்ணி எண்ணிப்பார்த்துச் செய்யுள் செய்தலாகும். செய்யுளுக்குத் தெரிந்து மொழிச் செய்தி (தொல். சொல். வேற். 19) என்றொரு பெயரிருத்தலும் மேற் கருத்தினை வலியுறுத்துமென்க.

160. அதுவே தானு மொருநால்[1] வகைத்தே.

என்-னின் நூல் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட நூல் நான்கு வகையை யுடைத்து என்றவாறு. அவையாமாறு முன்னர்க்[2] கூறப்படும். (கசு0)

பதிப்பாசிரியர் விளக்கம்.

இந்நூற்பாவை, நூலின் வகையை உணர்த்துதற்கு யா. வி. ஆசிரியர் இரண்டு இடங்களில் மேற்கோளாக எடுத்தாளுகிறார். (யா. வி. கழ. பக். 3,427)

161. ஒருபொரு ணுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த வோத்தி னானும்
பொதுமொழி கிளந்த[3] படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்
றாங்கனை மரபி னியலு மென்ப.

என்-னின் மேல் தொகை கொடுக்கப்பட்ட நான்கும்[4] ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒரு பொருள் நுதலிய சூத்திரத்தானும் என்பது ஆசிரியன் யாதானும் ஒருபொருளைக் குறித்துக்[5] கூறும் சூத்திரத்தானும் என்றவாறு.

நூ.பா.வே: 1. 'ஈரிரு' பேரா;
உரை.சு.வே: 2. காட்டுதும்.
நூ.பா.வே: 3. தொடரிய.
உரை.சு.வே: 4. "தானமாமாறு"
5. குறித்துக் கூறலானும்

இனமொழி கிளந்த ஒத்தினானும் என்பது இனமாகிய பொருள்கள்[1] சொல்லப்படும் ஒத்தினானும் என்றவாறு.

பொதுமொழி கிளந்த படலத்தானும் என்பது மேற்சொல்லப்பட்ட இனங்கள் பலவற்றையும் கூறப்படும் படலத்தானும் என்றவாறு.

மூன்று உறுப்பு அடக்கிய பிண்டத்தானும் என்பது இம் மூன்றனையும் உறுப்பாக அடக்கிய பிண்டத்தானும் என்றவாறு.

ஆங்கனை மரபின் இயலும் என்ப என்பது அம்மரபினான் இயலும் நூல் என்ப என்றவாறு.

அவற்றிற்கு இலக்கணம்[2] முன்னர்க் கூறப்படும். (கசுக)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பேராசிரியர் உரை

இந் நூற்பாவிற்கு 'இஃது அந் நான்கினையும் பெயரும் முறையும் உணர்த்துதல்' நுதலிற்று என்று நுதலிய துரைத்து, 'நூலுள் ஒரு பொருளையே நுதலிவருவது சூத்திரமெனவும், இனமாகிய பொருளையே தொகுப்பது ஒத்தெனவும், பல பொருட்கும் பொதுவாகிய இலக்கணங் கூறுவது படலம் எனவும், மூன்றுறுப்பினையுடையது பிண்டம் எனவும் கூறிய மரபினான் இயலும் நூல்' என்பர்.

2. ஒரு பொருள் நுதலுதல், நூற்பா இலக்கணம்

தொல்காப்பியர் யாப்பு என்னும் உறுப்பைக் கூறும்பொழுது, எழுத்து முதலாக ஈண்டிய அடியில் குறித்த பொருளை முடிய (முற்றுப்பெற) நாட்டுதலே யாப்பு என்றனர். பின்னர் பா என்னும் உறுப்பினைக் கூறும்பொழுது அறம் முதலாகிய மூன்று முதற் பொருள்களைப் பாவி வருதலே பா என்றனர். கலிவெண்பாவிற்கு இலக்கணங் கூறும் பொழுது, அகப்

உரை.சு.வே: 1. பொருளைச்
2. அவற்றுளிலக்கணம்.

பொருளுள் ஏதாவது ஒரு பொருள் நுதலி வெள்ளடி இயலால் திரிபின்றி வருவதே கலிவெண்பாட்டு என்றனர். ஈண்டும் ஒரு பொருள் நுதலிவருவதே சூத்திரம் என்று கூறுகிறார்.

162. அவற்றுள்
சூத்திரந் தானே
ஆடி நிழலி னறியத் தோன்றி
நாடுத லின்றி பொருணனி விளங்க[1]
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே.

என்-னின் சூத்திரத்திற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சூத்திர மாவது, கண்ணாடி[2] நிழற்போல விளங்கத் தோன்றி ஆராயாமல் பொருள்நனி விளங்குமாறு யாப்பின் கண்ணே தோன்ற யாப்பது என்றவாறு.

ஆடிநிழலின் அறியத் தோன்றுவதாவது, சூத்திரம் படித்த அளவிலே அதனாற் சொல்லப்படுகின்ற பொருள் ஒருங்கு தோற்றல்.

நாடுதல் இன்றிப் பொருள் நனி விளங்க யாத்தலாவது, அதன்கண்[3] யாக்கப் பட்ட சொற்குப் பொருள் ஆராயாமற் புலப்படத் தோன்றுமாறு யாத்தல்.

உதாரணம்:-

''வேற்றுமை தாமே யேழென மொழிப''

''விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே''

(தொல். சொல். வேற்.1-2.)

என்றவழி, யாப்பின்கண்ணே பொருடோன்ற யாத்த[4] வாறும் கண்ணாடி நிழற்போலக் கருதிய பொருளுந் தோற்றிய வாறுங்[5] கண்டுகொள்க. (கசூஉ)

நூ.சு.வே: 1. விளக்கி
உரை.சு.வே: 2. கண்ணாடியின்
3. தன்கண் ஆக்கப்பட்ட
4. யாத்தவாறு
5. தோற்றியவாறு.

பதிப்பாசிரியர் விளக்கம்

1. சூத்திரம்:-

"அவற்றுட் சூத்திரமாவது, கருதிய பொருளைக் கைக் கொண்டு கண்ணாடியின் நிழல்போலத் தெரிவுறத் தோன்றச் செய்யப்படுவது" என்பர். (யா. வி. கழ. பக். 3)

2. இனிச் சூத்திரம் என்ற சொற்குப் பொருள் உரைக்குமாறு:-

"ஏற்புடைப் பொருளெலாந் தோற்று மாறு
சூத்திரித்து நடத்தலிற் சூத்திரம் எனப்படும்"

சூத்திரித்தல் - கருதிய பொருண் முற்றும் அடங்குமாறு எண்ணிச் செய்தல்,

(யா.வி.கழ.பக்.12.)

3. சூத்திரத்திற்கு நூற்பாஅகவல் என்றொரு பெயரும் உண்டு

"நூற்பா வகவ னுணங்க நாடிற்
சூத்திரங் குறித்த யாப்பிற் றாகி
அடிவரை யின்றி விழுமிதி னடக்கும்"

(திவாகரம்.தொகுதி.10)

யாப்பருங்கல விருத்தியாசிரியர் (கழ.பக். 284-285)

ஒருசார் ஆசிரியர் அகப்பா அகவல், புறப்பா அகவல், நூற்பா அகவல், சித்திர அகவல், உறுப்பின் அகவல், ஏந்திசை அகவல் என்று ஆறு விகற்பிற்று அகவல் ஓசை என்பர். அவற்றுள் நூற்பா அகவலாவன:-

விழுமிய பொருளைத் தழுவிய சூத்திர யாப்பினவாய் வருவன. என்னை,

"நூற்பா அகவல் நுணங்க நாடின்
சூத்திரங் குறித்த யாப்பின வாகி
இசைவரம் பின்றி விழுமிதின் நடக்கும்"

என்றாராகலின் என்பர்.

பிங்கல நிகண்டாசிரியர் (ரிப்பன் பிரஸ்-பக். 304)

''அடிவரை யின்றி விழுமிதி னடக்கும்
நூற்பா அகவல் சூத்திர மென்ப''

என்பர்.

4. ஒப்பு

''ஆடி நிழலின்'' என்பதை

''ஆடிநன் னிழலி னீடிருங் குன்றம்
காட்டு வார்போற் கருத்துவெளிப் படுத்து''

என்பதனுடன் ஒப்பிட்டறிக. (சிலப். நூற்கட்டுரை)

5. மரபியல் கூறும் நூற்பா இலக்கணம்

தொல்.மரபியல்.102 ஆம் நூற்பா

''மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை யுரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த வெண்மைத் தாகித்
துளக்க லாகாத் துணைமை யெய்தி
அளக்க லாகா வரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்றெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்''

என்னும் நூற்பா. இது சூத்திரம் எவ்வாறு வரல்வேண்டும் என்று கூறுகின்றது. இந்நூற்பாவில் ''மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு'' என்னும் பகுதிக்கு ''மேல் தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்'' என்று **இளம்பூரணர்** பொருள் எழுதியுள்ளார். ஆனால், **பேராசிரியர்,** ''சூத்திரந்தானே ..... யாத்தமைப்பதுவே'' (செய்.162) என மேற் செய்யுளியலுள் விதந்தோதிய இலக்கணம் உடைத் தாய்;எனவே வழுவமைக்கின்ற கிளவி யாக்கத்து முதற்கண்ணே வினையியலுள் கூறப்படும் இலக்கணத்தினை ஆண்டு ஓர் உபகாரப்படக் கூறியது போல அடிவரையின்மைக்கு ஆண்டுக்

கூறியதல்ல இச்சொல்லப்பட்ட இலக்கணம். ஈண்டு இனிக் கூறுகின்ற இலக்கணத்தோடு கூடி மரபெனவே படும் என்றா னாம்.

ஆண்டுப் பொதுவகையாற் கூறிய நூலிற்கும் இஃதொக்கும் என்னை, பல சூத்திரந் தொடர்ந்து நூலாகி ஈண்டே மரபு கூறப்படுதலின் என்பர்.

163. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.

என்-னின் ஒத்திற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒத்த இனமாகிய[1] மணியை ஒருங்கு[2] சேரவைத்தாற் போல ஒரோ[3]வோரினமாகி வரும் பொருளை ஓரிடத்தே சேர வைத்தல்[4] ஒத்தென்று பெயராம் என்றவாறு.

எனவே அவ்வினமாகிச் சேர்ந்த நிலைக்கு ஒத்தென்று பெயராயிற்று. அது வேற்றுமை யோத்து என்பதனா னறிக. (கசுஙூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. இந்நூற்பா வேறு நூல்களிலும் எடுத்தாளப்பட்டுள்ளது

''நேரின மணியை'' என்னும் நூற்பா, மிகப்பழைய நிகண் டாகிய **திவாகரத்தினும் நன்னூற் பாயிரத்திலும்** இதே வடிவத்தில் எடுத்து வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

2. நேர்தல்—ஒத்தல்

யாப்பருங்கல **விருத்தியாசிரியர்** ஒத்தற் பொருளில் வந்துள் ளமைக்கு 'நேரின மணியை' என்ற பகுதியை மேற்கோள் காட்டுகிறார் (யா.வி.கழ.பக். 233). அவர் ''ஒத்தாவது ஒப்பு

உரை.சு.வே: 1. ஒத்த வினத்ததாகிய 2. ஒருங்கே கோவைப்பட வைத்தாற் போல 3. ஒரோ ரினமாச் 4. வைத்தால்

டைப் பொருளை ஓரிடத்துள் ஒப்புமைப்பட வைப்பதாகும்'' என்பர் (யா.வி.கழ.பக். 3)

பிங்கல நிகண்டு,

''நிரல்பட வைப்பது ஒத்தென மொழிப'' என்று கூறும்.

164. ஒருநெறி யின்றி[1] விரவிய பொருளாற்
பொதுமொழி தொடரி னதுபடல மாகும்.

என்-னின் படலத்திற்கு இலக்கணம்[2] உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஓரினமாகிய நெறியின்றிப் பல நெறியான் வருவன பொருளானே பொதுமொழியாற் றொடர்வுபடின், அது படலம் எனப்பெயராம் என்றவாறு.

அது, கிளவியாக்கம் முதலாக எச்சவியல் ஈறாகக் கிடந்த ஒன்ப தோத்தினும் வேறுபாடுடைய வாயினும், சொல்லிலக் கணம் உணர்த்தினமையாற் **சொல்லதிகாரம்** எனப் பெயர் பெறுதல்.

அதிகாரம் எனினும் படலம் எனினும் ஒக்கும். (**கசூச**)

பதிப்பாசிரியர் விளக்கம்

இந்நூற்பா 'ஒருநெறியின்றி' என்ற இதே வடிவத்தில் திவாகரநிகண்டிலும், நன்னூற் பாயிரத்திலும், யாப்பருங்கல விருத்தியிலும் எடுத்தாளப்பட்டுள்ளது.

படலம் என்றதன் பொருள்—படலத்தின் வேறு பெயர்

''பொதுமொழி தொடர்வது படல மாகும்''

எனப் பிங்கல நிகண்டு கூறும். படலத்திற்கு அதிகாரம் என்னும் பெயரன்றி, வேறு பெயர்களும் உண்டென்பதை,

---

நூ.சு.வே: 1. யன்றி
உரை.சு.வே: 2. இலக்கணமாமா றுணர்த்துதல்.

''படலஞ் சருக்கம் பரிச்சேதங் காண்டம்
இலம்பக மத்தியாய மெய்துநூன் முடிபே''

என்னும் திவாகரத்தாலும்,

''படல மிலம்பகஞ் சருக்கங் காண்டம்
பரிச்சேத மத்தி யாய மாகும்''

என்னும் பிங்கலத்தாலும் அறிக.

இளம்பூரணர் அதிகாரம் எனினும் படலம் எனினும் ஒக்கும் என்று எழுதியுள்ளார். இவ்விரண்டு பெயரே யன்றிப் 'பால்' என்னும் பெயரிருத்தலை, இறையனார் களவியல் உரையாசிரியர், கூற்றினை உணர்த்தும்பொழுது, ''கூற்றிற்கு உரியாரைச் செம்பூட் சேயார் கூற்றியலுள்ளும் தொல்காப்பியனார் பொருட் பாலுள்ளும் கண்டு கொள்க'' என்று கூறுவதால் உணரலாம். **யா. வி. ஆசிரியர்:** 'படலமாவது வேற்றுமையுடைய பல பொருள் களால் தோற்றம் உடைத்தாகத் தொடர வைப்பது' என்பர்.

165. மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயிற்
றோன்றுமொழிப் புலவரது[1] பிண்ட மென்ப.

என்-னின் பிண்டம் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மூன்றுறுப்பினையும்[2] அடக்கின தன்மைத்தாயின் அதனைப் பிண்டமென்று சொல்லுவர் என்றவாறு.

மூன்றுறுப் படக்குதலாவது:- சூத்திரம் பலவுண்டாகி[3], ஒத்தும்[4] படலமும் இன்றாகி வரினும்; ஒத்துப் பலவுண்டாகிப் படலமின்றி வரினும்; படலம் பலவாகி வரினும் அதற்குப் பிண்டம் என்று பெயராம் என்றவாறு.

அவற்றுட் சூத்திரத்தாற் பிண்டமாயிற்று **இறையனார் களவியல்.** ஒத்தினாற் பிண்டமாயிற்று **பன்னிருபடலம்.** அதிகாரத்

நூ.சு.வே: 1. புலவர் பிண்ட
உரை.சு.வே: 2. மூன்றுறுப் படக்கிய தன்மைத்தாயின் பிண்டமென்று சொல்லுவர்.
3. பலவுடைத்தாகி
4. ஒத்தும் படலமும் மூன்றாகி.

தாற் (படலத்தாற்) பிண்டமாயிற்று இந்நூல் **(தொல்காப்பியம்)** என்று கொள்க.

இவற்றைச் (இவைமுறையே) **சிறுநூல், இடைநூல், பெருநூல்** எனப்படும். **(கசூநி)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பேராசிரியர் உரை

''இது பிண்டங் கூறுகின்றது. வாளாதே மூன்றுறுப் படக்கிய பிண்டம் என்றான்மேல். ஈண்டுச்சூத்திரமும் ஒத்தும் படலமும் கூறிய அதிகாரத்தானே அம்மூன்றனையும் அடக்கி நிற்பது பிண்டமென்கின்றானென்பது'' என்று நுதலியதுரைத்து, ''அம்மூன்று உறுப்பினையும் அடக்கிவருவது பிண்டம் என்ற வாறு'' என்று பொழிப்புக் கூறி, ''அம் மூன்றனையும் உறுப் பெனவே, பிண்டம் என்பதாம் உறுப்பின என்பது பெற்றாம். தொல்காப்பியம் என்பது பிண்டம்; அவற்றுள், எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரம் என்பன படலம் எனப்படும்; அவற்றுள் ஒத்தும், சூத்திரமும் ஒழிந்த இருகூறு மெனப்படும்.

'தோன்று மொழிப் புலவரது பிண்டம் என்ப' என்றதனால், பிண்டத்தினையும் அடக்கி நிற்பது வேறு பிண்டம் உளது என்பது. அது முதலூலாகிய அகத்தியமே போலும்; என்னை, அஃது இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் மூன்று பிண்டத்தினையும் அடக்கிநிற்றலின்'' என்று சிறப்புரை கூறி யுள்ளார் இந்நூற்பாவிற்கு

2. விருத்தியாசிரியர் கருத்து

''பிண்டமாவது உறுப்புமூன்றும் உள்ளடக்கி நெறிப்பாடு உடைத்தாய்க் கிடப்பது''

என்பர் (யா.வி.கழ.பக்.3)

166. பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்

பொருண்மர[1] பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே[2] நான்கென மொழிப.

என்-னின் உரை பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பல சொல் தொடர்ந்து பொருள்காட்டுவனவற்றுள் ஓசை தழீஇயவற்றைப் பாட்டென்றார்; ஓசையின்றிச் செய்யுட்டன்மைத்தாய் வருவது நூலெனப்பட்டது[3]. அவ்வகையின்றி[4] வரும் உரைத்திறன் ஈண்டு உரையெனப்பட்டது;

பாட்டிடை வைத்த குறிப்பு[5] என்பது பாட்டினிடை வைக்கப்பட்ட பொருட் குறிப்பினானும் உரையாம் என்றவாறு. அவையாமாறு:-

''ஊர்க்கா னிவந்த பொதும்பருள்''

என்னும் குறிஞ்சிக் கலியுள்,

''இவனைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து''

(கலித். 56) என்றது உரைக்குறிப்பு.

''ஒரூஉ கொடியிய னல்லார்''

என்னும் மருதக்கலியுள்,

''கடியர் தமக்கியார் சொலத்தக்கரா மற்று''

(கலித். 88) என்றதும் அது.

சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவையுள்

''கயலெழுதிய விமய நெற்றியின்
அய லெழுதிய புலியும் வில்லும்
நாவலந் தண்பொழின் மன்னரோ
டேவல் கேட்ப வரசாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலுட்

நூ.சு.வே: 1. பொருளொடு புணராப் பொய்
2. மொழியே
உரை.சு.வே: 3. நன்னூல்
4. அவ்வகையுமின்றி
5. குறிப்பாவது

காலை முரச மியம்பு மாதலின்
நெய்ம்முறை நமக்கின்றாகுமென
ஐயைதன் மகளைக்கூய்க்
கடைகயிறு மத்துங் கொண்
டிடைமுதுமகள் வந்து தோன்றுமன்''

என்றதும் அது.

பாவின்றெழுந்த கிளவி யானும் என்பது, பாக்களை யொழியத் தோற்றிய[1] சொல்வகையானும் உரையாம் என்ற வாறு.

அஃதாவது[2], வழக்கின்கண் ஒருபொருளைக் குறித்து வினவுவாரும், செப்புவாரும் கூறும் கூற்று.

அதுவும் இலக்கணம் பிழையாமற் கூறவேண்டுதலானும் ஒரு பொருளைக் குறித்துச் செய்யப்படுதலானும் செய்யுளாம். இதனைக் குறித்தன்றே ''செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்'' (தொல். சொல். கிள. 13) என்பது முதலாகக் கூறப்பட்ட இலக்கணமெல்லாம் என்று கொள்க.

பொருண்மரபில்லாப் பொய்ம்மொழியானும் என்பது பொருள்[3] இயல்பில்லாப் பொய்ம் மொழியானும் உரைவரும் என்றவாறு.

பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் என்பது பொருளைப் பொருந்திய நகைவழி மொழியாய் வருகின்றது என்றவாறு.

நகைமொழியாவது மேற்சொல்லப்பட்ட உரைபொருந்தா தென இகழ்ந்து கூறுதல். அவ்விகழ்ச்சியின் பின்னர்ப் பொருள் உணர்த்தும் உரை பிறக்குமாதலின் பொருளொடு புணர்ந்த நகை மொழியானும் உரை வரும் என்றார்.

உரை.சு.வே: 1. தோன்றிய
2. 'அஃதாவது' என்பது இல்லை
3. பொருளியைபில்லாத பொருளையுடைத்தாதலிற் பொய்ம் மொழியாயிற்று.

என்று உரைவகை நடையே நான்கு என மொழிப என்பது இவ்வகையினான் உரை நான்கு வகைப்படும் என்றவாறு (கக கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. சிலப்பதிகாரத்தில் உரைப்பாட்டு

''கயலெழுதிய'' என்ற பகுதி சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையுள் ''உரைப்பாட்டு மடை'' என்று கூறப்படுகிறது. அரும்பத உரையாசிரியர் உரையாகிய பாட்டை (செய்யுள்) இடைமடுத்தது என்பர்.

2. பேராசிரியர் உரை

1 ''பாட்டிடை வைத்த குறிப்பினானும்'' என்பது ஒரு பாட்டினை இடைஇடை கொண்டு நிற்குங் குறிப்பினான் வருவன உரை யெனப்படும்; என்னை? பாட்டு வருவது சிறுபான்மையாகலின்; அவை, தகடூர் யாத்திரை போல்வன.

2. ''பாவின் றெழுந்த கிளவியானும்'' என்பது, பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருளெழுதுவன போல்வன. ஒழிந்த பாட்டிற்கும் இவ்வாறே பொருளெழுதின் அஃதொக்கும்.

3. ''பொருண்மர பில்லாப் பொய்ம்மொழியானும்'' என்பது ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லுவன. அவை ஓர் யானையும் குரீஇயும் தம்முள் நட்பாடி இன்னுழிச் சென்று இன்னவாறு செய்தன வென்று அவற்றுக் கியையாப் பொருள்படத் தொடர்நிலையான் ஒருவனுழை ஒருவன் கற்று வரலாற்று முறையான் வருகின்றன.

4 ''பொருளொடு புணர்ந்த நகை மொழியானும்'' என்பது பொருளெனப் படாது பொய்யெனப் பட்டும் நகுதற்கேதுவாகும் தொடர்நிலை. அதுவும் உரையெனப்படும். அவையாவன சிறு குரீஇயுரையும் தந்திர வாக்கியமும் போல்வனவெனக் கொள்க. என்பர் பேராசிரியர்

167. அதுவே தானு மிருவகைத்[1] தாகும்.

என்-னின் மேற்[2] சொல்லப்பட்ட உரை இரண்டு வகைப் படும் என்றவாறு.

இரண்டுவகையாவது[3] மைந்தர்க்கு உரைப்பனவும் மகளிர்க்கு உரைப்பனவுமாம். (கசுஎ)

பதிப்பாசிரியர் விளக்கம்

பேராசிரியர் ''இது அவற்றின் தொகை கூறுகின்றது'' என்று நுதலிய துரைத்து, ''அந்நான்கனுள் முதலன இரண்டும் ஒன்றா கவும், ஏனைய இரண்டும் ஒன்றாகவும் தொகுக்கப்படும் அவ் வாற்றாற் பயன் கொள்ளுங்கால்' என்பர்,

168. ஒன்றே மற்றுஞ் செவிலிக் குரித்தே
ஒன்றே யார்க்கும் வரைநிலை யின்றே.

என்-னின் மேல் இருவகைப்படும் என்ற உரையை உரைத் தற் குரியாரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மகளிர்க்கு உரைக்கும் உரை செவிலிக்குரித்து; மைந் தர்க்கு உரைக்கும் உரை எல்லார்க்கும் உரித்து என்றவாறு.

செவிலி இலக்கணத்தில் உரைக்கின்ற உரையும், பாட்டில் உரைக்கின்ற உரையும் கூறுவளோ வெனின்,[4] அவ்விடங்களில் வரும் உரை, பொருள்பற்றி வருதலின் அப்பொருள் கூறுவ ளென்க.[5]

அன்றியும் 'அதுவே தானும்' என்பது (நால்வகையில் ஈற்றிலுள்ள) பொருளொடு புணர்ந்த நகைமொழியைச் சுட்டிற்

நூ.பா.வே: 1. 'மோரிரு வகைத்தே' பேரா.
'மீரிரு வகைத்தே' நச்.
உரை.சு.வே: 2. மேற்சொன்னவுரை
3. அது
உரை.சு.வே: 4. கூறுவரோ வெனின்
5. கூற லென்க.

றாக்கி, அம்மொழி இரண்டு[1] கூறுபடும் எனப் பொருள் உரைப் பினும் அமையும். (சூ அ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. 'செவிலி இலக்கணத்தில் உரைக்கின்ற உரை' என்றது பாவின்றெழுந்த கிளவியை; 'பாட்டிலுரைக்கின்ற உரை' என்றது பாட்டிடை வைத்த கிளவியை.

2. **பேராசிரியர் உரை** ''இதுவும் மேனின்ற அதிகாரத்தால் இறுதி நின்ற இரண்டன் தொகுதியாகிய ஒன்று செவிலிக்கே உரித்தெனவும், ஒழிந்த இரண்டனானாகிய ஒன்று வரைவின்றி எல்லார்க்கும் உரித்து எனவும் கூறிவாறு'' என்று உரைகூறி, ''தலைமகளை வற்புறுத்தும் செவிலியர் புனைந்துரைத்து நகுவித்துப் (பொழுது) போக்குதற்குரிய ரென்பது இதன்கருத்து. இக்கருத்தே பற்றிப் பிற சான்றோரும் ''செம்முது செவிலியர் பொய்ந் நொடி பகர'' (நெடுநல்வாடை 153) என்றார் என்பது'' என்பர்.

மேலே பேராசிரியர் எடுத்துக்காட்டிய உதாரணப் பகுதியுள்,

''நரைவீரா வுற்ற நறுமென் கூந்தல்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி
இன்னே வருகுவர் இன்றுணை யோரென
உகத்தவை மொழியவும் ஒல்லாள்'' (நெடுநல். 152-156)

என்பதுள் ''குறிவும் நெடியவும் உரை'' என்ற பகுதியை நோக்குக.

169. ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானும்
தோன்றுவது கிளந்த துணிவி னானும்
என்றிரு வகைத்தே பிசிநிலை[2] வகையே.

என்–னின் பிசியாமாறு[3] உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒப்போடே[4] புணர்ந்த உவமை நிலையானும் பிசியாம்; தோன்றுவதனைச் சொன்ன துணிவினும் பிசியாம்[5] என்றவாறு.

உரை.சு.வே 1. யிரண்டுங் கூறப்படுமெனப்
நூ.பா.வே: 2. பிசிவகை நிலையே' பேரா. நச்.
உரை.சு.வே: 3. பிசிநிலை வகையா மாறு
4. ஒப்பொடு
5. தோன்ற வருவதெனச் சொன்ன துணிவினானும் பிசியாம்

உதாரணம்:—

''அச்சுப் போலே பூப்பூக்கும்
அமலே1 யென்னக் காய்காய்க்கும்'' (தெரியவில்லை)

என்பது பிசி. இது உவமை பற்றி வந்தது. (கசுகூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. ஞாபகமும் பிசியும்

''ஞாபகமும் பிசியும் அரும்பொருணடையே'' என்ற திவாகர நூற்பாவின்படியும் ''பொய்யும் சோறும் அரும்பொருளும் பிசியே'' என்ற பிங்கல நூற்பாவின்படியும் ''ஆற்றிய ஞாபகத் தோடு பிசியும் அரும்பொருளாம்'' என்ற கயாதர நிகண்டுப் பாடற்படியும் ஞாபகமும் பிசியும் அரும்பொருள் நடையை உடையன என்று அறிந்து கொள்ளுகின்றோம். இவற்றுள் ஞாபகம் என்பது நூற்பா வகையுள் ஒன்றாம். பிசி என்பது அடிவரையறை யில்லாச் செய்யுளுள் ஒன்றாய் உலகியல் வழக்கில் வரும்.

2. பிசி

பிசியைப் 'பிதிர்' என்று வழங்குதலும் உண்டு. ''மூதுரைப் பெருங் கதைகளும் பிதிர்களும் மொழிவார்'' (கம்பரா. சுந்தர. ஊர் 137) என்பதை நோக்குக. பிசி என்ற சொல்லிற்கும், பிதிர் என்ற சொல்லிற்கும் சிறிது என்பதே பொருளாகும். உலக மக்கள் இதனைப் 'பிசுக்கு' என்று வழங்குகின்றனர்.

பிசி என்பது, அரிய பொருளைத் தாங்கி நிற்றலால் அரும் பொருள் நடையென்றும், இதனுள் அமைந்த சொல்லால் இதனைக் கேட்டோர் விடுவிக்குமாறு அமைந்திருத்தலால் விடுகதை, விடுகவி என்றும், சிறு துணுக்குப் போலிருத்தலால் பிதிர் என்றும், கேட்பவர்க்குப் புதுமையை விளைத்தலால் புதிர் என்றும் இவ்வாறு பல பெயருடையதாக வழங்குகின்றது. விடுவித்தல் என்னும் பொருளுடைய விடுகதையை உலகமக்கள் வெடி என்றும் கூறிவருகின்றனர். பின்னர், பண்ணத்தியில்

உரை.சு.வே; 1. அம்மெனக்

ஒருபகுதி சிறிய உருவத்தில் வருமாதலின் அப்பண்ணத்தி பிசி போல் சிறிதாக வரும் என்ற கருத்தால் ''அதுவே தானும் பிசி யொடு மானும்'' (செய். 174) என்பர். இப் பிசி, உரைநடை யாகவும் இருக்கும்; பாட்டினைப் போலவுமிருக்கும். ஆதலால், இதற்கு விடுகதை, விடுகவி என்றும் பெயருண்டு. கதை, உரை நடை யாதலைக் 'கத்யம்' என்ற சொல்லால் அறிக.

3. பிசிவகை

இப்பிசியைத் தொல்காப்பியர் இரண்டு வகையாகக் கூறு கிறார். ஒன்று ஒப்பொடு புணர்ந்த உவமம் ஆகும். இது உவமையால் கூறிய பொருளை விடுவிக்கும். இதனைக் 'கிண்ணம் போலே பூபூக்கும் கிடாரம் போலே காய்காய்க்கும்' என்பதாலும், மற்றொன்று 'தோன்றுவது கிளந்த துணிவினான்', வருவது. இதனை 'நீராடான் பார்ப்பான் நிறஞ்செய்யான் நீராடின் ஊராடு காக்கை'' என்பதாலும் முறையே 'பரங்கிக் கொடி, நெருப்பென்று உணர்ந்து கொள்ளுமாறு வரும்.

4. அச்சும் அமலும்

இளம்பூரணர் உவமம் பற்றிவரும் பிசிக்கு 'அச்சுப்போலே' என்ற செய்யுளை உதாரணமாகக் காட்டுகிறார். இது ''கிண்ணம் போலே பூபூக்கும் கிடாரம் போலே காய்காய்க்கும்' என்ற பிசிச் செய்யுள்போல் உள்ளது. இச்செய்யுளில் கிண்ணமும் கிடாரமும் உவமப் பொருள். அதுபோல, மேற் செய்யுளில் அச்சும், அமலும் உவமப் பொருளாயிருக்க வேண்டும். அமலை என்பது கடுக்காய்க்கு ஒருபெயர். இராமநாதபுரம் மாவட்டத்துக் கண்மாய்களில் அமலை என் றொரு தாவரம் உள்ளது. அமலை அரிசியைப் பொரித்து ஏழை மக்கள் உண்பார்கள். 'அமலை பொரிந்தாற்போல' என்றொரு பழமொழியும் உண்டு.

170. நுண்மையுஞ் சுருக்கமு மொளியு[1] முடைமையும்
மென்மையு[2] மென்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப.

நூ.பா.வே: 1. 'ஒளியுடைமையும்' பேரா; நச்.
2. 'எண்மையும்' பேரா; நச்.

என்...னின் முதுமொழியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நுண்மை விளங்கவும், சுருக்கம் விளங்கவும், ஒளியுடைமை விளங்கவும், மென்மை விளங்கவுமென்று இன்னோரன்ன விளங்கவும் தோன்றிக்[1] கருதின பொருளை முடித்தற்கு வரும் ஏதுவைக்[2] குறித்தன முதுமொழி யென்று சொல்லுவர்[3] என்ற வாறு. (கா0)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. முதுமொழி

பேராசிரியர் இந்நூற்பாவிற்கு 'எண்மையும்' என்று பாடங் கொண்டு கூரிதாய்ச் சுருங்கி, விழுமிதாய் எளிதாகி இயற்றப் பட்டுக் குறித்த பொருளை முடித்தற்கு வருமாயின், அங்ஙனம் வந்ததனைப் பொருள் முடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவதாகிய முதுமொழி யென்ப புலவர் என்று உரைகூறி,

> ''உழுத வுழுத்தஞ்செய் யூர்க்கன்று மேயக்
> கழுதை செவியிரிந் தற்றால் - வழுதியைக்
> கண்டன கண்க ளிருப்பப் பெரும்பணைத்தோள்
> கொண்டன மன்னோ பசப்பு''

என்றவழி, மற்று வழுதியைக்கண்ட கண்ணிருப்பத் தோள் பசந்தன என்றக்கால், ஒன்றன்வினைப்பயன் ஒன்று நுகர்ந்த தென்புழிக் குறித்த பொருள் இயைபின்மை கூறுதலாயிற்று.

அதனைச் சொற்றொடர் இனிது விளக்கிற்றன்றாயினும் முற்கூறிய முதுமொழி முடித்த தென்பது. என்னை, அதன் கண்ணே அது முடித்தற் கேதுவாகிய இயைபின்மை கிடந்தமையின் என்பது.

இது பருப்பொருட்டன்றி, நுண்ணிதாகிச் சொற் சுருக்க முடைத்தாய், விழுமிதாகி, எளிதிற் பொருள் தோன்றியவாறு கண்டு கொள்க என்பர்.

உரை. சு. வே:
1. தோன்றின கருத்தின் 2. என்பவை. 3. சொல்லப்படும்

ஏது நுதலிய முதுமொழியை அடிவரையறையில்லாத செய்யுளில் வைத்துக் காட்டவேண்டும். பேராசிரியர் இங்கே காட்டுவது அடிவரையறையுடைய வெண்பாப் பாட்டிலாம்.

2. ஏதுநுதலிய முதுமொழியின் பலபெயர்கள்

இதற்குள்ள பல பெயர்களை,

''மூதுரை பழமொழி முதுமையு மெனப்படும்''

''மொழிமை முன்சொல் முதுசொல் பழஞ்சொல்
மொழிந்த நான்குமம் மூதுரை யென்ப''

என்னும் திவாகர நிகண்டால் அறிக.

3. இருவகை

இம் முதுமொழி, பொருளின்றியும், பொருள்பெற்றும் வரும் என்று கூறும் நேமிநாதம்.

''தொன்மொழியும் மந்திரமும் சொற்பொரு டோன்றுதலின்
இன்மையு முண்மையுமா மீங்கு'' (98)

என்று கூறும். ''ஆற்றிற் கெட்ட கழுதைப் பாக்கம் ஊரிருந்த குயவனுக்குப்பாம்'' என்றால் இதனிற் பொருளில்லை. என்னை பொருளில்லாதனவாறெனின்:-

பொருட்டொடர் மொழியாயின துணை யல்லது பொருள் திரண்ட தின்மையின், பொருளில் சொல்லாயிற்று.

இனிக் கெட்டார்க்கு நட்டாரில்லை என்றும், செல்வர்க்குப் புல்லாரில்லை என்றும் இவை பொருள் பெற வந்தன என்ப. (நேமிநாத உரை)

**171. நிறைமொழி மாந்த ராணையிற் கிளக்கும்[1]
மறைமொழி தானே மந்திர மென்ப.**

என்-னின் மந்திரம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நூ. பா. வே: 1. 'கிளந்த' பேரா; நச்.

(இ-ள்) நிறைந்த மொழியை யுடைய மாந்தர் தமது ஆணையாற் சொல்லப்பட்ட மறைந்த சொல் மந்திரம்[1] ஆவ தென்றவாறு.

அது வல்லார்வாய்க் கேட்டு உணர்க. (கஎக)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. மந்திரம்

இளம்பூரணர் மந்திரத்தை 'வல்லார்வாய்க் கேட்டுணர்க' என்று இங்கே எழுதினாலும், தொல். சொல். எச்சவியலில். (53) 'மந்திரப் பொருள்வயின் ஆகுந' என்பது ''நிறைமொழி ..... மந்திரம் என்ப''. அவை கூறப்பட்ட எழுவகை வழுவிற் றீர்ந்து வருக என்ற கடப்பாடில என்றவாறு. அவை:

திரிதிரி சுவாகா
''கன்று கொண்டு கறவையும்
வர்த்திக்க சுவாகா''

-என்றாற் போல வரும் என்றனர்.

2. இருவகை

நேமிநாத ஆசிரியர் ''தொன்மொழியும் மந்திரமும் சொற் பொருள் தோன்றுதலின் இன்மையும் உண்மையுமாம் இங்கு'' என்று கூறினர். அதன் **உரையாசிரியர்** ''திரிக திரிக சுவாகா'' என்பதனிற் பொருளில்லை; ''கன்று கொண்டு கறவையும் வர்த்திக்கசுவாகா'' என்றது பொருளுண்டு என்பர்.

மேற்குறிப்பிட்ட மந்திரம், கறக்கும் பசு, கன்றை உண்ண விடாமலும் பால் கறக்காமலும் இருந்தால் அப்பொழுது செபிக்கும் மந்திரமாகும். அம் மந்திரத்தில் 'கன்று கொண்டு' என்பது கன்று பாலை உண்டு; 'கறவையும் வர்த்திக்க' என்பது கறக்கும் பாலும் மிகுவதாகுக என்று பொருள்படுவ தால் ஒரு கூறுக்குப் பொருள் உண்டு என்றும், 'திரிதிரி சுவாகா' என்பது, அக் கூறுபோல் பொருள் தாராமையால் பொருளில்லை என்றும் கூறப்படுகின்றது.

உரை. சு, வே: 1. 'மந்திரமாம்'

பேராசிரியர் ''நிறைமொழி மாந்தர் என்பது சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையார்; அவர் ஆணையாற் கிளக்கப் பட்டுப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடரெல்லாம் மந்திரம் எனப்படும் என்றவாறு'' என்று பொருள்கூறி, இளம்பூரணரைப் போலவே, ''அவை வல்லார் வாய்க் கேட்டுணர்க'' என உரைத்துத் ''தானே என்று பிரித்தான் இவை தமிழ் மந்திரம் என்றதற்கும், பாட்டாகி அங்கதமெனப்படுவனவும் உள. அவைநீக்குதற்கு மென உணர்க'' என்பர்.

மந்திரத்தைப் பற்றிய செய்தி

தொல்காப்பியர் தொல். சொல். எச்சவியலில் ''மந்திரப் பொருள்வயின் ஆகுந'' (53) என்பதால் மந்திரத்திற்குச் சொல்லிலக்கணக் கடப்பாடுகள் இல்லை என்றும் செய்யுளியலில் வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பில் வழங்கும் எழுவகைச் செய்யுள் நிலத்தில் அம்மந்திரம் 'வாய்மொழி' (75) என்ற பெயருடையதாகுமென்றும், அது ''மறைமொழி கிளந்த மந்திரம்'' (161) என்று வழங்கப்பட்டு, அடிவரையறையில்லாமல் வருமென்றும், நிறைமொழிமாந்தர் ஆணையால் தோற்றுவிக்கப்பட்டு மறைமொழியாயிருந்து (171) மக்கட்குப் பயன்தரும் என்றும் கூறுகிறார்.

172. எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்பு[1] மொழியே.

என்-னின் குறிப்பு மொழி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எழுத்தொடும் சொல்லொடும் புணரா[1]தாகிச் சொல்லினான் உணரப்படும் பொருளின் புறத்ததுவே குறிப்பு மொழி என்றவாறு.

பதிப்பாசிரியர் விளக்கம்

1. வாய்மொழி என்பது பற்றிக் கருத்து மாறுபாடு

பேராசிரியர் மேல் நூற்பாவில் (செய்.158) கூற்றிடை வைத்த

நூ.பா.வே: 1. 'குறிப்பு மொழி யென்ப' பேரா; நச்.

குறிப்பினான என்று ஓதப்பட்டு, இங்கே குறிப்புமொழி என்று கூறப்படும் இதனை, 'பாட்டுரை நூலே' (செய். 75) என்ற நூற்பாவால் கூறப்பட்டுள்ள 'வாய்மொழி' என்பர். ஆனால் பேராசிரியரையே பின்பற்றி உரைகூறும் இயல்புடைய **நச்சினார்க்கினியர்** அவரொடு மாறுபட்டு, ''வாய்மொழி'' என்றதற்கு 'மந்திரங்களும்' என்று பொருள் கூறுகிறார். (தொல்.செய். 79 நச்சினார்க்கினியம்)

2. குறிப்பு மொழி எது?

''பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலம்'' (செய். 75) என்றுகூறப்பட்ட எழுவகைச் செய்யுளில் பாட்டினை 'ஆசிரியம் வஞ்சி (செய். 101) எனத் தொடங்கிப் பல நூற்பாக்களாலும், உரையினை (செய். 158, 166, 167, 168) என்ற நான்கு நூற்பாக்களாலும், நூலினை (செய். 158, 159, 160, 161, 162, 163, 164 165) என்ற எட்டு நூற்பாக்களாலும், வாய்மொழியை (செய். 158, 171) என்ற இரண்டு நூற்பாக்களாலும் பிசியை (செய். 158. 169) என்ற இரண்டு நூற்பாக்களாலும் முதுசொல்லை (செய். 158, 170) என்ற இரண்டு நூற்பாக்களாலும் தொல்காப்பியர் கூறியுள்ளார். இவை போக எஞ்சி நிற்பது அங்கதமாகும். இதனைச் செய்யுளியல் 158ஆம் நூற்பாவால் ''கூற்றிடை வைத்தகுறிப்பு'' என்று கூறி 172ஆம் நூற்பாவாகிய இந்நூற்பாவால் அதனை எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிப் பொருட் புறத்தாய் வரும் குறிப்பு மொழி என்பர்.

3. நிகண்டாசிரியர் கருத்து

திவாகர நிகண்டாசிரியர் 'அங்கதம் தோளணி, அரவு மாகும்' என்னும் நூற்பாவால் அங்கதம் என்ற சொல்லிற்குத் தோளணி, அரவு என்று இரண்டு பொருள் கூறுகிறார். **பிங்கலநிகண்டாசிரியர்** 'அரவு தோளணி வசையிவை அங்கதம்' என்ற நூற்பாவால் மேற்கூறிய பொருளுடன் வசை யொன்றனையும் சேர்த்து மூன்று பொருள் கூறுகின்றார்.

மேற்கூறிய இருவரும் அங்கதம் என்ற சொல்லிற்குக் குறிப்பு மொழி என்ற பொருளைக் கூறவில்லை. செய். 157 நூற்பாக் குறிப்புப் பார்க்க

மேல் (செய்.75) 'அங்கதம்' என்று சொல்லி, ஈண்டுக் 'குறிப்புமொழி' என்றதனான், இச் சொல் வசைகுறித்து வரும் என்று கொள்க.

புகழ் குறித்து வந்தாற் குற்றம் என்னையெனின், அதனை வெளிப்படக் கூறக் கேட்டார்க்கும் தனக்கும் இன்பம் பயத்தலில் குறிப்பினால் கூறல் வேண்டுவது வசை என்று கொள்ளப்படும்.

(கசஉ)

173. பாட்டிடைக் கலந்த பொருள் வாகிப்
பாட்டி னியல பண்ணத்[1] தியே.

என்-னின் பண்ணத்தி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) 'மேல்' இத்துணையும் பாவின்றி[2] வழங்குவனவும் எடுத்தோதினார். இனிப் பிற நூலாசிரியர் விரித்துக் கூறின இசைநூலின் பாவினமாமாறு உணர்த்துதலின் இது .....

பாட்டிடைக் கலந்த பொருள ஆகி என்பது பாட்டினிடைக்[3] கலந்த பொருளையுடைத்தாகி என்றவாறு.

எனவே, அவ்வடி பாவிற்குரிய[4] (அவ்வடிப்பாவிற்குரிய) பொருளே[5] கொள்ளப்படும்.

'பாட்டின் இயல பண்ணத்தியே' என்பது பாட்டுக்களின் இயல்பை யுடையவாம் பண்ணைத் தோற்றுவிக்கும் செய்யுட்கள் என்றவாறு.

பண்ணைத் தோற்றுதலின்[6] 'பண்ணத்தி' என்றார்.

நூ.பா.வே: 1. 'பண்ணத்தி யியல்பே' பேரா.
உரை.சு.வே: 2. பாவும் பாவின்றி வழங்குவனவும்
3. பாட்டின்கண் 4. அப்பாவிற்குரிய
5. பொருள் 6. தோற்றுவித்தலாற்

அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத் தமிழில் ஓதப்படுவன.

அவையாமாறு வருகின்ற சூத்திரத்தாற் கூறுப. (கசஈ)

பதிப்பாசிரியர் விளக்கம்

பண்ணத்தியைப் பற்றிய பல கருத்துக்கள்

1. மாறனலங்கார உரை

''பண்ணத்தி என்பது பாவினம். பண்ணைத் தோற்றுவிக் கையாற் பண்ணத்தியென்று பெயராயிற்று. இவை இளம்பூரணர் முதலாயினாரொருசாராசிரியர் நோக்கம். நச்சினார்க்கினியர் நோக்கமும் உணர்ந்துகொள்க'' என்பர் (மாற. பாயிரம். 26. உரை)

2. விருத்தி ஆசிரியர், களவியல் உரையாசிரியர் கருத்து

யாப்பருங்கல விருத்தியாசிரியர் (யா. வி. கழ. பக். 566) 'செய்யுட்டாமே மெய்பெற வீரிப்பின்' என்று தொடங்கும் நூற்பாவில் 'இசைநுவல் மரபின் இயன்ற செய்யுள்' என்ற ஒன் றினைக் கூறுகிறார்.

இறையனார் களவியல் (1.உரை) சிற்றிசை பேரிசை என்பன கடைச்சங்க நூல் என்று கூறுகின்றது.

யாப்பருங்கல விருத்தியாசிரியர் செந்துறை மார்க்கம், வெண்டுறை மார்க்கம் என்ற இரண்டினை விளக்கும்பொழுது, நாற்பெரும் பண்ணும் இருபத்தொரு திறனும் ஆகிய இவை யெல்லாம் செந்துறை என்றும், மேற்புறமும் பதினோராடலும் என்ற இவையெல்லாம் வெண்டுறை என்றும், செந்துறை பாட் டிற்கு ஏற்றது, வெண்டுறை ஆடற்கு ஏற்றது என்றும், செந் துறையானது, செந்துறையும் செந்துறைச் செந்துறையும் வெண்டுறைச் செந்துறையும் என மூன்றாமென்று கூறி, ஈற்றில் கூறிய வெண்டுறைச் செந்துறைக் குரியதாகச் சிற்றிசை பேரிசை களைக் காட்டுவர். (யா. வி. கழ. பக். 579, 580).

3. பேராசிரியர் கருத்து

அவர் 'பழம் பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன பண்ணத்தி' என்று கூறி, 'மெய்வழக்கல்லாத புறவழக்கினையும் பண்ணத்தி என்ப. இஃது எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருள்களைப் பண்ணத்தி என்பது. அவையாவன:- நாடகச் செய்யுளாகிய பாட்டும், மடையும், வஞ்சிப்பாட்டும், மோதிரப் பாட்டும், கடகண்டும் முதலாயின' என்றுகூறி வல்லார்வாய்க் கேட்டுணர்க என்பர்.

4. பாவும் பாவல்லாதனவும்

அகவற்பா வெண்பா கலிப்பா வஞ்சிப்பா என்பன பாட்டு என்னும் பாவாகுமென்பதும் பா அல்லன வெல்லாம் கொச்சகக் கலிப்பாற்படும் என்பதும் **தொல்காப்பியர்** கருத்தென்றும்; அவ்வாறு கொள்ளாமல், பா அல்லன வெல்லாம் தாழிசை, துறை, விருத்தம் என்னும் இனமாகு மென்பது **காக்கை பாடினியார்** முதலாகிய ஒருசாராசிரியர் கருத்தென்றும்; அல்லாமல் அவை மூவகைப்பட்ட விருத்தங்களுள்ளும் சந்தத் தாண்டகங் களுள்ளுமேபட்டு அடங்கு மென்பது ஒருசார் **வடநூல் வழித்தமிழாசிரியர்** கருத்தென்றும் **யாப்பருங்கலவிருத்தி** கூறும். (*யா.வி. கழ.பக்.486, 487*)

174. அதுவே தானும் பிசியொடு[1] மானும்.

என்-னின் மேற்சொல்லப்பட்டதனுள் ஓர் உதாரணம் உணர்த்துதல நுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட பண்ணத்தி பிசியோடு ஒத்த அளவிற்று என்றவாறு.

'பிசி' என்பது இரண்டடி அளவின்கண்ணே வருவ[2] தொன்றாகலின் இதுவும்[3] இரண்டடியான் வரும் என்று கொள்ளப் படும்.

நூ.பா.வே: 1. 'பிசியொடும் மானும்' பேரா.
உரை.சு.வே: 2. வருவதாதலின்
3. இஃது இரண்டடியாம்

உதாரணம்:—

''கொன்றை வேய்ந்த செல்வ னடியை
என்று மேத்தித் தொழுவோம் நாமே'' (யா.வி.கழ.பக்.253)

இது பிசியொடு ஒத்த வளவிற்றாகிப் பாலையாழ் என்னும் பண்ணிற்கு இலக்கணப் பாட்டாகி வந்தமையிற் பண்ணத்தியா யிற்று. பிறவும் அன்ன. (கசெ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. இளம்பூரணர் உரை பொருந்தாது

''அதுவே பிசியொடு மானும்'' என்றால் பண்ணத்தி பிசியைப்போல் ஒப்பொடுபுணர்ந்த உவமத்தானும், தோன்றுவது கிளந்த துணிவினானும் வரும் என்பதே நேர் உரையாகும். ஆனால் **இளம்பூரணர்** பிசி எந்த அளவில் வருமோ அந்த அளவில் வரும் என்று கூறிக் கொண்டு, பிசி இரண்டடியான் வருமாதலின், இதுவும் இரண்டடியான் வரும் என்பர். பிசியைக் கூறும் நூற்பாவில் பிசி இரண்டடியால் வரும் என்று தொல்காப்பியர் கூறவில்லையாதலின் **இளம்பூரணர்** பிசியைப் போலப் பண்ணத்தியும் இரண்டடியால் வரும் என்று கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை.

2. பேராசிரியர் உரையும் பொருந்தாது

பேராசிரியர் ''அதுவே தானும்'' என்ற நூற்பாவிற்கு 'மேற் கூறப்பட்ட பண்ணத்தி பிசியோ டொக்கும்' என்று பொருள் எழுதிப் பிசியை ஒத்தலென்பது, அதுவுஞ் செவிலிக்குரித்தென்ற வாறு.

'பிசியொடும்' என்ற உம்மையால் பொருளொடு புணராப் பொய்ம்மொழியொடும் பொருளொடு புணர்ந்த நகைமொழி யொடும் ஒக்கும் என்றுணர்க என்பர்.

பிசியைக் கூறும் மேல் நூற்பாவில் பிசி செவிலிக்குரித்து என்ற செய்தி கூறப்படவில்லை; ஆதலால் பேராசிரியர் கூறுவதும் பொருத்தமாகத் தெரியவில்லை.

3. நூற்பாப் பொருள்

பிசி என்பது சிறிது என்ற பொருளில் வரும் ஆதலால், பண்ணத்தியும் பிசியைப் போலச் சிறிதாகி வரும் என்று பொருள் கொள்வதே நன்று. பிசி, பிசிர், பிதிர் என்பனவற்றை நோக்குக.

175. அடிநிமிர் கிளவி யீரா றாகும்
அடியிகந்து வரினுங் கடிவரை யின்றே.

என்-னின் இதுவும் பண்ணத்தி பாகுபடுமாறு[1] உணர்த்து தல் நுதலிற்று.

பண்ணத்தி யெனினும் பாவினம் எனினும் ஒக்கும்.

(இ-ள்) நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே (செய். 31) என்றமையான் அடியென்பது நாற்சீரான்[2] வருவதென்று கொள்க.

(உரை) நாற்சீரடியின் மிக்குவரும் பாட்டுப்பன்னிரண்டும்[3] அவ்வழி அவ்வடியின் வேறுபட்டு வருவனவும் கொள்ளப்படும் என்றவாறு.

இதனாற் சொல்லியது, இருசீரடி முதலாகிய[4] எல்லாவடி யானும் மூன்றடிச் சிறுமையாக ஏறிவரும் பாவினம் என்ற வாறாம்.

பன்னிரண்டாவன ஆசிரியம் வஞ்சி வெண்பாக்கலியெனச் சொல்லப்பட்ட நான்கு பாவினோடுந் தாழிசை துறை விருத்தம் என்னும் மூன்றினத்தையும் உறழப் பன்னிரண்டாம்.

அவற்றுள் தாழிசையாவது:- ஆசிரியத் தாழிசை, வஞ்சித் தாழிசை, வெண்டாழிசை, கலித்தாழிசை என நான்காம்.

நூ. பா. வே: பேராசிரியர் இதனை இரண்டு நூற்பாவாகக் கொள்வர்.
உரை. சு. வே:
1. பகுதிபடுமாறு
2. நாற்சீரின்
3. பன்னிரண்டு வகைப்படும்
4. முதலிய

துறையாவது:- ஆசிரியத்துறை, வஞ்சித்துறை, வெண்டுறை, கலித்துறை யென நான்காம்.

விருத்தமாவது:- ஆசிரிய விருத்தம், வஞ்சி விருத்தம், வெளி விருத்தம், கலிவிருத்தம் என நான்காம்.

அவற்றுள் ஆசிரியத்தாழிசையாவது மூன்றடி ஒத்து வருவது. அது.

''நீடற்க வினையென்று[1] நெஞ்சி னுள்ளி
நிறைமலர்சாந் தொடுபுகையு நீரு மேந்தி
வீடற்குந் தன்மையினான்[2] விரைந்து சென்று
விண்ணோடு மண்ணினிடை[3] நண்ணும் பெற்றி
பாடற்கும் பணிதற்குந் தக்க தொல்சீர்ப்
பசுவன்ற னடியிரண்டும்[4] பணிது[5] நாமே.'' (யா.வி.கழ.பக்.279)

என வரும்.

அவ்வழி, ஒருபொருண்மேன் மூன்றடுக்கி வருவன சிறப்புடைத்தென ஒரு சாரார் உதாரணங் காட்டுமாறு:-

''கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ[6]
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழற் கேளாமோ தோழி[7]

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ [8]தோழி

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ[9]
னெல்லை[10]நம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி[11]'' (சிலப்.ஆய்ச்சி)

இவை மூன்றடியான் மூன்றடுக்கி வந்த ஆசிரியத்தாழிசை என்றவாறு.

உரை.சு.வே: 1. வினை வென்ற 2. தண்மையின் விரிந்து
3. மண்ணிடையே 4. அடியினையே
5. பணிந்து நாமே 6. கனியெறிந்த மாமாயன்
7. தோழீஇ 8. தோழீஇ
9. மாமாயன் 10. எல்லி
11. தோழீஇ

(''இவை அளவடியான் வருதலானும், ஒத்து மூன்றாகி வருதலானும், இவ்வாசிரியர் மதத்தால் தரவின்றிக்கித் தாழிசை பெற்ற கொச்சக ஒருபோகெனப்படும். மேற்காட்டியதே ஆசிரியத் தாழிசை'' என்னும் இப்பகுதி மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பில் இல்லை. ''தரவின்றாகித் தாழிசை பெற்றும்'' என்ற பகுதிக்கு (செய். 143) இளம்பூரணர் எழுதிய உரை வேறு. அதற்குப் பேராசிரியர் எழுதிய உரைக் கருத்தை இங்கே செருகி வைத்துள்ளனர்).

இனி வஞ்சித்தாழிசையாவது, குறளடி நான்கினால் ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வரும்.

''மடப்பிடியை மதவேழம்
தடக்கையால் வெயின்மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்;

இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையால் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்;

பேடையை யிரும்போத்துத்
தோகையால் வெயின்மறைக்கும்
காடக மிறந்தார்க்கே
யோடுமென் மனனேகாண்.'' (யா.வி.கழ.பக்.359,516)

என வரும்.

(இதன்பின், 'அஃதேல், இவையும் மூன்றடுக்கி வருதலிற் கொச்சக ஒரு போகாதல் வேண்டுமெனின் அளவடியான் வாராமையான் ஆகாதென்க என்று எழுதப்பட்ட இப்பகுதி வ.உ.சி. பதிப்பிலும் கழகப்பதிப்பிலும் காணப்படுகின்றது. தாழிசைமட்டும் மூன்றடுக்கி அளவடியால் வந்தால் ஒருபோகு ஆகாது என்பது இளம்பூரணர் உரையால் (செய். 143) தெரிதலால், இதுவும் இடைச்செருகலே)

இனி வெண்டாழிசையாவது, மூன்றடியால் வந்து வெண்பாப் போல இறும். அது,

''நண்பி தென்று நீயே சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்'' (யா.வி.கழ.பக்.77,257)

என வரும்.

சிந்தியல்வெண்பா ஒருபொருண்மேன் மூன்றடுக்கி வருவதனை வெள்ளொத்தாழிசை யென்ப. அது, (தொடர்அடுத்த ஏடு)

''அன்னா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
யொன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் றுறந்து விடல்;

ஏடி யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
நீடான் றுறந்து விடல்;

பாவா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் றுறந்து விடல்.'' (யா.வி.கழ.பக்.-257)

எனவரும்.

கலித்தாழிசையாவது, அடிவரையின்றி ஒத்துவந்து ஈற்றடி சில சீர் மிக்குங் குறைந்தும் வருவது. அது,

''வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தி னெழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தி னெழாதாய்க் குறாஅலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்.'' (யா.வி.கழ.பக்.348)

எனவரும்.

('இத்தாழிசை ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வரினும் கொச்சகவொருபோகெனப் படா (பட்ட என்பதும் பாடம்) கலித்தாழிசை யெனப்படும் ஈற்றடி மிக்கு வருதலால்' என்னும் இப் பகுதியும் இடைச்செருகலே).

இனி, ஆசிரியத் துறையாவது, நான்கடியாய் இடைஇடை சீர்[1]குறைந்து வரும். அது

''கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்மூள்ளி வருகிராயி
னரையிருள் யாமத் தடுபுலியோ நும்மஞ்சி யகன்று போக
நரையுருமே றுங்கை வே[2]லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ'.

(யா.வி.கழ.பக்.280)

எனவரும்.

உரை.சு.வே: 1. இடையடி சிலசீர்
2. நரையுருமோ நுங்கைவே

வஞ்சித்துறையாவது, குறளடி நான்கினால் [1]தனித்துவரும். அது,

''முல்லைவாய் முறுவலித்தன
கொல்லைவாய்க் குருந்தீன்றன [2]
மல்லல்வான் மழைமுழங்கின
செல்வர்தேர் **வரவுகாண்குமே**[3] '' (யா.வி.கழ.பக்.360)

எனவரும்.

இனி வெண்டுறையாவது, மூன்றடிச் சிறுமையாக ஏழடிப் பெருமையாக வந்து இறுதியடிகளில் சில சீர் குறைந்து வரும்.

''குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற் பாய
வழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றுயல்வாழ் மந்தி
கழல்வனபோ னெஞ்சயர்ந்து[4] கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாட வீப்பனோ வல்லன்'' (யா.வி.கழ.பக்.78,259)

எனவரும்.

பிறவும் வந்தவழிக் காண்க[5].

கலித்துறை யாவது நெடிலடி நான்கினான் வருவது[6].

அஃதாவது ஐஞ்சீரான் வருவதும், பதினாலும் பதினேழும் எழுத்துப்பெற்று நான்கடியான் வருவனவுமாம்.

''யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே''
(யா.வி.கழ.பக். 350, 384)

''நல்லார் பழிப்பி லெழிற்செம் பவளத்தை நாணிநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதக மேபுர மூன்றெரித்த
வில்லா னளித்த விநாயக னேயென்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டா ளிருக்க மலர்த்திருவே''

இது நேரசை முதலாகிப் பதினாறெழுத்தான் வந்தது.

உரை.க.வே:

1. தனிவருவது
2. குருகீன்றன
3. வரக்காணேன்
4. கழுழ்வன போ னெஞ்சு நைந்து
5. மேலும் வந்தவழிக் கண்டு கொள்க
6. நெடிலடியாகிய ஐஞ்சீரடி நான்கினான் வருவது. ஓரடி பதினைந்தும் பதினேழும் எழுத்துப் பெற்று வருவன.

''கனிய[1] நினைவொடு நாடொறுங் காதல் செயுமடியார்க்[2]
கினிய னவனொரு வின்னாங் கிலனெவ ரும்வணங்கப்
பனிவெண் பிறைநறுங் கொன்றைச் சடைப்பலி தேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவன்கொல் யானை முகத்தவனே''

(மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை 20, 6)

இது நிரையசை முதலாகிப் பதினேழெழுத்தான் வந்தது.

இனி ஆசிரிய விருத்தமாவது, அறுசீரடி முதலாகிய மிக்க அடி[3]யினான் நான்கடியுமொத்து வரும் அது,

''இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெய[4]
ரினவண்டு[5] புடைசூழ
நுரைக்க ளென்னுமக் குழம்புகொண் டெதிர்ந்தெழ
நுடங்கிய விலயத்தாற்
றிரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத்
திரள்களைக் கரைமேல்வைத்
தரைக்கு மற்றிது குணகடற் றிரையொடும்
பொருதல[6] தவியாதே'' (சூளாமணி.கல்யாண.51)

என வரும். பிறவும் வந்தவழிக் காண்க.

இனி வஞ்சிவிருத்தமாவது, முச்சீரடி நான்காகி வரும். அது,

''இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினாய்'' (சூளாமணி. சீயவதை. 170)

எனவரும்.

இனி வெளிவிருத்தமாவது, நான்கடியானாயினும் மூன்றடியானாயினும் அடிதொறுந் தனிச்சொல் பெற்றுவரும். அது,

''ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா - ரொருசாரார்[7]
கூகூ வென்றே கூவிளி கொண்டா - ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா - ரொருசாரார்
ஏகீர் **நாய்கீர் என்செய்து** மென்றா - ரொருசாரார்''
(யா.வி.கழ. பக். 146, 152, 262)

எனவரும்.

உரை.சு.வே: 1. கலியுந் 2. படுமடியார்க்
3. அறுசீர் முதலாக மிக்க அடி நான்கையும் ஒத்து வருவது
4. ளெனப் பொரு 5. தினவண்டு
6. பொருதலைத் 7. ஆழாவொருசாரர்

இது நான்கடியான் வந்தது.

மூன்றடியான் வருவது வந்தவழிக் காண்க.

இனி, கலிவிருத்தமாவது நாற்சீரடி நான்கினால் வரும்.

''தேம்பழுத் திலியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுந் தளிந்தன[1] சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே'' [சூளாமணி. நகர. 14]

என வரும்.

இவையெல்லாம் உரையிற் கோடலென்பதனாலும் பிற நூன்முடிந்தது தானுடம்படுதல் என்பதனானும் கொள்க. (கஎரு)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. மாறனலங்கார ஆசிரியர் கருத்து

இலக்கண நூல்கள் நூற்பாவால் (சூத்திரம்) செய்யப் படுதலேயன்றிப் பண்ணத்தியாகிய பாவினத்தானும் செய்யப் படும் என்பர் மாறனலங்கார ஆசிரியர்.

''அடிவரை யுளவாய் அடிவரை யிலவாய்
பாட்டினும் பாவின் றெழுகிள வியினும்
காட்டிய யெழுநிலத் தனவாய்க் கழறிய
பொருளொடு கலந்து புரைதீ ரொலிசெறிந் [து]
எண்ணத் தகைசால் ஈரா றடிநிமிர்
பண்ணத் தியினும் பயில்வன வாகும்'' [26]

குறளடி முதலாய ஐவகை யடியானும், வரையறையுளவாம் பாட்டினானும், அடிவரையறை யிலவாம் பாட்டினானும் பாவின்றி யொழுகலாறுடைய பலசொற்றொடரானும் கற்றோர் காட்டப்பட்ட எழுநிலத் தெழுந்த செய்யுள் நடைத்

உரை.சு.வே: 1. தனைந்தன

தாயும் அவற்றுள் பாட்டிற்குக் கூறிய பொருளோடுங் கூடிக் குற்றமற்ற ஓசை செறியப்பட்டுப் புலவரால் எண்ணும்படிக்குத் தலைமை சான்ற பன்னிரண் டெனலாய நாற்சீரடியில் மிகுந்தும் குறைந்தும் வரும் (பண்ணத்தியென்னும்) பாவினத்தோடும் நூல்கள் பயில்வனவாம் என்பது உரை. ''பண்ணத்தியென்றது பாவினம்; பண்ணைத் தோற்றுவிக்கையால் பண்ணத்தி என்று பெயராயிற்று'' என்பர்.

2. இயற்பா இசைப்பாப் போலப் பாட்டும் பண்ணத்தியும்

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திலுள்ள செய்யுட்களை அதில் வல்ல அறிஞர் இயற்பா என்றும், இசைப்பா என்றும் இரண்டு கூறாகப் பகுத்து வழங்குகின்றனர்: அதனைப் போலத் தொல்காப்பியரும் செய்யுள்களைப் பாட்டென்றும், பாட்டின் இயல்பு வாய்ந்த பண்ணத்தி என்றும் இரண்டு கூறாகப் பகுத்துக் கொள்ளுகின்றார்.

3. இசைப்பா என்ற காரணம்

பல இயற்பாக்களுடனே நிறத்தை (இராகத்தை) இசைத் தலால் (இசைத்தல்-சேர்த்தல்) இசை என்று பெயர் பெற்றது. இதனை இராகம் சேர்ந்த பா என்ற பொருளில் இசைப்பா என்பர்.

4. இயலும் இசையும்

தமிழ் என்னும் தலைமகனுக்கு அகவல் முதலிய நான்கு இயற்றமிழ் ஓசைகள் பட்டத்துத் தேவியராகவும், நூற்றுமூன்று பண் ஓசைகள் பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தி யராகவும் அமையுமென்பர். (தமிழ்விடுதூது)

176. கிளரியல் வகையிற் கிளந்தன தெரியின்
அளவியல் வகையே அனைவகைப் படுமே.

(இ-ள்) என்-னின் மேற் சொல்லப்பட்டன தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று[1].

உரை.சு.வே: 1. மேற்சொல்லப்பட்ட பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈண்டுச் சொன்ன வகையினாற் சொல்லப்பட்டன வற்றை ஆராயுங்[1] காலத்து அளவியல்வகை அத்துணைப் பாகு படும்[2] என்றவாறு.

இதனாற் சொல்லிய[3] செய்யுளாவது அடிவரையுள்ளனவும் இல்லனவுமென இருவகைப்படுமென்பதூஉம், அடிவரையுள்ளன ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி எனவும் தாழிசை, துறை, விருத்தம் எனவும், அடிவரையில்லன[4] நூல், உரை, பிசி, முது மொழி, மந்திரம், குறிப்புமொழி என அறுவகைப்படும் என்பதூஉம் உணர்த்தியவாறு.

அஃதேல் மேல் ''அளவியல் வகையே அனைவகைப் படுமே'' (செய்.156) என்ற சூத்திரம் மிகையாதல் வேண்டுமெனின், அது பாவிற்கு அடிவரையறுத்துக் கூறப்பட்டது; இது செய்யுள் **இனைத்தென** வரையறுத் துணர்த்திற்று.[5] (கசகூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

அளவியல் இருவகைப்படும்

பேராசிரியர் ''மேலன வற்றுக் கெல்லாம் புறனடை'' என்று நுதலிய துரைத்து, ''எடுத்தோதிய வகையாற் சொல்லியன ஆராயின் அளவியற் பகுதி அக்கூற்றதாம்'' என்று பொருள் கூறி, ''எடுத்தோதிய வகையானென்பது, நூலும் உரையும் நந்நான்கெனவும், பிசி இரண்டெனவும், முதுமொழியும் மந்திரமும் கூற்றிடை வைத்த குறிப்பும் ஒரோவொன்றெனவும் கூறிவந்த வகையான் அவற்றை இனைத்தென்றெண்ணி அளந்த பகுதியும் அளவியலே யாமாகலின் அவ்வளவியலடி வரையறை கூறியவாற்றானும், அடிவரையறையிலவற்றிற்குக் கூறியவாற் றானும் இரு வகைப்படும் அளவியல் என்றவாறு'' என்று சிறப் புரை கூறியுள்ளார்.

உரை.சு.கே: 1. சொல்லப்பட்டன ஆராயுங்
2. அளவியல் **அவ்வகைப்பாகுபாடும்**
3. சொல்லப்பட்ட
4. அடிவரையில்லனவும்
5. வரையறுத் துணர்த்துதலாயிற்று.

அளவியல் என்றது அப்பா வரையறை (செய்.1.உரை.பேரா.) என்பர்.

அளவியல் என்றது அடிவரையறையை (செய்.1.உரை.நச்.) என்பர்.

(13) திணை

177. கைக்கிளை முதலா யேழ்பெருந்[1] திணையும்
முற்கிளந் தனவே முறையி[2] னான.

என்-னின் நிறுத்த முறையானே திணை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) திணையாவது[3] கைக்கிளையும் முல்லையுங் குறிஞ்சியும்பாலையும் மருதமும் நெய்தலும் பெருந்திணையும் என்னும் இவை[4] முறைமையினான் மேற்சொல்லப்பட்டன என்றவாறு.

முறைமையினாற் சொல்லுதலாவது பாடாண் பாட்டினைக் கைக்கிளைப் புறமெனவும், வஞ்சியை முல்லைப்புறமெனவும், வெட்சியைக் குறிஞ்சிப்புறமெனவும், வாகையைப் பாலைப்புறமெனவும், உழிஞையை மருதப்புறமெனவும், தும்பையை நெய்தற்புறமெனவும், காஞ்சியைப் பெருந்திணைப் புறமெனவும் ஓதிய நெறி கொள்ளப்படும்.

இவ்வாறு கொள்ளவே பதினாலு[5] திணையும் ஏழாகி அடங்குமாயின. (கஎஎ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. நூற்பாவின் உரை

இளம்பூரணர் இந்நூற்பாவிற்கு அதிகார முறை என்னும் உத்தியால் திணை என்பதை வருவித்துக் கொண்டு "திணை

நூ.பா.வே; 1. 'வழுபெருந்' பேரா; நச்.
2. 'முறைநெறி வகையின்' பேரா: நச்.
'முறை முறைமையின்' -சு.வே:
உரை.சு.வே: 3. 'திணையாவது கைக்கிளை முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் பெருந்திணை என்பன'
4. 'அவை'
5. 'பதினான்கு'

யாவது கைக்கிளை முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் பெருந்திணை என்பன'' என்று உரை எழுதுகின்றார்.

பேராசிரியர் அகத்திணையியலில் முதலிலுள்ள ''கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப'' என்று உரைத்த நூற்பா நடைப் போக்கையே மனத்தில் வைத்துக்கொண்டு, ''கைக்கிளை முதல் பெருந்திணை இறுவாய் ஏழும்'' என்று உரைக்கின்றார். நச்சினார்க்கினியரும் இவ் வாறே உரைப்பார்.

ஆனால், அந்நூற்பா நடைவேறு; இந்நூற்பா நடைவேறு. இதனை அறிஞர் உலகம் பிரித்தறிந்து இந்நூற்பாவிற்குப் பேராசிரியர் முதலியோர் கூறும் உரையை விட்டு, வேறு உரையை வகுத்துக்கொள்ள வேண்டும்.

பேராசிரியர் 'பெருந்திணை இறுவாய் ஏழும்' என்று சொல்லை மாற்றி இறுவாய் என்ற சொல்லைவருவித்து உரைகொள்ளு கின்றார். சொல்லை மாற்றாமலே வருவிக்காமலே ''கைக்கிளை முதலாக ஏழாகிய பெருந்திணையும் முற்கிளந்தனவே'' என்று உரைகொள்வது நன்று. இவ்வாறு நூற்பாக்கிடக்கை முறையிலே பொருள் கொண்டால் ''கைக்கிளை முதலாஏழ்'' என்ற தொட ரில் ஏழு திணைகளும் அடங்கிவிடுகின்றன. ''இந்த ஏழும் பெரிய திணை'' என்கின்ற மற்றொரு பொருளும் கிடைக்கின்றது.

அகத்திணை புறத்திணை என்ற இரண்டில் அகத்திணை ஏழும் புறத்திணை ஏழுக்கும் முதலாயிருப்பது பற்றி அவ்வேழி னையும் பெருந்திணை என்று தொல்காப்பியர் கருதுகின்றார். அதனால் ஏழ் திணையும் என்று கூறிவிடாமல், ஏழ் பெருந்தி ணையும் என்று கூறுகின்றார். இவ்வாறு அவர் கூறுவதால் ஏழுக்கும் பெருமை கிடைக்கின்றது.

2. அகத்திணையைப் பெரும்பொருள் என்றல்

அகத்திணை, புறத்திணையினும் பெருமை வாய்ந்ததென் பதை நம்பியகப் பொருள் பாயிரம்,

> ''தொல்காப் பியனருள் ஒல்காப் பெரும்பொருள்
> அகப்பொருள் இலக்கணம்''

என்று கூறுவதாலும் நம்பியகப்பொருள் 251 ஆம் நூற்பா உரையில்,

"பெரும் பொருளகத்து உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே' என்று உரைப்பதாலும் அறிந்து கொள்ளலாம்.

அன்றியும், தொல்காப்பியரே பொருளியலில் (23) 'மிக்க பொருள்' என்பர். இளம்பூரணர் 'மிக்கபொருள்' என்றது அகப்பொருள் என்று விளக்கம் கூறுவர்.

(14) கைகோள்

178. காமப் புணர்ச்சியு மிடந்தலைப் படலும்[1]
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்
றாங்கநால் வகையினு மடைந்த[2] சார்வொடு[3]
மறையென மொழிதன் மறையோ ராறே.

என்-னின் கைகோள் வகையிற் களவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இயற்கைப் புணர்ச்சியும், இடந்தலைப்**படலும்**[4] பாங்கற் கூட்டமும் தோழியிற்[5] கூட்டமு மென்று சொல்லப் பட்ட நான்குவகையாலும் அவற்றைச் சார்ந்துவரு[6] கிளவியாலும் வருவன களவென்று கூறுதல் வேதம் அறிவோர் நெறி என்ற வாறு.

இதனுள் களவென்னாது 'மறை' என்றதனான் இது தீமை பயக்கும் களவன்மை கொள்க.

இன், ஆன் பொருள்பட வந்தது. ஒடு-எண் (கூஅ)

(இன் ஆன்பொருள்பட வந்தது என்ற பகுதி தமிழ்ச் சங்கப் பதிப்பில் இல்லை.)

நூ.பா.வே: 1. 'பாடும்' பேரா; நச்.
2. 'அறைந்த சார்பொடு' சு.வே.
3. 'சார்பொடு' பேரா; நச்.
உரை.சு.வே: 4. 'இடந்தலைப்பாடும்'
5. 'தோழியாற்'
6. 'வருகின்று'

179. மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலும்
இவைமுத லாகிய[1] வியனெறி திரியாது
மலிவும்[2] புலவியு மூடலு முணர்வும்
பிரிவொடு புணர்ந்தது[3] கற்பெனப் படுமே.

என்-னின் கைகோள் வகையிற் கற்பாமாறு[4] உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) களவொழுக்கம் வெளிப்படுதலும் களவொழுக்க மின்றித் தமரானே பெறுதலு மென்று சொல்லப்பட்ட இவை முதலாகிய இயற்கை நெறியிற்றப்பாது மகிழ்தலும், புலத்தலும், ஊடலும், ஊடல் தீர்தலும், பிரிதலும் என்று சொல்லப்பட்ட இவற்றொடு கூடிவருவது கற்பென்று சொல்லப்படுவது என்ற வாறு.

'இயனெறி' என்றதனாற் சுரணத்தின் அமைதல் இன்றி யமையா தென்று கொள்க. (கசஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

பாடவேறுபாடு

மேல்நூற்பாவின் இரண்டாவது அடியில் "இருமுதலாகிய இயனெறி திரியாது' என்று பாடங்கொண்டு "இவ்விரண்டு முதலிய ஆசான்முதலியோர் செய்விக்கும் வழக்கு நெறிதிரியாது' என்று பொருள் எழுதுவர் நச்சினார்க்கினியர்.

பேராசிரியர் மேற்கூறிய பகுதிக்கு "இவ்விரண்டும் முதலாகிய வழக்கு நெறி திரியாது' என்று உரை எழுதுவதால் "இரு முதலாகிய இயனெறி திரியாது'' என்றே பாடங்கொண்டிருத்தல் வேண்டும்.

வெளிப்படை

'மறையென மொழிதல் மறையோ ராறே' என்று மேற்

நூ.பா.வே: 1. 'இருமுதலாகிய' நச்.
2. 'மலிதலும்' சு.வே.
3. 'புணர்ந்தவும்' சு.வே.
உரை.சு.வே: 4. கற்பாகிய கைகோள்

கூறினார்; அம் மறையைச் சுட்டி இந்நூற்பாவில் 'மறை வெளிப் படுதலும்' என்றார்.

இம் மறை வெளிப்படுதலைக் களவியல் ஆசிரியர் 'வெளிப் படை' என்று கூறி, தலைவியின் தந்தையும் தாயும் தன்னையரும் அறிவதே அவ் வெளிபபடை என்பர். (இறை.கள. 26)

180. மெய்பெறு[1] மவையே[2] கைகோள் வகையே.

என்-னின் மேற்சொல்லப்பட்டவற்றைத் தொகுத்துணர்த்து தல் நுதலிற்று.

(இ-ள்) பொருள் பெற வந்த மேற்சொல்லப்பட்ட களவு, கற் பென்னும் இருவகையே கைகோள் வகையாவன என்றவாறு.

ஏகாரம், தேற்றம். (க.அ0)

பதிப்பாசிரியர் விளக்கம்

கைகோள்

''அளவி லின்பத் தைந்திணை மருங்கின்
களவு கற்பெனவிரு கைகோள் வழங்கும்'' (நம்பி.அகம்.26.)

களவு கற்பு என இருவகையாகக் கைகோள் வழங்கும் என வரையறுத்துச் சொன்ன நாற்கவிராச நம்பியார், களவு கற்புக்கிடையே வரைவியலை வைத்துள்ளார்.

பேராசிரியர் 'கைகோள் என்பது ஒழுக்கங்கோடல் என்ற பொருளையுடையது. எனவே, அகத்திற்குப் புறனாயினும், புறத் திணைக்குக் கைகோள் அவ்வாறு வேறு வகைப்படக் கூறப்படா; பொது வகையானே மறைந்த ஒழுக்கமும் வெளிப்பாடும் என இரண்டாகி அடங்கும் அவையும் என்றவாறு. அவை வெட்சி யுள்ளும் ஒழிந்த திணையுள்ளும் காட்டப்பட்டன' என்பர்.

செய்யுளியல் முதற் நூற்பாவுரையில் 'கைகோள் என்பது

நூ.பா.வே: 1. 'மெய்பெற வவையே' நச்.
2. 'வகையே' பேரா.

அவ்வத்திணை யொழுக்க விகற்பம் அறியச் செய்தல். அது களவுங் கற்பும் என்பர்.

(15) கூற்றுவகை

181. பார்ப்பான் பாங்கன் றோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோ
டளவியன்[1] மரபி னறுவகை யோரும்
களவிற்[2] கிளவிக் குரிய ரென்ப.

என்-னின் இனிக் களவினிற்[3] கிளவிக் குரியராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பார்ப்பான் முதலாகச் சொல்லப்பட்ட கலந்தொழுகு மரபினை யுடைய அறுவகையோரும் களவொழுக்கக் கிளவி கூறுதற் குரியர் என்றவாறு.

ஒடு, எண்ணின்கண் வந்தது.

'கலந்தொழுகு மரபு' என்றதனான் பார்ப்பாரினும் பாங்கரினும் சிலரே இதற்கு உடம்படுவார் என்று கொள்க.

பார்ப்பான் உயர்குலத்தோனாகிய[4] தோழன்.

பாங்கன் ஒத்த குலத்தினும்[5] இழிந்த குலத்தினுமாகிய தோழன். (கஅக)

பதிப்பாசிரியர் விளக்கம்

கூற்று

களவியல் உரையாசிரியர்

இனிக் கூற்றென்பது கூறுதற் குரியாரை அறிந்து, அவருள் இன்னார் கூறினார் இப் பாட்டு என்றறிதல். அதற்குரியாரைச்

நூ.பா.வே: 1. 'அளவியன் மருங்கின்' இறை.கள.
2. 'களவினிற்' பேரா; நச்.
உரை.சு.வே: 3. இனிக் கூறப்படுவாரை உணர்த்துவார் களவின்கண் கூறுவாரை - இது வ. உ. சி. பதிப்புப் பாடம்; மேலுள்ளது மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்புப் பாடம்.
4. 'உயர்குலத்தா னாகிய'
5. 'ஒத்த குலத்தானும் இழிந்த குலத்தானும்'

செம்பூட் சேயார் கூற்றியலுள்ளும் தொல்காப்பியனார் பொருட் பாலுள்ளும் கண்டுகொள்க என்றுகூறி ''பார்ப்பான் பாங்கன்' (செய்.181) என்னும் நூற்பாவினையும் ''பாணன் கூத்தன்'' (செய்.182) என்னும் நூற்பாவினையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

> ''தலைவன் தலைவி பார்ப்பான் பாங்கன்
> பாங்கி செவிலியென் றீங்கிவ் வறுவரும்
> சாற்றிய களவிற் கூற்றிற் குரியர்'' (213)

என்று முறை தெரிந்தோதும் நம்பியகப்பொருள்.


இனி வஞ்சித்தாழிசையாவன குறளடி நான்கினால் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிவரும்.
"மடப்பிடியை"
"இரும்பிடியை"
"பேடையை"
என உதாரணம் வரும். 175

இனி வஞ்சிப்பாவாவது வஞ்சியுரிச்சீரானும், இருசீரடி யானும், முச்சீரடியானும், தூங்கலோசையானும் வந்து தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் இறுவது. 113

இனி "வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய" (செய். 21) என்றோதியதனால் ஆசிரியவடியோடும் வெண்பா வடியோடும் கலியடியோடும் மயங்கி வருவன (வஞ் சிப்பா) கொள்க. 113

இனி வஞ்சி விருத்தமாவது முச்சீரடி நான்காக வரும் 175

இனி வெண்சீர் வெண்டளையும், வெண்சீர் நிற்ப வருஞ் சீர் வெண்சீராதல் இயற்சீராதல் வந்து வெண் டளையாக வேண்டுதலின் நிலைமொழியாகிய வெண்சீரை "வெண் சீரிற்றசை நிரையசை யியற்றே" (செய். 28) என ஓதுதலின், அதனை

நிரையியற் சீராக்கினால் வருஞ்சீர் நேர் முதலியற் சீராயின் அதுவும் இயற்சீர் வெண்டளையாம். 52

இனி வெண்டாழிசையாவது மூன்றடியினால் வந்து வெண்பாப்போல இறும். அது "நண்பிதென்று" என வரும். 175

இனி வெண்டுறையாவது மூன்றடிச் சிறுமையாக ஏழ டிப்பெருமையாக வந்து இறுதியடிகளில் சில சீர் குறைந்து வரும். (அது) குழலிசைய எனவரும். 175

இனி வெண்பாவாமாறும் கலிப்பாவாமாறும் முன் னர்க் காட்டுதும். 113

ஈ

ஈங்கு ஓதப்பட்ட தூக்குச் செவிப்புலனாதலின் அத னானே ஓர்ந்துணர்ந்து பாகுபாடறிக. 83

ஈண்டு உறழ்ந்த முறையானே அஞ்சடி முதலாக மேன் மேலும் உறழ வரம்பிலவாம். 49

ஈண்டு (114) ஓதப்பட்டன வெல்லாம் அவ்வாறு (வெண்பா யாப்பால்) வரும் என்றவாறு. 114

ஈண்டுச் சொன்ன வகையினாற் சொல்லப்பட்டன வற்றை ஆராயுங்காலத்து அளவியல் வகை அத் துணைப் பாகுபடும் என்றவாறு. 176

ஈண்டு (தம்மாற்) நம்மாற் சொல்லப்பட்ட செய்யுள் இரண்டு வகை என்று சொல்லுவர் என்றவாறு. 123

ஈண்டு, நாற்சீரடியை எடுத்தோதியது வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலிப்பாவும் அவ்வடியினான் வரு தலின் என்று கொள்க. 64

ஈண்டு, 'நேரடி' எனறது கொச்சகத்தரவு போல வாரா மைக்கு என்று கொள்க. 136

ஈண்டு (யாப்பினைச்) செய்யுள் உறுப்பினுள் ஓதுகின்றா ராதலின் யாதானுமொரு பொருட்கட் பல சொற் றொடுத்து வழங்குங்கால் குறித்த பொருளை

முடிக்க வேண்டும். சொல்லே சேர்த்துக் கூறல் வேண்டுமெனவும், அது மிகாமற் குறையாமற் கூறல் வேண்டு மெனவும் இலக்கணம் கூறல் வேண்டு மென்க. 74

ஈண்டோதப்பட்ட ஐவகை அடிகள் பல தொடுக்கும் வழி ஓரடிக்கோரடி எழுத்தளவு குறைந்து வரினும் சீர்நிலை நான்கின் இழிதலும் மிகுதலுமில்லை. 41

'ஈரசை கொண்டு' (செய்.11) என்னும் நூற்பா முதலாக 'அந்நிலை மருங்கின்' (செய்.30) என்னும் நூற்பா வரை சொல்லப்பட்ட சீர்களின் தொகை எண்பத்து நான்கு. 30

ஈரசைச்சீர் பதினாறில் சிறப்புடைய இயற்சீர் நான்கும் சிறப்பிலியற்சீர் ஆறும் என இயற்சீர் பத்தாம். ஆசிரிய உரிச்சீர் ஆறாம். 30

'ஈற்றடி யளவும் ஒரு பொருளைக் குறித்து, வெள்ளடி யியலாற்றிரிபின்றி முடிவது கலிவெண்பாட்டாம்' என்றவாறு. 147

ஈற்றயலடி முச்சீரான் வருவதனை நேரிசை யாசிரியம் என்ப. 113

ஈற்றயலடி முச்சீரான் வோதப்பட்டது கலிப்பாவின் கண் நாற்சீராகியும் வரும் என்றவாறு. 67

'உண்கடன் வழிமொழிந்திரக் குங்கால் முகனும்' என்னும் (கலித். 22) கலிப்பாவில் தாழிசை மூன் றடியான் வந்தன. 132

'உண்டு' என்னாது 'உள' என்றதனான், ஒரு பாட்டிற் பல வருதலுங் கொள்க. 60

'உண்ணற்க கள்ளை' (குறள். 922) இது தன்மை யாரையும் முன்னின்றாரையும் ஒழித்துப் படர்க்கை யாரைத் தொழிற்படுத்தலின் உண்ணற்க என்னும் படர்க்கைச் சொல் படர்க்கைப் பொருளோடு முடிந்தன. 193

உதாரணம்: (அகைப்பு வண்ணம்) 'தொடுத்த வேம்பின் மிசை' எனவரும். 221

உதாரணம்: (அகப்பாட்டு வண்ணம்) 'பன்மீனு ணங்கல்' எனவரும்.

உதாரணம்: அம்போதரங்க ஒரு போகிற்கு 'கண்ணக னிருவிசும்பில்' (கலித். 102) பிறவும் இந்நிகரன கொள்க. 146

உதாரணம்: (அம்மைக்கு) 'அறிவினா னாகுவ துண்டோ' (குறள். 315) எனவரும். 227

உதாரணம்: (அவையடக்கியலுக்கு) வந்தவழிக் கண்டு கொள்க. 109

உதாரணம்: (அழகு) 'துணியிரும் பரப்பகம்' என வரும். 228

உதாரணம்: (அளபெடை வண்ணத்திற்கு) 'தாஅட் டாஅ மரை' என்னும் பாட்டு. 211

உதாரணம்: 'அறுசுவை யுண்டி' (எனத் தொடங்கும்) இது நேரிசை வெண்பா. 114

உதாரணம்: (இயைபு வண்ணத்திற்கு) 'வால் வெள்ள ருவி' என்ற பாட்டு. 210

உதாரணம்: (உருட்டு வண்ணம்) 'தாதுறு முறி செறி' எனவரும். 224

உதாரணம்: உறழ்கலிக்கு 'யாரிவ னெங்கூந்தல்' என்னும் (கலித். 89) இப்பாட்டுச் சுரிதகம் (போக்கியல்) இன்றி வந்தவாறு கண்டு கொள்க. 149

உதாரணம்: (எண்ணு வண்ணம்) 'நிலம்நீர் வளி விசும் பென்ற நான்கின்' (பதிற். 14) எனவரும் (220).

உதாரணம்: (ஏந்தல் வண்ணம்) 'கூடுவார் கூடல்கள்' எனவரும். 223

உதாரணம்: (எழுசீர் முடுகியலடிக்கு) முன்னர்க் காட்டுதும். 62

உதாரணம்: (ஐஞ்சீரடி அறுசீரடி முடுகியலுக்கு) முன்னர்க் காட்டுதும் 63

உதாரணம்: 'ஐயோ வெனின் யான்' (புறம். 255) இதனுள் அழுகையாகிய மெய்ப்பாடு புலப்பட வந்த வாறு கண்டு கொள்க. 196

உதாரணம்: (ஒத்தாழிசையும் மண்டிலயாப்' மும் நேரடியால் வருதற்கு (முன்னர்க் 111

உதாரணம்: (ஒரூஉ வண்ணம்) 'தொடி நெகிழ்ந்தனவே' எனவரும். 49

உதாரணம்: ஒழுகு வண்ணத்திற்கு 'அம்ம வாழி' என்ற பாட்டு. 218

உதாரணம்: (குட்டம் எருத்தடி யுடைத்தாதலுக்கு) முன்னர்க் காட்டுதும். 112

உதாரணம்: குறிஞ்சிக் கலியுள் 'காமர் கடும்புனல்' (கலித். 39) இவ்வாறு வருவன கொச்சகக் கலிப்பா எனப்படும், 148

உதாரணம்: குறுஞ்சீர் வண்ணத்திற்கு 'உறுபெய லெழிலி' என்று தொடங்கும் பாட்டு. 213

உதாரணம்: 'கெடலரு.....யுருட்டுவோ னெனவே' இவ்வாறு வருவதனை (வண்ணக வொத்தாழிசை) என்னாது ஒரு சாராசிரியர் அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா எனக் கூறுப. 140

உதாரணம்: (கைக்கிளை வெண்பா) 'பொன்னார மார்பின்' எனத் தொடங்கும் பாட்டு.

உதாரணம்: (சித்திர வண்ணத்திற்கு) 'ஓரூர் வாழினும் சேரி வாரார் சேரி வரினு மார முயங்கார் என' வரும். 214

உதாரணம்: 'சூரல் பம்பிய' என்ற இதனாற் பயன் வரைந்து கோடல் வேண்டுமென்பது. 195

உதாரணம்: 'சேற்றுக் கானீலம் (எனத்தொடங்கும்) இஃது இன்னிசைப் பஃறொடை. 114

உதாரணம்: (தாஅ வண்ணத்திற்கு) 'தோடாரெல்

வளை' என்னும் பாட்டு 207

உதாரணம்: (தூங்கல் வண்ணம்) 'வசையில் புகழ் வயங்கு வெண்மீன்' (பட்டினப்பாலை) எனவரும். 222

உதாரணம்: (தொடைகட்குத் தத்தஞ் சிறப்புச் சூத்திரங் களுட் காட்டுதும்

உதாரணம்: (தோல்) 'திருமழை தலைஇய விருணிற விசும்பு' என்னும் கூத்தராற்றுப்படை பரந்த மொழியான் அடிநிமிர்ந்து வந்தது. 230

உதாரணம்: (தோல்) 'பாயிரும் பரப்பகம்' (மார்க்கண் டேயனார் காஞ்சி) என்றது இழுமென் மொழியால் விழுமியது நுவல வந்தது. 240

உதாரணம்: (நலிபு வண்ணத்திற்கு) 'அஃகாமை' (குறள். 778) எனவரும். 215

உதாரணம்: நிலவு மணலகன்றுறை' (என்ற பாட்டு) (புறப்பாட்டு வண்ணத்திற்கு). 217

உதாரணம்: 'நீ விளையாடுக' (நற். 362) என்பதனுட் கண்டுகொள்க. 186

உதாரணம்: (நெடுஞ்சீர் வண்ணத்திற்கு) 'நீருர் பானா யாறே காடே' எனத் தொடங்கும் பாட்டு. 212

உதாரணம்: 'நெறியறி செறிகுறி' (கலித். 39) (முடுகு வண்ணத்திற்கு) எனவரும். 225

உதாரணம்: பட்டிப் பாலையுள் 'கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை' (26) என்பது வெண் பாவடி. 113

உதாரணம்: பட்டினப் பாலையுள் 'நேரிழை மகளி ருணங்குணாக் கவரும்' (22) என்பது ஆசிரியவடி.

உதாரணம்: பட்டினப்பாலையுள் 'வயலாமைப் புழுக் குண்டு வறளடும்பின் மலர் மலைந்து' (143) என்பது கலியடி 113

உதாரணம்: (பாஅ வண்ணத்திற்கு) 'அஇ உஅம் மூன்றுஞ் சுட்டு' (நூன். 31) 'கொல்லே ஐயம்' (இடை. 20) 'எல்லே யியக்கம் (இடை. 21) என வரும். 206

உதாரணம்: 'பாடின்றி திறத்தே' (கலித். 16) இது நான்கடித்தரவும் நான்கடியான் மூன்று தாழிசையும் தனிச்சொல்லும் ஐந்தடிச் சுரிதகமும் வந்த ஒத்தாழிசைக் கலிப்பா. 132

உதாரணம்: பிசி 'அச்சுப் போலே' என்பது பிசி; இது உவமை பற்றி வந்தது. 169

உதாரணம்: (புலன்) 'பார்க்கடன் முகந்த' என வரும் 233

உதாரணம்: (மண்டிலமும் குட்டமும் செந்தூக்காய் வருதற்கு) முன்னர்க் காட்டுதும். 113

உதாரணம்: 'மரையா மரல் கவர' (கலித். 6) என வரும். இது வெண்டளையான் வந்த வெண்கலிப்பா. 147

உதாரணம்: 'முதுக் குறைந்தனளே' இஃது இறந்த காலத்தின்கண் புணர்ச்சி யுண்மை தோன்ற வந்தது. 194

உதாரணம்: முன்னர்க்காட்டுதும் 60, 64, 69

உதாரணம்: (மெல்லிசை வண்ணத்திற்கு) 'பொன்னினன்ன' என்ற பாட்டு. 209

உதாரணம்: வந்தவழிக் காண்க. 184

உதாரணம்: (வல்லிசை வண்ணத்திற்கு) "வட்டொட்டியன்ன" என்னும் பாட்டு. 208

உம்மை எச்ச வும்மை யாகலான் இலக்கணம் கூறவும் படும். 116

உம்மை எதிர்மறை. 186

உம்மை எதிர்மறை ஆகலான் உயிரளபெடை அசையாக நிற்கப் பெறாமை பெரும்பான்மை. 16

உம்மையால் (ஆறுமெய்) பெறாதும் என்று கொள்க. 148

உம்மையால் (ஐஞ்சீர் அடுக்கி) வாராதும் (கொச்சகக் கலி வரும்) என்று கொள்க. 148

உம்மையால் (கொச்சகக் கலி) இயற்கை வழாமற் றோன்றியும் என்று கொள்ளப்படும். 148

உயிர் 12; கதநபம உயிர்மெய்யெழுத்து 60, சகரம் 9, வகரம் 8, யகரம் 1, ஞகரம் 3 இவ்வகையினான் முதலெழுத்துத் தொண்ணூற்று மூன்று. 97

உயிர் மெய்யெழுத்து இருநூற்றொருபத்தாறில் ங வ் வருக்கம் ஒழிந்த எழுத்து இருநூற்று நாலினையும் கிளையெழுத்தினோடுறழ இரண்டாயிரத்து நாலூற்று நாற்பத்தெட்டாம். இதனோடு ஒற்றுப் பத்தொன்பதும் குற்றுகரம் ஆறுங் கூட்ட எதுகைத் தொடை இரண்டாயிரத்து நானூற்று எழுபத்து மூன்று பாகுபாடாம். 97

உயிர் மோனை. 98

உயிரளபெடை அசையாக நிற்கவும் பெறும். 16

உயிரளபெடை மூன்று மாத்திரை. 2

உயிரில்லாத எழுத்தும் எண்ணப்படா (அவை) உயிர் போல இயக்கமின்மையான். 42

உயிரில் லெழுத்தும் என்றதிலுள்ள உம்மை எச்சவும்மை யாதலாற் குறுகிய உயிர்த்தாகிய குற்றிய லிகரமும் குற்றியலுகரமும் எண்ணப்படா. 42

உயிரின் கிளையெழுத்து 132

க,த,ந,ப,ம என்னும் இவ் உயிர் மெய்யின் கிளையெழுத்து.	660	
சகர உயிர் மெய்யின் கிளையெழுத்து.	72	
வகர உயிர் மெய்யின் கிளையெழுத்து.	56	
யகரத்திற்குக் கிளையில்லை.	0	
ஞகர உயிர் மெய்யின் கிளை.	6	
ஆகக் கிளையெழுத்து	926	97

உயிருங் மெய்யுங் கூடி உயிர்மெய் யெழுத்தாம். 2

உயிரெதுகை. 98

உயிரெழுத்து குற்றெழுத்து நெட்டெழுத்து அளபெடை யென மூவகைப்படும். உயிரெழுத்து மொழி இடை

யில் வராது. அதனால் அதற்கெதுகையில்லை. 97

உயிரெழுத்து மொழியீற்றின்கண் உயிர்மெய்யாகி வருதலின் அவை இயைபுத் தொடைக்கு ஆகா. 97

உரியசைப் பின்னர் நேரசை வரின் அது இயற்சீரென வரும். 14

உரியசை மயங்கிவந்தன ஆசிரியவுரிச்சீரெனப்படும் 12

உரியசையாகிய நேர்பும் நிரைபும் என்றவற்றைத் தம்மினுறழ நான்கு சீராம். அவை ஆசிரிய உரிச்சீர் எனப்படும். 12

உரியசையீற்றான் வருவதனை உரியசையீற்று வஞ்சியடி எனவும். 48

உரியசை யீற்று வஞ்சியடியும் அவ்வாறே உறழப் பத்து வகைப்படும். 48

'உரிய தன்சீர்' என்றது ஐந்தடினும் ஏற்றவழி நிலை பெறுந் தன்சீர் என்று கொள்க. 52

உருட்டு வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 224

உருட்டு வண்ணமாவது அராகந் தொடுக்கும். 224

'உருவுகண் டெள்ளாமை' (குறள். 667) இது விகற்பத் தொடையான் வருதலின் விகற்பக் குறள் வெண்பா என்ப. 114

உரைபாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று. 166

உரையிற் கோடல் என்பதனால் இவையெல்லாம் கொள்க. 114

உரையிற் கோடல் என்பதனானும். 175

உரையிற் கோடலென்பதனாற் கொள்க. 113

(உரையின்) இரண்டு வகையாவது மைந்தர்க்கு உரைப்பனவும், மகளிர்க்கு உரைப்பனவுமாம். 167

'உலக முவப்ப ..... வாணுதல் கணவன்' (திருமுரு. 1-6) என்றவழி ஒளி என்பது. அதனையற் கிடந்த தாளை நோக்காது கணவனை நோக்குதலின் இடையிட்டு நோக்கிற்று. 100

'உலக மூன்றும்' என்ற பாட்டு (இரண்டடி எதுகைக்கு வரும்) 98

'உள' என்றதனாற் (ஆசிரியப்பாவின்கண் இயற்சீர் வெள்ளடி) பல அடியும் வரப்பெறுமென்று கொள்க. 59

உறழ் கலிப்பாவிற்கு இலக்கணம் கூற்றும் மாற்றமும் விரவி வந்து சுரிதகம் (போக்கியல்) இன்றி முடிதல் என்றவாறு. 149

உறழ்கலியும் கொச்சகக் கலிப்பாற்படும். 155

உள

ஊரிலுள்ளாரும் சேரியிலுள்ளாரும், அயன் மனையிலுள்ளாரும் நோய்ப்பக்கம் குறிப்பினாலறிவாரும் தந்தையும் தமையனும் இருவகைக் கைகோளினும் பட்டதனை உட்கொண்டு பிறிதொன்றை எடுத்து மொழியினல்லது பட்டாங்கு கூறிலின்மை வலியுற்றுத் தோன்றும் என்றவாறு. 183

எ

எட்டாவது செய்யுளியல் முற்றும். 235

எடுத்து என்பது அறம் பொருள் இன்பங் கட்குத் தகாத சொற்களை எடுத்துக் கூறுதல். 187

எடுத்தோத்தும் பெரும்பான்மை (ஆதலால்) அளவடிக் கண் வஞ்சியுரிச்சீர் மயங்குப வுளவேற் கொள்க. 54

எண்ணாகிய உறுப்புக்களை இடையிட்டுத் தனிச் சொல் வாரா தொழியினும் (கொச்சக ஒரு போகு என்க).

எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றியதிற்குச் செய்யுள் 'மாமலர் முண்டகம்' (கலித். 133).

எண்ணுப் பயின்று வருவது எண்ணு வண்ணமாம் என்றவாறு. 220

எண்ணு வண்ணம் உணர்த்துதல் நுதலிற்று. 220

எண் (வண்ணக வொத்தாழிசை உறுப்பு) ஆமாறு

உணர்த்துதல் நுதலிற்று. 139

எதுகைக்கு உதாரணம்: 'அடிதாங்கு' (கலித். 11) என வரும். 89

எதுகைத் தொடை இரண்டாயிரத்து நாலூற்று எழுபத்து மூன்று பாகுபாடாம். 97

எதுகைப் பொழிப்பு இருநூற்றிருப்பத்தொன்பது. 97

எதுகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 89

எதுகையென ஓதினாராயினும் 'வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனான் மோனை, இயைபு, முரண், அளபெடை என்பனவும், பொழிப்புத் தொடையாம் என்று கொள்ளப்படும். 94

'எந்தையும்' (அகம். 12) இது தந்தைக் கிளவியை உட் கொண்டு கூறியது. 183

எய்தியதன் மேற் சிறப்புவிதி (தொடைப் பாகு பாட்டிற்கு) உணர்த்துதல் நுதலிற்று. 98

'எருத்தடியுடைத்து' என்றதனானே ஈற்றயலடி முச்சீர் எனப்பொருள்படுமோ வெனின், ஆசிரியப்பாவின் ஈற்றயலடி மூச்சீராய் வருதல் பெருவழக்காத லானும் இனிவருகின்ற சூத்திரம் 'செந்தூக்கிய' வென ஓதுகையானும் இவ்வாறு பொருள் படும் என்று கொள்க. 112

'எருத்து' என்பது இரண்டடி இறுதியாகப் பத்தடிப் பெருமையாக வருவதோர் உறுப்பு. 117

எருத்து என்பது இவ்வாசிரியர் கருத்தினான் தரவென் பது போலும். 117

எருத்து என்பது தரவு. 146

எல்லாவடியும் ஒத்து வருவதனை நிலைமண்டில வாசிரியம் என்ப. 113

'எல்லா விளக்கும்' (குறள்.74) இது இடையின வெதுகை 98

எழுகூற்றிருக்கை முதலாகிய. 98

எழுசீரடிக்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று. 62

எழுசீரான் வரும் முடுகியலடி என்றவாறு. 62

எழுத்தந்தாதி. 98

எழுத்தியலாவது: உயிரெழுத்து மெய்யெழுத்து சார் பெழுத்தென மூவகைப்படும். 2

எழுத்து முதலாக அசை சீர் அடியென ஈண்டிய (ஈண் டோதப்பட்ட சு.வே) அடியினால் தான் குறித்த பொருளை இறுதியடியளவும் முற்றுப்பெற நிறுத்து தல் யாப்பு என்று சொல்லுவர் புலவர். 74

எழுத்துவகை அமைந்த நாலெழுத்து முதலாக இருப தெழுத்தீறாகச் சொல்லப்பட்ட பதினேழ் நிலத்தும். 48

எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிச் சொல்லி னால் உணரப்படும் பொருளின புறத்ததுவே குறிப்பு மொழி என்றவாறு. 172

எழுநில மாவன: பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன. 157

எழுபது வகைப்பட்ட உறழ்ச்சியின் வழுவுதலின்றி. 48

எழுவகை வழுவும் படாமற் புணர்ப்பது. 76

எற்றிற்கு? (உறழ்கலியில்) இறுதியின்கண் வந்தது சுரி தகமாகாதோவெனின்? சுரிதகமாகாது. சுரிதகமா வது ஆதிப்பாட்டினும் இடைநிலைப் பாட்டினும் உள்ள பொருளைத் தொடுத்து முடிப்பது. இஃது அன்னதன்றென்க. 149

'எறும்பி யளையிற் குறும்பல் சுனைய' (குறுந். 12) என்னும் பாட்டுள் முதலடி இயற்சீர் வெள்ளடி யாதலின் வெள்ளடி விரவிய ஆசிரியம் எனப்படும். 113

என்பதும் அது. (ஒரு போகு பாகுபடுமாறு உணர்த் துதல்). 142

என்பதுவும் ஒரு சார் கூற்றிற்கு உரியார் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று. 190

என்னை, வெண்பாவாவது பிறதளையோடு மயங் காமையானும் மிக்குங் குறைந்தும் வாராத அளவடி

யான் வருதலானும் அந்தணர் நீர்மைத்தென முற் கூறினார். 101

எனவரும். 98

எனவே அவ்வினமாகிச் சேர்ந்த நிலைக்கு ஒத்தென்று பெயராயிற்று. 163

எனவே, இடமுங் காலமும் உணர்ந்து, கேட்போர்க்குத் தக்கவாறு மொழிதலும் செய்யுள் உறுப்பாம் என்றவாறு. 199

எனவே, இடையுள்ள அடிகளெல்லாம் (வெண்பாவிற்கு) உரிய. 151

என்வே, இருவாற்றானும் செய்யுள் செய்யப்பெறும் என்றவாறு. 125

எனவே, (எச்சம்) சொல்லெச்சம் குறிப்பெச்சமென இருவகையாயின. 198

எனவே, ஏனையோர்க்கே (நற்றாய்) கூறும் என்ற வாறாம். 184

எனவே, ஏனையோர் கேட்பக் கூற்றில்லை என்ற வாறரம். 185

எனவே, ஒத்தாழிசைக்கு உறுப்பாகியவற்றுள் ஒன்றும் (இரண்டும்) குறைந்து வருவன கொச்சக வொரு போகெனப் பெயர் பெறும் என்று கொள்க. 143

எனவே, சீர்தானே ஓசையைத் தரும் என்றவாறாம். 32

எனவே, சொல்லப்பட்ட உறுப்புக்கள் தனிச்சொல் வரு வழி இடையொழியாமல் வருதல் வேண்டும் என்றவாறு. 140

எனவே, (தளைவகை) ஒன்றுந் தன்மைக்கண் நெடிலடி யும் சிலவரும் (வெண்பாவிற்கு) என்று கொள்க. 55

எனவே, (தூக்கு) இன்னும் உளவோவெனக் கருதற்கு என ஐயந்தீர்த்தவாறு. 83

எனவே, (பண்ணத்திக்கு) அவ்வடி பாவிற்குரிய பொருளே கொள்ளப்படும். 173

எனவே, பதினைந்தெழுத்து முதலாக நெடிலடியினும் கழிநெடிலடியினுமே (வஞ்சியுரிச்சீர்) உறழப் பெறுவதென்றவாறாம். 54

எனவே, (பரிபாடல்) அறத்தினும் பொருளினும் வாராதாம். 117

எனவே, (பரிபாடல் 400-25) இடை எல்லா அடியானும் வரப்பெறும் என்றவாறு. 155

எனவே, (புறநிலை வாழ்த்து) வெண்பாவினும் ஆசிரியப் பாவினும் இவை இரண்டும் புணர்ந்த மருட்பாவினும் வரப்பெறும் என்ற வாறாம். 106

எனவே, மருட்பாநான்கு பொருளினல்லது வரப்பெறா என்றவாறு. 154

எனவே, முடுகியலாகி வரும் மூவகையடியும் கலிப்பாவினுள் நிற்கப்பெறும் என்றவாறாயிற்று. 64

எனவே, முன்னைய வொப்ப (வாயுறை வாழ்த்து முதலிய மூன்றும்) ஏனை இரண்டினும் (வெண்பாவினும் ஆசிரியப்பாவினும்) வரப்பெறும் என்றவறாம். 107

எனவே, யாப்பாவது பாட்டியாப்பு, உரையாப்பு, நூலியாப்பு, மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, பழமொழியாப்பு என ஏழுவகைப்படும். 74

எனவே, வகுத்துணர்த்துவார்க்கெல்லாம் இடனுடைந்து என்றவாறாம். 99

எனவே, வஞ்சியடி இருசீரடியானும் மூச்சீரடி யானும் வரும் என்றவாறாம். 45

எனவே, வலி இல்வழிச் சிறுபான்மை நிகழவும் பெறும். 183

எனவே, (வெண்பா) அகவுதலில்லாத ஓசையாம். 78

ஏ

ஏகபாதம் 98

ஏகபாதம் எழுகூற்றிருக்கை முதலாகிய சித்திரப் பாக்களாகும். 98

ஏகாரம் தேற்றம். 180

ஏழுபாகுபட்ட இவை நேரொன்றாசிரியத்தளை, நிரை யொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை யென எழு வகையாம். 48

ஏந்தல் வண்ணம் உணர்த்துதல் நுதலிற்று. 223

ஏந்தல் வண்ணமாவது சொல்லிய சொல்லினானே சொல்லப்பட்டது சிறக்கவரும் என்றவாறு. 223

ஏறிய உயிரினளவே உயிர்மெய்க்களவு. 2

ஏனைத் (இயற்சொல்லல்லாத திரிசொல் திசைச்சொல் வடசொல்லானும்). 76

ஏனையவும் வந்தவழிக் கண்டு கொள்க. 114

ஏனையவை புணருஞ்சீரான் வந்தன. 61

'ஏனையொன்றே' என்ற ஒத்தாழிசைக் கலிப்பா, முன் னிலை யிடத்துத் தேவரைப் பராவும் பொருண் மைத்து என்றவாறு. 133

ஐ

ஐகாரக் குறுக்கம் அளபெடையும் தனியும் அல்லாத வழிக் குறுகும். 2

ஐகாரக் குறுக்கம் ஒரு மாத்திரை. 2

ஐஞ்சீரடி பல வந்தும் (கொச்சகக் கலிவரும்) என்றவாறு. 148

ஐந்தடி முதற் பன்னிரண்டடிகாறும் வருவன பஃ றொடை வெண்பா (நெடுவெண்பாட்டு) எனப்படும். 114

ஐவகையடியால் வரும் ஆசிரியப்பா நாலெழுத்து முத லாக இருபதெழுத்தீறாக வருவனவற்றிற்குத் தனித் தனி எடுத்துக்காட்டு. 50

'ஐவகையடியு முரிய' வென அவற்றிற்கு முதலாகிய நாற்சீர் உரித்தாயிற்று. 50

ஒ

'ஒடு' எண். 178

ஒடு எண்ணின் கண் வந்தது. 181

ஒண்டொடி மாதராவார் நற்றாயும் தோழியும் செவிலியும் இவரொடும் தலைவனொடும் தலைவியொடும் கண்டோர் கூறுதல் காணப்பட்டது என்றவாறு. 185

ஒத்த இனமாகிய மணியை ஒருங்கு சேர வைத்தாற் போல ஒரோவோரினமாகி வரும் பொருளை ஓரிடத்தே சேரவைத்தல் ஒத்தென்று பெயராம் என்றவாறு. 163

ஒத்தவை என்பது அளவானும் பொருளானும் இனத்தானும் வேறுபடுத்தப்படாத சமனிலை வெண்பாக்களாம். அவையாவன நான்கடியான் வருவன. 114

ஒத்தாழிசைக்கலி இரண்டு வகைப்படும் என்றவாறு. 127

ஒத்தாழிசைக் கலிக்கு உறுப்பாகிய ஒத்தாழிசையும் நாற்சீரடிக்குப் பொருந்தின. 111

ஒத்தாழிசைக் (கலிக்) குத் தாழிசையாகிய உறுப்பு மிக்கு வந்தாற்போலக் கொச்சகக் கலிக்கும் வெண்பாவாகிய உறுப்பு மிக்குவரும் என்று கொள்க. 148

ஒத்தாழிசைக் கலிப்பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று. 127

ஒத்தாழிசைக் கலியும் கலிவெண்பாட்டும் கொச்சகமும் உறழ்கலியும் என நான்கு வகைப்படும் கலிப்பா என்றவாறு. 162

ஒத்தாழிசைக்கும் கொச்சகத்திற்கும் பொதுவாகிய குட்டமும் நாற்சீரடிக்குப் பொருந்தின. 111

ஒத்தாழிசையின் யாக்கப்பட்ட யாப்பினும் அதற்குரித்தாக ஓதப்பட்ட கடவுள் வாழ்த்துப் பொருண்மையின்றிக் காமப் பொருளாக வரினும் (கொச்சகவொருபோகு). 143

ஒப்போடே புணர்ந்த உவமை நிலையானும் பிசியாம். 169

ஒருசார் பொருட்குரிய மரபு உணர்த்துதல் நுதலிற்று. 107

ஒரு சீரிடையிட்டு எதுகையாயிற் பொழிப்புத் தொடையாம் என்றவாறு. 94

ஒரு நெறிப்பட வருதல் ஓரியன் முடிதலாவது அகத்தின் கண் களவென்றானும், கற்பென்றானும் வரின் அவற்றின் விரிவகை யொன்றானும் பற்றி வருதல். 193

ஒரு நெறிப்படாதும் ஓரியன் முடியாதும் வரும் இடம் வழுவாம். அஃதாவது புணர்தல் வேண்டித் தோழி யை இரந்து குறையுறுவான் அவ்விடத்திற்குத் தக்க வுரை கூறாது தன் ஆற்றலும் பிறவும் கூறல். 193

ஒரு நெறிப்படுதலாவது அகமாயினும் புறமாயினும் ஒரு பொருண்மேல் வருதல். 193

ஒரு போகு என்னும் கலி இரண்டு வகைப்படும் என்ற வாறு. 141

ஒரு போகு என்னும் கலி கொச்சக வொருபோகு என வும் அம்போதரங்கம் எனவும் பொருந்த நாடி அறிதல் வேண்டும் என்றவாறு. 142

ஒரு போகு பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று. 141

ஒரு வழிப்பட்டு ஓரியல்பாக முடியும் வினை நிகழ்ச்சி இடம் என்று சொல்லுவர் என்றவாறு. 193

'ஒரூஉ கொடியிய னல்லார்' என்னும் மருதக் கலியுள் (கலித்.88) 'கடியர் தமக் கியார் கொலத் தக்கரா மற்று' என்றதும் அது (பாட்டிடை வைத்த குறிப்பு). 166

ஒரூஉத் தொடையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 95

ஒரூஉத் தொடையும் இவ்வகையினால் அறுநூற்றைம் பத்து நாலாம். 97

'ஒரூஉநிலை' என்றதனால் தனித்தனி வரினும் விரவி வரினும் (ஐவகையடியும்) ஒக்கும் என்று கொள்க. 51

ஒரூஉ வண்ணம் உணர்த்துதல் நுதலிற்று. 219

ஒரூஉ வண்ணமாவது நீங்கின தொடையாகிக் கிடப் பது என்றவாறு. 219

ஒழிந்த சீரானும் தளையானும் அடியானும் வருவது. 113

ஒழுகு வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 218

ஒற்றளபெடை ஒரு மாத்திரை. 2

ஒற்றளபெடையாவது மெல்லினமும், வ, ய, ல, ள, வும் ஆய்தமும் அளபெடுக்கும். 2

ஒற்று அளபெடுத்துவரினும் அசைநிலையாகலுமுரித்து. 17

ஒற்றுக்களுள் வல்லெழுத்தாலும், மகரமும், ழகரமும் ஒழித்து ஏனைய பதினொன்றும் அளபெடுக்க ஒற்றளபெடை பதினொன்றாம். 97

ஒற்றுப்பத்தொன்பது. 97

ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்தடக்காது ஆசிரியப் பாவிற் கோதப்பட்ட நாலெழுத்தாதியாக இருப தெழுத்தின் காறும் உயர்ந்த பதினேழு நிலத்தின் ஐந்தடியும் முறையானே வரத்தொடுப்பது 'இழைபு' என்னுஞ் செய்யுளாம் என்றவாறு. 234

'ஒன்றாக நல்லது' (குறள்.323) இதனாற் பயன் நன்மை வேண்டுவார் இவ்வாறு செய்தல் வேண்டுமென்றல். 195

ஒன்றாதது ஒன்றாவஞ்சித்தளையாம். 48

ஓ

ஓசையான் ஒழுகிக் கிடப்பது ஒழுகுவண்ணம் என்றவாறு. 218

ஓத்திற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று. 163

ஓத்தினாற் பிண்டமாயிற்று பன்னிருபடலம். 163

ஓரசைச்சீர் நான்கு: அது தளைகொள்ளும்வழி இயற் சீரொக்கும். 30

ஓரசைச்சீரான் வருவதனை அசைச்சீரடி எனவும் வழங்கப்படும். 48

ஓரசைச் சீரைத் தளைவகை சிதையாத தன்மை வேண்டு மிடத்து இயற்சீர் போலக் கொள்க. 27

ஓரினமாகிய நெறியின்றிப் பல நெறியான் வருவன பொருளானே பொதுமொழியாற் றொடர்வுபடின் அது படலம் எனவும் பெயராம் என்றவாறு. 164

க

'கடல்பா டொழிய வன்மீன் முகந்து' (அகநா. 30) என்றது இயற்சீர் வெண்டளையடி. 59

'கடலே கானலங் கழியே என்பது பொழிப்பியைபு. 94

கடைக் கூழை. 98

கடைக்கூழை முரணாவது முதற்சீ ரொழித்து மூன்று சீரும் ஒத்து வருவது. உதாரணம் வந்தவழிக் காண்க. 98

கடையினை. 98

கண்டோர்க்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று. 185

க,த,ந,ப,ம, என்னும் உயிர்மெய் அளபெடை முப்பத்தைந்து. 97

'கயலே ருண்கண்' எனத் தொடங்கும் பாட்டு (உயிர் மோனை) என வரும். 98

'கயலே ருண்கண்' எனத் தொடங்கும் பாட்டு எதுகைக்கும் (உயிரெதுகைக்கும்) இது தானே யாம். 98

கரும நிகழ்தலாவது, அப்பொருளைப்பற்றி யாதானு மொரு வினை நிகழுமிடம். 193

'கல்வரை யேறி' (எனத் தொடங்கும்பாட்டு) இஃது இன்னிசை வெண்பா. 114

'கலந்தொழுகு மரபு' என்றதனான் பார்ப்பாரினும் பாங்கரினும் சிலரே இதற்கு உடம்படுவார் என்று கொள்க. 181

(கலித்தளைக்கு) உதாரணம் மேற்காட்டிய அடிகளுட் காண்க. 57

கலித்தளையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 57

கலித்தளை வரும்வழி வெண்பா வுரிச்சீரும் ஆசிரிய வுரிச்சீரும் நேரடியில் ஒருங்கு நிலை பெறும். 23

கலித்தாழிசையாவது அடிவரையறையின்றி ஒத்து,

வந்து, ஈற்றடி சில சீர் மிக்குங் குறைந்தும் வருவது அது, 'வாள்வரி வேங்கை' என வரும். 175

கலித்துறையாவது நெடிலடி நான்கினால் வருவது. அஃதாவது ஐஞ்சீரான் வருவதும், பதினாறும் பதினேழும் எழுத்துப்பெற்று நான்கடியான் வருவனவுமாம். 175

கலித்தொகையுட் (கொச்சகக் கலிப்பாக்களைக்) காண்க. 148

கலிப்பாவில் ஈற்றயலடி நாற்சீரான் வருமென்பது மேற் கூறப்பட்டது. 72

(கலிப்பாவிற்காம் துள்ளலோசை துள்ளுதல்) கன்று துள்ளிற் றென்றாற் போலக் கொள்க. 79

கலிப்பாவிற்கு ஈற்றயலடி முச்சீரான் வரும் ஆசிரியம் முடிபாகும் என்றவாறு. 72

கலிப்பாவிற்கு ஈற்று வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று. 67

கலிப்பாவிற்கு ஓசையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 79

கலிப்பாவிற்குச் சுரிதகம் ஈற்றடி முச்சீரானும், ஈற்றயலடி முச்சீரானும் வரும் என்றமையால், தாழிசையும் தரவும் நாற்சீரானல்லது பிறவாற்றான் வாரா வெனக் கூறல் வேண்டிற்று. 111

கலிப்பாவிற்கு முடிவு உணர்த்துதல் நுதலிற்று. 72

கலிப்பாவிற்குரிய கலித்தளைக்கண் நேரீற்றியற்சீர் நிற்றற்குரித்தன்று. 24

கலிப்பாவினுள் ஒத்தாழிசைக்கு அளவு மேற்கூறப் பட்டது. 155

கலிப்பா வெண்பாச் சுரிதகமாக முடியும் என்றவாறு. 73

(கலியடியில்) பிறவாகி விரவிய தளையும் நீக்குதலில்லை என்றவாறு. 58

கலியடி யென்னாது கலித்தளையடி யென்றதூஉம் இவ்வேறுபாடு குறித்தென்க. 56

கலிவெண்பா ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 147

கலிவெண்பாட்டுக்கு (அளவு) வரையறையில்லை எனப் பட்டது. 155

கலிவெண்பாட்டும், கைக்கிளைப்பொருட் செய்யுளும், செவியுறையும், வாயுறை வாழ்த்தும், புறநிலை வாழ்த்தும் என்னும் பொருண்மைக்கண் வரும் வெண்பாக்களும் அளவு வரையறுக்கப்படா; பொருள் முடியுங் காறும் வேண்டிய அடி வரப் பெறும் என்றவாறு. 153

கலிவெண் பாட்டெனினும் வெண்கலிப் பாட்டெனினும் ஒக்கும். 147

கழிநெடிலடி உணர்த்துதல் நுதலிற்று. 39

கழிநெடிலடி பதினெட்டும் பத்தொன்பதும் இருபதும் என மூன்றும் நிலம் பெறும். 39

கழிநெடிலடி பதினெட்டெழுத்து முதலாக இருப தெழுத்தளவும் ஆம். 39

கழிபடர்ப் பொருண்மைக்கு வருவதோர் மரபு வழு உணர்த்தல் நுதலிற்று (மதுரை த.ச.பதிப்). 192

களவொழுக்கம் வெளிப்படுதலும் களவொழுக்க மின்றித் தமரானே பெறுதலுமென்று சொல்லப் பட்ட இவை முதலாகிய இயற்கை நெறியிற்றப் பாது, மகிழ்தலும், புலத்தலும், ஊடலும், ஊடல் தீர்தலும் பிரிதலும் என்று சொல்லப்பட்ட இவற் றொடுகூடி வருவது கற்பென்று சொல்லப்படுவது. 179

கற்பின்கண் கூறத்தகுவாரை உணர்த்துதல் நுதலிற்று. 182

கன்று துள்ளிற் றென்றாற் போல. 79

'கனிய நினைவொடு' என்னும் பாட்டு ஐஞ்சீரான் வந்த கலித்துறை. இது நிரையசை முதலாகிய பதினேழெ ழுத்தான் வந்தது. 175

கா

'காஅய்ச் செந்நெல்' என்பது ஒரூஉ அளபெடை. 95

காக்கை பாடினியார் முதலாகிய ஒருசார் ஆசிரியர்

நேர்பசை நிரைபசை யெனக் கொண்டிலரால் எனின். 4

'காய்மாண்ட தெங்கின்' (சீவக. சிந். 31) என வரும் இதன்கண் யகரம் ஆசாகி வந்தது. பிறவு மன்ன. 98

காரணம் எனினும் கருவி யெனினும் ஒக்கும். 100

கீ

கீழ்க்கதுவாய் 98

கீழ்க்கதுவாயாவது மூன்றாஞ்சீரொழிய ஏனைய வருவது. 98

கு

குட்டம் எனினும் தரவு எனினும் ஒக்கும். 111

'குவிந்து சுணங்கரும்பிய' என்பது ஒரூஉ முரண். 95

குற்றிய லிகரம் ஒற்றெழுத்தியல்பிற்று. 7

குற்றிய லிகரமாவது இவ்வுகரம் (குற்றியலுகரம்) திரிந்தும், மகரம் ஊர்ந்தும் யகரமோடியைந்து வரும். 2

குற்றியலிகரம் குற்றியலுகரமும் ஆய்தமும் மெய்யும் ஒரொவொன்று அரை மாத்திரை. 2

குற்றியலுகரம் ஒற்றொடு வருதலால் நேரசை யாயிற்று. 9

குற்றிய லுகரமாவது நெட்டெழுத்தின் பின்னரும் மூன்றெழுத்து முன்னான மொழியினும் வல்லெழுத்தை ஊர்ந்து வந்த உகரம். 2

குற்றுகரம் ஆறும். 97

குற்றுகர வீறு ஆறு (இயைபு). 97

குற்றெழுத்து அ, இ, உ, எ, ஒ. 2

குற்றெழுத் தொரு மாத்திரை. 2

குற்றெழுத்துப் பயின்று வருவது குறுஞ்சீர் வண்ணமாம் என்றவாறு. 213

குறளடிக்கு நிலம் நாலெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத்துமாம். 35

குறளடி நாலெழுத்து முதலாக ஆறெழுத் தீறாக ஏறிய

மூன்று நிலத்தை உடைத்து. 35

குறளடி முதலாக அளவடியளவும் இயற்சீரும் ஆசிரிய உரிச்சீருமாம். 54

குறளடி முதலாக அளவடியளவும் வஞ்சியுரிச்சீர் வந்து உறழும் நிலை இல. 54

குறளடி வரையறை யுணர்த்துதல் நுதலிற்று. 35

குறித்த ஒரு பொருளை முடியச் சொற்றொடுக்குங்கால் இயற்சொல்லாகிய பெயர் வினை இடை உரியானும் ஏனைத் திரிசொல் திசைச்சொல் வடசொல்லானும் எழுவகை வழுவும் படாமற் புணர்ப்பது. 76

குறிப்பு மொழி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 172

குறுஞ்சீர் வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 213

குறுவெண் பாட்டாவது அளவிற் குறிய பாட்டு. 114

குறுவெண் பாட்டாவன இரண்டடியானும் மூன்றடியானும் வரும். 114

குறுவெண் பாட்டிற்கு அடி (ஏழ்சீர்) அளவடியும் சிந்தடியுமாகிய இரண்டடியும் என்றவாறு. 151

கூ

கூழை. 98

கூழையாவது முந்துற்ற மூன்று சீரினும் மோனை முதலாயின இறுதிச் சீரின் வாராதது. 98

கை

கைக்கிளை (ஆசிரியப் பாவினுள்) வந்ததே யாயினும் பாடாண் பாட்டுக் கைக்கிளை யாகுமெனவுங் கொள்ளப்படும். 114

கைக்கிளை என்பது கைக்கிளைப் பொருண்மை. 114

(கைக்கிளைக்கு) எய்தியதன்மேற்சிறப்பு விதி உணர்த்துதல் நுதலிற்று. 115

கைக்கிளைப் பொருண்மை வெண்பாவினால் வருத

லின்றி முதலிரண்டடியும் வெண்பாவாகிக் கடை விரண்டடியும் ஆசிரியமாகி இருபாவினாலும் வரும் என்றவாறு. 115

கைக்கிளை (வெண்பா) என்பதூஉம், அங்கதம் (வெண்பா) என்பதூஉம் பொருளானாகிய பெயர். 114

கைக்கிளை வெண்பா யாப்பினால் வரும் எனவே ஆசிரியப்பாவினால் வரப்பெறாதென்பதாம். 114

கைகோள் வகையிற் களவாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 178

கைகோள் வகையிற் கற்பாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 179

கொ

கொச்சகக் கலிக்கு வரையறை கூறாமையால் பொருள் முடியுங்காறும் வரப்பெறும் என்று கொள்க. 155

கொச்சகக் கலிப்பாவிற்கு உறுப்பாய் வரும் பஃறொடை வெண்பாக்களைக் கொச்சக கலிப்பா எனவுங் கூறுதல் இவ்வாசிரியர் கருத்தென்று கொள்க. 147

கொச்சகக் கலிப்பாவின் இலக்கணம் அறிந்த புலவர் கூறுவார் என்றவாறு. 148

கொச்சகக் கலியாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 148

கொச்சகம் என்பது ஐஞ்சீரடிக்கி வருவனவும், ஆசிரிய வடி, வெண்பாவடி, வஞ்சியடி, கலியடி, சொற் சீரடி, முடுகியலடி என்று சொல்லப்பட்ட அறுவகை அடியானும் அமைந்த பாக்களை உறுப்பாக உடைத்தாகி வெண்பாவியலாற் புலப்படத் தோன்றுவது. 117

'கொடி வாலன' எனத் தொடங்கும் பாட்டு இது முச் சீரடி வஞ்சிப்பா. 113

கோ

'கோளில் பொறியில்' (குறள். 5) என்ற பாட்டு வெண் பாவினிறுதி நிரையசை பெற்று வந்ததற்கு

உதாரணம். 70

ச

சகர உயிர்மெய் அளபெடை ஐந்து. 97

சகரத்தின் முதலாகெழுத்து ஒன்பது; அவற்றைக் கிளை யெழுத்தோடு (8) உறழ எழுபத்திரண்டாம். 97

சா

சார் பெழுத்து குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்த மென மூவகைப்படும். 2

சான்றோர் செய்யுளகத்துக் கண்டு கொள்க. 102

சி

சித்திரப் பாக்களானும் உறழவும் வரம்பிலவாகி வரும். 98

சித்திர வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 214

சித்திர வண்ணமாவது நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் சார்ந்து வரும் என்றவாறு. 214

சிந்தடி ஏழும் எட்டும் ஒன்பதுமாகிய எழுத்தினால் ஆம். 36

சிந்தடிக்கு அளவு ஏழெழுத்தென்று சொல்லுவர் ஒன்ப தெழுத்து ஏற்றமல்லாத விடத்து. 36

சிந்தடியாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 36

சிந்தடியாவது ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகிய அடி. 55

சிந்தியல் வெண்பா ஒரு பொருண் மேல் மூன்றடுக்கி வருவதனை வெள்ளொத் தாழிசை யென்ப: அது 'அன்னா யறங் கொல்' 'ஏடி யறங்கொல்' 'பாவா யறங்கொல்' என வரும். 175

சில செய்யுட்களில் அடி வரையறுத்தலை நுதலிற்று. 111

சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவையுள் 'கயலெழுதிய ... இடை முதுமகள் வந்து தோன்று மன்' என்றதும் அது (பாட்டிடை வைத்த குறிப்பு). 166

சில பொருள்களை எடுத்து விலக்குகின்றாராதலின் இவ்வாறு கூறப்பட்டது. 102

சிலவாய் மெல்லிய வாகிய மொழியினானே தொடுக்கப் பட்ட அடிநிமிர் வில்லாத செய்யுள் அம்மையாம் என்றவாறு. 227

'சிற்றாறு பாய்ந்துகளும்' (எனத் தொடங்கும்) இது பன்னிரண்டடியான் வந்த இன்னிசைப் பஃறொடை வெண்பா. 114

'சிறியகட் பெறினே' (புறநா. 235) என்பதன்கண் முதலடி நாற்சீரான் வந்தது. இரண்டாமடி ஆசிரியத் தளை யொடு பொருந்தி அறுசீரடியாகி வந்தது. 61

'சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்' இது கூழை முரண். 98

'சிறுகுடிப் பரதவர்' என்றவழிக் குடியுங் கண்ணுமா காது சிறுமை பெருமை என்னுஞ் சொல்லே மா று கோடலிற் சொன் முரணாயிற்று. 91

சிறுபான்மை (கலிப்பாவின் கண்) வஞ்சித் தளை வரு தலும் கொள்க. 58

சின்னம் என்றதனால் எண்ணின்கண் இடையெண் சிற்றெண் என்பன குறையினும் (கொச்சக வொரு போகு). 114

சீ

சீர் ஆமாறு உணர்த்துதல். 11

சீர்க்கண் உயிரளபெடைக்குரிய தோர் மரபுணர்த்துதல். 16

சீர்க்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று. 41

சீர்க்கு எழுத்து வரையறை உணர்த்துதல் நுதலிற்று. 40

சீர்நிலை ஐந்தெழுத்தின் மிகாது நேர் இறுதியாங் காலத்து. 40

சீர் முழுதுங் கூனாகி வருதல் அளவடிக்கு (அளவடிப் பாக்களுக்கு) உரித்து. 47

சீரந்தாதி. 98

'சீறடிப் பேரக லல்குல்' இஃது இணை முரண். 98

சு

சுரிதகம் (அடக்கியல்) இன்றித்தரவுதானே நிமிர்ந் தொழுகி முடியினும் (கொச்சக வொரு போகாம்). 143

'சுரிதகம்' என்பது ஆசிரிய வியலானாதல் வெண்பா வியலானாதல் பாட்டிற் கருதிய பொருளை முடித்து நிற்பது. 117

சுரிதகம் (போக்கியல்) ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 132

சுரிதகம் (போக்கியல்) என்பது வைப்பு எனவும் படும். 132

'சுருங்கிய நுசுப்பில்' என்பது பொழிப்பு முரண். 94

'சுறமறிவன' என்ற பாட்டாகிய இதனுட் சீர்தொறும் ஓசையற்றவாறு கண்டு கொள்க. 80

சூ

சூத்திரத்திற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று. 162

(சூத்திரத்திற்கு) உதாரணம் 'வேற்றுமை தாமே யெழென மொழிப' 'விளிகொள்வதன் கண் விளியோ டெட்டே' (தொல். சொல். வேற். 1–2) என்ற வழி யாப்பின் கண்ணே பொருடோன்ற யாத்தவாறும், கண்ணாடி நிழல் போல கருதிய பொருளுந் தோற்றிய வாறுங் கண்டு கொள்க. 162

சூத்திரமாவது, கண்ணாடி நிழற்போல விளங்கத் தோன்றி, ஆராயாமல் பொருள் நனி விளங்கு மாறு யாப்பின் கண்ணே தோன்ற யாப்பது என்றவாறு. 162

'சூரல் பம்பிய' என்னும் பாட்டு அடிமறி மண்டிலத் திற்கு உதாரணம். 113

'சூரல் பம்பிய' என்ற இதனுள் யாதானும் ஓரடியை முதலும் முடிவுமாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது வந்தலின் அடிமறியாயிற்று. 113

செ

'செங்களம் படக்கொன்று' (குறுந். 1) இதனுட் பல வடியும் வந்தவாறு காண்க. 51

செந்தூரக்கு எனினும் ஆசிரிய ஈறு எனினும் ஒக்கும். 68

செந்தொடைக்கு உதாரணம் 'பூத்த வேங்கை' என வரும். 96

செந்தொடையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 96

'செம்பால் வாரம்' என்பது செம்பாதி எனவுமாம். 145

செம்பால் வாரம் - நடுவாகிய நிலை. 145

'செம்பால் வாரம்' முப்பதடிச் சிறுமை என்றவாறு. 145

செம்பொருள் அங்கதம் வசையெனப் பெயர் பெறும் என்றவாறு. 121

செம்பொருளாகிய அங்கதம் உணர்த்துதல் நுதலிற்று. 121

செய்யுட்குரிய சொல்லினாற் சீரைப் புனைந்து தொடுப் பின் அவ்வகைப்பட்ட செய்யுள் அழகு எனப்படும் என்றவாறாம். 228

செய்யுட் செய்வார் மெய்ப்பாடு தோன்றச் செய்ய வேண்டும் என்பது. 196

செய்யுளியல் 31 ஆம் நூற்பாவிலிருந்து 42 ஆம் நூற்பா வரை வெண்பா ஆசிரியங் கலிக்குரித்தாகிய அடி யிலக்கணங் கூறினார். இனி வஞ்சிப்பாவிற்குரிய அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று. 43

செய்யுளிலக்கணம் உணர்த்தினமையால் செய்யுளியல் என்னும் பெயர்த்து. 1

செய்யுளுறுப் பெல்லாம் தொகுத்துணர்த்துதல். 1

செய்யுளைப் பாகுபடுத்தலை உணர்த்துதல் நுதலிற்று. 124

'செல்லாமை யுண்டேல்' (குறள் 1151) என்ற வழிப் பிரிவுப்பொருண்மை நிகழுமிடனாயிற்று. 193

'செல்லாமை யுண்டேல்' (குறள்1151) என்றது முன்னின் றானைக் கையற்று நுதலுதலின் முன்னிலை என்னும் இடம் ஆயிற்று. 193

'செவ்விய திவ்விய' (கலித். 19) பாட்டில் தாழிசையும் தனிச் சொல்லுமில்லை. 143

செவியறிவுறூஉ வருமாறு உணர்த்துதல் நுதலிற்று. 110

செவியுறையாவது பெரியோர் நடுவு வெகுடலின்றித் தாழ்ந்தொழுகுதல் கடன் எனச் செவியறிவுறுத்தல் என்றவாறு. 110

செவிலி இலக்கணத்தில் உரைக்கின்ற உரையும் பாட்டி லுரைக்கின்றவுரையும் கூறுவளோ வெனின், அவ்வி டங்களில் வரும் உரை பொருள் பற்றி வருதலின் அப்பொருள் கூறுவளென்க. 168

சொ

சொல்லா தொழிந்த ஒத்தாழிசைக் கலிப்பா உணர்த் துதல் நுதலிற்று. 133

சொற்சீர்க்கு இயல்பேஎன்பது இப்பெற்றியை யுடைத் துச் சொற்சீரின தியல்பு என்றவாறு. 119

சொற் சீர்த்து இறுதல் என்பது, சொற்றானே சீராந் தன்மை பெற்று நிற்றல். 119

சொற்சீரடியாவது வருகின்ற சூத்திரத்துட் காட்டுதும். 118

(சொற்சீரடியில்) ஒழியசையாகியும் என்றது, ஒழிந்த அசையினை யுடைத்தாகியும் என்றவாறு. எனவே இறுதிச்சீர் ஒன்றும் இரண்டும் அசைகுறையப் பெறும் என்ற வாறாம். 119

(சொற்சீரடியில்) முற்றடியின்றிக் குறைவு சீர்த்தாகியும் என்பது நாற்சீரடியின்றி முச்சீரடியானும் இருசீரடி யானும் வருதல். 119

(சொற்சீரடியில்) வழியசைபுணர்த்தலாவது ஒரு சீரின் கண்ணே பிறிதொரு சீர்வரத் தொடாது ஓரசை வரத் தொடுப்பது. 119

சொற்சீரடியும் முடுகியலடியும் பரிபாடற்கு உரியவாகும் என்றவாறு. 118

(சொற்சீரடியுள்) எண் என்பது ஈரடியாற் பலவாகியும் ஓரடியாற் பலவாகியும் வருதல். 119

(சொற்சீரடியுள்) கட்டுரையாவது பாட்டின்றித் தொடுக்கப்பட்டு வருவது. 119

சொற்சீராமாறு உணர்த்துதல் நுதலிற்று. 119

சொன் முரண். 97

சொன் முரணாவது சொல்லானன்றிப் பொருளான் மாறுபடாமை. 91

ஞ

ஞகர உயிர்மெய் அளபெடை ஒன்று. 97

ஞகரத்தின் முதலாகெழுத்து மூன்று; அவற்றைக் கிளையெழுத்தோடு உறழ ஆறாம். 97

ஞகர யகர உயிர்மெய் அளபெடை இரண்டு. 97

ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வருஞ்செய்யுள் இயைபு என்னும் செய்யுளாம் என்றவாறு. 232

ஞாயிறு முதலாக நெஞ்சு ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும் அத்தன்மைய பிறவுமாகிய மக்களல்லாத பொருள்கள் தாங்கருதிய நெறியினானே சொல்லுவன போலவும் கேட்குன போலவும் சொல்லி அமையப்பெறும் என்றவாறு. 192

த

'தக்கார் தகவிலர்' (குறள். 114) இது வல்லின வெதுகை.

தத்தம் சீர்நிலை வகையானும் தளைநிலை வகையானும் இனிய ஓசை வேறு பாட்டினையுடைய ஐந்தடிக்குமுரிய தன்சீர் உள் வழித்தளை வேறுபாடு கோட்ல் வேண்டா என்றவாறு. 52

தமிழ் நாட்டகத்தவர் வழங்கும் தொடர் வழிக்கண் (தொடர் மொழிக் கண் சு.வே) வரும் மொழியாப்பாவது. 75

'தரவகப்பட்ட மரபின' என்றதனால் தரவிற்கு ஓதப்பட்ட நான்கடியில் மிகாதென்பதூஉம் மூன்றடி

யானும் இரண்டடியானும் வரப்பெறும் என்ப தூஉம் கொள்க. 130

தரவாகிய உறுப்பும் சுரிதகம் (போக்கியல்) ஆகிய உறுப்பும் முதலும் முடிவும் வருதலின்றி இடை இடை வந்து தோன்றியும் (கொச்சகக் கலி வரும்) என்றவாறு. 148

தரவியல் ஒத்தலாவது சிறுமை நான்கடி, பெருமை பன்னிரண்டடியாகி வருதல். 132

தரவிற்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று. 124

தரவு (குட்டம்) ஈற்றயலடி முச்சீரான் வரவும் பெறும். 112

தரவுடைத்தாகியும் என்றதனான் தாழிசை தானே வரினும் கொச்சக வொருபோகு என்று கொள்க. 143

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், சொற்சீரடி, முடுகியலடி (என்னும் ஆறு மெய்) ஆறு உறுப் பினையும் பெற்றும் கொச்சகக் கலிவரும். 148

தரவு, தாழிசை, தனிச்சொல் சுரிதகம் (போக்கியல்) எனக் கிடக்கை முறையாற் கூறாது தாழிசை முற் கூறிய வகையான், இப்பாவிற்கு ஒத்தாழிசை சிறந்த தாகலின் முற்கூறினார். 128

'தரவும்.....நுவன்றறைந்தனரே' (செய்.148) என்றா ராகலின் இவ்விலக்கணத்தானே பரிபாடலும் கொச் சகமும் வரும்வழித் தரவும் சுரிதகமும் இடை இடை வருதலுங் கொள்க. 117

தரவு முதலாயின உறுப்புக்களுள் தரவு ஒழியத் தாழிசை முதலாயின உறுப்புக்கள் பெற்றும் ஒரு போகு வரும். 143

தரவு (முதனிலை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கு) நாலடி இழிபாகப் பன்னிரண்டடி உயர்வாக இடைவரும் அடி எல்லாவற்றானும் வரப் பெறும் என்று கொள்க. 129

'தரவே யெருத்தம் அராகங் கொச்சகம், அடக்கியல் வகையோடைந்து றுப்புடைத்தே' எனபது அகத்திய

மாதலின் தரவென்பதோர் உறுப்பும் (பரிபாடற்குக்) கோடல் வேண்டுமெனின். 117

தலைமகளை உடன்கொண்டு போகும் இடைச்சுரத்தின்கண் தலைமகன் தலைமகளொடு வழக்கு நெறி ஆணையானே கூறுதற்கும் உரியன் என்றவாறு. 186

தலைமகன் றன்னொடும் தலைமகள் தன்னொடும் நற்றாய் கூறவில்லை என்றவாறு. 184

தலைவனையும் தலைவியையும் ஒழிந்த பதின்மரும், அத் தலைவனொடுந் தலைவியொடும் சொல்லிப் போந்த மரபினாற் சொல்லப்பெறுவர் இடமுங் காலமுங் குறித்து என்றவாறு. 187

தலைவியும் தலைவனும் கூறக்கேட்போர் மேற்சொல்லப் பட்ட பதின்மரும் என்றவாறு. 188

தளைக்கும் தொடைக்கும் இடமுணர்த்துதல். 32

தளையும் தொடையும் அடியின்கண். 32

தளையும் தொடையும் நாற்சீர் கொண்ட அடியினன்றி ஏனைய வற்றில் வாரா. 33

தளைவகை யொன்றாமையாவது, நிலைமொழியும் வருமொழியும் ஆகிய இயற்சீர் நேராயொன்றுவதும் நிரையா யொன்றுவதுமன்றி மாறுபட வருவது. 55

'தனக்குவமை' (குறள் 7) என்ற பாட்டு வெண்பாவினிறுதி நிரைபு அசைபெற்று வந்ததற்கு உதாரணம். 70

தனிச்சொல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 131

தனிச்சொல்லைப் பின் எண்ணியவதனான் தாழிசை தோறும் தனிச்சொல் வரவும் பெறும் என்று கொள்க. 128

தா

'தாஅட் டாஅ மரைமல ருழக்கி' இஃது இணையளபெடை. 98

தாஅ வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 207

தாஅ வண்ணமாவது இடையிட்டெதுகையான் வரும் என்றவாறு. 207

'தாமரை புரையுங்' (குறுந்) இதனுட் குறித்த பொருள் முருகவேள் காப்ப உலகங்காவற்பட்டது என்னும் பொருள் இதனை முடித்தற்பொருட்டு எழுத்து முதலாகி வந்து ஈண்டிய அடிகளெல்லா வற்றானும் நாட்டியவாறு கண்டு கொள்க. 75

'தாமின் புறுவது' என்னும் குறள் (நெடின் மோனைக்கு) எனவரும். 98

தாழிசைக்கு (முதனிலை யொத்தாழிசைக் கலிப்பாவின் தாழிசைக்கு) அடியாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 130

தாழிசைகள் (முதனிலை யொத்தாழிசைக் கலிப்பாவின் தாழிசைகள்) தரவிற் சுருங்கி வரும் என்றவாறு. 130

தாழிசை தாமேயும் வரும் (இது இடைச்செருகல்). 143

தாழிசைப் பின்னர் நடந்தலைப் பயின்றொழுகும் எனவே, தாழிசைக்கு முன்னர், (தனிச்சொல்) வருதலும் சிறுபான்மை உளதென்று கொள்க. 131

தாழிசைப் பெற்றும் என்றதனால் தரவு தாமேவரினும் கொச்சக ஒருபோகு என்று கொள்க (இது இடைச் செருகல்). 143

தாழிசை இன்றித் தரவு முதலியன உடைத்தாகியும் (ஒரு போகு வரும்). 143

தாழிசையின்றித் தரவு முதலாயின வந்ததற்குச் செய்யுள் 'செவ்விய திவ்விய' (கலி.19). 143

தாழிசையும் தம்முள் அளவும் ஒத்து மூன்றாகி வரும். அவை தரவிற் சுருங்கித் தோன்றும் என்றவாறு. 137

தாழிசையும், தரவும், சுரிதகமும் (போக்கியலும்) அடைநிலைக் கிளவியுமென நான்கு உறுப்பினை யுடைத்து ஒத்தாழிசைக் கலி என்றவாறு. 128

(தாழிசையை) முற்கூறுகின்ற வழியும், இடைநிலைப்

பாட்டே எனக் கூறுதலின் முந்துற்றது தரவு என்றவாறாம். 128

தான் மொழியும் மொழியை மறைத்து மொழியின் அது பழிகரப்பெனப் (பழிகரப் பங்கதம் எனப்) பெயர் பெறும் என்றவாறு. 122

தி

திசைச்சொன் மரபாவது செந்தமிழ் சூழ்ந்த பன்னிரு நிலத்தினும் வழங்கும் மரபு. 76

திணையாவது கைக்கிளையும் முல்லையும் குறிஞ்சியும் பாலையும் மருதமும் நெய்தலும் பெருந்திணையும் என்னும் இவை முறைமையினான் மேற் சொல்லப் பட்டன என்றவாறு. 177

(திணையினை) முறைமையினாற் சொல்லுதலாவது பாடாண் பாட்டினைக் கைக்கிளைப் புறமெனவும், வஞ்சியை முல்லைப் புறமெனவும், வெட்சியைக் குறிஞ்சிப் புறமெனவும், வாகையைப் பாலைப்புற மெனவும், தும்பையை நெய்தற் புறமெனவும், காஞ்சியைப் பெருந்திணைப் புறமெனவும் ஓதிய நெறி கொள்ளப்படும். 177

திரிசொல் மரபாவது தமிழ் நாட்டகத்தும் பலவகை நாட்டினும் தத்தமக்குரித்தாக வழங்கும் மரபு. 76

'திருநுதல் வேரரும்பும்' (புற. வெண். கை. 3) என் பதனுள் மருட்பாவிற்குரிய இரண்டுறுப்பின் ஓசையைக் கண்டு கொள்க. 81

தீ

'தீம்பால் கறந்த' (கலித். 111) என்னும் முல்லைக்கலி, அயற்றளையான் வந்த கலிவெண்பா. 147

து

துள்ளலோசை கலிப்பாவிற்காம். 79

துள்ளுதலாவது ஒழுகுநடைத்தின்றி இடையிடை உயர்ந்து வருதல். 79

துறையாவது, ஆசிரியத்துறை, வஞ்சித்துறை, வெண்டுறை, கலித்துறை யென நான்காம். 175

தூ

(தூக்கியலைப்பற்றி) ஐய மறுத்தலை உணர்த்துதல் நுதலிற்று. 83

தூக்கு எனினும் இறுதியெனினும் ஒக்கும். 68

தூக்கெனினும் ஓசை எனினும் ஒக்கும். 77

தூங்கல் வண்ணம் உணர்த்துதல் நுதலிற்று 222

தூங்கல் வண்ணமாவது வஞ்சியுரிச்சீர் பயின்று வரும் என்றவாறு. 222

தூங்கலாவது அறுதியற்ற ஓசைத்தாகி வரும் வஞ்சி என்றவாறு. 80

தே

'தேம்பழுத் தினியநீர் மூன்றும்' என்று தொடங்கும் பாட்டு கலிவிருத்தம். 175

'தேர்ந்தநங் காதலர்' இதனுள் கடலும் கானலும் புல்லும் மரனுங் கூறப்பட்டன. 192

தேவரிடத்து முன்னிலை பரவலாகிய அது தான், வண்ணகமெனவும், ஒரு போகுஎனவும் இருவகைப் படும் என்றவாறு. 134

தொ

'தொடங்கற்கட் டோன்றிய' என்னும் கலியுள், சுரிதகம் 'தொல்கவின் தொலைதல் அஞ்சியென்' என (கலித். 2) முச்சீரான் வந்தது. 72

தொடர் மொழிக்கண் மொழி சிதைந்து தனிக்குறில் நேரசையாகாது. 6

'தொடியுடைய' (புறநா.239) என்னும் வஞ்சிப்பாட்டுள் 'இடுக வொன்றோ சுடுக வொன்றோ' (புறநா. 239) இதனுள் ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.

தொடைநிலை வகை மேற்சொல்லப்பட்ட பாகு பாட்டின என்றவாறு. 99

தொடைப் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று 84

தொன்னெறி மரபிற் கற்பு என்றதனான், அவர் குலந் தோறும் தொன்றுபட்டு வருகின்ற நெறியையுடை யார் என்று கொள்க. 182

தொன்மையாவது உரையொடு பொருந்திப் போந்த பழைமைத் தாகிய பொருண்மேல் வருவது. 229

தோ

'தோடா ரெல்வளை' என்னும் பாட்டு (இடையிட்டெது கைக்கு) என வரும். 98

தோன்றுவதனைச் சொன்ன துணிவினும் பிசியாம் என்றவாறு. 169

ந

நகைமொழியாவது மேற்சொல்லப்பட்ட உரை பொருந் தாதென இகழ்ந்து கூறுதல். 166

நடையென்றது அப் பாக்கள் இயலும் திறம். 104

'நல்லார் பழிப்பில்' என்னும் பாட்டு ஐஞ்சீரால் வந்த கலித்துறை. இது நேரசை முதலாகிப் பதினாறெழுத் தான் வந்தது. 175

நலிபு வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 215

'நற்கொற்ற வாயில்' எனவும் 'சுரை யாழ' எனவும் இவை வேறுபட்ட தொடையான் வருதலின் நேரி சைச் சிந்தியல் வெண்பாவாம். 114

நற்றாய்க்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று 184

'நறுநீல நெய்தலும்' (என்று தொடங்கும்) இஃது ஒத்து ஒரு தொடையான் வருதலின் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவாம். 114

'நன்றி மறப்பது' என்ற குறள்வெண்பா (குறள். 108) இறுதி நேர்பு அசைவற்று வந்ததற்கு உதாரணம். 71

'நன்னிற மென்முலை மின்னிடை வருந்த' இது கூழை யெதுகை. 98

நா

நாடுதல் இன்றிப் பொருள் நனிவிளங்க யாத்தலாவது அதன்கண் யாக்கப்பட்ட சொற்கும் பொருள் ஆராயாமல் புலப்பா-த்தோன்றுமாறு யாத்தல். 162

'நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே' (செய். 31) என்றமையான் ('அடிநிமிர் கிளவி' செய். 175) என்றதில் அடி என்றது நாற்சீரான் வருவதென்று கொள்க. 175

நாற்சீர் கொண்டது அடியென ஓதிப்பின்னும் இரு சீரடி மூச்சீரடி வஞ்சிக்கண் உரித்தென ஓதி, ஐஞ்சீரடியும் அறுசீரடியும் எழுசீரடியும் உள என்று ஓதினமையான் கிடைப்பது. 64

நாற்சீரடிக்கண் வகுக்கப்பட்ட ஐவகையடியும் ஆசிரியப் பாவிற்குரிய. 50

நாற்சீரடியில் மிக்குவரும் பாட்டுப் பன்னிரண்டும், அவ்வழி அவ்வடியின் வேறுபட்டு வருவனவும் கொள்ளப்படும் என்றவாறு. 175

நாற்சீரடியை எழுத்தளவு பற்றி வகுக்கப்பட்ட குறளடி முதலாகிய ஐந்தடியினையும் விரித்துணர்த்துங் காலத்து. 48

நாற்சீரடி யொழிந்த அடிக்கண்ணும் இப்பாகு பாடெல்லாம் விரிப்பின் வரம்பிலவாம். 98

நான்குசீர் ஒழுங்கு தொடுத்து வருவது அடியென்று சொல்லப்படும். 31

நி

நிகழ்ச்சி நிகழ்ந்தவிடம். 193

நிரலே நிறுத்தியமைத்துக் கோடலும் இரட்டைத் தொடையும் மேற்சொன்ன வற்றான் முடியவும் பெறும். 87

நிரனிறைத் தொடையாவது பொருளைச்சேர நிறுத்திப் பயனையுஞ் சேர நிறுத்துதல். 87

நிரனிறையாகிய பொருள்கோள் வகை. 98

'நிரை தட்டல்' என்றதனால் பிறிதாகி வருஞ்சீர் முதலாகிய நிரையோடு தளைப்பினும் கலித்தளை யாம் என்று கொள்க. 57

நிரைமுதல் வெண்சீர் என்பது உய்த்துணர்ந்து கொள்ளப்பட்டது. 57

நிரையீற்றியற்சீரும் (நேரீற்றியற்சீர்போல) இவ்வாறே நிரை முதலாகிய ஐந்து சீரோடுறழ ஐந்து வகைப்படும். 48

நிரையீற்று வஞ்சியுரிச்சீர் முதலசையோ டொன்று வனவும் ஒன்றாதனவுமென இருவகைப்படும். 48

நிரையீற்று வஞ்சிச்சீரான் வருவதனை நிரையீற்று வஞ்சியடி எனவும். 48

நிரையீறாகிய வஞ்சியுரிச்சீர்க்கு ஆறெழுத்தும் ஆகும். 40

நிரையீறும் (நேரீறு போலவே) அவ்வாறே நேர்பும் நேரும் முதலாகிய ஐந்து சீரோடும் உறழ ஐவகையாம். 48

நிலை மொழியாகிய இயற்சீரினீறும், வருமொழியாகிய சீரின் முதலசையும் நேராய் ஒன்றின் நேரொன்றாசிரியத்தளையாம், நிரையாய் ஒன்றின் நிரையொன்றாசிரியத்தளையாம். 53

'நிழலே யினியதன்' என்பது ஒரூஉ வியைபு. 95

நிறுத்த முறையானே அடி உணர்த்துதல். 31

நிறுத்த முறையானே அம்மையாகிய செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று. 227

நிறுத்த முறையானே அழகு என்னுஞ் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று. 228

நிறுத்த முறையானே இடம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 193

நிறுத்த முறையானே இயைபுத்தொடையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 92

நிறுத்த முறையானே இழைபு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 234

நிறுத்த முறையானே எச்சவகை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 198

நிறுத்த முறையானே காலம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 194

நிறுத்த முறையானே கொச்சக ஒருபோகு உணர்த்துதல் நுதலிற்று. 143

நிறுத்த முறையானே திணை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 177

நிறுத்த முறையானே துறை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 201

நிறுத்த முறையானே தொன்மைச் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று. 229

நிறுத்த முறையானே தோலாகிய செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று. 230

நிறுத்த முறையானே பயனாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 195

நிறுத்த முறையானே பாஆமாறு உணர்த்துவான் எடுத்துக் கொண்டார் அவை இனைத்தென வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று. 101

நிறுத்த முறையானே புலன் என்னுஞ் செய்யுள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 233

நிறுத்த முறையானே பொருள்வகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 200

நிறுத்த முறையானே மாட்டேறு உணர்த்துதல் நுதலிற்று. 202

நிறுத்த முறையானே முன்னம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 199

நிறுத்த முறையானே மெய்ப்பாடு வருமாறு உணர்த்துதல் நுதலிற்று. 196

நிறுத்த முறையானே விருந்தென்னுஞ் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று. 231

நிறைந்த மொழியையுடைய மாந்தர் தமது ஆணையாற் சொல்லப்பட்ட மறைந்த சொல் மந்திரம் ஆவ தென்றவாறு. 171

நீ

'நீரின் றண்மையும்' என்ற பாட்டு இணைக்குறளா சிரியப் பாவிற்கு உதாரணம். 113

('நீரின் றண்மையும்' என்று தொடங்கும்) இதனுள் மூன்றாமடியும் நான்கா மடியும் முச்சீரான் வந்த வாறு கண்டுகொள்க. 66

நு

நுண்மை விளங்கவும், சுருக்கம் விளங்கவும், ஒளியுடமை விளங்கவும், மென்மை விளங்கவுமென்று இன்னோ ரன்ன விளங்கவும் தோன்றிக் கருதின பொருளை முடித்தற்கு வரும் ஏதுவைக் குறித்தன முதுமொழி என்று சொல்லுவர். 170

நூ

நூல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 159

நூல் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று. 160

நூலென்று சொல்லப்பட்டது எடுத்துக்கொண்ட பொரு ளொடு முடிக்கும் பொருண்மை மாறுபடாமற் கருதிய பொருளைத் தொகையானும் வகையானும் காட்டி அதனகத்து நின்றும் விரிந்த உரையொடு பொருத்த முடைத்தாகி நுண்ணியதாகி விளங்குவது நூற் கியல்பு என்றவாறு. 159

நெ

நெட்டெழுத்து ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ. 2

நெட்டெழுத்து இரண்டு மாத்திரை 2

நெட்டெழுத்துப் பயின்று வருஞ்சீரினையுடைய வண்ணம் நெடுஞ்சீர் வண்ணமாம் (மதுரை த.ச.பதிப்). 212

நெட் டெழுத்துப் பயின்று வருவது நெடுஞ்சீர் வண்ணம் என்றவாறு (வ.உ.சி.பதிப்.) 212

நெடில் மோனை. 98

நெடிலடி பதினைந்தும் பதினாறும் பதினேழும் என மூன்று நிலம் பெறும். 38

நெடிலடி, பதினைந்தெழுத்து முதலாகப் பதினேழெழுத் தளவும் ஆம். 38

நெடிலடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 38

நெடிலெதுகை. 98

நெடிலெதுகையாவது 'ஆவா வென்றே' என வரும். 98

நெடின் மோனையாவது நெட்டெழுத் தொத்து வருவது. 98

நெடுஞ்சீர் வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. 212

நெடுவெண் பாட்டாவது அளவின் நெடிய பாட்டு. 114

நெடுவெண் பாட்டிற்கு எல்லை பன்னிரண்டடி. 151

நெடுவெண் பாட்டு முதலாக அங்கதச் செய்யுளீறாகச் சொல்லப்பட்டவையும் அளவொத்தவையும் எல்லாம் வெண்பா யாப்பினையுடைய என்றவாறு. 114

நே

நேர்பசை நிரைபசைப்பின் நிரையிறுதியும் ஆசிரியஉரிச் சீராம். 13

நேர்பு அசையும் நிரைபு அசையும் உரியசை யெனக் குறிபெறும். 5

நேர்பு ஈற்றுச்சீரை நேர்பும் நேரும் முதலாகிய ஐந்து சீரொடுறழ ஐந்து வகைப்படும். 48

நேரசையும் நிரையசையும் இயலசை எனக் குறிபெறும். 5

'நேரடி' என்றதனான் வெண்பாவினும் ஆசிரியத்தினும் கலியினும் (சீர் கூனாதல்) கொள்ளப்படும். 47

நேரீற்றியற்சீர் வஞ்சிப்பாவின் அடிமுதற்கண் நிற்கப் பெறும். 25

நேரீற்றியற்சீர் வஞ்சிப்பாவினும் அடியினீற்றின்கண் நில்லாது. 25

நேரீற்றியற் சீரடியாவது நேரீறு நேர் முதலாகிய இயற் சீர் வருதலும் நேர்பு முதலாசிரிய வுரிச்சீர் வருதலும் நேர்முதல் வெண்பா வுரிச்சீர் வருதலும் நேர்முதல் வஞ்சியுரிச்சீர் வருதலும் நேர் முதல் மூவசைச்சீர் வருதலுமென ஐந்து வகைப்படும். 48

நோ

நோக்குதற் காரணம் என்பதனை உண்டற்றொழில் என்றாற் போலக் கொள்க. 100

ப

'பகலே பல்பூங் கானல்' என்பது வருக்க மோனை. 90

படலத்திற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று. 164

பண்ணத்தி-பண்ணைத் தோற்றுவிக்கும் செய்யுட்கள். 173

பண்ணத்தியாமாறு உணர்த்துதல் நுதலிற்று. 173

பண்ணத்தியெனினும் பாவினம் எனினும் ஒக்கும். 175

பண்ணைத் தோற்றிவித்தலின் பண்ணத்தி யென்றார். 173

பத்தெழுத்து முதலாகப் பதினான் கெழுத்தளவும் அள வடியாம். 37

பதின் மூவாயிரத்தறு நூற்றுத்தொண்ணூற் றொன்பது தொடைப்பாகுபாடு. 97

பதின்மூன்றெழுத்தான், பதினான்கெழுத்தான், பதி னைந்தெழுத்தான், பதினாறெழுத்தான், பதினே ழெழுத்தான், பதினெட்டெழுத்தான், பத்தொன்ப தெழுத்தான், இருபதெழுத்தான் வந்த (கலி) அடி. 56

பதினாறு ஈரசைச்சீர். 12

பதினைந்தெழுத்தான் பதினாறெழுத்தான் வந்த இவை

யிரண்டும் (வெண்பாவின்) நெடிலடி. 55

பரத்தையென்றும் வாயிலென்றும் சொல்லப்படும் இரு வேறு பாட்டினும் தலைமகளைச் சுட்டாத கூற்றுப் பயனில்லை என்றவாறு. 190

பரிபாட்டாவது பரிந்த பாட்டாம், அஃதாவது ஒரு வெண்பாவாக வருதலின்றிப் பல உறுப்புக்களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது. 114

பரிபாட்டும் அங்கதமும் தத்தம் சிறப்புச் சூத்திரத்துட் சொல்லுதும். 114

(பரிபாடல்) பொதுவாய் நிற்றலாவது, 'ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென்றோதப்பட்ட' (செய். 101) உறுப்புடைத்தாதல். 116

